# சங்கத் தமிழர் சமூக அமைப்பும் தொழிலும்

**முனைவர் பட்டத்திற்காகத் திருச்சிராப்பள்ளி பாரதிதாசன்**
**பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பெறும் ஆய்வேடு**


**ஆய்வாளர்**

**ஜெ.கோபிகிருஷ்ணா**

**(Reg.No.039101/Ph.D2/Tamil/Part-time/January 2011 Date:03.01.2011)**

**நெறியாளர்**

**முனைவர்.ப.கண்ணுமுத்து, எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எட்., பி.எச்.டி.,**
**இணைப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை,**
**அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி),**
**கரூர்-639 005.**



**தமிழாய்வுத்துறை**

*அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி),*
*கரூர்-639 005.*

**திசம்பர் – 2015**

# நெறியாளர் சான்றிதழ்

கரூர்– 05

நாள்: .12.2015

**முனைவர் ப.கண்ணுமுத்து,** எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எட்., பி.எச்.டி.,

இணைப் பேராசிரியர்,

தமிழாய்வுத்துறை,

அரசுகலைக் கல்லூரி (தன்னாட்சி),

கரூர்–639 005.

"**சங்கத் தமிழர் சமூக அமைப்பும் தொழிலும்**" என்னும் தலைப்பில் அமைந்துள்ள இவ்ஆய்வேடு **திரு.ஜெ.கோபி கிருஷ்ணா (Reg.No.039101/ph. D2/Tamil/Part Time/January 2011 Date:03.01.2011)** அவர்களால் பாரதிதாசன் பல்கலைக்கழக முனைவர் பட்டத்திற்காக அரசுகலைக் கல்லூரி (தன்னாட்சி), தமிழாய்வுத்துறையில் பகுதிநேரமாக அவர் ஆய்வு செய்த காலத்தில் அவரது சொந்த முயற்சியால் உருவானது என்றும், இதற்கு முன் இந்த ஆய்வின் மீது வேறு எந்த பட்டமும் ஆய்வாளருக்கு அளிக்கப் பெறவில்லை என்றும் சான்றளிக்கிறேன்.

இடம் : கரூர் **நெறியாளர்**

நாள் : .12.2015

**துறைத்தலைவர்**

# ஆய்வாளர் உறுதிமொழி

கரூர்– 05

நாள்: .12.2015

**ஜெ.கோபிகிருஷ்ணா,**

(பகுதி நேர ஆய்வாளர்)

உதவிப் பேராசிரியர்,

கொங்கு கலை அறிவியல் கல்லூரி,

கரூர்–6.

"**சங்கத் தமிழர் சமூக அமைப்பும் தொழிலும்**" – என்ற தலைப்பில் அமையும் இவ்வாய்வேடு கரூர், அரசுகலைக் கல்லூரி (தன்னாட்சி), தமிழாய்வுத் துறையில் பகுதி நேர ஆய்வாளராகப் பயின்ற காலத்தில் **(2011 – 2015)** என் சொந்த முயற்சியால் உருவானதென்றும், இதற்கு முன் வேறு எந்த ஒரு ஆராய்ச்சிக்காகவும் இவ் ஆய்வேடு அளிக்கப்படவில்லை என்றும் உறுதியளிக்கின்றேன்.

இடம் : கரூர்

நாள் : 21.12.2015

**ஆய்வாளர்**

**(ஜெ.கோபிகிருஷ்ணா)**

**நெறியாளர்**

# நன்றியுரை

**சங்கத்** தமிழர் சமூக அமைப்பும் தொழிலும் என்ற தலைப்பில் முனைவர் பட்டம் மேற்கொள்ள அனுமதியளித்த பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கரூர், அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி), **முதல்வர்** அவர்களுக்கும் **தமிழியில் துறைத்தலைவர்** அவர்களுக்கும் நன்றியை உரித்தாக்குகிறேன்.

ஆய்வு சிறப்புற அமைய நெறிப்படுத்திய நெறியாளர், கரூர், அரசு கலைக்கல்லூரி(தன்னாட்சி), தமிழியல் துறை, இணைப்பேராசிரியர் **ப.கண்ணமுத்து** அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆய்வுக் காலத்தில் தக்க ஆலோசனைகள் வழங்கிய ஆய்வறிஞர் குழு, **முனைவர்.ஆ,ஜெகதீசன்,** உதவிப் பேராசிரியர், அரசு கலைக்கல்லூரி, குளித்தலை அவர்களுக்கும், **முனைவர்.சி.அழகர்,** உதவிப்பேராசிரியர் கொங்கு கலை அறிவியல் கல்லூரி, கரூர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆய்விற்கு உறுதுணைபுரிந்த உடன் பணியாற்றும் கொங்கு கலை அறிவியல் கல்லூரி இருபால் பேராசிரிய பெருமக்களுக்கும் நன்றியை உரித்தாக்குகிறேன்.

எனது ஆய்வுக் காலத்தில் தனது ஆய்வினை மேற்கொண்டும், எனது ஆய்விற்கு துணைபுரிந்த நண்பன் **ந.இராசேந்திரன்** அவர்களுக்கும் ஆய்விற்கு உதவி புரிந்த பிற நண்பர்களுக்கும் நன்றியை உரித்தாக்க கடமைப்பட்டுள்ளேன்.

ஈன்றெடுத்த தாய், தந்தையர்க்கும் ஆய்விற்கு உறுதுணையாற்றிய சகோதரி **J.பரிமளா** ஆகியோர்க்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆய்வுக் காலத்தில் உற்றதுணையாயிருந்து உதவி செய்த மனைவி **R.உமாமகேஸ்வரி** அவர்களுக்கும், புறம் இருந்து உதவி புரிந்த எனது மழலைச் செல்வங்கள் **G.பவன்பாரிவேந்தர், G.சைந்தவிஸ்ரீ** ஆகியோருக்கும் நன்றியை உரித்தாக்குகிறேன்.

மேலும் ஆய்வேடு பல தரவுகளை சேர்க்க முயன்றபோழ்து உதவி செய்த நாமக்கல் மாவட்டம், வேலூர் கிளை நூலகத்தார்க்கும், கரூர் அரசு கலைக்கல்லூரி நூலகத்தார்க்கும், கொங்கு கலை அறிவியல் கல்லூரி நூலகத்தார்க்கும், பாரதிதாசன் பல்கலைக்கழக நூலகத்தார்க்கும் நன்றியைத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன். இவ்வாய்வேடு சிறப்பான முறையில் அமைய கணினி தட்டச்சு செய்து கொடுத்த வேலூர் சன்டெக் நிறுவனத்தார்க்கும், திருமதி **த.ரேவதி** அவர்களுக்கும் உளமார்ந்த நன்றிகள் பல தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பிலே,

**ஜெ.கோபிகிருஷ்ணா.**

# பொருளடக்கம்


| இயல் எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| | முன்னுரை | 1 |
| 1 | சங்ககாலச் சமூக அமைப்பு | 8 |
| 2 | சங்ககாலச் சமூகத்தில் சமயம் | 61 |
| 3 | சமூகப் பண்புகளும் மதிப்புகளும் | 93 |
| 4 | உழவுத் தொழிலும் சார்ந்த தொழிலும் | 123 |
| 5 | அரசும் தொழிலும் | 177 |
| | முடிவுரை | 217 |
| | துணைநூற்பட்டியல் | |

# சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| அகம் . | – | அகநானூறு |
| எழுத்து. | – | எழுத்ததிகாரம் |
| ஐங். | – | ஐங்குறுநூறு |
| கலி. | – | கலித்தொகை |
| குறள். | – | திருக்குறள் |
| குறிஞ்சி. | – | குறிஞ்சிப்பாட்டு |
| குறுந். | – | குறுந்தொகை |
| சிறுபாண். | – | சிறுபாணாற்றுப்படை |
| சொல். | – | சொல்லதிகாரம் |
| திருமுருகு. | – | திருமுருகாற்றுப்படை |
| தொல் | – | தொல்காப்பியம் |
| நற். | – | நற்றினை |
| நெடுநல். | – | நெடுநல்வடை |
| ப. | – | பக்க எண் |
| பட்டினம். | – | பட்டினப்பாலை |
| பதிற் | – | பதிற்றுப்பத்து |
| பரி. | – | பரிபாடல் |
| புறம். | | புறநானூறு |
| பெரும் | – | பெரும்பாணாற்றுப்படை |
| பொருந. | – | பொருநாற்றுப்படை |
| பொருள். | – | பொருளாதிகாரம் |
| மதுரை. | – | மதுரைக்காஞ்சி |
| மலைபடு. | – | மலைபடுகடாம் |
| முல்லை. | – | முல்லைப்பாட்டு |
| P. | – | Page |

# முன்னுரை

உலக இலக்கியங்களுள் தனித்தன்மை வாய்ந்தவை சங்க இலக்கியங்கள். அவை குறிப்பிட்ட கால இடைவெளியில், குறிப்பிட்ட நிலப்பரப்பிலுள்ள அனைத்து மக்களின் அன்றாட வாழ்வைப் படம்பிடித்துக் காட்டுவனவாக அமைந்துள்ளன. மக்களின் வாழ்க்கைமுறை, வாழும் சூழ்நிலை, சமூக அமைப்பு ஆகியவற்றை முதல், கரு, உரிப்பொருள் எனப்பாகுபடுத்தி உயரிய திணைக்கோட்பாட்டின் வழியே வாழ்வின் நிலையை உள்ளது உள்ளபடி எடுத்துக் கூறுகின்றன. செம்மாந்த கருத்துக்களைக் கொண்டு நாகரிகத்திற்கும், பண்பாட்டிற்கும் அடித்தளமிட்டவை அவ்விலக்கியங்கள். அவை உயரிய சிந்தனையையும் பரந்த நோக்கத்தையும் கொண்டு பாடப்பெற்றவையாகக் காணப்படுகின்றன.

சங்க இலக்கியங்கள் நிலத்தைப் பின்னணியாகக் கொண்டு நாளையும், பொழுதையும் வகைப்படுத்தி, மக்களின் தொழில் முறையைப் பறைசாற்றுகின்றன. சமூகத்தில் ஆட்சிபுரிந்த அரசன் முதல் அன்றாட வாழ்வை நடத்தவே அல்லல் பட்ட எளியோன் வரை அனைவரையும் பற்றிய பாடல்களைக் கொண்டுள்ளன. ஆட்சிபுரிதல், ஆலோசனை கூறுதலில் தொடங்கி, விவசாயமும் அது சார்ந்த தொழில்களையும் பாடலினூடே பகிர்ந்து செல்கின்றன.

இத்தகு தன்மையைக் கொண்டு இலங்கும் சங்க இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள சமூக அமைப்பையும், மக்களின் தொழிலையும் எடுத்துக் கூறும் வகையில் இவ்வாய்வேடு அமைகிறது.

## ஆய்வுத் தலைப்பு

‘சங்கத் தமிழர் சமூக அமைப்பும் தொழிலும், என்பது இவ்வாய்வின் தலைப்பாக அமைகிறது.

## ஆய்வு நோக்கம்

1. சமூகக் கட்டமைப்பு, மற்றும் வாழும்முறை குறித்த கட்டமைப்பினை, சங்கப் பனுவல்களின் வாயிலாக அறிதல்.

2. சங்ககாலச் சமூகத்தில் சாதிய அமைப்பு முறை மற்றும், சமயப் பின்னணி குறித்து ஆய்தல்.

3. சங்ககாலச் சமூக மக்களின் போற்றுதலுக்குரிய பண்பாகக் கருதியனவற்றை இனங்காணல்.

4. தொழில்கள் அடிப்படையில் சாதி முக்கியத்துவம் பெற்ற பாங்கினை ஆய்ந்தறிதல்.

5. சங்ககால அரசு முறையும், தொழில் முறையும் சார்ந்த செய்திகளை எடுத்தியம்புதல்.

## ஆய்வுக் கருதுகோள்கள்

இவ்ஆய்வின் கருதுகோள்கள் பின்வருமாறு.

1. அக்காலச் சமூக அமைப்பில் சாதியப் பாகுபாடுகள் காணப்படுகின்றன.

2. அக்காலச் சமூகத்தில் நிலம் சார்ந்த தெய்வ வழிபாட்டு முறையும், விழாக்களும் இடம் பெற்றிருக்கின்றன.

3. அகம், புறம் எனும் பகுப்பில் அக்கால மக்களின் உயரிய பண்புகளும் நாகரிக வாழ்வும் வெளிப்படுகின்றன. அகப்புற மரபுகள் காத்து அவை மொழியப்பட்டுள்ளன.

4. உழவுத் தொழில் தலையாய தொழிலாகக் கருதப்பட்டது. அதைச் சார்ந்தே பிற தொழில்கள் வளர்ச்சி பெற்றன.

5. குடிமக்களின் மனம் அறிந்து செங்கோலோச்சிய அரசர்களின்கீழ் பலபகுப்புகள் இருந்துள்ளன. உழவு அல்லாத பிற தொழில்கள் குறித்தும் அறிய முடிகின்றது.

## ஆய்வு எல்லை

சங்க மேற்கணக்கு நூல்களாக மொழியப்படும் பதினெட்டு இலக்கியங்களான,

நற்றிணை

குறுந்தொகை

ஐங்குறுநூறு

பதிற்றுப்பத்து

பரிபாடல்

கலித்தொகை

அகநானூறு

புறநானூறு

திருமுருகாற்றுப்படை

பொருநராற்றுப்படை

சிறுபாணாற்றுப்படை

பெரும்பாணாற்றுப்படை

முல்லைப்பாட்டு

மதுரைக்காஞ்சி

நெடுநல்வாடை

குறிஞ்சிப்பாட்டு

பட்டினப்பாலை

மலைபடுகடாம் (கூத்தாற்றுப்படை) ஆகிய நூல்கள் முதன்மை ஆதாரங்களாக ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

## ஆய்வு மூலங்கள்

ஆய்வு எல்லைக்கு உட்படுத்தப்பட்ட சங்க இலக்கியங்கள் ஆய்வின் முதன்மை ஆதாரங்களாக அமைகின்றன. சங்க இலக்கியங்கள் பற்றிய ஆய்வு நூல்கள், இலக்கிய வரலாற்று நூல்கள், ஆய்வுக் கருத்திற்கு வலுசேர்க்கும் இலக்கியங்கள், திறனாய்வு நூல்கள் போன்றவை துணைமை ஆதாரங்களாக அமைகின்றன.

## ஆய்வு முன்னோடி

‘‘தமிழக வரலாறும் பண்பாடும்’’ என்ற நூலை எழுதிய கே.கே.பிள்ளை, ‘‘ தமிழக நாகரிகமும் பண்பாடும்’’ என்ற நூலை எழுதிய அ.தட்சிணாமூர்த்தி ஆகியோர் இவ்வாய்வின் ஆய்வு முன்னோடிகளாவர்.

## ஆய்வு அணுகுமுறை

சங்க இலக்கியப் பாடல்கள் விளக்கி ஆராயப்படுவதால் விளக்க முறை ஆய்வாகவும், பிறபாடல் கருத்துக்களுடனும், இலக்கியங்களுடனும் ஒப்பிட்டு ஆய்வதால் ஒப்பீட்டுமுறை ஆய்வாகவும், இயல்கள் பகுத்து ஆராயப்படுவதால் பகுப்பு முறை ஆய்வாகவும் இந்த ஆய்வேடு அமைக்கப்பட்டுள்ளது.

## ஆய்வுப் பகுப்பும் செய்தியும்

முன்னுரை, முடிவுரை நீங்கலாக இந்த ஆய்வேடு ஐந்து இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவை வருமாறு

**இயல்- 1 : சங்ககாலச் சமூக அமைப்பு**

**இயல்- 2 : சங்ககாலச் சமூகத்தில் சமயம்**

**இயல்-3 : சமூகப் பண்புகளும் மதிப்புகளும்**

**இயல்-4 : உழவுத் தொழிலும் சார்ந்த தொழிலும்**

**இயல்-5 : அரசும் தொழிலும்**

முன்னுரையில் ஆய்வுப் பொருள் தேர்வு, ஆய்வு நோக்கம், ஆய்வு முன்னோடி, ஆய்வு எல்லை, ஆய்வு மூலங்கள், ஆய்வுக் கருதுகோள்கள், ஆய்வு அணுகுமுறை ஆய்வுப் பகுப்பு, முதன்மை, துணைமைச் சான்றாதாரங்கள், மேற்கோள் பற்றிய செய்திகள் ஆகியவை எடுத்துரைக்கப்பெற்றுள்ளன.

முதல் இயல் **சங்ககாலச் சமூக அமைப்பு** என்ற தலைப்பில் அமைகின்றது. இவ்வியலில் சமுதாயத் தோற்றம், சமுதாயம் சொற்பொருள் விளக்கம், சமூக அமைப்பு, தமிழ்ச் சமுதாயத்தின் தொன்மை, தமிழக நிலவியல் அமைப்பு, ஐவகை நிலங்கள், வருண அமைப்பின் தோற்றம், நால்வகை வருணத்தாரின் குறிப்புகள், தொழில் முறை அமைப்பு, பாணர், கூத்தர், பொருநர், விறலியர், பறையர், துடியர், கடம்பர் போன்ற விளிம்பு நிலை மக்கள் அக்காலச் சமுதாயத்தில் பெற்றிருந்த இடம், உயர்வு, தாழ்வு போன்றவை ஆராயப்பட்டுள்ளன.

இரண்டாவது இயல் **சங்க காலச் சமூகத்தில் சமயம்** என்ற தலைப்பில் அமைகின்றது. இவ்வியலில் சமயத்தின் தோற்றம், தமிழர் சமயம், தொல்காப்பியமும், தெய்வங்களும், ஐவகை நிலக்கடவுள்கள், அங்கு அவை வழிபடப்பட்டதற்கான காரணங்கள், நடுகல் வழிபாடு, விழாக்கள் ஆகியவை ஆராயப்பட்டுள்ளன.

மூன்றாவது இயல் **சமூகப் பண்புகளும் மதிப்புகளும்** என்ற தலைப்பில் அமைகின்றது. இவ்வியலில் பண்பாடு பற்றிய விளக்கமும், சமூகத்தில் அவை பெறும் மதிப்புகளையும், பண்பு என்னும் சொல் சங்க இலக்கியங்களில்

ஆளப்பட்டுள்ள இடங்களும், இரக்கம், ஈகை, நன்றிமறவாமை, புறங்கூறாமை முதலிய தனிமனிதப் பண்புகளும், கல்வி, வீரம், விருந்தோம்பல், கற்புநெறி, பொய்யுரையாமை போன்ற சமூக மதிப்புகளும் ஆராயப்பட்டுள்ளன.

நான்காவது இயல் **உழவுத் தொழிலும் சார்ந்த தொழிலும்** என்ற தலைப்பில் அமைகின்றது. இவ்வியலில் உழவுத் தொழில், ஐவகை நிலங்களில் உழவுத்தொழில், நிலத்தை உழுதல் முதல் அறுவடை வரையிலான தொழில் முறைகள், கருவிகள் பயன்பாடு, உழவுத் தொழிலைச் சார்ந்த நெசவுத் தொழில், சலவைத் தொழில், தச்சுத் தொழில், கொல்லர் தொழில், மட்பாண்டத் தொழில், கயிறு திரிக்கும் தொழில் ஆகியவை ஆராயப்பட்டுள்ளன.

ஐந்தாவது இயல் **அரசும் தொழிலும்** என்ற தலைப்பில் அமைகின்றது. இவ்வியலில் அரசு பற்றிய விளக்கங்களும், அரசன், வேந்தன், மன்னன், இறை போன்ற ஆட்சித் தலைவர்களின் பெயர் விளக்கங்களும், அரச உரிமை, அரசர்க்குரிய தொழில், அமைச்சர், தூதுவர், காவலர், ஆசிரியர், ஆகியோர் செயல்கள் முதலியவை ஆராயப்பட்டுள்ளன.

ஒவ்வொரு இயலின் இறுதியிலும் தொகுப்புரையும் ஆய்வேட்டின் முடிவுரை ஐந்து இயல்களுக்கும் பின்னேயும் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. இறுதியில் எதிர்கால ஆய்வுக் களங்களும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

## மேற்கோள் விளக்கம்

ஆய்வின் கருதுகோள்களுக்கு ஏற்பவும், இயல்களில் செய்யப்படும் ஆய்வின் தலைப்புகளுக்கு ஏற்பவும் பாடல்களும். பாடல்களுக்கான உரைகளும், சங்க இலக்கியங்களிலிருந்து எடுத்தாளப்படுகின்றன. ஆய்வுக் கருத்திற்கு அரண் சேர்க்கும் துணைமைச் சான்றாதாரங்களும் மேற்கோள்களாகத் தரப்பட்டுள்ளன. மேற்கோள்கள் தொடர் எண் இடப்பட்டு, ஒவ்வொரு இயலின் இறுதியிலும் சான்றெண் விளக்கங்கள் இடம் பெற்றுள்ளன.

ஆய்விற்குப் பயன்படுத்தப்பட்ட முதன்மை, துணைமைச் சான்று நூல்களின் பட்டியல் அகர வரிசையில் முடிவுரைக்குப் பின்னர் அமைக்கப்பட்டுள்ளன.

## பிற செய்திகள்

ஆய்வேட்டின் அக அமைப்பு, புற அமைப்பு போன்றவற்றைக் கருத்திற்கொண்டு ஆய்வேடு அமைந்துள்ளது. சுருக்கக் குறியீடுகளுக்கான விளக்கம் ஆய்வேட்டின் பொருளடக்கத்திற்கு முன்னர் அமைக்கப்பட்டுள்ளது. ஆய்வேட்டில் நெறியாளர் சான்றிதழ், ஆய்வாளர் உறுதிமொழி, பொருளடக்கம் ஆகியன முறையாக அமைக்கப்பட்டுள்ளன.

# இயல்- 1

## சங்க காலச் சமூக அமைப்பு

சமூகம் என்பது பல்வேறு மக்களின் கூட்டுத் தொகுப்பாகும். மனித இனம் தோன்றி அவர்கள் குழுவாக வாழ்ந்த நிலையே சமுதாயத்தின் தொடக்க நிலையாகும். ஒத்த உருவ அமைப்பு மரபு வழிப்பட்ட பண்புகள், ஒரே விதமான எண்ணங்கள் ஆகியவையே சமுதாயத்தை உருவாக்குகின்றன.

சமுதாயத்தின் இன்றியமையாத் தேவையான உணவு, உடை, உறைவிடம் இவற்றைப் பெற சமுதயாத்தின் அங்கமான மக்கள் இயற்கையோடு பல்வேறு போராட்டங்கள் நடத்தினர். இயற்கையின் இயக்க விதிகளை அறிந்து கொண்டு அவற்றை தன்வயப்படுத்தி தனக்குத் தேவையான வேளாண் பயிர் செய்து கொள்ள தொடங்கினர். வேளாண்மையின் வளர்ச்சி காரணமாக மனிதச் சமூகத்தில் ஓர் பிரிவினர் உடைமை உள்ளோராகவும், மறுபிரிவினர் அவர்களின் கீழ் பணிபுரிபவர்களாகவும் சமூக மாறுதல்கள் தோன்றுகின்றன. இவ்வாறு தமிழ்ச் சமூகத்தின் தொடக்க நிலையினையும் பின்னர் வேளாண்மையின் வளர்ச்சியில் அவர்களிடம் காணப்பட்ட பிரிவுகளின் வகைகளையும் சங்க இலக்கியத்தின் வழி ஆராய்வதாக இவ்வியல் அமைகின்றது.

### சமுதாயத் தோற்றம்

ஒவ்வொரு சமுதாயமும் ஒரு வரலாற்றைக் கொண்டிருக்கிறது. மனிதன் தன்தேவைகளைத் தாமே பூர்த்தி செய்ய முடியாது என்பதை உணர்ந்து ஒருவரையொருவர் சார்ந்து வாழவேண்டுமென்று என்று நினைத்தானோ? அன்றுதான் சமூகம் தோன்றியது ‘‘மனிதன் தோன்றி பன்னெடு நாட்களுக்குப் பின்னே சமுதாயம் உருவாகி இருக்க வேண்டும் என்பதை அறுயிட்டுத் திட்டவட்டமாகக் காட்ட இயலாவிட்டாலும் ஒன்று திட்டமாகக் கூற இயலும். மனித வாழ்வோடு பண்பாடு இணைந்த நாளே சமுதாயம் உருவான பெருநாள். இதனைப் பார்க்கும்போது மனிதனிடம் பண்பாடு உயர்ந்த போது சமுதாய அமைப்பு முறை தோன்றிருக்கும்.’’[1]

ஒத்த பழக்க வழக்கங்களை கொண்டிருக்கக் கூடிய மக்களே ஒரு சமுதாயமாக வாழத் தலைப்பட்டனர். ‘‘மரபு வழிப்பட்ட பண்பு நலன்கள், உணர்வுகள் உடலைப்பு ஆகியவையே ஒரு சமுதாயத்தை உருவாக்குகின்றன.’’[2] ‘‘பல்வேறு மானிட சமுதாயங்கள் ஒன்றோடொன்று கலக்கும் வாய்ப்பு இருந்தாலும் சமுதாயங்கள் தங்களுக்குரிய இடங்கள் அல்லாத பிற இடங்களில் வாழும் சூழல் ஏற்பட்டாலும் தமது சமுதாயத்திற்கு என்றும் உரிய மூல அடையாளங்கள் மாறுவதில்லை. ஒரு சமுதாயம் தனக்கெனப் பெற்றுக் கொள்ளும் பண்பு நலன்கள் எவ்வாறு உருவாகின்றன. தனக்குரிய மண்ணிலிருந்து உணவு முறைகளிலிருந்து அச்சமுதாயத்தின் தொடக்க காலத்திலேயே நிகழ்ந்த குறிப்பிடத்தக்க செயல்களிலிருந்து பண்பு நலன்களைப் பெற்றுத் திகழ்கிறது.’’[3]

சமுதாய உணர்வு மனிதனுடன் தொடக்கத்திலேயே தோன்றியதாகும். ‘‘சமுகவியல்பு மனிதனுடன் முதலிலேயே தோன்றிய ஒன்று ஆகும். ஏனையோருடன் அவன் முதலிலேயே சேர்ந்து வாழ முற்பட்டுவிட்டதால் சமூகம் உடனேயே தோன்றிவிட்டது. ஒரு ஒப்பந்தத்தினாலோ வேறு உடன்படிக்கையினாலோ பிறகு மனிதனுடன் சேர்க்கப்பட்ட ஒன்றல்ல சமூகம். அது தானாகவே தோன்றி இயல்பாகவே வளர்ந்த ஒன்று ஆகும்.’’[4]

## சமுதாயம் சொற்பொருள் விளக்கம்

சமுதாயத்தை ‘‘Society’’ என்ற ஆங்கிலச் சொல்லால் அழைப்பர். சமுதாயம் என்ற சொல் வடமொழித்திரிபு என்பதால் அதைத் தனித்தமிழில் ‘‘குமுகாயம்’’ என்று அழைப்பர். ‘‘Social’’என்னும் ஆங்கிலச் சொல்லும் சமுதாயத்தையே குறிக்கும். இதனை அ.மு.பரமசிவானந்தம் குறிப்பிடும் போது,

‘‘Social’’என்னும் இந்த ஆங்கிலச் சொல் சமூகம் அல்லது சமுதாயத்தைக் குறிக்கும்‘‘Society’’ என்னும் சொல்லோடு நெருங்கிய தொடர்புடையதேயாகும். எனவே மனிதனை விலங்கினத்திலிருந்து பிரிப்பதே இந்தச் சமூகம் அல்லது சமுதாயம் என்ற சொல்தான்.’’[5]

வின்சுலோவின் தமிழ் ஆங்கில அகராதி ‘‘சமுதாயம்’’ என்ற சொல்லுக்கு ‘‘கூட்டம், சங்கம், திரள், பொது, சமாதானம்’’[6] என்ற பொருள்களைக் குறிப்பிடுகிறது.

‘‘ஆயம்’’ என்ற தமிழ்ச் சொல்லுக்கு ‘‘ ஆதாயம், சுங்கம், கவறு, சூதாடுந்தாயம், மாதர், தோழி, தாய், நாணி, நீளம்’’[7] என்ற பல பொருள்கள் உள்ளதை அகராதி குறிப்பிடுகிறது.

சமுதாயம் என்ற சொல்லிற்குப் பொருள் விளக்கம் கூறும்போது ‘‘சமுதாயம்’’ என்ற வடமொழி கலந்த தமிழ்ச் சொல். இச்சொல்லை சம+தாயம் எனப்பிரிக்கலாம். தாயம் என்ற சொல்லின் முன் ‘‘சமூ’’ என்னும் அடைமொழி பெற்று ‘‘நல்ல கூட்டம்’’ எனப் பொருள்படும். ‘‘தாயம்’’ என்ற சொல் தமிழ்ச்சொல். தாய்வழிக் கூட்டத்தைக் குறிப்பது. இது தாயம்+அம் எனப் பகுப்பு கொண்டது என்று அறிஞர்கள் கூறுவர்.

தனி மனிதர்களையும், பல்வேறு அமைப்புகளையும், நிறுவனங்களையும், குழுக்களையும், துணைக் குழுக்களையும் தன்னகத்தே கொண்ட ஓர் அமைப்பாகச் சமுதாயம் விளங்குகின்றது. பொதுவான உடற் கூறியல்புகளையும், விருப்பங்களையும், வாழ்க்கை நோக்கங்களையும், விதிகளையும் கொண்டுள்ள உறுப்பினர்களை ஒருங்கிணைக்கும் சிறிதும், பெரிதும், நிரந்தரமானதுமாகிய அமைப்பே சமுதாயம் என்று கூறலாம். மேலும், குறிப்பிட்ட எல்லைக்குள் வாழ்கின்ற மக்களால் மேற்கொள்ளப்பெறும் உட்செயல்களின் அனைத்து முறைகளையும் சமுதாயம் எனக் கூறலாம் என்ற விளக்கமும் உள்ளது. ஒரு சமுதாயமானது தனிப்பட்டவர்களின் கூட்டமைப்பு, உரிமை மற்றும் ஒற்றுமை உணர்வு, ஏகதேசம், நிரந்தர இயல்பு முதலான சிறப்புத் தன்மைகளைக் கொண்டது.

சமூகம், சமுதாயம் என்ற இரண்டு சொற்களும் வட சொற்களே ஆகும் என்பதை அறிய முடிகிறது.

சமூகம் என்பது கூட்டமாக வாழும் மக்கட் தொகுதியைக் குறிக்கும், தனி மனிதர் குடும்பங்களாகவும், குழுமங்களாகவும், கூட்டமாகவும் ஒரே குடி மக்களாக சேர்ந்து வாழும்போது தேவைக்காக, வளர்ச்சிக்காக பிறரைச் சார்ந்து வாழும்போது சமுதாயம் உருவாகிறது.

சமூகம் என்பது, குறித்த ஒரு வாழ்க்கை நெறியையும், பண்பாட்டையும் வளர்ப்பதில் பங்குபெறும் தனி மனிதர் பலரின் கூட்டமைப்பாகும். சமூகம் என்பது பண்பாட்டை வளர்க்கும் களமாகத் திகழ்கின்றது.

சமூகம் என்பது உயிர்வாழ்வதற்காகப் போராடும் மக்களின் தனித் தன்மையுள்ள ஒரு குழுவாகும்.

ஒரு சமூகம் என்பது தனிமனித வாழ்வெல்லைகளை மிகக் கடந்து நிலவும் ஒன்றாகும்.

ஒரு சமூகம் என்பது செயற்பாடுகளுடைய ஒரு குழுவாகும். தனிமனிதர் பலரால் சமூகம் உருவாக்கப்பட்டிருப்பினும் சமூகம் என்ற நிலையிலேயே அது காணப்படுகிறது. சமூக அமைப்பில் தனி மனிதர்களின் நலன்கள் சமூக நலன்கள் கீழாகவே அமைகின்றன.

''சமூகம்'' என்பதற்குச் சொல் அகராதி ''கூட்டம்'' ''திரள்''[8] என்ற பொருள் கூறுகின்றன.

சமூக விதிகள் பெரும்பாலும் வெளிப்படையானவைகளாகவோ, எழுதப் பட்டனவாகவோ இல்லை என்பதையும் எடுத்துக் காட்டியுள்ளனர். இவ்வகை அமைப்பே எந்தச் சமூகமும் தோன்றியதிலிருந்து ஒரேபடி நிலையில் இல்லாமல் தோன்றுதலும், வளர்தலும், அழிதலுமான செயல்கள் வரலாற்றில் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன.

தனி மனிதன் ஒவ்வொருவனும் தான் சார்ந்த சமூகத்திற்குத் தன் பங்களிப்பைச் சரியாகச் செய்யும்போது சமூகம் வளர்ச்சியடைகிறது. உணவு தேடுதல், புறப்பகைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுதல், இனப் பெருக்கம் செய்தல் ஆகிய இன்றியமையாத தொழில்களே மனிதனுக்குக் குடும்பம், சமூகம் ஆகியவற்றைத் தோற்றுவிக்கக் காரணமாயிருந்தன.

## சமூக அமைப்பு

மனிதன் இயல்பாகவே சமுதாயத்தில் வாழும் ஆர்வமுள்ளவன். எனவே மனிதனை ‘‘சமுதாய விலங்கு’’[9] என்று அழைக்கின்றோம். சமூக அமைப்பு என்பது ஒரு வரையறைக்கு உட்பட்டதாகும். திருமணம், குடும்பம், பொருளாதார அமைப்புகள், கல்வியமைப்பு, சமயம், அரசு முதலியன சமூக அமைப்பாக காணப்படுகின்றன. இச்சமூக அமைப்பு ஒரு கட்டுக்கோப்பான ஒழுங்குமுறையைக் கொண்டிருக்கின்றது. இது பல்வேறு மாற்றங்களுக்குட்பட்டாலும் அதன் உள் அமைப்பில் மாறாதிருக்கும். சமுதாய அமைப்பு என்பது இயற்கையில் அமைந்த எதிர்ப்புக்களைக் கடந்து நீடிக்கின்ற கட்டுக்கோப்பான, ஓர் ஒழுங்குமுறை வளர்சிதை மாற்றங்களுக்கு உள்ளானாலும் மாறாத ஓர் உயிரியைப் போன்று, ஆண்டுக்கு ஆண்டு நொடிக்கு நொடி ஏற்படும் அகவய மாறுதல்களையும் மீறி இடையறாத தொடர்ச்சியைக் காக்கக் கூடிய ஓர் இயக்காற்றல். இச் சமூக அமைப்பே மனித இனத்தின் படிப்படியான வளர்ச்சிக்கு காரணமாய் அமைகின்றன.

இவ்வகை சமூக அமைப்பு முதன்முதலில் லெமூரியாகண்டத்திலேயே தோன்றியிருக்க வேண்டும். ஏனெனில் ‘‘மனித வாழ்க்கைக்கும் உயிர் வாழ்க்கைக்கும் முதல் பிறப்பிடம் இந்த லெமூரியாவேயாகும். மனித நாகரிகத்தின் தொடர்களும் இங்கேதான் ஏற்பட்டிருக்க வேண்டும். கிட்டதட்ட நூறாயிரம் ஆண்டுகளாக மனித வகுப்புத் தவழ்ந்து வளர்ந்த தொட்டில் இவ்இலெமூரியாக் கண்டமே எனலாம்.’’[10]

## தமிழ்ச் சமுதாயத்தின் தொன்மை

தமிழ்ச் சமூகம் தொன்மைக் காலம் முதலே பல வரலாற்று ஆதாரங்களைக் கொண்டிருக்கின்றது. இருப்பினும் சங்க இலக்கியங்களே அவற்றிற்கெல்லாம் முதன்மை ஆதாரமாகத் திகழ்கின்றது. ஏனெனில் ‘‘இக்கவிதையில் நாட்டுப் பெயர் இல்லை, ஊர்ப்பெயர் இல்லை, காதலர் குடும்பப் பெயர் இல்லை, காதலர்களின் பெயரும் இல்லை, சர்வதேசத் தன்மை வாய்ந்த

உயிருள்ள கவிதை உலகப் பாடல்களின் காதல், வீரம், மனிதநேயம், மானுட வாழ்விற்கு மாண்புதரும் விழுமியங்கள் கொண்ட கவிதைகள் சங்கப் படைப்புகள்."[11] கல்லும், மண்ணும் தோன்றும் பொழுதே தமிழ்க்குடியும் தோன்றிவிட்டதாக எண்ணுவர். இதனை,

**"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு**

**முன்தோன்றி மூத்தகுடி"[12]**

என்பதால் அறியலாம். 'குடி' என்பது பல குழுக்களாக வாழ்ந்த தமிழ் மக்களையே குறித்தது. மூவேந்தரும் பழமையான குடிவகைகளிலிருந்தே வந்தனர். என்பதை

**"சேர சோழ பாண்டியர் போலப் படைப்புகாலந் தொட்டு**

**மேம்பட்டு வரும் குடி"**

என பரிமேலழகர் உரை வகுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆதியில் குழுவாக வாழ்ந்த மக்களிடையே அக்குழுவை வழி நடத்தும் தலைவியாக பெண்ணே காணப்படுகிறாள். நாகரிகம் வளர்ச்சியடையாத அக்கால கட்டத்தில் பெண் ஈன்ற மகவுகள் அனைத்தும் அவளைச் சார்ந்தே தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டன. ஆகையால் "அக்குழுச் சமுதாயம் தாய் வழிச் சமூகமாக காணப்பட்டது."[13] குழுவின் தலைவியே பின் தெய்வமாக வழிபடப்பட்டாள். கொற்றவை வழிபாடும் அவ்வாறு தோன்றியதே. குழுவின் மூத்தோளாக அவள் காணப்பட்டதால் "பழையோள்"[14] எனக் குறிப்பிடப்படுகிறாள். குழுவிலுள்ள பெண்கள் நாடோடி நிலையில் பல்வேறு இயற்கை காரணங்களால் வேட்டைக்குச் செல்ல இயலாமல் போகவே வலிமையுள்ளவன் விலங்குகளை வேட்டையாடி தனது குழுவிற்கு பகிர்ந்தளித்தான். கையில் வேல் கொண்டு அவன் விலங்குகளைத் தாக்கும் போழ்து அவனிடம் மிகுதியான ஆற்றல் இருப்பதாக எண்ணிய மற்றவர்கள் அவனை வழிபடத் தொடங்கினர். இவ்வாறே தமிழ் குடியில் வேலன் வழிபாடு தோன்றியிருக்க வேண்டும். வேலன் "பழையோள் மகவாக" [15] வழிபடப்படுகிறான்.

நாகரிக வளர்ச்சியில் நிலையாக ஓரிடத்தில் குழுக்கள் தங்கி வேளாண் முறையை செயல்படுத்த விழைந்த போழ்து பெண்கள் தங்களின் உணவு தேவைக்காக ஆண்களை நம்பியிருக்கின்ற நிலைக்கு தள்ளப்பட்டனர். உணவும், உடைமைகளும் ஆண்களுக்கே உரித்தாயின. இவ்விடத்தில்தான் தாய் வழிச் சமூகம் தந்தை வழிச் சமூகமாக மாற்றம் பெற்றது.

தொன்மைக் காலங்களில் தமிழ்க் குடிகளில் ஏற்பட்ட இத்தகைய மாற்றம் படிப்படியாக உலகம் முழுமைக்கும் விரவத் தொடங்கிற்று.

## தமிழக நிலவியல் அமைப்பு

உலகிலுள்ள நிலப்பரப்பு இயற்கை அமைப்பில் காடு, மலை, வயல், கடற்கரை, பாலைவனம் என்னும் ஐந்து வகையில் அடங்கும். இவ்வைந்து வகை நிலங்களே உயிர்கள் வாழத் தகுதியான நிலம் என்பதை பண்டைத் தமிழர்கள் நன்கறிந்திருந்தனர். ஆகையால் தான் ஒவ்வொரு நிலப்பகுதிக்கும் ‘திணை’ எனப் பெயரிட்டனர். ‘‘திணை என்னும் அச்சொல் ஒரு நிலப்பரப்பு என்னும் பொருள் தருவதாய் திண் அல்லது திட் என்று வேர்ச் சொல்லிருந்து பெறப்பட்டதாகத் தோன்றுகிறது.’’[16] தமிழகமும் தனது எல்லை நிலப்பரப்பிற் ஐந்து வகையான இயற்கைக் கூறுகளைப் பெற்றிருந்தன.

அவ்வைந்து நிலங்களாவன மலை சார்ந்த பகுதியான குறிஞ்சி,காடும் காடு சார்ந்த இடமான முல்லை, நீர்நிலைகள் நிரம்பிய மருதம், கடலும் கடல் சார்ந்த பகுதியான நெய்தல் நீரற்று வறண்ட நிலமான பாலை. தமிழகத்தில் இவ்வைந்து நிலப்பகுதிகளும் சில சிறிய அளவிலேனும் பல பெரிய அளவிலேனும் காணப்படுகின்றன. தொல்காப்பியர், முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என நானிலங்களைக் குறிப்பிடுகிறார். ஆனால் பின்

**“நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலோடு”** [17]

என்றதால் பாலையை நடுநிலைத்திணை என அவர் குறிப்பிடுகிறார். முல்லைக்கும் குறிஞ்சிக்கும் பின்னும் மருதத்திற்கும் நெய்தலிற்கு முன்னும்

பாலையை வைத்திருக்கின்றார். அறிஞர்களில் குறிஞ்சியிலும், முல்லையிலும் வறண்ட பகுதி பாலை எனக் கூறுவாரும் சிலர் உளர்.

மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே பல்வேறு நாகரிக நிலைகளைக் கடந்து வந்துள்ளான்.

அவை

1. **நாடோடியாய் திரிதல்**
2. **வேட்டையாடுதல்**
3. **கால்நடை மேய்த்தல்**
4. **உழவுத் தொழில் மேற்கொள்ளல்**
5. **கடல்கடந்து செல்லுதல்**

இவ்வைந்து செயல்களும் குறிஞ்சி, முல்லை, மருதம்,நெய்தல், பாலை என்ற திணைகளோடு ஒத்துள்ளன. ஒவ்வொரு நிலத்தைச் சார்ந்த இயற்கை வளங்களின் இயல்புகள், அந்தந்த நிலத்துக்குரிய நாகரிக வளர்ச்சிக்குத் தூண்டுதலாய் அமைந்தன.

**பெயர்க்காரணம்**

நடோடியாய் அலைந்து திரிந்த மனிதன் பெருங்குன்று காடு ஆற்றுப்படுகை கடற்கரை என பலவகைப்பட்ட நிலங்களில் திரிகிறான். சில நிலங்களில் அவனுக்குத் தேவையான உணவும், வாழிடங்களும் கிடைக்கவே அங்கேயே தங்கிவிட விரும்புகிறான். அந்நிலங்களைத் தன் வயப்படுத்த எண்ணிய அவன் அவைகளுக்கு பெயரிட்டு அழைக்கிறான். நிலங்களுக்கு பெயரிட்டு அழைத்ததன் காரணம் அவைகளை தன்னுரிமை ஆக்கிக் கொள்வதற்கேயாகும்.

மலைகளின் நிலப்பரப்புகளில் குறிஞ்சி மரங்கள் நிறைந்து பூத்துக் குலுங்கின. அதைக் கண்டவன் இந்நிலத்திற்கு ‘குறிஞ்சி’ எனப் பெயரிட்டான். காடுகளில் இயற்கையாகவே முல்லைக் கொடிகள் படந்து பூக்கள்

அரும்பியிருந்தன. அவற்றிற்கு 'முல்லை' எனப் பெரிட்டான். நீர் நிறைந்த பகுதிகளில் வலிமை மிக்க மருத மரங்கள் பூக்கள் உதிர்த்து அழகுபடுத்தின. அவற்றிற்கு மருதம் எனப் பெயரிட்டான். கடற்கரை ஒட்டிய பகுதிகளில் பசிய இலைகளையும், நீல நிற பூக்களையும் கொண்ட நெய்தலைக் கண்டு அவற்றிற்கு நெய்தலெனப் பெயரிட்டான். நீரின்றி வறண்ட பகுதிகளில் பாலை மரங்கள் தாங்கள் இலையுதிர்த்து கவின் வாடி நிற்பதைக் கண்டபின். அந்நிலப் பகுதிக்கு பாலை எனப் பெயரிட்டு அழைத்தான். அந்தந்த நிலங்களுக்குரிய பூக்களின் பெயரை இட்டு அவற்றை தன்னுடைமை ஆக்கிக்கொண்டான்,

ஐந்து வகையான நிலங்களை இயற்கைக் கூறுகளின் அடிப்படையில் பிரித்த மனிதன், அந்தந்த நிலங்களுக்குரிய காலங்களை (பொழுது) ஆராய்ந்தான். இந்த நிலமும் பொழுதும் முதற்பொருளாயின.

**"முதலெனப் படுவது நிலம்பொழுது இரண்டின்**
**இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே"** [18]

இங்கு நிலம் எனப்படுவது மக்கள் வாழும் இயற்கைச் சூழலுடன் சார்ந்த நிலவமைப்பே ஆகும். ஒரு நாளின் வெவ்வேறு பகுதிகளும், ஆண்டின் வெவ்வேறு பகுதிகளும் பொழுது எனப்பட்டன. நாளின் பொழுது சிறுபொழுது எனவும், ஆண்டின் பொழுது பெரும் பொழுது எனவும் இரண்டாகப் பகுத்தறியப்பட்டது. இவையிரண்டிற்கும் முறையே ஆறுபெரும் பொழுதுகளும், ஆறுசிறுபொழுதுகளும் பிரிக்கப்பட்டன.

அந்த நிலத்திற்குரிய விலங்கு, மரம், புல், தெய்வம், விளை பொருட்கள், உணவு, மக்கட்பெயர், தொழில் உள்ளிட்டவைகளெல்லாம் கருப்பொருளாயின.

**"தெய்வம் உணவே மாமரம் புட்பறை**
**செய்தியாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப"**[19]

என்னும் தொல்காப்பிய நூற்பா இதனை விளக்கும்.

மனித இனம் எந்த இயற்கைச் சூழலில் வளர்ச்சியடைந்ததோ அந்தந்த நிலங்களின் முதற்பொருட்களுக்கேற்பவும், கருப்பொருட்களுக்கேற்பவும் அவனுடைய எண்ணங்களும், செயல்களும் அவனை ஆட்கொண்டன. இவையே உரிப்பொருளாயிற்று. உரிப்பொருள் என்பது மக்களின் வாழ்க்கை முறைவாழ்க்கை ஒழுகலாறு ஆகும்.

அவை

> **‘‘புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்**
> **ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை**
> **தேடுங்காலைத் திணைக்குரிப் பொருளே’’**[20]

எனக் குறிப்பிட்டுள்ளன.

ஐவகை நிலங்களில் எல்லாம் நிகழும் ஒழுக்கங்களைக் கூட்டி ஐந்திணை என்றனர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்தும் ‘‘நடுவண் ஐந்திணை’’[21] எனப்பட்டன. மக்கள் வாழ்வில் நிகழும் காதல் ஒழுக்கமாம் அகவுணர்வுகள் ஐந்தாக அமைந்தன. காதலால் கூடிக் குலாவும் புணர்ச்சி ஒழுக்கம் (புணர்தலும் புணர்தல் நிமித்தமும்) குறிஞ்சித் திணையாகவும், காதலன் பிரியக்காத்திருக்கும் ஒழுக்கம் (இருத்தலும், இருத்தல் நிமித்தமும்) முல்லைத் திணையாகவும், காதலனோடு ஊடும் ஒழுக்கம் (ஊடலும், ஊடல் நிமித்தமும்) மருதத் திணையாகவும், காதலன் பிரிவுக்கு இரங்கும் ஒழுக்கம் (இரங்கலும், இரங்கல் நிமித்தமும்) நெய்தல் திணையாகவும், காதலனோடு உடன்போகும் ஒழுக்கம் பாலைத்திணையாகவும் அறியப்பட்டன.

ஐவகை நிலங்களில் முதற், கரு, உரிப்பொருட்களைச் சார்ந்தே இனப்பெருக்கமும், தொழில் முறைகளும், நாகரிகமும் தோன்றத் தொடங்கின.

**குறிஞ்சி நிலம்**

மலையும் மலையைச் சார்ந்த இடமும் குறிஞ்சி எனப்பட்டது. குறிஞ்சித் திணையின் நிலம் மலையாகும் குறிஞ்சிப் பூ மலையின் தன்மைப் பூவாக விளங்குவதைக் கண்டு இதனையே குறியீடாகக் கொண்டு மலை நிலத்திற்கு 'குறிஞ்சி' என்று பெயர் சூட்டினர்.

மனிதன் முதன்முதலில் குறிஞ்சி நிலத்திலேயே தோற்றம் பெற்றிருக்க வேண்டும். ஏனெனில் உயிர்கள் தோன்றுவதற்கான தட்பவெப்பநிலை அங்குதான் இடம்பெற்றிருந்தன. அவனுடைய வாழ்க்கையை இங்குதான் முதன் முதலில் தொடங்கினான். ஏனெனில் கொடிய விலங்கினங்களினின்றும் அவனைக் காப்பதற்கேற்ற குகைகள் அங்குதானுண்டு.''[22] மட்பாண்ட கலங்களைத் தயாரிக்க அறியாததற்கு முன்பே அடிப்படைத் தேவையான நீரைப் பெற அவன் குறிஞ்சி நிலத்திலுள்ள சுனை நீரையே பருகினான்.

மலையில் வாழ்க்கையைத் தொடங்கிய மனிதன் காய், கனி, கிழங்கு, விதை முதலியவற்றை உண்டுவாழ்ந்தான்.

**''கானவர்**

**கிழங்கு அகழ் நெடுங்குழி''[23]**

**கவலை கெண்டிய அகல்வாய் சிறுகுழி''[24]**

எனக் குறிஞ்சியில் மக்கள் நாடோடிகளாய் உணவினைத் தேடி அலைந்தமையைக் காணமுடிகிறது. குறிஞ்சி நில மக்கள் கு(ன்)றவர்கள் ஆவர். இவர்கள் வேட்டைத் தொழிலில் ஈடுபட்டதால் வேட்டுவர் எனவும், கானவர் எனவும் பெயர் பெற்றனர். பெண்மக்கள் கு(ன்)றத்தி, கொடிச்சி எனப்பட்டனர்.

''மலையில் கிழங்கு, காய், கனி முதலியவை எல்லாக் காலங்களிலும் கிடைக்காமற்போகவே ஊன் வகையையும் உணவாகக் கொண்டனர். மலை

நிலத்து குறவர்கள் தாம் வேட்டையாடிய உடும்பிறைச்சி, கடமானிறைச்சி, பன்றியிறைச்சி முதலியவற்றை உண்டனர். தேக்கள், தேறலை மூங்கில் குழாயில் இட்டு அருந்தினர். மேலும் தாமே சமைத்த நெல்லால் ஆகிய கள்ளையும் உண்டனர். மூங்கிலரிசியால் சமைத்த உணவைப் பலாக்கொட்டை மாவோடு கலந்து உண்டனர்.''[25] நாகரிக வளர்ச்சியில் வேளாண் வினை புரியக் கற்றுக் கொண்ட அவர்கள் திணை முதலிய வித்துக்களை விதைத்து உணவாகக் பயன்படுத்தினர்.

**“சாரல் பெரும்புனக் குறவன் சிறுதினை மறுகால்”**[26]

பறண்களைக் கட்டி அவற்றின் மேல் ஏறி நின்று கவண்கற்களை வீசி விலங்குகளையும், பறவைகளையும் விரட்டுவர்.

**“புலத்துப்புனிறு போகிய புனஞ்சூழ் குறவர்**
**உயர்நிலை இதண மேறிக் கைபுடை யூஉ**
**அகன்மலை யிறுபிற் றுவன்றிய யானைப்**
**பகனிலை தளர்க்கும் கவணுமிழ் கடுங்கல்”**[27]

மலையில் வாழ்ந்த மக்கள் கழிகளை நட்டுப் புல்லால் வேய்ந்த குடில்களில் வாழ்ந்தனர். இதனை,

**“அகலுள் ஆங்கண்கழி மிடைந்து இயற்றிய**
**புல்வேய் குரம்பைக் குடிதொறும் பெறுகுவீர்”**[28]

என்ற அடிகளால் அறியலாம்.

குறிஞ்சி நிலத்தின் முக்கிய தாவரங்களாக குறிஞ்சி, மராமரம், மாமரம், காந்தள், வேங்கை, மூங்கில், கோட்டுப்பூ மரம் முதலியவை விளங்கின. இவற்றில் ஒரு சில தாவரங்களின் இலைகளையும், பூக்களையும் ஆடையாக மக்கள் அணிந்தனர்.

**"தானும் மலைந்தான் எமக்கும் தழை ஆயின**

**பொன் வீ மணி அரும்பினவே**

**என்ன மரங்கொல் அவர் சாரலவ்வே"** [29]

இங்கு சாரல் என்பது மலைநிலமான குறிஞ்சியைக் குறித்ததே.

குறிஞ்சி நிலத்தின் பெரும்பொழுது கூதிர்காலமும், முன்பனிக்காலமும் ஆகும். சிறுபொழுது யாமம். குறிஞ்சி நிலத்தில் மக்கள் தோற்றம் பெற்று படிப்படியாக வேட்டைத் தொழிலிலிருந்து வேளாண் தொழிலிற்கு மாற்றமடைந்து நாகரிக வளர்ச்சியைப் பெற்றனர். நாகரிகத்தின் வளர்ச்சியில் ஆடை அணியும் பழக்கத்தினையும் நிலையான குடியிருப்புக்களையும் ஏற்படுத்திக் கொண்டனர்.

மக்களின் தோற்றமும், உணவுக்காக நாடோடிகளாய் திரிந்த நிலையும், வேட்டையாடும் தொழிலும், மெதுவாக அவன் வேளாண் முறைமையைக் கற்றதும் தொடக்கத்தில் குறிஞ்சியிலேயே நிகழ்ந்தன.

**முல்லை நிலம்**

காடும் காடு சார்ந்த பகுதியும் முல்லை எனப்பட்டது. முல்லை நிலம் புறவும் என்றும் கூறப்பட்டது.

**"மனம் கமழ் புறவு"**[30]

**"தண்கமழ் புறவின் முல்லை மலரா"**[31]

மேலும் முல்லை நிலம் "வியன்புலம்"[32] "தண்புலம்"[33] எனவும் அழைக்கப்பட்டது. குறிஞ்சியும், முல்லையும் வான்மழை நோக்கிய புன்செய் நிலங்களாகவே காணப்பட்டன. இங்கு விளைந்த பயிர்களெல்லாம் புன்செய் பயிர்களாகவே விளைந்தன. குறிஞ்சி நிலத்தே மக்கள் பெருகினர். மலையிடத்தே கிடைக்கும் உணவுப்பொருள்கள் அவர்களுக்கு போதாமலிருந்தன. ஆகையால் அவர்கள் அம்மலையை விட்டு கீழிறங்கி காடுகளில் வாழத் தொடங்கினர்.

அவ்விடத்து வாழ்க்கையை தொடங்கியபோது ஆடு, மாடு, எருமை முதலியவற்றையும் முன் தமக்கு வேட்டைக்கு உதவியாயிருந்த நாயையும் தம் வீடுகளில் வளர்த்து வந்தனர். முல்லைநிலம் சிறிய வகை புற்களைக் கொண்டு

காணப்பட்டதால் மேய்ச்சலுக்கு பெரும் பயணாக இருந்தது. இதனால் ஆடு, மாடு முதலியவற்றை வளர்த்து அவை அளிக்கும் பயன்களைக் கொண்டு வாழ்கின்ற நிலையை அடைந்தனர். ‘‘முல்லை நிலம் ஆடு, மாடு விரைவில் பெருகுவதற்குரிய வாய்ப்பாக இருந்தது. இதனால் எல்லோரும் சொத்துடையவராயினர்.’’[34] ஆகவே குறிஞ்சியில் குழுவாக வாழ்ந்தவர்கள் முல்லையில் குடும்பங்களாக பிரிந்து வாழ்க்கை நடத்தினர்.

முல்லை வாழ் மக்கள் ‘‘ஆயர்’’[35] ‘‘அண்டர்’’[36] ‘‘கோவலர்’’[37] ‘‘கிடைமகன்’’[37] ‘‘இடையர்’’[39] ‘‘ஆய்ச்சியர்’’[40] ‘‘ஆய் மகள்’’ [41] ‘‘ஆய்த்தி’’ [42] போன்ற சொற்களால் அழைக்கப்பட்டனர்.

குடும்பங்களாக பிரிந்த முல்லை நில மக்களுள் ஆண்களே சொத்துடையவராயினர். மிகப்பல ஆடு, மாடுகளை வைத்திருந்த ஒரு குடும்பத்தவரின் தந்தை செல்வத்தால் அடையக்கூடிய எல்லா முன்னுரிமையும் பெற்றான். நிலங்களைச் சிறுசிறு கூறுகளாய்ப் பிரித்தலால் ஆடு, மாடுகளை மேய்ப்பதற்கான வாய்ப்புகள் குன்றும். ஆகவே பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து வாழ்ந்தன. இவ்வகைப் பல குடும்பங்களுக்கு ஒருவன் தலைவனான் பின்னாளில் அரசன் தோன்றுவதற்கு இம்முறையே காரணமாக இருந்ததாக பல்வேறு அறிஞர் சுட்டுவர்.

இருப்பினும் பலவகை குடும்பங்கள் நிறைந்த பல சிற்றூர்களுக்குத் தலைவனாக இருந்தவனை ‘‘சீறூர் மன்னன்’’[43] என்று அழைத்தனர்

**‘‘கொடுங்கோல் கோவலர் பின்நின்று உய்த்தர’’[44]**

‘‘இடையனைக் குறிக்கும் கோன் என்னுஞ்சொல் அரசனைக் குறிக்கின்றது. மந்தைகளை மேய்க்கும் இடையனது கோலே அதிகாரத்திற்குரிய செங்கோலாயிற்று’’[45] ஆயர்களின் குடில் ஆடுகள் நின்று தின்னும் பொருட்டு தலைகளைத் தாம்பால் கட்டின குறுகிய காலையுடைய குடில், அக்குடிலினது சிறு வாயில், பல தடிகளைக் கொண்டு கட்டப்பட்டவை, தடிகளைப் பரப்பி வரகு

வைக்கோலை இட்டு அதன்மேல் கிடாத்தோலைப் பரப்பி இடையன் படுத்திருப்பான். வீட்டின் முற்றத்தே சிறிய முளைகளில் (சிறுகுச்சி) செம்மறியாடுகளும். வெள்ளாடுகளும் நீண்ட கயிற்றால் கட்டப்பட்டுக் கிடக்கும் இதனை.

**"மறிய**
**குளகுஅரை யாத்த குறுங்கால் குரம்பை**
**செற்றை வாயில் செறிகழிக் கதவின்**
**கற்றை வேய்ந்த கழித்தலைச் சாம்பின்**
**அதளோன் துஞ்சும் காப்பின் உதள**
**நெடுந்தாம்பு தொடுத்த குறுந்தறி முன்றில்**
**கொடுமுகத் துருவையொடு வெள்ளை சேக்கும்"**[46]

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

இடையர்குலப் பெண்களான ஆய்ச்சியர், தயிரைக் கலக்கி மோராக்கி பூஞ்சுமட்டில் வைத்து விற்றுவருவர்.

**"உறை அமை தீம்தயிர் கலக்கி நுரை தெரிந்து**
**புகர்வாய்க் குழிசி பூஞ்சுமட்டு இரீஇ**
**நாள்மோர் மாறும் நல்மா மேனி"**[47]

மோர் விற்றதனால் கிடைத்த நெல் முதலிய உணவால் தன் சுற்றத்தார் எல்லோரையும் உண்ணச் செய்கிறாள். தான் நெய் விற்ற விலைக்குக் கட்டிப் பசும்பொன்னையும் விரும்பிக் கொள்ளாது எருமையையும், நல்ல பசுக்களையும் அவற்றின் கன்றுகளோடு வாங்குகின்றாள்.

முல்லை நிலத்தவர் வரகு, முதிரை, சாமை போன்ற புன்செய் பயிர்களை விளைவித்து, அவற்றையே உணவாக உண்டனர். இதனை,

**"கானம் நந்திய செந்நிலப் பெருவழி**
**வானம் வாய்ந்த வாங்குகதிர் வரகின்**
**திரிமருப்பு இரலையொடு மடமான் உகள"**[48]

என்றதால் தெளியலாம்.

முல்லை நிலத்தில் கொன்றை, குருத்து, புதல், காயா, வேங்கை, பீர்க்கம், அவரை, பிச்சி, பிடவம், காந்தள் முதலியன முக்கியத் தாவரங்களாகும். முல்லை நிலத்தவர் வாழ்ந்த ஊர் ''பாடிசேரி''[49] என அழைக்கப்பட்டது. முல்லையின் பெரும்பொழுது கார்கலம் சிறுபொழுது மாலை ஆகும்.

முல்லைநில அகநாகரிகம் ஏனைய நில நாகரிகங்களைவிட வேறுபட்ட சிறப்பினை உடையது. பிரிவு என்பதும், அப்பிரிவை பொறுத்திருப்பதாகவும், பிரிவுக்காக வருந்தியிருப்பதும் எல்லா நிலங்களிலும் காணப்படுபவை. ஆனால் பிரிவுக்கும் பொறுத்திருப்பதற்கும் எல்லை வகுத்திருப்பதே முல்லையின் சிறப்பாகும்.

குடும்ப அமைப்பில் ஆணும், பெண்ணும் சேர்ந்து வாழ தலைப்பட்டபின் கற்பு வாழ்வை மேற்கொண்ட பெண்களை 'முல்லை சான்ற கற்பினள்' என சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. முல்லை கார்காலத்தில் பூக்கும், காமத்தை மிகுவிக்கும், தலைமகளுக்கு காமத்தை மிகுவிக்கும் கார்கால மாலைக் காலத்தும் அவள் கற்பு நெறி தவறாது தனது துயரை ஆற்றியிருத்தலால், அக்காலத்தில் மலரும் முல்லைமலர் கற்பு நெறியின் குறியீடு ஆயிற்று.

கால்நடைகளை வளர்த்தலும், புன்செய் பயிர்களை விளைவித்தலும், முல்லைநிலத் தொழில்களாயின. முல்லை நிலச் சமூகம் குறிஞ்சி நிலச் சமூகத்தைவிட சற்று மேம்பட்டு இருந்தது.

**மருத நிலம்**

வயலும் வயல் சார்ந்த பகுதியும் மருதநிலமாகும். மென்மையான நிலப்பகுதி என்பதால் மருதம் மென்புலம் என்றும் அழைக்கப்பட்டது. மருத நிலம் மருத மரங்கள் அதிகம் காணப்பட்டதால் இந்நிலத்தொகுதி 'மருதம்' எனப்பட்டது.

கடற்கரைக்கும் முல்லை நிலத்துக்கும் இடையே கிடக்கும் நிலம் வயல்களாக இருந்தன. பழைய கற்காலத்துப் பின் அங்கு வாழை, நெல், கரும்பு முதலிய பயிர்கள் உண்டாக்கப்பட்டன. இம்மருத நிலத்தில் வாழ்ந்த நிலத்தை உழுது தானியங்களை உண்டாக்கி ஆறுகளிலிருந்து வயல்களுக்கு நீர்பாய்ச்சினர். வெள்ளத்தை இவ்வகையாக பயன்படுத்தியதால் இம்மருத நில மக்களுக்கு வேளாளர் எனப் பெயர் ஏற்பட்டது.

நீரின் பயன்பாடும் கால்நடைகளின் பயன்பாடும் உழுகருவிகாளகிய இடும்பின் பயன்பாடும். மருத நில வேளாண்மையில் பெரிதும் பயன்படத் தொடங்கின. ‘‘வேளாண்மையில் இரும்புக் கருவிகளின் பயன்பாடு அதிகரிக்க உற்பத்தி பெருகிக் கொண்டு போயிற்று. இன்னும் திருத்தமான கருவிகளுடன் மனிதனின் உற்பத்தித் திறனும் சேர்ந்து கொண்டு உற்பத்தியில் ஒரு பாய்ச்சலையே ஏற்படுத்தியது. இந்தப் பாய்ச்சல் சமுதாய மாற்றங்களையும் உள்ளடங்க்கிக் கொண்டு வெளிவரலாயிற்று.’’[50]

மருத நிலத்தில் வாழ்ந்த மக்கள் மரம், தடிகளால் வீடுகள் அமைத்து அவற்றுள் தானியங்களைச் சேமித்து வைத்தனர். தேவைக்கு மிகுதியான விளைபொருட்களைக் கடல்மீன், உப்பு முதலியவற்றுக்குப் பரதவரோடும்,[51] பால், நெய் முதலியவற்றுக்கு ஆயரோடும்,[52] கல்லாயுதம், மான்கொம்பு, தந்தம், இறைச்சி முதலியவற்றுக்குக் குறவரோடும்,[53] பண்டமாற்றுச் செய்தனர்.

உழவர்கள், நுகத்திலே எருதுகளைப் பூட்டிப் பெண்யானையின் வாயை ஒத்த வளைந்த வாளை உடைய கலப்பையை அழுத்தி நிலத்தை உழுது விதைகளை விதைப்பர். நெற்கதிர்களை உற்பத்தி செய்வர். களைபறித்தல் மற்றும் கடாவிடுதல் போன்ற தொழில்களையும் செய்தனர்.

**“-----------ஞாங்கர்க்**

**குடிநிலை வல்சிச் செஞ்சால் உழவர்**

**நடைநவில் பெரும்பகடு புதவில் பூட்டி**

**-----------------------------------**

**உடுப்பு முகமுகக் கொழுமூழ்க ஊன்றி**

**தொடுப்பு எறிந்து உழுது துளர்படுதுடவை''**[54]

மருத நிலம் சூழ்ந்த குடியிருப்புகளில் பசுக்கன்றுகளைப் பிணிக்கும் கயிறுகள் கட்டின தறிகள் இருந்தன. மேலும் நீண்ட ஏணிக்கும் எட்டாத உயரமும், தலையைத் திறந்து உள்ளே கொட்டப்பட்ட நெல்லினை உடைய பழைய குதிர்களும் வீட்டில் இருந்தன. இவர்கள் வீட்டு சிறுபிள்ளைகள் தச்சுச்சிறார் செய்த விளையாட்டுத் தேர்களை உருட்டிக்கொண்டு திரிந்ததால் தமது தளர்நடையாலுண்டான வருத்தம் நீங்கும்படி செவிலித் தாயாரிடத்துப் பாலையுண்டு அவர்களைத் தழுவிக்கொண்டு உறங்குவர்.

**''ஏயி எய்தா நீள்நெடு மார்பின்**

**அம்தளித் துஞ்சும் அழகுடை நல் இல்''** [55]

இம்மருத மக்கள் நெற்சோற்றோடு கோழிப் பேட்டின் இறைச்சிப் பொரியலை உண்பர். யானையின் குரல் போலச் சத்தமிடும் ஆலைகளில் கரும்பு சாற்றைக் கட்டியாகக் காய்ச்சுவர்.

**''வினைஞர் தந்த வெண்யெல் வல்வி**

**முனைவாழ் அளகின் வாட்டொடும்''**[56]

வாசலில் காய்கின்ற நெல்லைத் தின்னும் கோழியை விரட்ட மகளிர் தன்னுடைய காதினில் அணிந்திருக்கும் குழையை கழற்றி எறிவர். அந்த அளவிற்கு செல்வச் சிறப்புடன் வாழ்ந்துள்ளனர். மருதநில மக்கள் அவ்வாறு வீசிய குழை மனையின் முற்றத்தே பூண்அணிந்த சிறார் கையால் உருட்டி விளையாடும் தேரினது உருளையைத் தடுக்கும்.

**''நேர் இழை மகளிர் உணங்கு உணாக் கவரும்**

**கோழி எறிந்த கொடுங்கால் கனங்குழை**

**----------------------------------------**

**முக்காற் சிறுதேர் முன் வழி விலக்கும்''** [57]

நெல் அரியும் உழவர்கள், நெருப்பு கொழுந்துவிட்டு எரிவது போன்ற தாமரைப் பூக்களின் இடையிடையே விளைந்த சிவந்த நெற்கதிர்களை அரிந்து குவிப்பர். தமக்குக் கள்ளினை ஏற்றிக்கொண்டு பலகாலும் வந்து செல்லும் வண்டி சேற்றினில் புதையுமானால் அதனைப்போக்குதற்குச் சிறந்த கரும்புகளை அடுக்கி அடைகொடுப்பர்.

**"எரி அகைந்தன்ன தாமரை இடைஇடை**

**அரிந்து கால் செந்நெல் வினைஞர்**

**கள்கொண்டு மறுகும் சாகாடு அளற்று உறின்**

**ஆய்கரும்பு அடுக்கும் பாய்புனல் ஊர**

**பெரிய நாண் இலைமன்ற பொரிஎனப்"** [58]

ஆரவாரமுடைய விடியற் காலத்தில் நெல்லினது வைக்கோலைப் பெயர்த்து அலைத்துக் கடாவிடுவர். தொழிலில் ஏற்பட்ட சோர்வு நீங்க தளிருடையமாவின் காய்க்கொத்துகளைப் பிழிந்து மாதுளங்காய் முதலிய சேர்த்துப் புளிக்கும் தன்மை உண்டாகச் செய்து பனை ஓலையால் செய்த தட்டுப் பிழாவில் ஊற்றிக் குடிப்பர். கூழினை வேண்டிய அளவு உண்டபின் நெற்குவியலை சுற்றிப் பொழுது சரிய மருத மரத்தின் நிழலில் எருதுகளோடு தங்குவர்.

கீழே விழுந்து கிடக்கும் பனங்கருக்கையை விறாகக் கொண்டு கழியிடத்துப் பிடித்து மீனைச் சுட்டு, அதனுடன் விருப்பம் மிகுந்த கள்ளை உண்பர். அவ்வாறு உண்டபின்னும் தென்னை மரத்தின் இளநீரையும் குடிப்பர்.இதனை,

**"நெல் விளைகழனிப் படுபுள் ஓப்புநர்**

**ஒழி மடல் விறகின் கழி மீன் சுட்டு**

**வெங்கள் தொலைச்சியும், அமையார், தெங்கின்**

**இளநீர் உதிர்க்கும்----------------------------"** [59]

எனும் பாடல்வரிகள் உணர்த்துகின்றன.

மருத நிலங்களில் வீடுகள் அனைத்தும் ஓங்கியுயர்ந்த மாடங்களாக காணப்பட்டன.

**“மாடம் ஓங்கிய மல்லல் மூதூர்**
**ஆறு கிடந்தன்ன அகல் நெடுந் தெருவில்”**[60]

குறிஞ்சியிலும், முல்லையிலும் அலைந்து திரிந்த உணவுத் தேடல் மருதத்திலே தன்னிறைவு அடைந்தது. புன்செய் நிலங்களில் மழை நீரையே நம்பி செய்யப்பட்ட பயிர்த் தொழில். நன்செய் மருத நிலத்திலே வளர்ச்சியடைந்தது. நீரைத் தேக்கி வைத்து குளங்களை வெட்டி அதனை வேளாண்மைக்கு பயன்படுத்தினர். மேலும் அணைகளையும் கட்டி நீரைத் தேக்கி, ஆண்டு முழுமைக்கும் அதனைப் பயன்படுத்துக் கொண்டனர். அரசர்களும்

**“காடு கொன்று நாடாக்கி**
**குளம் தொட்டு வளம் பெருக்கி”**[61]

பயிர்த் தொழிலுக்கு உதவி புரிந்தனர். புலவர்களும் வேளாண் உற்பத்தியின் அவசியத்தை அரசர்க்கு எடுத்துரைத்தனர்.[62] மேலும் உழவுத் தொழில் கருவிகளின் பயன்பாடும் சேர்ந்து உற்பத்தி பெருகி உபரி ஏற்படத் தொடங்கியது. உபரி உற்பத்தி வேட்டையாடும் நிலையையும் விலங்கைச் சார்ந்த நிலையையும் மாற்றி நாகரிக சமூகம் அமைய வழிவகுத்தது. மருத நிலமே நாகரிகச் சமூகத்தின் தோற்றமாக காணப்பட்டது.

“நெல்லைப் பயிரிட்டு உணவுக்கு தட்டுப் பாடில்லாமல் வாழ்ந்த படியினால் மருத நிலத்து மக்கள் வாழ்க்கை மற்ற நிலத்து மக்கள் வாழ்க்கையை விடப் பல மடங்கு உயர்ந்திருந்தது. வாழ்க்கையில் அதிகம் கவலைப்படாமல் இருந்த இவர்களுக்கு ஓய்வும் கிடைத்தது. ஆகவே இவர்களின் நாகரிகமும் பண்பாடும் பெற்று வாழ வாய்பிருந்தது.”[63] சீறூர் மன்னர்களும் மருத நில உற்பத்திப் பெருக்கத்தின் காரணமாக வேந்தர்களாக மாற்றம் பெற்றனர். இதுவரை இருந்த பொதுவுடமைச் சமூகம் மாறி தனிவுடைமைச் சமூகமாக மருதத்தில் மாற்றமடைந்தது.

## நெய்தல் நிலம்

கடலும் கடல் சார்ந்த பகுதியும் நெய்தலெனப்பட்டது. ‘‘நெய்தல் என்பது ஒரு நீர்ப்பூக்கொடி இதனாலே கடல் சார்ந்த நிலம் நெய்தலெனப்பட்டது.’’[64] நெய்தல் நிலத்தினை ‘‘மென்புலம்’’[65] என்பர். நெய்தலின் முதற்பொருள் கடல் மற்றும் கானல் ஆகும். நெய்தல் நில மக்கள் பரதவர் மற்றும் நுளையர் என அழைக்கப்பட்டனர். நெய்தல் நிலத் தலைவன் ‘துறைவன்’ ‘சேர்ப்பன்’ ‘புலம்பன்’ என்று அழைக்கப்பட்டான். நெய்தல் மலர் கடற்கரை கழியில் மலரும். இம்மலர் மகளிரின் கண்களை ஒக்கும். எனவே மகளிரின் இரங்கல் தன்மைக்கு இது உவமை ஆயிற்று.

விசாலித்த நெஞ்சும், வலிமையுமுள்ள நெய்தல் நில மக்கள் கடலிடத்தே படகுகளில் சென்று மீன் பிடித்தனர். இரண்டொரு மரங்கள் ஒன்றாகப் பிணிக்கப்பட்ட கட்டுமரங்களே அவர்களது முற்பருவத்துப் படகுகளாய் இருந்தன. இந்நிலத்தில் உப்பும், மீனும் மிகுதியாகக் கிடைத்தன. இவற்றைப் பரதவர் மற்ற நிலங்களுக்குக் கொண்டுசென்று பிற பொருள்களுக்குப் பண்டமாற்றுச் செய்தனர். இதனால் அங்குள்ளவர் பெரும்பாலும் வாணிகத்தை மேற்கொள்ள வேண்டியரவாயினர். பொதிமாடுகளிற் பண்டங்களை ஏற்றிச் சென்று பண்டமாற்றுச் செய்தனர்.

கடலில் பிடித்த இறாலும், வயல் ஆமையும் உணவாக உண்டனர். நீரில் நிற்கும் ஆம்பல் பூவையும் மணலிடத்தே படர்ந்த அடம்பின் பூவையும் தலையில் சூடுவர்.

சிவந்த தலையையுடைய பரதவர் நிறையுவா நாளில் மீன் பிடிக்க கடலுக்கு செல்லாமல் தன் மனைவியோடு தன் இல்லத்தில் கூடியிருப்பர் கடலருகே இருக்கும் பரதவருடைய அகன்ற தெருவிடத்தே மிகுந்த காவலையுடைய பண்டகசாலை உண்டு. பண்டகசாலையில் கடலில் ஏற்றுவதற்குக் கொண்டுவந்த பண்டங்களும் கடலிலிருந்து இறங்கிய பண்டங்களும், சுங்கங்கொள்வதற்கு

முத்திரை பொறித்து பண்டசாலைக்குப் புறத்தே அடுக்கப்பட்ட பண்டங்களும் மலைபோல் குவிந்து கிடக்கும். பண்டக சாலையின் முற்றத்தே ஆண்நாய், மேழகக்கிடாயோடு மூட்டைகளிலேறிக் குதித்து விளையாடும் இந்த தோற்றம், மேகங்கள் தவழும் சிகரங்களையும், பெரிய மூங்கில்கள் வளர்ந்த பக்க மலைகளையும் உடைய மலைப் பகுதிகளில் தாவிஓடும் வருடை மானின் தோற்றம் போல் விளங்கும்.

**“நீரினின்றும் நிலத்து ஏற்றவும்**

**நிலத்தினின்றும் நீர்ப் பரப்பவும்**

**அளந்து அறியாப் பல பண்டம்**

**வரம்பு அறியாமை வந்து ஈண்டி**

**--------------------------------**

**ஏழகத் தகரோடு உகளும்முன்றில்”**[66]

உமணர், பாத்திகளிலே கடல்நீரைவிட்டு, பளிங்கு போன்ற உப்பை விளைவிப்பர். விளைந்த உப்பைக் குவியல் குவியலாக வாரிக்குவிப்பர். இங்ஙனம் குவிக்கப்பட்ட உப்பை சகடங்களில் ஏற்றிச் சென்று முல்லை, குறிஞ்சி, மருதம் முதலிய நில மக்களுக்கு விற்பர்.

பெரிய கடலிடத்து மீன் பிடிப்பும் சிறுகுடியிலுள்ள பரதவர் கரிய கடற்கரை வயலிடத்து உழாதுவிளைவித்த வெள்ளிய கல்போன்ற உப்பின் விலையைக் கூறி மலைநாட்டுக்குச் செல்லும் கோலைக் கையிலுடைய உமணரின் காதல் மடமகள் வளையல் ஒலிக்கும்படி கைவீசி ‘நெல்லுக்குப் பதில் உப்பு’ என சேரியிடத்து விலை கூறி விற்பர். இந்த ஓசையைக் கேட்டு வீட்டில் கிடந்த நாய் குரைக்கும் இதற்கு அவள் அஞ்சுவாள்.

**“கதழ்கோல் உமணர் காதல் மடமகள்**

**சில்கோல் எல்வளை தெளிர்ப்ப வீசி**

**நெல்லின் நேரே வெண்கல் உப்பு எனச்**

**--------------------------------------**

**விளிஅறி ஞமலி குரைப்ப வெரீஇய”**[67]

இவ்வாறு நெய்தல் நிலத்தில் வாழும்மக்கள் மேற்கூறியவாறு உணவுமுறையையும், பண்டமாற்று முறைறையும் மேற்கொண்டு சிறப்பாக விளங்கினர்.

மருத நிலத்தில் ஏற்பட்ட உபரி உற்பத்தியை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய நெய்தல் நிலமே பயன்பட்டது. ஆகையால் நெய்தல் நிலம் வாணிபத்தில் சிறந்து விளங்கியது. பண்டமாற்று நிலை மாறி காசுக்காக பொருட்களை விற்கும் முறை மாறியது.

**"புல்இலை நெல்லிப் புகர் இல் பசுங்காய்**
**கல்அதர் மருங்கில் கடுவளி உதிர்ப்ப**
**பொலம் செய் காசின் பொற்பத் தாவும்"[68]**

என்றதால் காசுகள் சங்க காலத்தில் பழக்கத்தில் இருந்தன. "பொன்னாலான காசுகளை பெண்கள் மாலையாக அணிந்திருந்தனர்."[69]

பண்டமாற்றாக இருந்த வாணிகம் பின்னர் காசுக்காக நடைபெற்றது. நெய்தல் நிலத்தோற்றமும், நெய்தல் நிலம் பெருநகரங்கள் துறைமுகங்களாக மாறியபோது உள்நாட்டு வாணிமும், வெளிநாட்டு வாணிகமும் சிறப்பாக நடைபெற்றது. இதனால் உணவிற்காக நாடோடியாகத் திரிந்த சமூகம் வேட்டைச் சமூகம், கால்நடை வளர்ப்புச் சமூகம், வேளாண் உற்பத்திச் சமூகம் என்ற நிலைமாறி வாணிகச் சமூகம் உருவாகியது. பொருளாதார மேம்பாடு அடைய நெய்தல் நிலத்தில் தோன்றிய வாணிபச் சமூகமே பெரும்பங்காக அமைந்தது.

**பாலை நிலம்**

முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து நல்லியல்பு இழந்து பாலை நிலம் உண்டாகும். இதுவன்மையான நிலப்பரப்பைக் கொண்டது. முல்லையும், குறிஞ்சியும் மட்டுமே வறட்சியில் அதிகம் பாதிக்கப்படுவன. மருதமும் நெய்தலும் அவ்வகை பாதிப்புக்குள்ளாகா ஆகையால்தான் பாலை என்னும் நிலப்பகுதி குறிஞ்சி மற்றும் முல்லை நிலங்களில் தோன்றக் கூடியதேயாயின. பாலைவாழ் மக்கள் எயினர், எயிற்றியர், மறவர் போன்றோர் ஆவர். பாலை நிலத் தலைவன் காளை, மிடலை, மீளி என்ற சொற்களால் சுட்டப்பட்டான்.

பாலை நிலம் மனிதன் குடியேறிவாழ்வதற்கு ஏற்ற வாய்ப்புடையதன்று வேட்டையாட விலங்குகளைத் துரத்திச் செல்லும் எயினர். அவ்விடத்தில் சில காலம் தங்குவதுண்டு. அவர்கள் முல்லை நில ஒதுக்குகளிலும் குறிஞ்சி நில ஒதுக்குகளிலும் மனைவி மக்களோடு வாழ்வர்.

**“ஈத்து இலை வேய்ந்த எய்ப்புறக் குரம்பை**
**வரிப்புற அணிலொடு கருப்பை ஆடாது”** [70]

எயினர்களது குடில்கள் அணிலும் எலியும் நுழையாதபடி ஈந்தின் ஓலையால் வேயப்பெற்று முட்பன்றியின் முதுகுபோலத் தோன்றும். பிள்ளையைப் பெற்ற எயிற்றி வீட்டின் ஒரு புறத்தே தன் பிள்ளையோடு மான்தோலாகிய படுக்கையில் முடங்கிக் கிடப்பர்.

எயினரின் அரணிடத்தே உள்ள அகன்ற வீடுகளில் பகைவரைக் குத்திய கூரிய வேல்களும், பரிசைகளும் அம்புக் கட்டுகளும் விற்களும் நிரையாகக் சார்த்திக் கிடக்கும். உயர்ந்த மதில்கள் ஊகம் புல்லால் வேயப்பட்டிருக்கும் தலைவாயில்களில் தேன் கூட்டைப் போன்ற அம்புக்கட்டுகளுடன் துடியும் தூங்கும். வீட்டுவாசலில் சங்கிலியால் கட்டப்பெற்ற நாய்கள் நிற்கும். எயினர் இவ்வகையான குடியிருப்புகளில் வாழ்ந்தனர்.

இம்மறக்குடியில் உள்ள மகளிர் யானை எதிர்வரினும் வலிமையான இடி இடிப்பினும் அஞ்சமாட்டார்கள். வாட்போர் செய்யும் குடியில் பிறந்த மறவன் தான் குறிவைத்த விலங்கைத் தப்பாமல் பிடிக்கின்ற வேட்டைநாய்போல காவலுடைய முல்லை நிலத்திற்கு சென்று அங்குள்ள பசுக்களை அடித்துக் கொன்று வந்து விடியற்காலையில் கள்ளுக்கு விலையாகக் கொடுப்பான். அதற்குபின் வீட்டிலே நெல்லாற் சமைத்த கள்ளை உண்டு மன்றிடத்தே வலிமையான கிடாவை அறுத்துத் தின்று மத்தளம் முழங்க இடத்தோளை வலப்பக்கதே வளைத்து நின்றாடுவான்.

ஓமை, உழிஞ்சில், உலவை, உகாய்,கடு தான்றி,கொடிய முள்ளுடைய தொடரி, நாகம், ஆர், ஆத்தி, இருள், இண்டம், குரவு, கோங்கு, கள்ளி, கடம்பு, முள்ளி, இனிய காயுடைய நெல்லி, வாகை முதலியவும் பிறவுமாகிய வயிர மரங்கள் காய்ந்திருத்தலின் மயிலும், குயிலும் அவற்றினிடையே செல்லாது.

அம்பை எய்யும் வில்லைக் கையிலேயுடைய மறவர் குடியிற்பிறந்த தெய்வமேறி ஆடுபவள் தனது ஊர்நடுவேயுள்ள மன்றிடத்துக் தெய்வத் தன்மையுற்றறு மெய்ம்மயிர் சிலிர்த்து நிமிர்த்திய கைகைள் ஒற்றையும், இரட்டையுமாக அபிநயம் கூட்டித் தாளத்துக்கு ஏற்ப கானவர் வியப்பஆடுவாள்.

வரிந்துகட்டின வில்லும் கடைகுழன்ற மயிரும் புலிபோன்ற பார்வையும் தறுகண்மையுடைய மறவர், வழியில் செல்வோரிடத்தில் பெறும்பொருள் இல்லை யென்றாலும் தங்குள் அம்பு பட்டு அவர்கள் பதைப்பதைப்பைக் கண்டு மகிழ்வர். அவர்களின் தாடி முறுக்கிய மான் கொம்பு போன்றிருக்கும்.

இவ்வாறு பாலை நிலத்தில் வாழும் எயினர் வழிப்பறி செய்வோராகவும், வலிமையுடையவராகவும் இருந்துள்ளனர். அவர்கள் மட்டுமல்லாது அவர்களது எயிற்றியும் யானை எதிர்படினும் கலங்காது வலிமையுடன் இருந்துள்ளனர்.

மருதமும். நெய்தலும் நாகரிக வளர்ச்சியில் தனிவுடைமைச் சமூகமாக மாறிய போழ்து குறிஞ்சில் வாழும் மக்களும் பிறவகை நிலங்களுக்கு சென்று தங்களது தொழில் முறையினையை மேற்கொள்ளாத நிலை உருவாகியிருக்கலாம். ஆகவே இவர்கள் உயிர்வாழ்வதற்காக வழிப்பறியையும், கொலைத் தொழிலையும் மேற்கொண்டனர்.

## வருண அமைப்பின் தோற்றம்

மக்கள் அனைவரும் பிறப்பினால் பேதமற்றவர்கள் அவர்களுள் உயர்வு தாழ்வு இல்லை என்பது தமிழர் கொள்கை. ஆயினும் செய்யும் தொழிலால் வேறுபட்டு அவர்களுள் பிரிவுகள் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பது பல்வேறு வரலாற்று ஆசிரியர்களின் கருத்தாகின்றன. பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியமும் இவ்வுண்மையைக் கூறுகிறது.

ஆரியர்கள் இந்தியாவில் நுழைவதற்கு முன்பே இங்குள்ள பல பகுதிகளில் தமிழர்களே விரவியிருந்தனர். வரலாற்று ஆசிரியர்கள் இவர்களைத் திராவிடர் என்று குறிப்பிட்டனர். இத்தமிழ் மக்களிடையே நால்வகைப் பிரிவுகள் இருந்தன. அடிமைகள், தொழிலாளர்கள், தலைவர்கள் என்ற வர்க்கப் பிரிவுகளும் இருந்தன.

நாடோடிகளாய்த் திரிந்த மக்களிடம் நாகரிகம் வளர்ச்சி அடைந்திருக்க முடியாது. தனது சுற்றாத்தாருடன் உணவுக்காக சுற்றித்திரிந்த மக்களிடம் தொழில் முறைகள் தோன்றியிருக்க வாய்ப்பில்லை. ஓரிடத்தில் தங்கி நிலையான தொழிலை மேற்கொண்ட மக்களிடத்தே அரசியல், சமுதாய வாழ்வு சிறப்பாக காணப்பட்டிருக்க வேண்டும். அவர்குள்ளேதான் தொழில் காரணமாக வருணப் பிரிவுகளும் வர்க்கப்பிரிவுகளும் தோன்றிருக்க முடியும். நிலத்தை பண்படுத்தி உழுது தானியங்களை விதைத்துப் பயிர்செய்து அறுப்பதற்கு பழகிய போதுதான் அவர்கள் நாகரிகத்தை மேற்கொண்டிருக்க முடியும். ஏனெனில் மக்கள் நாகரிகப் பாதையில் அடியெடுத்து வைக்க உழவே அடிப்படையாகும். இதன் பிறகுதான் மக்களிடம் அரசியலையும் வாணிகமும் கைத்தொழிலும், கலைகளும் வளர்ந்தன. இத்தகைய வளர்ச்சி மருத நிலத்திலேதான் தோன்றிற்று.

உழவுத் தொழில் தெரியாத மக்களிடம் எவ்வித வேற்றுமையும் தோன்றியிருக்க வாய்ப்பில்லை. தனியான இல்லற வாழ்வும், செல்வங்களைச் சேமித்து வைக்கவும் அவர்களுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஒன்றாக அலைந்து உணவு தேடவும், அகப்பட்ட உணவை பங்கிடவும், பாதுகாப்பான

இடம் தேடித் தங்கவுமே அவர்கள் அறிந்திருந்தனர். இத்தகைய பண்படாத பொதுவுடைமைச் சமுதாயம்தான் நாகரிகம் காணாத மக்களிடம் இருந்தது.

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே தமிழ் மக்களிடையே வகுப்புப் பிரிவுகள் ஏற்பட்டிருந்தன. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற வருணப் பிரிவுகளும் பாணர், பறையர், கூத்தர், துடியர், பொருநர், பார்ப்பார் போன்ற ஏவல் தொழில் புரிவோரும், பிற தேர்ச்சி பெற்ற தொழில் பிரிவினைச் சேர்ந்தவர்களும் பழந் தமிழகத்தில் இருந்துள்ளனர். நாகரிகம் வளர்ச்சி பெற்ற இடத்தில்தான் முதலில் பிரிவுகளும் தோன்றியிருக்க முடியும். அவ்வகையில் மருத நிலத்தில் தோன்றிய இவ்வகைப் பிரிவினர் படிப்படியாக அனைத்து நிலங்களிலும் வாழும் பொதுத்தன்மை உடையவராக விளங்கினர்.

**அந்தணர்**

நான்கு வகையான பிரிவினருள் அந்தணர் என்பவர் முதற்கண் வைத்து போற்றப்படுவர். அந்தணர்கள் சங்க காலத்தில் செல்வாக்கு பெற்றிருந்தனர். முப்புரி நூல், நீர்க் கரகம், முக்கோல், ஆசனம் இவை அந்தணர்க்குரியவையாக தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். இதனை,

> **“நூலே கரமும் முக்கோல் மனையே**
> **ஆயுங்காலை அந்தணர்க்குரிய”**[71]

என்று தொல்காப்பிய நூற்பா குறிப்பிடும்.

அரசர்க்கு ஆலோசனை கூறுவது நாட்டு மக்களுக்கு நல்லுரை வழங்குவது மக்களின் நல்வாழ்வுக்காக கடவுளை வேண்டி தவம் இருப்பது போன்றவைகள் அந்தணர்களுக்குரிய கடமைகளாகும். அந்தணர்குரிய தொழில்களாக ஓதல், ஓதுவித்தல், வேள்வி செய்தல், பொருளைப் பெற்றுக் கொள்ளுவது, பொருளைக் கொடுக்கச் செய்வது எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். இதனை,

> **“அறுவகைப் பட்ட பார்பனப் பக்கமும்”**[72]

என்ற பாடலடி மூலம் அறியலாம்.

இப்பாடலடியில் அந்தணரை பார்ப்பனர் என குறிப்பிடுவது உற்றுநோக்கத்தக்கது. பார்ப்பனரும் அந்தணரும் ஒருவரே என்பது பல்வேறு அறிஞர்களின் கருத்தாகும். சாமி சிதம்பரனார் இருவரும் வெவ்வேறானவர் என குறிப்பிடுகின்றார்.[73]

அந்தணர்க்குரிய அறுவகைத் தொழில்கள் குறிக்கப்பட்டிருப்பது போன்று பார்ப்பனருக்கும் தொழில்களை வகுத்துள்ளார் தொல்காப்பியர். இல்வாழ்க்கையிலே தலைவர் தலைவிக்கு இடையே பெரும் தூதாக செயல்படுவது பார்ப்பனவழக்கம். இதனை,

**“காமநிலை உரைத்தலும் தேர்நிலை உரைத்தலும்**
**கிழவோன் குறிப்பினை எடுத்துக் கூறலும்**
**ஆவொடு பட்ட நிமித்தம் கூறலும்**
**செலவுறு கிளவியும் செலவழுங்கு கிளவியும்**
**அன்னவை பிறவும் பார்ப்பார்க் குரிய”**[74]

என்பதனால் அறியலாம்.

அந்தணர்க்கும் பார்ப்பனருக்கும் இருவேறு தொழில்களை தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளதால் இருவரும் வெவ்வேறானவர்களே ஆவர். மேலும்

**“பாணன் கூத்தன் விறலி பரத்தை**
**யாணம் சான்ற அறிவர் கண்டோர்**
**பேணுதகு சிறப்பின் பார்ப்பான் முதலா**
**முன்னுறக் கிளந்த கிளவியோடு தொகைஇத்**
**தொன்னெறி மரபிற் கற்பிற் குரியவர்”**[75]

என்ற பாடலடியால் இல்லறம் நடத்தும் கற்பு மண வாழ்விலே தலைவன் தலைவிக்கு துணை செய்பவர்களாக கீழ் நிலையில் உள்ள பாணன் முதலியவர்களோடு பார்ப்பனர் குறிக்கப்படுவதால் அந்தணர், பார்ப்பனர் இருவேறுதிறத்தினர் என்பதை அறியலாம் பார்ப்பனர்களை விட “அந்தணர்கள் அக்காலச் சமூகத்தில் உயர்வாய் இருந்தனர்.”[76] ஏனெனில் அந்தணர்கள் அரசாளும் தகுதியையும் பெற்று விளங்கினர் எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். இதனை,

**"அந்த ணாளர்க் குரியவும் அரசர்க்கு**

**ஒன்றிய வருஉம் பொருளுமா ருளவே"** [77]

**"அந்த ணாளர்க்கு அரசு வரைவின்றே"** [78]

என்பதால் அறியலாம்.

சங்க காலச் சமூகத்தில் அந்தணர்கள் தவம் செய்வதற்கு உரியவர்கள். அரசாள்வதற்கு தகுதியுடையவர்கள். இல்லறத்தோரால் வணங்கி உபசரிப்பதற்கு ஏற்றவர்கள். வேதங்களைப் படித்தவர்கள் எனப் போற்றப்பட்டதன் மூலமும் அந்தணர்கள் உயர்குடிப்பிறப்பாளர்கள் என்பதை அறியமுடிகிறது. இதனை,

**"அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும்**

**அந்தமில் சிறப்பின் பிறர்பிறர் திறத்தினும்"** [79]

**"அந்தணர் மறைத்தே"** [80]

**"நாவல் அந்தணர் அருமறைப் பொருளே"** [81]

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

அந்தணர்கள் கல்வியறிவிலே வல்லவர்களாகவும் தமிழ் மொழியையும் வடமொழியையும் வேறுபல மொழிகளையும் கற்றவர்களாகவும் மக்கள் சமுதாயத்திற்கு வழிகாட்டியவர்களாகவும் நால்வகைப் பிரிவுடைய நாகரிகம் பெற்ற தமிழர்களிடத்தே முதல் வகுப்பினராயும் இருந்தவர்கள் ஆவார். பிற வகை மூன்று பிரிவினருக்கும் உறுதுணையாக இருந்து அரசுக்கும் வணிகத்துக்கும் உழவுத் தொழிலுக்கும் உதவி செய்பவர்களாக சங்க காலச் சமூகத்தில் அந்தணர்கள் விளங்கினர்.

**அரசர்கள்**

வேட்டைத் தொழிலை மேற்கொண்ட மக்கள் நிலையாக ஓரிடத்தில் தங்கி பயிர்த்தொழில் மேற்கொண்டபோது பயிர்களை விலங்கினிடத்துக் காக்கவும், விளைந்த தானியங்களைப் பாதுகாக்கவும் அவர்களுக்கு வலிமையுள்ளோரின் உதவி தேவைப்பட்டது. அவ்வலிமையுள்ளோரே அவர்களுக்கு தலைவனாகி பின்னர் அரசனாகியிருக்கவேண்டும். உழவுத் தொழில் சிறந்து விளங்கிய மருத

நிலத்தே இவ்வரசாட்சி முதன் முதலில் தோன்றியிருக்க முடியும். குறிஞ்சியில் குழுத் தலைவனாகவும், முல்லை நிலத்தில் சீறூர் மன்னனாகவும் இருந்தவன் மருத நிலத்தின் கண் வேந்தனாக மாற்றம் பெற்று அரசாட்சி செய்கிறான். இத்தகு சிறப்பு வாய்ந்த அரசனே இறைவனுக்கு ஒப்பாக மக்களால் வணங்கப்பட்டிருக்கிறான். "அரசன் இருக்கும் இடம் கோவில் என்றே அழைக்கப்பட்டது."[82] ஆகையால்தான் தொல்காப்பியர் தெய்வங்களை குறிப்பிடும் போது,

**"வேந்தன் மேய தீம்புனல் உலகமும்"**[83]

எனக் குறிப்பிடுகிறார்.

மருத நிலம்தான் நாகரிகத்தின் பிறப்பிடம் நீர்வளம் நிறைந்த இடத்திலேதான் நாகரிகம் பிறந்தது. நாகரிகத்தின் சின்னந்தான் அரசும், அரசனும். பண்டைக் காலத்தில் மக்களைக் காத்து அவர்கள் சமுதாய வாழ்விலே முன்னேறத் துணை செய்தவன் அரசன். மக்களும் தங்களுக்குத் துணை செய்த மன்னவனைத் தெய்வமாக தெய்வப் பிறவியாக-மதித்து வணங்கினர். ஆதலால் வேந்தனையே மருத நிலத்தின் தெய்வமாக வைத்தார் தொல்காப்பியர்.[84]

அரசாட்சி செய்தவர்களில் வேந்தர், குறுநில மன்னர்கள் என இருபிரிவுகள் இருந்தனர். குறுநில மன்னர்களெல்லாம் வேந்தர்களுள் அடக்கம். நாகரிகத்தின் வளர்ச்சியோங்கியிருந்த மருதநிலத்தின் கண் பெருவாரியான மக்கள் வசித்து வந்தனர். அவர்களை ஆட்சி செய்தவன் வேந்தன் ஆவான். மருத நிலத்தை தவிர்த்த மற்ற நிலங்களில் குறிஞ்சி, முல்லை, நெய்தல் முதலிய நிலத்தலைவர்களே குறுநில மன்னர்களாய் விளங்கினர்.

நால்வகைப் பிரிவுகளுள் அந்தணர் அரசர் தவிர்த்து வணிகரும் வேளாளரும் கூட நிலத் தலைவர்களாக இருந்து பின்னர் குறுநில மன்னர்களாக விளங்கினர்.

வேளாளர் குலத்தைச் சேர்ந்த வேள்பாரி என்னும் மன்னன் குறிஞ்சி நிலமான மலையை ஆட்சி செய்தான். முந்நூறு ஊர்களைக் கொண்டதாக அந்நாடு விளங்கியிருந்தது. இதனை,

**"முந்நூறு ஊர்த்தே தண் பறம்பு நல்நாடு"**[85]

என்ற பாடலடி மூலம் அறியலாம்.

வேந்தர்களாயினும் குறுநில மன்னர்களாயினும் ஆயுதமும், கொடியும், குடையும், முரச வாத்தியமும், சிறந்த நடையையுடைய குதிரையும், யானையும், தேரும், மலர்மாலையும், முடியும், பொருத்தமான வேறு பல பண்டங்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட செங்கோலையுடைய அரசர்களுக்குரியனவாகும்.

**"படையும் கொடியும் குடையும் முரசும்**
**நடைநவில் புரவியும் களிறும் தேரும்**
**தாரும் முடியும் நேர்வன பிறவும்**
**தெரிவுகொள் செங்கோல் அரசர்க்குரிய"**[86]

வேட்டையாடுவதில் வல்லமை, பகைவர்களை எதிர்த்துப் போர் செய்தல், அவர்களை வெற்றி பெறும் வீரத்தன்மை, தந்நலம் பேணாமல் மக்கள் நலனிலே மனம் காட்டும் பாங்கு, நடுநிலைமை தவறாத நல்லொழுக்கம், நீதி வழங்கும் நேர்மைக் குணம் இவை போன்ற உயர்ந்த குணமுடையவர்களே பண்டைத் தமிழர்களால் அரசர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். "தெரிவு கொள்" என்னும் சொல் இவ்வுண்மையை உணர்த்தும்.

**"ஐவகை மரபின் அரசர் பக்கமும்"**[87]

எனத் தொல்காப்பியர் சுட்டுவதால் ஓதல், வேள்வி செய்தல், ஈதல், நாட்டைக் காத்தல், தீயோரைத் தண்டித்தல் ஆகிய இவ்வைந்து தொழில்களும் அரசர்கதுரியவையாகின்றன.

உலகிலுள்ள உயிர்களுக்கு அரசனே பாதுகாப்பின் அரணாகத் திகழ்கிறான். அவனே வாழ்வதற்கான வழிமுறைகளை ஏற்படுத்தித் தருகிறான். வறுமையில் உள்ளோர்க்கு பொருள் ஈந்து அவர்களை வாழ்விக்கச் செய்கிறான். அரசன் இயக்கமே உலகின் இயக்கம் என்பதை,

**"நெல்லு முயிரன்றே நீருமுயிரன்றே**

**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்**

**அதனால் யானுயிர் என்பது அறிகை**

**வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே"** [88]

எனப் பழந்தமிழர் கருதினர்.

ஆகையால் அரசர்கள் தெய்வத்திற்கு இணையாக உயர்வானவர்களாக சங்க காலச் சமூகத்தில் இடம் பெற்றிருந்தனர்.

## வணிகர்

சங்க காலச் சமூகத்தில் அந்தணர் அரசர்க்கு அடுத்த நிலையில் வணிகர் இடம்பெறுகின்றனர். வணிகர்களை வைசிகன் எனக் குறிப்பிடுவது அக்கால மரபு அவர்களின் தலையாய தொழிலாக வாணிபமே இருந்து வந்துள்ளது. இதனை,

**"வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை"**[89]

என்றதால் அறியலாம்.

நாட்டினுடைய பெரும் வளர்ச்சி வாணிபத்தைச் சார்ந்தே சங்க காலத்தில் அமைந்திருந்தது. கடல் கடந்து வாணிபம் செய்யும் பழக்கத்தை அக்கால வணிகர் பெற்றிருந்தனர். உள் நாட்டில் உற்பத்தி செய்த பொருட்களை பிற நாடுகளில் விற்பனை செய்யவும், பிற நாடுகளில் இருந்து விலையுயர்ந்த பொருட்களை இறக்குமதி செய்யவும் வணிகர்களே பெரும் பங்காற்றினர்.

**"காலின் வந்த கருங் கறி மூடையும்**

**வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்**

**குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்**

**தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்**

**கங்கை வாரியும் காவிரிப் பயனும்**

**ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்**

**அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி"**[90]

கரிய மிளகுப் பொதிகள், மேருமலையில் தோன்றிய மாணிக்க மணிகள், பொதிய மலையின் சந்தனம், அகில் கட்டைகள், கீழ்திசைக் கடலின் பவளங்கள்,

கங்கையின் உற்பத்திப் பொருள்கள், காவிரிக் கரைப் பகுதியில் விளையும் பொருள்கள், ஈழ நாட்டின் உணவுப் பொருட்கள், கடார நாட்டின் நுகர்ப் பொருள், சீனம் முதலிய பிற நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட கருப்பூரம், பன்னீர், குங்குமம் போன்ற உள்நாட்டு வெளிநாட்டு பொருட்களை குவித்துவைத்திருக்கக் கூடிய புகார் நகரத்துறைமுகம் எனப் பட்டினப்பாலை குறிப்பிடுகின்றது. இத்தகு முயற்சிகளுக்கு வணிகர்களே காரணமாவர்.

வணிகர்களுடைய செயல்களாக கொலைத் தொழிலை தாம் செய்யாமையோடு பிறரும் செய்யாத வண்ணம் தடுத்தும், களவுத் தொழிலை நீக்கியும், தேவர்களுக்கு பலி தந்து வழிபட்டும் வேள்விகள் நடத்தி அவற்றிற்குரிய தெய்வங்களுக்கு நுகர்பொருள் உண்டான புகழை பெறுபவர்களாக விளங்கினர் எனப் பட்டினப்பாலை குறிப்பிடும்.

**"கொலை கடித்தும் களவு நீக்கியும்**
**அமரர்ப் பேணியும் ஆவுதி அருத்தியும்**
**நல் ஆனொடு பகடு ஓம்பியும்**
**நான் மறையோர் புகழ் பரப்பியும்**
**பண்ணியம்அட்டியும் பசும்பதம் கொடுத்தும்**
**புண்ணியம் முட்டாத் தண்நிழல் வாழ்க்கை"** [91]

வணிகர்கள் தாம் கொள்ளும் பொருள்களைத் "தாம் கொடுக்கும் பொருள்களுக்கு மிகுதியாக கொள்வதில்லை. தாம் கொடுக்கும் பொருளையும், வாங்கும் பொருள்களுக்கு குறைவாகக் கொடுப்பதில்லை. தாங்களுக்கு வரக்கூடிய இலாபத்தை வெளிப்படையாக கூறி வாணிகம் செய்வர்."[92] இந்நெறியில் அவர்கள் நின்றமையால் வாணிகத்தில் வணிகர்கள் சிறந்து செல்வத்தால் மிகுந்து விளங்கினர்.

காசுகளின் புழக்கம் ஏற்பட வணிகர்ளே பெரும்பங்காற்றினர். மேலும் அரசிற்கு பணவருவாய் உள்நாட்டு ஏற்றுமதியின் மூலமும், வெளிநாட்டு இறக்குமதியின் மூலமும் கிடைக்க வணிகர்களே காரணமாயினர். சமூகத்தின் பொருளாதார நிலை உயர வணிகர்களே காரணம் என்பதால் வேளாண் சமூகத்தினரை விட உயர்வான வாழ்கையை வணிகச் சமூகத்தினர் வாழ்ந்தனர்.

சமூகத்தில் உயர்வான அங்கீராம் கிடைத்ததால் சமூகப் பிரிப்பில் இவர்கள் அரசர்களுக்கு அடுத்த நிலையில் காணப்பட்டனர்.

**வேளாளர்**

சங்க காலச் சமூகத்தில் வேளாளர்கள் நான்காவது நிலையில் இருந்தனர். இவர்களின் தொழில் உழவுத் தொழில் ஆகும். “உழவுத் தொழில் அனைத்து பிற தொழில்களுக்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் உறுதுணையாக விளங்கியது.”[93] ஆகையால் தான் உழவுத் தொழிலை மேற்கொண்ட வேளாளர்க்கு மற்ற மூன்று வகையினரைப் போல் அல்லாமல் வேறு எந்தத் தொழில்களும் வழங்கப்படவில்லை. இதனை,

**“வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது**
**இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி”** [94]

என்பதால் அறியலாம்.

அரசர்கள் வழங்கினால் படைக்கலமும் மாலையும் வேளாளர் பெறக்கூடிய பொருள்களாக இருந்தன.

**“வேந்துவிடு தொழிலிற் படையும் கண்ணியும்**
**வாய்ந்தனர் என்ப அவர்பெறும் பொருளே”**[95]

வேளாளர்கள் உழவுத் தொழிலோடு படைக்கலம் பெற்று மாலை பூண்டு போர்வீரர்களாக நாட்டின் பாதுகாப்பிற்காகச் சென்றவராயும் விளங்கினர். அவர்கள் போர்ப் பயிற்சி பெற்று போர் வீரர்களாவது அரசர்களின் விருப்பத்தை பொறுத்ததேயாகும்.

**“இடையிரு வகையோர் அல்லது நாடின்**
**படைவகை பெறாஅர் என்மனார் புலவர்”**[96]

நான்கு வகை வருணத்தாருள் இடையில் இருக்கக் கூடிய அரசர்களும் வணிகர்களுமே எந்தவித கட்டுப்பாடுமின்றி தாமே ஆயுத மேந்தும் உரிமையும் பகையரசர்களை முறியடித்து நாட்டுப் பாதுகாப்பிலே பங்குபெறும் உரிமையும் பெற்றிருந்தனர். அரசர்களால் அளிக்கப்பட்டால்தான் வேளாளர்கள் இவ்வுரிமையைப் பெற்றிருந்தனர்.

**“எருது தொழில் செய்யாது ஓட**

**விடும் கடன் வேளாளர்க்கு இன்று”**[97]

நாட்டினுடைய வளத்தைப் பெருக்க எருதுகளைப் பயன்படுத்தி உழவுத் தொழில் மேற்கொள்வதையும் வேளாளர்கள் கடமையாகப் பெற்றிருந்தனர்.

இவ்வாறு சங்க காலச் சமூதாயம் அந்தணர், அரசர் , வணிகர், வேளாளர் என்று நான்கு வகையான வருண அமைப்பைப் பெற்றிருந்தது. இவர்களுன் வேளாளர் தவிர மற்ற மூன்று வகையினரும் மேலோர்களாக பல்வேறு அறிஞர்களால் கருதப்பட்டனர். இதனை,

**“மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்**

**கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டே”**[98]

என்ற பாடலடியில் உணர்த்துவர். ஆயினும் நாட்டின் வளர்ச்சிக்கும், தனிமனிதத் தேவைக்கும் உழவுத் தொழிலே ஆணியாகத் திகழ்ந்தமையால் வேளாண்மைத் தொழிலை மேற்கொண்ட வேளாளர்கள் சங்க காலச் சமூகத்தல் உயர்ந்தவர்களாகவே எண்ணப்பட்டனர். இதனை,

**“மேலோர் முறைமை நால்வார்க்கும் உரித்தே”**[99]

எனத் தொல்காப்பியர் கூறுவதால் தெளியலாம்.

## தொழில் முறை அமைப்பு

ஐவகை நிலவியல் அமைப்பு மற்றும் நான்கு வகை வருணமுறை அமைப்போடு மட்டுமல்லாமல் தொழில் முறையால் வேறுபட்ட பல்வேறு பிரிவினரும் சங்ககாலச் சமூகத்தில் வாழ்ந்தனர். அவர்கள் அனைவரும் பல்வேறுப் பிரிவினராகப் பிரித்து தாம் குடியிருக்க தனித்தனி இடங்கள் அமைந்திருப்பதன் மூலம் பலப்பிரிவுகள் இருப்பதை காணமுடிகிறது.

**“பல்சனம் நாணிப் பதைபதைப்ப”**[100]

என்பது இதற்குச் சான்றாக அமைகின்றது.

மனிதர்களில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வேறுபாடு காணப்பட்டு செய்யும் தொழிலால் அவர்களுள் சாதிப்பிரிவுகள் தோன்றியிருந்தது.இதனை,

**"இருநிற மாந்தரும் இன்னினி யோரும்"**[101]

என்கிறது. இதில் இருநிற மாந்தர் என்போர் உயர்ந்தோர், தாழ்ந்தோர் ஆவர்.

தொல்காப்பியர் காலத்தே இவ் உயர்வு தாழ்வுகள் தோன்றிவிட்டன. நிலத் தலைவர்களாகிய அரசர்கள், குறுநில மன்னர்கள், நிலம் படைத்த வணிகர்கள், வேளாளர்கள், இவர்களெல்லாம் உயர்ந்தவர்களாகக் கருதப்பட்டனர். நிலம் இல்லாதவர்கள் அவர்களிடம் பொருள் பெற்று அடிமையினராய் காணப்பட்டனர்.

**"அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்"** [102]

என்றதால் அடிமைத் தொழில் செய்யும் மக்களும், ஏவிய வேலைகளைச் செய்யும் தொழிலாளர்களும் இருந்துள்ளனர் என்பதை அறியமுடிகின்றது.

நிலத் தலைவர்களாகிய உயர்ந்தோரிடத்தே கூத்தர்கள், பாணர்கள், பொருநர்கள், விறலியர்கள் எனப்படும் கலைஞர்களும் அவர்களைப் புகழ்ந்துபாடி பொருட்களை யாசித்து வாழந்து வந்துள்ளனர்.

**"கூத்தரும், பாணரும் பொருநரும் விறலியும்**
**ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்**
**பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்**
**சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும்"**[103]

கூத்தர், பாணர், பெருநர், விறலி என்பவர்கள் வழியிலே தம்போன்ற இரவலரைக் கண்டு தாம் பெற்ற செல்வத்தைப் பற்றி அச் செல்வம் பெறாதவர்களிடம் எடுத்துக் கூறி தாம் பெற்ற வள்ளலள்களிடம் அவர்களும் சென்று பெறும்படி கூறினர் என்பதே இதன் பொருள். இதனால் நிலத் தலைவர்களின் ஆதரவிலே கலைகளும், கலைஞர்களும் வாழ்ந்ததையும் அவர்கள் சமூகத்தின் கீழ்நிலையில் இருந்ததையும் அறிய முடிகின்றது.

பத்துப்பாட்டு இலக்கியங்களுள் திருமுருகாற்றுப்படை தவிர்த்து பிற ஆற்றுப்படை இலக்கியங்கள் இவர்களின் வறுமை நிலையினைப் பாடுவதாகவே அமைந்துள்ளன.

**பாணர்**

புற இலக்கியங்களில் பாணர்களின் வறுமை நிலை கூறப்பட்டுள்ள நிலையில் அக இலக்கியங்களிலும் நேரடி வாயிலாகக் காட்டப்பட்டுள்ளனர். ‘‘யாணர் ஊர நின்னினும் பாணன் பொய்யான்’’[104] ‘‘பாணன் வந்தனன் தூதே’’[105] ‘‘கல்லாவாய்ப் பாணன் புகுதராக்கால்’’[106] எனப் பாணன் முன்னர்க் காட்டப்பட்ட நிலையிலிருந்து வேறுபட்டு குறிப்பிடப்பட்டுள்ளான்.

பாணர் என்பதற்கு இசை பாடுவோர் அல்லது பண்பாடுவோர் என்பது பொருளாகும். பாணர்களில் இசைப் பாணர், யாழ்ப் பாணர், மண்டைப் பாணர் என பல பிரிவினர் இருந்தன. அவர்களுள் யாழ் வைத்து பண் பாடியவரையே சிறுபாணர், பெரும்பாணர் என்றழைத்தனர். சிறிய யாழை வைத்திருந்தமையால் சிறுபாணர் எனவும் பெரியாழை வைத்திருந்தமையால் பெரும்பாணர் எனவும் பெயர் பெற்றனர்.

பாணர்கள் நாடோடிகளாய் வாழ்ந்து மன்னர்களையும் வள்ளல்களையும் நாடிச் சென்றனர். இவர்கள் பேசப்படும் இடமெல்லாம் வறுமையும், பசியும் பேசப்படுகிறது. ஆகையால் இவர்களை ஆதரித்தவர்கள், ‘‘பாண்பசிப் பகைஞர்’’[107] எனப் பாராட்டப்பட்டனர்.வள்ளல்கள் இறந்தபோது இவர்கள் பெரிதும் துன்பத்திற்கு ஆளாயினர். இவர்களின் வாழ்க்கையினை அடிப்படையாகக் கொண்டு ஆற்றுப்படை யென்றொரு தனி இலக்கிய வகையே தோன்றியுள்ளது.

சிறுபாணன் ஒருவன் ஒய்மாநாட்டுச் சிற்றரசனான நல்லியக் கோடனிடம் பரிசில் பெற்று மற்றொரு வறிய சிறுபாணனை அவன்பால் ஆற்றுப்படுத்துவாக அமைந்தது சிறுபாணாற்றுப்படை. இதில் பாணன் சிறிய யாழை ஏந்தி

வறுமையால் கலங்கிய நிலமையும், பெரும்பாணனது வறிய நிலமை பெரும்பாணாற்றுப் படையிலும் கூறப்பட்டுள்ளது.

**"உடும்பு உரித்தன்ன என்பு எழு மருங்கின்**
**கடும்பின் கடும்பசி களையுநர்க் காணாது**
**சில் செவித்து ஆகிய கேள்வி நொந்து நொந்து**
**ஈங்கு எவன் செய்தியோ?-பாண"**[108]

உணவு உண்ணாமையால் பாணர்களின் சுற்றம், உடும்பினை உரித்தது போல எலும்பு புடைந்து எழுந்த விலாப்பகுதியை காட்டுவனவாய் அமைந்துள்ளது. இங்கு பாணனும், அவன் சுற்றத்தின் தோற்றமும் வறுமையின் நிலையினை ஆட்கொண்டதை காண முடிகிறது.

பாணர்கள் உணவினையும் பரிசினையும் பெற நெடுந்தூரம் நடந்து சென்றனர்.

**"ஆனினம் கலித்த அதர்பல கடந்து**
**மானினம் கலித்த மலைபின் ஒழிய**
**மீனினம் கலித்த துறை பல நீந்தி**
**உள்ளி வந்த வள் உயிர்ச் சீறியாழ்**
**சிதாஅர் உடுக்கை முதாஅரிப் பாண**
**நீயே பேர் எண்ணலையே நின் இறை**
**மாறிவா என மொழியலன் மாதோ"**[109]

அருகிலிருக்கும் வள்ளல்கள் ஆதரிக்காமையால் பாணர்கள் நெடுந்தொலைவு கடந்து சென்று தம்மை ஆதரிப்பவரை நாடிச் சென்றார்கள். 'உள்ளி வந்த' என்றதால் பரிசில் தருவான் என நினைத்து வந்தமையை உணர்த்துகின்றது.மேலும் அப்பரிசில் நினக்கு தப்பாமல் கிடைக்கும் என்றதால் ஏற்கனவே பிறர் பாணரை புறக்கணித்திருக்க வேண்டும். 'மாறி வா' என்றதால் பின் ஒருநாள் பரிசில் பெற வா எனவும் காலந் தாழ்த்தியமையும் அறியமுடிகின்றது.

பாணர்கள் தனது துன்பநிலையை அறிவித்து பொருள் கேட்பதால் சமூகத்தில் அவர்கள் பெறக் கூடிய கீழ்நிலை புலனாகிறது. இதனை,

**“வணர் கோட்டுச் சீறியாழ் வாடுபுடைத் தழீஇ**

**உணர்வோர் யார் என் இடும்பை தீர்க்க?**

**என கிளக்கும் பாண”[110]**

என்பதால் அறியலாம்.

**“ஞால மீமிசை வள்ளியோர் மாய்ந்தென**

**ஏலாது கவிழ்ந்த என் இரவல் மண்டை**

**மலர்க்குநர் யார்”[111]**

எனப் பாணன் கூற்றில் பாடிய பாடலில் பாணரின் வறுமைச் சூழலை காண முடிகிறது.

சிறுபாணாற்றுப் படையில் “அண்மையில் குட்டிகளை ஈன்ற நாயை உடைய குடிசையில், கரையானால் அரிக்கப்பட்ட வலிமை குறைந்த பழைய சுவரில் காளான் பூத்துக்கிடக்கப் பாசியில் ஒடுங்கிய வயிற்றையுடைய கிணைமகள் பறித்து வந்த குப்பைக் கீரையை உப்பில்லாமல் வேகவைத்து மற்றவர்கள பழிப்பார்களோ என கதவை அடைத்துக் கொண்டு சுற்றத்தாரோடு உண்ட பாணர் குழுவின் வறுமை பேசப்பட்டுள்ளது.”[112] இவ்வாறே பெரும்பாணாற்றுப் படையிலும் “பாணர் வறுமை”[113] குறிக்கப்பட்டுள்ளது.

சங்க காலச் சமூகத்தில் விளிம்பு நிலை மக்களாய் இருந்து தங்கள் கலையைப் பேணி பாணர்கள் பிறரிடம் யாசித்து பொருள் பெற்று தங்கள் தேவையைப் பூர்த்தி செய்தனர். இவர்கள் தங்கள் துன்பநிலையினைப் போக்க வேறு தொழில்களை மேற்கொண்டதற்கான ஆதாரங்களை இலக்கியங்கள் சுட்டவில்லை.

**கூத்தர்**

கூத்தராற்றுப்படை என்ற மலைபடுகடாமில் செங்கண்மாத்துவேள் நன்னன்சேய் நன்னனிடம் பரிசில் பெற்று மீண்டு வந்த கூத்தன், வறிய கூத்தனை வழியிற்கண்டு அவனை அவ்வள்ளல்பால் ஆற்றுப்படுத்துவதாக இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பாடியுள்ளர்.

இவ்வாற்றுப்படை நூலுள் பிற ஆற்றுப்படைபோல் அல்லது கூத்தரின் வறிய நிலை பெருவாரியாக சுட்டப்பெறவில்லை. கூத்தன், பாணன், விறலி போன்ற பிற சுற்றத்தாரோடு தென்பட்டதையும் நன்னன் நகரத்திற்குச் செல்லும் வழியின் சிறப்புக்களையும் பெறவிருக்கும் விருந்துகளையும் பரிசிலையும் மட்டுமே இந்நூல் எடுத்தியம்புகின்றது.

**“துறைபல முற்றிய பைதீர் பானரொடு**

**----------------------------**

**இலங்கு வளை விறலியர் நிற்புறம் சுற்ற**

**--------------------------------**

**புலம்புவிட்டு இருந்த புனிறு இல் காட்சி**

**கலம் பெறு கண்ணுளர் ஒக்கல் தலைவ”[114]**

இங்கு கூத்தரை ‘ஒக்கல் தலைவ’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளதால் பாணர் விறலியர் முதலியவர்க்கு கூத்தன் தலைவராக இருந்துவந்துள்ளது ஈண்டு நோக்கத்தக்காகும்.

**“நலங்கிள்ளி நசைப் பொருநரேம்**

**நிறர் பாடிப் பெறல் வேண்டேம்**

**அவற்பாடுது மவன்றாள் வாழியசென”[115]**

என இவர்கள் வேடம் பூண்டு நடிப்பதோடு பாடலும் பாடுவர் எனக் கருதலாம்.

**பொருநர்**

வேறொருவர் போல் வேடம் கொள்பவர் பொருநராவர். இவர்கள் மெய்ப்பாடு தோன்ற நடிக்கும் திறமுடையவர்களாவர். இவர்கள் பாடும் திறமை பெற்றவர்களாகவும் விளங்கினர். இதனை,

**“ஆடுபசி உழுந்தநின் இரும்பேர் ஏக்கலொடு**

**நீடுபசி ஒராஅல் வேண்டின் நீடுஇன்று**

**எழுமதி ஏழின் கிழவ”[116]**

என்ற பாடலடி விளக்கும்.

பொருநரின் வறுமையினை பொருநராற்றுப்படை எனும் பாட்டு நூல் விளக்குகின்றது. பொருநர்கள் வறுமையின்பால் வாடி கலக்கமுற்று, பசிப்பிணிநோய் அவர்களை ஆட்கொள்ள கரிகால் வளவனிடம் பரிசில் பெறச் சென்ற விதம் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

**விறலியர்**

பாட்டும், தொகையுமான சங்க இலக்கியங்களில் அக இலக்கியங்களிலும், புற இலக்கியங்களிலும் விறலியர் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. இருப்பினும் அக இலக்கியங்களைக் காட்டிலும் புற இலக்கியங்களில் விறலியரின் சமூக வாழ்வு குறிப்பிடப்படுள்ளது. விறலியைப் பாடினி என்னும் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. பதிற்றுப்பத்தில் இடம்பெறும் விறலியாற்றுப்படையில்,

**“சென்மோ பாடினி நன்கலம் பெறுகுவை”[117]**

எனப் பாடினி எனும் சொல் விறலி என்பதற்குரிய ஒருபொருட் பல சொல்லாக ஆளப்பட்டுள்ளது.

**“பாணன் சூடான் பாடினி அணியாள்”[118]**

எனப் பாணரொடும் இணைத்து இச்சொல் விறலி எனும் பொருளில் ஆளப்பட்டுள்ளது. பிற இடங்களிலும் பாணனுடன் இணைந்த நிலையில் பாடினி எனும் சொல் ஆளப்பட்டுள்ளது.[119]

பொருநராற்றுப்படையில் “பெடைமயில் உருவின் பெருந்தகு பாடினி”[120] என வரும் விறலியின் கேசாதிபாத வருணனையில் பாடினி எனும் சொல்லே ஆளப்பட்டுள்ளது. இங்கு பொருநரோடு பாடினி காட்டப்பட்டுள்ளாள். “விறலி, பாணன் அல்லது பொருநனின் மனைவியாக இருந்ததைச் சங்கப் பாடல்கள் காட்டுகின்றன.

விறலி நேரடியாகவும் பாணன், பொருநன் முதலியவர்களோடு சேர்ந்தும் வள்ளல்களை நோக்கிச் செல்கிறாள்.

**''சுரன்முதல் இருந்த சில் வளை விறலி**

**செல்வை ஆயின் சேணோன் அல்லன்''** [121]

**''பாரிவேள் பால் பாடினை செலினே''**[122]

**''காணிய சென்மே''**[123]

என விறலி தனி ஒருவளாய் வள்ளல்பால் செல்வதைக் காணமுடிகின்றது. பதிற்றுப்பத்திலும்

**''சில்வளை விறலி செல்குவை ஆயின்''** [124]

**சென்மோ பாடினி நன்கலம் பெறுகுவை''**[125]

என விறலி தனியே ஆற்றுப்படுத்தப்படுவதைக் காணலாம்.

இருப்பினும் பாணன் தலைமையிலான கலைக் குழுவில் பாணனுடனும், பொருநனுடனும் உடன் சென்று வள்ளல்களிடம் விறலி பரிசில் பெறுதலே பெருவாரியான சங்கப்பாக்கள் குறிப்பிடுகின்றன.

**''இன்நகை விறலியொடு மென்மெல இயலில்**

**செல்வை ஆயின் செல்வை ஆகுவை''**[126]

**''பாணன் சூடிய பசும்பொன் தாமரை**

**மாண் இழை விறலி மாலையொடு விளங்க**

**--------------------**

**காரென் ஏக்கல் கடும்பசி இரவல்''** [127]

எனப் பாணருடன் விறலியரின் வறுமை இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

கூத்தர், பாணர், பொருநர், விறலியர் போன்றோர் சங்க காலச் சமூகத்தில் விளிம்பு நிலை மக்களாய் இருந்து கலைத் தொழிலை மேற்கொண்டவராக வாழ்ந்து வந்துள்ளனர். நாடோடிகளாக வாழ்ந்த இவர்களுக்கு நிலையான இருப்பிடம் இல்லை. ஆகவே அவர்களுக்கு சமூக அங்கீகாரம் வழங்கப்படவில்லை என்பது புலனாகின்றது. தம்மை ஆதரிக்கும் வள்ளல்களிடம்

நெடுந்தொலைவு சென்று பொருள் யாசிக்கும் கடைநிலை மக்களாகவே இருந்துவந்துள்ளனர். அக இலக்கியங்களிலும் வாயில்களாக அமைந்து தலைவன், தலைவிக்கு ஊழியம் செய்பவர்களாகவே இவர்கள் காட்டுப்பட்டுள்ளனர்.

**பறையர், துடியர், கடம்பர்**

பாணரின் வறுமை நிலையினை சுட்டிய பல்வேறு சங்கப்பாக்கள் அவர்களுடன் இணைத்து பறையர், துடியர், கடம்பர் ஆகியோரையும் பாடுகின்றது.

**“துடியன் பாணன் பறையன் கடம்பன் என்று**
**இந்நான்கு அல்லது குடியும் இல்லை”**[128]

என்று இவர்களைப் போர்ச் செயல்களோடு தொடர்புற்ற குடிகளாகப் பேசபடுகின்றனர். பறையை முழக்கி அரசின் செய்தியை பிறருக்கு அறிவித்தவன் பறையனென்றும், துடி கொட்டுபவன் துடியனென்றும் சங்ககாலச் சமூகத்தில் இவர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர். இருப்பினும் கடம்பரின் செயல்களைக் காணமுடியவில்லை.

**“துடியன் கையது வேலே அடி புணர்**
**வாங்கு இரு மருப்பின் தீம்தொடைச் சீறியாழ்ப்**
**பாணன் கையது தோலே”** [129]

துடியன் கையது வேலே பாணன் கையது தோலே என்றதனால் வறுமையுற்ற துடியன், பாணன், முதலானோர்க்கு முறையே வேலும், தோலும் கொடுக்கப்பட்டு அவர்களின் வறுமையை நீக்க எண்ணியமை இங்கு கூறப்பட்டுள்ளது. துடியர்களும் பாணர்களைப் போலவே வறுமையில் வாடியுள்ளனர். மேலும்,

**“துடி எறியும் புலைய**

**எறிகோல் கொள்ளும் இழிசின”**[130]

என்றதால் “துடிப்பறை கொட்டும் புலையனே குறுந்தடியைக் கையின் கொண்டு பறையை முழக்கும் பறையனே” என்று பல்வேறு உரையாசிரிர்கள் குறிப்பிட்டுள்ளனர். மேலும் இவர்களை இழிசின என்று உரைத்ததால் சமூகத்தில் அவர்கள் இழிபிறப்பாளர்களாகக் கருதப்பட்டது உறுதியாகின்றது.

இவர்களை “பாணர், பறையர், துடியர், கடம்பர் என்பார் ஒருசேரப் புலையரென்று வழங்கப்பட்டனர்”[131] எனக் கூறுவர்.

## உயர்வு தாழ்வு

காதலையும், போரையும்,கொடையையும் காட்டும் சங்கச் சமுதாயம், அக்காலத்தில் இருந்த இழிபிறப்பாளராகக் கருதப்பட்ட தாழ்ந்தவர்களையும் குறிப்பிடத் தவறவில்லை. தொல்காப்பிமும் இதனை உறுதி செய்தாற்போல்,

**“ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே”**[132]

எனக் கூறுகின்றது.

பாணர், பறையர், துடியர், கடம்பர் போன்றோரை இழிசினர், இழிபிறப்பாளர், புலையர் என்று குறித்துள்ளமை சமூகத்தில் இவர்கள் நிலையைக் காட்ட போதுமான சான்றாகும்.

**“கேட்டியோ வாழி பாண பாசறைப்**

**பூக்கோள் இன்றேன் றறையும்**

**மடிவாய்த் தண்ணுமை இழிசினன் குரலே”**[133]

**“இழிபிறப் பாளன் கருங்கை சிவம்ப**

**வலிதுரந்து சிலைக்கும் வன்கண் கருந்துடி**

**புலிதுஞ்சு நெடுவரைக் குடிஞையின் இரட்டும்”**[134]

எனும் பாடல்களால் இவர்கள் பிறவியிலேயே இழிந்தோராகக் கருதப்பட்டு சங்க காலச் சமூகத்தில் கீழ்நிலையில் இருந்தார்கள். மேலும் இவர்களின் தொழிலாக,

**"கன்னி போகிய களரி மருங்கின்**

**வெள்ளி னிறுத்த பின்றைக் கள்ளோடு**

**புல்லகத் திட்ட சில்லவிழ் வல்சி**

**புலையன் ஏவப் புல்மேல் அமர்ந்துண்டு"**[135]

என குறிப்பிடப்பட்டுள்ளது. இடுகாட்டில் கள்ளி ஓங்கி வளர்ந்துள்ள களர் நிலத்தின் பக்கத்தே பாடையை நிறுத்திய பின்னர், பிணத்தைப் புல்மீது கிடத்தி கள்ளுடன் சிலசோறாகிய உணவைப் புலையன் படைப்பான். பின் அவன் புல்மேல் கிடத்திய பிணத்தை சுடலைத்தீயில் இட்டுக் கொளுத்துவான் என அப்பாடலடிகள் பொருள் கூறுவதால் இன்றுபோல் அன்றும் புலையர் இடுகாட்டில் செய்யும் கடமையை மேற்கொண்டனர் என்பதை அறியலாம்.

மக்களின் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என இரண்டு வகைமையிருந்ததை,

**"இருதிற மாந்தரும் இன்னினி யோரும்"** [136]

என்று கூறுவதால் அறியலாம்.

சமூகத்தில் உயர்ந்தவர்களாக கருத்தப்பட்ட அந்தணர், அரசர், வணிகர்,வேளாளர் போன்றோர் தாழ்ந்தவர் பயன்படுத்திய நீர்நிலையையும் புறக்கணித்தனர்.

**"வேறுபடு புனலென விரைமண்ணுக் கலிழைப்**

**புலம்புரி அந்தணர் கலங்கினர் மருண்டு"**[137]

வையை ஆற்றில் தாழ்ந்தவர்கள் நீரில் ஆடியதால், நீர் தூய்மையற்றது எனக் கருதி நீராட வந்த அந்தணர்கள் ஒதுங்கி நின்றனர். இவ்வேறுபாடு சங்க காலச் சமூகத்தில் காணப்பட்டதை அறியலாம்.

**"வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்**

**கீழ்ப்பால் ஒருவன் கற்பின்**

**மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே"**[138]

எனக் கூறுவதால் கீழ்ப்பால் ஒருவன் கற்றதால் மேல்நிலையில் இருக்கக் கூடியவர்கள் அவன் வழிச் செல்வர். இங்கு கீழ்ப்பால் என்பது நான்கு

ருணத்தாருள் கீழ் நிலையில் இருக்கக் கூடியவர்களை குறித்ததேயன்றி சமூகத்தில் தாழ்ந்த நிலையில் இருந்தவர்களை குறிக்கப்படவில்லை. சமூகத்தில் அந்தணர் முதல்நிலையிலும், அரசர் அடுத்த நிலையிலும், அவர்களுக்குக் கீழாக வணிகரும், வேளாளரும் இருந்ததையே வேற்றுமை தெரிந்த நாற்பாலாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. தாழ்ந்த நிலையில் இருந்தவர்களை மதித்ததாக அக்காலச் சமூகம் இல்லை என்பதை இப்பாடலடி மூலம் அறியலாம்.

இன்றளவும் ஏற்பட்டுள்ள சாதிய வேறுபாடுகளுக்கும் சமூக ஏற்ற தாழ்வுக்கும் அடிப்படையாக சங்க காலச் சமூகம் இருந்ததைக் காணமுடிகின்றது.

# தொகுப்புரை

1. மனிதன் ஒருவரையொருவர் சார்ந்து வாழ முற்பட்டபோது சமுதாயம் தோன்றியது. சமுதாயத்தில் பண்பாடு வளரத்தொடங்கியபோது அது சமூகமாக மாற்றம் பெற்றது.
2. தமிழ்ச் சமுதாயம் முதன்முதலில் குறிஞ்சி நிலத்திலேயே தோற்றம் பெற்றது. குழுவாக இருந்த அவர்களிடத்தில் பெண்ணே அக்குழுவை நடத்தும் தலைவியாகக் காணப்பட்டாள். ஆகையால் தொடக்ககாலச் சமூகம் தாய்வழிச் சமூகமாக காணப்பட்டது.
3. பொருளாதாரப் பெருக்கத்தில் பெண்கள் ஆண்களைச் சார்ந்து வாழ முற்பட்டபோது தமிழ்ச் சமூகம் தந்தை வழிச் சமூகமாக மாற்றமடைந்தது.
4. தமிழகத்தின் நிலவியலமைப்பு ஏனைய உலக நிலப்பரப்பினைப்போன்று ஐந்து வகையான இயற்கைக் கூறுகளைப் பெற்றிருந்தது.
5. இயற்கைக் கூறுகளின் அடிப்படையில் மக்களிடத்து நாடோடியாய்த் திரிதல்,வேட்டையாடுதல், கால்நடை மேய்த்தல், உழவுத் தொழில் மேற்கொள்ளல், கடல்கடந்து செல்லுதல் போன்ற நாகரிக நிலைகள் வளரத் தொடங்கின.
6. நாகரிக நிலைகளில் மனிதன் நிலங்களை தன்வயப்படுத்திக் கொள்ள அவைகளுக்கு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலையெனப் பெயரிட்டு அழைத்தனர்.
7. குறிஞ்சி நிலத்தில் காணப்பட்ட சமூகம் உணவிற்காக நாடோடியாய்த் திரிந்தும், அவை போதாமல் போகவே வேட்டையாடுதல் தொழிலையும் மேற்கொண்டது.
8. வேளாண் முறைமையின் தொடக்க நிலையினை குறிஞ்சி நிலத்திலேதான் மனிதன் கற்றுக் கொள்ளத் தொடங்கினான்.

9. குறிஞ்சி நிலத்தில் மக்கள் தொகைப் பெருக்கத்தினால் அவர்கள் முல்லை

10. நிலத்திற்குப் பெயரத் தொடங்கினர். அங்கு கால்நடை மேய்த்தும். புன்செய்ப் பயிர்களை விளைவித்தும் வாழ்ந்து வந்தனர்.முல்லை நிலமே சீறூர் மன்னர்கள் தோன்றுவதற்கு காரணமாய் அமைந்தது.

11. முல்லை நிலத்தில் உணவுத்தேவை முற்றிலும் நிறைவேறாமல் போகவே மருத நிலத்திற்கு மக்கள் இடம்பெயர்ந்தனர். அங்குள்ள நீராதாரம் அவர்களுக்கு உணவு உற்பத்தியில் உபரி ஏற்பட வழிவகைசெய்தது.

12. உணவு உற்பத்தியில் தன்னிறைவும், மக்கள் தொகைப் பெருக்கமும் மருத நிலத்தில் முழுமை பெற்ற நாகரிக சமூகமாக மாற வழிவகுத்தது. குறுநிலமன்னர்கள் இங்கு வேந்தர்களாக மாறினர்.

13. உபரி உற்பத்தியை பண்டமாற்று செய்த நிலை மாறி வெளி நாடுகளுக்குஏற்றுமதி செய்ய நெய்தல் நில துறைமுகங்கள் பயன்பட்டன. நெய்தல் நிலத்தில்தான் வாணிபம் சிறப்புற்று விளங்கியது.

14. மருத நிலத்தில் ஏற்பட்ட நாகரிக வளர்ச்சியில் நால்வகை வருண அமைப்புகள் தோன்றின. அவை பின் மற்ற நிலங்களுக்கும் விரவத் தொடங்கின.

15. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் போன்றோர் உயர்ந்தவர்களாகக் கருதப்பட்டனர்.

16. பாணன், பொருநர், கூத்தர், விறலியர், பறையர், துடியர், கடம்பர் போன்றோர் விளிம்புநிலை மக்களாக காணப்பட்டனர்.

17. இன்றளவும் ஏற்பட்டுள்ள சாதிய வேற்றுபாடுகளுக்கும் சமூக ஏற்ற தாழ்வுக்கும் சங்ககாலச் சமூகம் அடிப்படையாக இருந்ததைக் காண முடிகிறது.

# இயல்-1

## சான்றெண் விளக்கங்கள்

| | |
|---|---|
| 1. | அக்னிபுத்திரன் செம்மொழி இலக்கியம் சமூகவியில் கோட்பாடு, ப-22 |
| 2. | மேலது ப-25 |
| 3. | மேலது ப-28 |
| 4. | பாஸ்கல் கிஸ்பர்ட், எஸ்.ஜே.சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள் ப.92 |
| 5. | அ.மு.பரமசிவானந்தம், சமுதாயமும் பண்பாடும், ப-26 |
| 6. | Winslow 'S' Comprehensive Tamil and English Dictionary, P-40 |
| 7. | கலைக்களஞ்சியம் (தொகுதி-1) ப-45 |
| 8. | எஸ்,கௌமாரீஸ்வரி, தமிழ்மொழி அகராதி,ப-592 |
| 9. | ப.ராமஸ்வாமி, மனித சமூகத்தின் வளர்ச்சி, ப-22 |
| 10. | க.அப்பாத்துரை,இலெமூரிய அல்லது குமரிக் கண்டம், ப-47 |
| 11. | வா.செ.குழந்தைசாமி, தமிழ் வளர்ச்சி, ப-429-430 |
| 12. | புறப்பொருள் வெண்பாமாலை |
| 13. | நா.வானமாமலை, தமிழர் வரலாறும் பண்பாடும் ப-70 |
| 14. | திருமுருகு:255 |
| 15. | மேலது :255 |
| 16. | புலவர்கா. கோவிந்தன், ஆரியர்க்கு முற்பட்ட தமிழ்ப்பண்பாடு ப-14 |
| 17. | தொல்.பொருள்.11-1 |
| 18. | தொல்.பொருள்.4 |
| 19. | தொல்.பொருள்.20 |
| 20. | தொல்.பொருள்.16 |
| 21. | தொல்.பொருள்.2:2 |
| 22. | தமிழர் சரித்திரம், ந.சி.சந்தையா,பக்-23 |
| 23. | ஐங்.208:1-2 |
| 24. | குறுந்-233:1 |
| 25. | மலைபடு. 174:183 |
| 26. | குறுந்.82:4-5 |
| 27. | மலைபடு.203-206 |
| 28. | மலைபடு.438-439 |
| 29. | ஐங்.201:2-4 |

| | |
|---|---|
| 30. | ஐங்.414 |
| 31. | ஐங்.494 |
| 32. | கலி.101 |
| 33. | மேலது.106 |
| 34. | அ.ஆறுமுகம், சங்க இலக்கியத்தில் குடும்பம் உடைமை அரசு ப-37 |
| 35. | கலி.390:1 |
| 36. | பதிற். 88:9 |
| 37. | ஐங்.2, நற் 69:8, அகம்:.74:16, நெடுநல்.3 |
| 38. | குறுந்.221:3-4 |
| 39. | அகம்.374:13 |
| 40. | சிலப்பதிகாரம், அடைக்கலக்காதை.20:6 |
| 41. | புறம்.25 |
| 42. | கலி.108:9 |
| 43. | புறம்.68 |
| 44. | முல்லை.15 |
| 45. | தமிழர் சரித்திரம், ந.சி.கந்தையா, ப-28 |
| 46. | பெரும்பாண்.147-153 |
| 47. | பெரும்பாண்.158:160 |
| 48. | முல்லை.97:98 |
| 49. | கலி.117:6 |
| 50. | கோ.கேசவன் , மண்ணும் மனித உறவுகளும் ப-16 |
| 51. | ஐங்.புலவிப்பத்து.47, 48, 49 |
| 52. | பெரும்பாண்.155-163 |
| 53. | புறம்.33 |
| 54. | பெரும்பாண்.196-200 |
| 55. | பெரும்பாண்.244:252 |
| 56. | பெரும்பாண்.255:256 |
| 57. | பட்டினம்.22:25 |
| 58. | அகம்.116:1-5 |
| 59. | புறம்.29:13:16 |
| 60. | நெடுநல்.29-30) |
| 61. | பட்டினம்.283-284 |
| 62. | புறம்.18:13-28 |

| | |
|---|---|
| 63. | சீனி.வேங்கடசாமி. பழங்காலத் தமிழர் வாணிகம் ப-9 |
| 64. | தி.முத்துக்கண்ணப்பன், சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம் ப-20 |
| 65. | ஐங்.119 |
| 66 | பட்டினம்.129:141 |
| 67. | அகம்.140:5-9 |
| 68. | அகம்.363:6-8 |
| 69. | புறம்.353, அகம்.75 |
| 70. | பெரும்பாண்.85:88 |
| 71. | தொல்.பொருள்.615 |
| 72. | தொல்.பொருள்.74:1 |
| 73. | சாமி சிதம்பரனார், தொல்காப்பியத் தமிழர், ப-81 |
| 74. | தொல்.பொருள்.175 |
| 75. | தொல்.பொருள்.491 |
| 76 | சிறுபாண்.20206, புறம்.15:17-21, புறம்.224:6-9, புறம்.26, பெரும்பாண்.297-310 |
| 77. | தொல்.பொருள்.617 |
| 78. | தொல்.பொருள்.627 |
| 79. | தொல்.பொருள்.144:15 |
| 80. | தொல்.எழுத்து.102:5 |
| 81. | பரி.1 |
| 82. | தேவநேயப்பாவாணர், பண்டைத் தமிழர் நாரிகமும் பண்பாடும்,ப-99 |
| 83. | தொல்.பொருள்:5:3 |
| 84. | சாமி சிதம்பரனார், தொல்காப்பியத் தமிழர் ப-74 |
| 85. | புறம்.110:3 |
| 86. | தொல்.பொருள்.616 |
| 87. | தொல்.பொருள்.74 |
| 88. | புறம்..86 |
| 89. | தொல்.பொருள்.622 |
| 90. | பட்டினம்:186-192 |
| 91. | பட்டினப்:198-204 |
| 92. | பட்டினப்-210-212 |
| 93. | மறைமலையடிகள், வேளாளர் நாகரிகம், ப-14 |
| 94. | தொல்.பொருள்.625 |

| | |
|---|---|
| 95. | தொல்.பொருள்.626 |
| 96. | தொல்.பொருள்.621 |
| 97. | பரி.20:62-63 |
| 98. | தொல்.பொருள்:142 |
| 99. | தொல்.பொருள்:31 |
| 100. | பரி.10-59 |
| 101. | பரி.10-12 |
| 102. | தொல்.பொருள்.25 |
| 103. | தொல்.பொருள்.88:3-6 |
| 104. | ஐங்.43:3-4 |
| 105. | அகம்.244:11 |
| 106. | கலி.70:22-23 |
| 107. | புறம்.180-7 |
| 108. | புறம்.68:1-4 |
| 109. | புறம்.138:1-7 |
| 110. | புறம்.155:1-3 |
| 111. | புறம்.179:1-3 |
| 112. | சிறுபாண்.130-140, |
| 113. | பெரும்பாண்.19-22 |
| 114. | மலைபடு.40-50 |
| 115. | புறம்.382:5-7 |
| 116. | பொருந:61-63 |
| 117. | பதிற்.87-3 |
| 118. | புறம்.242:3 |
| 119. | புறம்11:14, 319:9-14, 361:11-12 |
| 120. | பொரு.47 |
| 121. | புறம்.103:4-5 |
| 122. | புறம்.105:8 |
| 123. | புறம்.138:8 |
| 124. | பதிற்.78:3 |
| 125. | மேலது.87:1 |
| 126. | புறம்.70:15-16 |
| 127. | புறம்.141:1-2, 6 |

| | |
|---|---|
| 128. | புறம்.335:7-8 |
| 129. | புறம்.285:2-4 |
| 130. | புறம்.287:1-2 |
| 131. | டாக்டர்.அ.தட்சிணாமூர்த்தி தமிழர் நாகரிகமும் பண்பாடும் பக்-49 |
| 132. | தொல்.சொல்.எச்ச.48 |
| 133. | புறம்.289:8-10 |
| 134. | புறம்:289:8-10 |
| 135. | புறம்:360:16-19 |
| 136 | பரி10:21 |
| 137. | பரி:6:44-45 |
| 138. | புறம்:183:8-10 |

.

# இயல்-2

## சங்ககாலச் சமூகத்தில் சமயம்

உலகில் இன்று அறியப்பட்டுள்ள பல்வேறு சமயங்களும், பெயரளவில் மாறுபட்டுள்ளனவேயன்றி, கொள்கையளவில் ஒன்றுபட்டே நிற்கின்றன. இவைகளில் தமிழர் சமயம் என அறியப்படும் தொல் தமிழ்ச்சமயம் வரலாற்றுக்கும் முற்பட்ட பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியிருந்தது. தமிழ் மக்களின் தொன்மைக்கால வரலாறு, மறைந்து போனது அல்லது மறைக்கப்பட்டது போல், தமிழர் சமயத்தின் வரலாறும் மறைந்து போயிற்று. தமிழர் சமயத்தின் தொல் தமிழ்ப் பெயர் அறிந்து கொள்ள இயலாமல் போயிற்று.

தமிழர் சமயத்தின் கொள்கைகள் தனியொரு இனம், மொழி, நாடு என்ற எல்லைகளைக் கடந்தவை. உலக மக்கள் அனைவரும் என் மக்களே: உலகின் எந்த ஊரும் என் ஊரே என்ற உலகளாவிய சிந்தனையைக் கொண்டு, உலக மக்களைத் தம் உறவாகவே எண்ணியவர்கள் தமிழர்கள். மக்களை இனம், சமயம் என்றளவில் பிரித்துப் பார்க்காத தமிழர்களின் கொள்கையை கணியன் பூங்குன்றனாரின் ‘‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’’[1] என்னும் பாடல் உணர்த்தும். தமிழரின் உலகளாவிய மனித நேயத்தை விளக்கும் இவ்வரிகள் உலக சமயங்கள் கூறும் எல்லாக் கொள்கைகளையும் உள்ளடக்கியதாகும். இத்தகு சிறப்பு வாய்ந்த சங்கத் தமிழரின் சமயத்தை ஆராய்வதாக இவ்வியல் அமைகின்றது.

### சமயத்தின் தோற்றம்

மனிதன் தோன்றிய காலந்தொட்டு தன்னையும் மீறி ஒரு ஆற்றல் செயல்பட்டதை அவன் உணர்ந்தான். இவ்வாற்றலைக் கண்டு அஞ்சிய மனிதன் அவ்வாற்றலை எவ்வகையிலாவது அமைதிப்படுத்தித் தன் பக்கம் ஈர்க்க முயன்றான். அவ்வாறு ஈர்ப்பதற்கான முயற்சிகளே ஆற்றல் மீதுள்ள நம்பிக்கைகளாக உருவெடுத்தன. சில நம்பிக்கைகள் பொய்த்துப் போனதாகவும், சில மெய்யாகவும்

தென்பட்டதை அறிந்த மனிதன் மெய்யெனப்பட்ட நம்பிக்கைகளை வளர்த்துக் கொண்டான். மனிதனை விஞ்சிய பேராற்றல் ஒன்று இருக்கின்றது என்ற நம்பிக்கையே சமயத்திற்கான முதல்படியாகும்.

நம்பிய போராற்றலைத் தன் பக்கம் ஈர்க்கவும், தனக்குத் துணையாகக் கொள்ளவும், அப்பேராற்றலை அழைக்கவும் முயன்ற மனிதன், அவ்வாற்றலை அழைக்கும் வழிகளைத் தேடினான். அவ்வழிகளே வழிபாட்டு முறைகள் ஆகும். மனிதனுக்கு அப்பேராற்றல் தன்னுருவைக் காட்டவில்லை. அதனால் அப்பேராற்றல் எப்படியிருக்கும் எனப் பலவாறு சிந்தித்த மனிதன் அவ்வாற்றல் தன்னைப் போலவே உயிரும் உடலுமாக மறைந்திருப்பதாகக் கருதினான். அப்பேராற்றலைக் கடவுள் என்றோ இறைவன் என்றோ அப்போது அவன் அழைக்கவில்லை. பல்லாயிரம் ஆண்டுகள் பெயரில்லாத ஆற்றலையே மனிதன் வழிபட்டான். மனிதன் விரும்பிய உணவு, உடை, மகிழ்வு அனைத்தையும் அப்பேராற்றலும் விரும்பும் என நம்பி தனக்கு நிறைவளிக்கும் அனைத்தையும் அவ்வாற்றலுக்குப் படைத்தான். படைக்கும் போதே தனக்கு உள்ள இடையூறுகளையும் கூறி அவைகளைக் களைந்தெறியுமாறு கேட்டுக் கொண்டான். இவ்வாறான விண்ணப்பங்கள், பிற்காலத்தில் மந்திரங்களாகவும், செபங்களாகவும் உருவெடுத்தன. விண்ணப்பித்த பிறகு, தனக்குப் பல உதவிகள் கிடைத்ததாகவும் மனிதன் நம்பியதின் அடிப்படையில் தொடர்ந்து இறைவனுக்குப் படைக்கவும் தனது விண்ணப்பங்களைச் சொல்லவும் வழக்கமாக்கிக் கொண்டான்.

இவ்வாறான வழிபாட்டு முறைகளே மனிதனின் தொடக்க கால நிகழ்வுகளாக அமைந்தன. இந்த நம்பிக்கைகளும் வழிபாட்டு முறைகளும் பல்லாயிரம் ஆண்டுகளில் மென்மேலும் மெருகூட்டப்பட்டன. வழிபாட்டு முறையில் சில ஒழுங்குகள் கடைப்பிடிக்கப்பட்டன. நாளடைவில் அவ்வொழுங்குகள் விதிகளாயின. அவ்விதிகள் கடவுளுக்குப் பிடித்தமானவை எவை வெறுக்கத்தக்கன எவையென விரித்துக் கூறின. அவ்விதிகளின் தொகுப்பே சமயமாக உருப்பெற்றது. ‘‘தொடர் மனித

வளர்ச்சிகளும், நிலையான குடியிருப்புகளும், வழிபாட்டு முறைகளில் முன்னேற்றங்களும், பெருகி வளர்ந்த வழிபாட்டு முறைகளில் சமயம் என்ற நிலையில் இறையுணர்வைத் தோற்றுவித்தன. தொடக்கத்தில் அப்பேராற்றல் ஒன்றே எனவும், அதுவே உலகிற்குத் தலைவன் எனவும் நம்பப்பட்டன.''[2] இவ்வாறாக வளர்ந்ததே உலகின் முதல் சமயமாகும். இச்சமயம் இயற்கையின் பாற்பட்டது. இச்சமயத்தை யாரும் தோற்றுவிக்கவில்லை. பின்காலத்தில் அப்பேராற்றலே தன்னைப் பல நிலைகளிலும் மனிதனுக்கு வெளிப்படுத்த சமயத்தைத் தோற்றுவித்ததாக நம்பப்பட்டது.

உலகில் முதலில் தோன்றிய இனத்தில்தான் முதல் சமயமும் உருவெடுத்தது. இயற்கையால் உருவான அச்சமயம் ஏவராலும் தோற்றுவிக்கப்படவில்லை. கால வோட்டத்தில், புதுப்பது நம்பிக்கைகளும் வழிபாட்டு முறைகளும் இணைந்தன. ''நாடோடிகளாய் வாழ்ந்திருந்த மக்கள் நகர்ப்புறங்களை உருவாக்கிக் கொண்டனர். நகரிய நாகரிகத்தில் புதியவனவற்றைக் காணும் புதுமைப் போக்குகள் தென்பட்டன. மக்களின் சிந்தனைகள் விரிவுபட்டன. சமய வழிபாட்டுமுறைகளும் விதிகளும்கூட கேள்விகளுக்குள்ளாக்கப்பட்டன. கடவுளுக்குப் புது இலக்கணங்கள் கற்பிக்கப்பட்டன.''[3]

நாடோடிகளாய் வாழ்ந்திருந்த மக்களுக்கு காளை, பசு, ஆடு, கோழி, நாய், பூனை ஆகியன நட்பு விலங்குகளாயிருந்தன. தமக்கு உதவி செய்த அவ்விலங்குகள் தங்களுடைய கடவுளுக்கும் உதவியாளர்களாக இருப்பதன் நம்பிக்கையை வளர்த்துக் கொண்டனர். கடவுளின் அருகிலேயே இவைகளும் வைக்கப்பட்டன.

மனிதனுக்குத் தொடக்கத்தில் குடியிருப்பாக விளங்கிய ஆலமரம் சிறப்புக்குரியதாயிற்று. தங்களது கடவுளும் அம்மரத்திலேயே குடியிருப்பதாகவும் நம்பினர். மிக உயரமான மலையும் இக்கண்ணோட்டத்திலேயே நோக்கப்பட்டது. மனிதனுக்குப் பயன்பட்ட மரங்களும் ஏதோவொரு வகையில் கடவுளோடு இணைக்கப்பட்டன.

மனிதன் வாழ்ந்த குறிஞ்சி நிலத்தில் காணப்பட்ட யானை, குரங்கு, பாம்பு, கழுகு போன்ற உயிரினங்கள் அச்சமூட்டுவனவாக இருந்தன. இவைகள் தமக்குத் துன்பம் விளைவிக்காத வகையில் அவ்விலங்குகளை அமைதிப்படுத்தும் முயற்சியாகவும், கடவுள் அவ்விலங்குகளினின்றும் காப்பார் என்ற நம்பிக்கையிலும் மேற்கண்ட விலங்குகளும் கூட வணக்கத்திற்குரியனவாகின. தொடக்கத்தில் ஒன்றாகவிருந்த மனித இனம் பல இனக்குழுக்களாகப் பிரிந்துபோன கால அளவுகளில் அவரவருக்கும் ஒவ்வோர் விலங்கு சிறப்பான வணக்கத்துக்குரியதாகவும் மற்றவை பொது வணக்கத்துக்குரியதாகவும் மாறின. தமிழகத்தின் தொன்மைக்காலத்தில் குழுக்களாக வாழ்ந்த மக்கள் இவ்விலங்குகளையும் வழிபட்டனர். பிற்காலத்தில் அரிமா, புலி போன்றவைகளும் கடவுளோடு இணைக்கப்பட்டன. கழுகு மிக உயரத்தில் பறப்பதால் கடவுளைக் காணவும், பேசவும் அதற்கு வாய்ப்பிருப்பதாகக் கருதப்பட்டு கழுகும் கடவுளோடு இணைக்கப்பட்டது. அச்சம் தரும் பாம்பைக் கடவுளின் கழுத்தில் சுற்றி வைத்தனர். கடவுளுக்குக் கட்டுப்பட்ட பாம்பு தம்மை தீண்டாது எனவும் நம்பினர். இவைகளில் மனிதனுக்கு மிகவும் பயன்பட்ட காளை சிறப்பான வணக்கத்துக்குரியதாயிற்று.

பிற்காலத்தில் வேளாண்மைத் தொழிலுக்கும், ஆடு மாடுகளுக்குத் தேவையான புல்லினங்களுக்கும் மழை அடிப்படையானதால், மழையும், மழைதரும் முகிலும், முகிலில் தோன்றும் இடியும் மின்னலும் கூடவணக்கத்துக்குரியவையாயின. உலகில் மக்களும் உயிரினங்களும் வாழ்வதற்கு மூலமும் அடிப்படையுமாயிருந்த கதிரவன் போற்றுதலுக்குரிய கடவுளானான். பல்வேறு நிலைகளிலும் கண்ணுக்குப் புலப்படாத கடவுளை கதிரவன் உருவத்தில் மக்கள் கண்டனர். கதிரவனே முதற் கடவுகளாகக் காட்சியளித்தான். கதிரவனை வணங்கும் நிலைகளில், உலகின் பல்வேறு சமயங்களையும் காணலாம். இயற்கையாய்த் தோன்றிய முதல் சமயத்தில் கதிரவனே முழுமுதற் கடவுளாகக் கருதப்பட்டான். பிற்காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட சமயங்கள் பலவும் கதிரவனையோ, அல்லது அதன் உருவத்தையோ மையமாகக் கொண்டே, தங்களது கடவுளைக் கற்பித்துக் கொண்டன.

கடவுளே இவ்வுலகைப் படைத்தார் என்றும் மனிதன், உயிரினங்கள், விலங்குகள், வானம், வானத்திலுள்ள உடுக்கள், அண்டவெளி அனைத்தும் கடவுளால் படைக்கப்பட்டனவே என்றும் பிற்காலச் சமயங்கள் கூறின. கடவுள் எவ்வாறு இவ்வுலகையும் உயிரினங்களையும் படைத்தார் என்பதை விளக்க ஒவ்வொரு சமயமும் ஒரு கதையைக் கொண்டிருந்தன. இக்கதைகள் யாவும், ஒரு மூலத்தினின்றும் விரிந்த கதைகளாகவே காணப்படுகின்றன. இதிலிருந்து, மூலச்சமயம் ஒன்றிலிருந்தே இவையாவும் தங்களுக்கென வழிபாட்டு முறைகளை உருவாக்கிக் கொண்டு புதிய சமயங்களாக உருவெடுத்தன என அறியலாம். இவ்வுலகமானது நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் என்ற ஐந்து அணுக்களால்[4] ஆனவை என்பது சமயங்களின் நம்பிக்கையாகும்.

## தமிழர் சமயம்

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே, முன்தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி என்பது தமிழர்களின் நம்பிக்கையாகும். உண்மையில் கல்லும், மண்ணும் தேன்றியபிறகே உயிரினங்கள் தோன்றின என்பது கருத்தாயினும், தமிழரின் மூப்புத் தன்மை குறித்துச் சொல்லப்பட்டது எனலாம். ‘‘உலகின் முதல் உயிரினத் தோற்றமும், மனிதத்தோற்றமும் தென்கண்டத்தில் தோன்றியதாக புவியியலார் கருதுகின்றனர். உயிரினங்கள் தோன்றுவதற்கேற்ற தகுதியான சூழலை இக்கண்டம் பெற்றிருந்தது. இக்கண்டம் சிதறுண்டு பல்வேறு நிலப்பகுதிகள் உருவானபோது, அதன் பெருநிலப்பரப்பாகக் குமரிக்கண்டம் நிலைபெற்றதாகவும், புவியியலார் கூறுகின்றனர்.’’[5] இக்குமரிக் கண்டம் உள்ளிட்ட பிரிந்து போன நிலப்பகுதிகளிலும் மனித இனமும், உயிரினங்களும் அறியப்பட்டன என்றாலும், மனித இனத்தின் நாகரிக வளர்ச்சி குமரிக்கண்டத்தில் தான் தோன்றியது என்பதும் ஆய்வாளர்களின் கூற்றாகும்.

இவ்வாறு தனிப்பெரும் இனமாய் வளர்ந்ததே தமிழினம் என அறிப்படுகின்றது. ‘‘யாவரும் இவ்வுலகில் உயிர் வாழ்வதற்கு உணவே இன்றியமையாதது என்பதனை அறியாதால் சிலர் உணவுக்குப் பிறகுதான் ஏனைய ஆயினும் சங்க காலத் தமிழ் மக்கள் உணவினும் முதன்மையாகக் கடவுளைக் கருதி வாழ்ந்தார்.’’[6]

தமிழர்கள் கடைப்பிடித்து வந்த சமயமே, தமிழர் சமயம் எனப்பட்டாலும், அச்சமயத்துக்கு அக்காலத்தில் என்ன பெயர் சூட்டப் பெற்றிருந்தது என்பதை அறிய இயலவில்லை. யாராலும் தோற்றுவிக்கப்படாத, இயற்கையோடு இணைந்த சமயமாகத் தமிழர் சமயம் விளங்கியது எனக் கருத இடமுண்டு. தமிழர் சமயத்தை ஆய்வு செய்யுங்கால், அதன் படிப்படியான தோற்ற வளர்ச்சியைக் காண இயலும். பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தின் அகத்திணையியலில் நிலங்கள் குறித்த செய்திகளை கூறுங்கால் தெய்வங்கள் பற்றிய குறிப்புகளையும் காண முடிகிறது.

## தொல்காப்பியமும் தெய்வங்களும்

தொல்காப்பியர் காலத்தில் தமிழர்களுக்கான சமயம் இருந்தது. சமயவழிபாட்டு முறைகள் இருந்தன. அவை யாவும் தொல்காப்பியத்தில் பரவலாக அறியப்பட்டுள்ளன. மக்களால் அறியப்பட்ட இவ்வுலகின் பொருளை முதல் பொருள், கருப் பொருள், உரிப் பொருள் என்று மூன்று வகையாகத் தமிழர் வகுத்தனர். இம்முறை தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே அறியப்பட்டிருந்தது. உயிர்கள் வாழ்வதற்கு அடிப்படையாய் அமைந்த நிலம் காலம் ஆகியவை முதற்பொருளென்றும், சிறிய புல் முதல் மாந்தன் வரையிலான உயிரினங்கள் மற்றும் உயிரற்ற நிலம் முதலிய பொருள்கள் கருப்பொருள் என்றும், மக்களின் எண்ணங்கள், சிந்தனைகள், பண்பாடு, நாகரிகம் போன்ற உணர்வுகளின் அடிப்படையிலான எழுச்சிகளை உரிப்பொருளென்றும் வகுத்தனர். மக்களின் உள்ளத்தே கிளர்ந்தெழும் தெய்வநம்பிக்கை, உரிப்பொருளாகத் தெரிந்தாலும் நிலங்களின் அடிப்படையில் வழிபாட்டு முறைகள் வளர்ந்ததால் மெய்யியல் கோட்பாடுகள் கருப்பொருளாகவே சொல்லப்பட்டன.

**“ தெய்வம் உணவே மாமரம் புள்பறை**

**செய்தியாழின் பகுதியொடு தொகைஇ**

**அவ்வகை பிறவும் கருவென மொழிப”**[7]

தெய்வம், உணவு, விலங்குகள், மரம், செடி, கொடிகள், பறவை, தோள்கருவிகள், தொழில், யாழ் போன்ற நரம்புக் கருவிகள், ஊர், நீர், பூ போன்றவனவும் கருப்பொருள் என்று கூறுவர். தெய்வம் என்ற ஆற்றல் இருந்தைக் தமிழர் ஏற்றுக் கொண்டிருந்தனர்.

**“தெய்வம் அஞ்சல், புரை அறம் தெறிதல்”**[8]

தெய்வம் என்பது தமிழ்ச் சொல்லே என்பதைத் தொல்காப்பியம் தெளிவுப்படுத்துகிறது.

**“பால்வரை தெய்வம் வினையே பூதம்.”**[9]

எனவே தெய்வம் உண்டென்ற கொள்கையைத் தமிழர் பற்றி நின்றனர் என்பது தெளிவு.

தொல்தமிழன் உயிர்-உடல் ஆகியவற்றைப் பற்றி நிறையச் சிந்தித்திருக்கிறான். இயக்கத்திற்கு உயிரும் உடலும் இணைத்திருக்க வேண்டுமென்பதையும் அறிந்திருந்தான். உடல் ஐந்து வகையான அனுக்களால் ஆனது என்பதையும் தெரிந்திருந்தான். உயிர்வேறு, உடல்வேறு என்பதையும் தெளிவுபடுத்தியிருந்தான்.

**“காலம் உலகம் உயிரே உம்பே”**[10]

**“உடம்பும் உயிரும் வாடியக் காலும்”**[11]

உயிரை உடலில் தக்க வைத்துக் கொள்ள மாந்தன் எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெறாது என்றும், தெய்வம் உயிரையும், உடலையும் பிரிக்கவல்லது என்றும் நம்பியிருந்தான்.

**"மாற்றரும் கூற்றம் சாற்றிய பெருமையும்"[12]**

கூற்றுவன் தெய்வத்தின் ஏவலால் செயல்படுவான் என்பதை இவ்வரிகள் விளக்குகின்றன.

**"உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலன் எனக்**
**கொள்ளும் என்ப குறியறிந்தோரே"[13]**

தெய்வ நம்பிக்கைக் கொண்டிருந்த தமிழர் அத்தெய்வம் பற்றிய விளக்கங்களையும் அறிந்திருந்தனர்.

ஐவகை நில மக்களின் வாழ்க்கைமுறை வெவ்வேறாக அமைந்திருந்ததால், தங்களுடைய தொழிலையொட்டிய தங்கள் எதிர்பார்ப்புகளுக்கு ஈடாக, தங்கள் கடவுளைப் படைத்துக் கொண்டனர்.

**"மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை, குறிஞ்சி, மருத நெய்தலெனச்**
**சொல்லிய முறையால் சொல்லவும் படுமே ."[14]**

என்று தொல்காப்யிர் நிலங்களையும், அவ்வவ்நிலங்களுக்குரிய தெய்வங்களையும் வகைப்படுத்துகின்றார்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களைக் கொண்டிருந்த குமரிக் கண்டத்தில் குறிஞ்சியில் தோன்றிய சமயமே முதல் சமயமாக உருப்பெற்றது. பின்னர் அடுத்தடுத்தது நிலங்களில் குறிஞ்சி மக்கள் இடம் பெயர்ந்து வாழ்ந்தபோது அந்நிலங்களுக்குரிய தொழில், வாழ்க்கைமுறை, நாகரிக வளர்ச்சி ஆகியவற்றின் அடிப்படைகளில் புதிய வழிபாட்டு முறைகளும், வழக்காறுகளும் தோன்றின என்றாலும், அவ்வழிபாட்டு முறைகள் குறிஞ்சி நில வழிபாட்டு முறைகளை மூலமாகக் கொண்டு விரிந்தன.

குறிஞ்சியை அடுத்து முல்லைக்குப் புலம் பெயர்ந்த மக்கள், ஆடு மாடுகளை வளர்த்துத் தமது வாழ்க்கையை மேற்கொண்டனர். முல்லை நில நாடோடி மக்கள் நிலையாகவோரிடத்தில் தங்கி, வேளாண் தொழிலை மேற்கொண்டனர். இதுவே மருதநில வாழ்க்கை முறையாகும். இவ்விரு நிலப்பகுதி மக்களில் சிலர் கடலில் மீன்பிடித்துத் தமது தொழிலைத் தொடங்கினர். இது நெய்தல் நிலத்தைச் சார்ந்திருந்தது. குறிஞ்சி தவிர்த்த மூன்று நிலமக்களும் தத்தமது புதிய சூழல்களில் சில வழிபாட்டு முறைமைகளைச் சேர்த்துக் கொண்டனர். இவ்வழிபாட்டுக் குரியவர்களாக, முல்லையில் மாலும், மருதத்தில் இந்திரனும், நெய்தலில் வருணனும் போற்றப்பட்டனர். இம்மூன்று பெயர்களும் நீரோடும் மழையோடும் தொடர்புடையவைகளாகும்.

## குறிஞ்சி நிலக்கடவுள்:

பகலில் வேட்டையாடியும் இரவில் குகையிலும் வாழ்ந்திருந்த குறிஞ்சி நிலமக்களுக்கு பகல் பொழுதே பாதுகாப்பானதாக இருந்தது. இரவு நேரங்களில் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு ஆளாயினர். விலங்குளின் தாக்குதல்கள் தான் இரவுநேர இடையூறுகளில் தொன்மையானதாகும். மேலும் காற்றின் வீச்சால் எற்படும் மரக்கிளைகளின் அசைவுகளும், அவ்வசைவுகள் தந்த ஒலிகளும், அறிய இயலாத உருவம் ஒன்று கிளைக்குக் கிளை தாவிச்செல்வதைப் போன்ற உணர்வுகளும் பேய் என்ற நம்பிக்கையை வளர்த்தன. எனவே எப்போதும் பகலாயிருத்தல் இவ்வச்சுறுத்தல்கள் இல்லாமாலிருக்கலாம் என்ற எண்ணம் தேன்றியது. ‘‘இயற்கைச் சீற்றத்தைக் கண்டு அஞ்சிய மக்கள் இறைவனை வழிபடத் தொடங்கினர் என்று சாமிசிதம்பரனார் கூறினார்.’’[15] இரவைப் பகலாக்கத் தீயை வளர்க்ககவும், தேவைப்பட்ட நேரத்தில் மூட்டிக் கொள்ளவும் அறிந்தனர். பகலில் கதிரவனும், இரவில் தீயும், குறிஞ்சி நில மக்களின் பாதுகாப்புக்குத் தேவைப்பட்டன. கதிரவனும் நெருப்பும் தீ என்றே சொல்லப்பட்டன. இதனை ‘‘செந்தீச் சுடரிய விழியும்’’[16] என பரிபாடல் விளக்கும். தீ வழியே தோன்றும் ஒளியே அம்மக்களின் வழிபாட்டு முறைகளுக்கு அடிப்படையாய் அமைந்தது.தீயையும், தீ ஒளி தந்த பகலையும், பகலில் வலம் வந்த கதிரவனையும் அவர்கள் போற்றினர்.

குறிஞ்சி நில மக்கள் தொடக்கத்தில் கதிரவனையே வழிபட்டிருக்க வேண்டும். கதிரவன் கடலிடைத் தோன்றி மலையிட மறைவதாக தமிழர் நம்பினர். இதனை,

**"வான் கண் விரிந்த பகல்மருள் நிலவின்**

**சூரல் மிளைஇய சாரல் ஆர் அற்று"**[17]

என்ற பாடலடிகள் உணர்த்தும். தமிழ் நாட்டின் இயற்கையமைப்பும் புவியியல் தோற்றம் கதிரவன் கடலிடைத் தோன்றி மலையிடை மறைவதை உணர்த்தும். இக்கதிரவனே பின்னாளில் முருக வழிபாடாக மாறியிருக்கவேண்டும்.

## கதிரவன்-தீ-செம்மை-சேய்-சேயோன்-முருகன்

கதிரவனால் பெறப்பட்ட தீயும், தீயால் வெளிப்பட்ட செம்மையும், ஒளி செம்மையில் உருவான சேயும், பரிணாம வளர்ச்சி பெற்று குறிஞ்சி நில மக்கள் முருகனை வழிபடுதற்கு ஆதாரமாயின. முருகன் வழிபாட்டிற்கு மூலவன் கதிரவனாவன். பரிபாடல் இதனை,

**"மூவிரு கயந்தலை முந்நான்கு முழவுத்தோள்**

**ஞாயிற்று ஏர் நிறத்தகை நளினத்துப் பிறவியை"**[18]

எனக் கூறும் கதிரவன் தோன்றும்போது செந்நிற அழகுடன் தோன்றும் முருகனே எனக் குறிப்பிடுவதால் கதிரவன் வழிபாடே பின்னாளில் முருக வழிபாடாக தோற்றம் பெற்றிருக்க வேண்டும்.

## முருக வழிபாடு

வேலன் என்ற சொல், முருகனைக் குறித்தாலும், முருகனுக்கு வழிபாடு செய்யும் பூசெய் ஆளையே குறித்தது. பூவைச் சார்த்தியவன் பூசாரி எனப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. பூசாரி தெய்வத்தன்மை பெற்று வெறியாடல் நிகழ்த்தியதாகவும் சொல்லப்பட்டது. முருகனைப் பற்றிய பல்வேறு செய்திகள் கடைச்சங்க இலக்கியங்களில் காணப்படுவதால், முருக வணக்கம், அக்காலத்தில் மக்களிடையே பரவலாக அறியப்பட்டது எனலாம். குறிஞ்சி நிலத் தலைவனாக கதிரவன் அறியப்பட்ட

நிலையில் முருகனையும் குறிஞ்சி நிலத்தோடு தமிழர் இணைத்தனர் கடைச்சங்க காலத்தில் அறியப்படும் முருகன், குறிஞ்சிக் கடவுளாகவே சொல்லப்பட்டு, பிற்காலத்தில் அனைத்து மக்களின் வழிபாட்டுக்குரியவன் ஆகிறான். வேடனாக அறியப்படும் முருகன், குறப்பெண்ணை மணந்தான். இதனை,

**"வாய்மொழிப் புலவீர் கேண்மின் சிறந்தது**
**காதற் காமம் காமத்துச் சிறந்தது"**[19]

என்ற பாடல் அடி உணர்த்தும்.

காட்டுக்கோழியும் மயிலும் முருகனோடு இணைக்கப்பட்டன. முருகனின் குறிஞ்சி நிலத்தொடர்புடையவன் என்பதை இவை வெளிப்படுத்தும். இதனை,

**"மறியும் மஞ்ஞையும் வாரணச் சேவலும்**
**பொறிவரிச் சாபமும் மரனும் வாளும்"**[20]

என்ற பாடலடிகள் உணர்த்துக்கின்றன.

அச்சத்தை நீக்கும் கடவுளாக முருகன் சொல்லப்படுகிறான் அதே போல் பகைவக்கும் அச்சத்தைத் தோற்றுவிக்கும் கடவுளாகவும் கருதப்படுகின்றான். தனது பகைவனான சூரனை வென்றொழித்தான். இதனை,

**"பாய்இரும் பனிக்கடல் பார்துகள் படப்புக்குச்**
**சேய்உயர் பிணிமுகம் ஊர்ந்து அமர்உழக்கி**
**தீயழல் துவைப்பத் திரிய விட்டெறிந்து"**[21]

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

சூரன் என்ற கொடியவன் மலைவாழ் பெண்டிரைக் கவர்ந்து செல்லும் கொடியோன் ஆவன். அணங்கு என்ற சொல் முருகனோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. அணங்கென்பது அச்சத்திற்குரிய நான்கு கூறுகளின் ஒன்றென தொல்காப்பியம் கூறுகிறது.

**"அணங்கே விலங்கே கள்வர் தம்இறை எனப்**

**பிணங்கல் சாலா அச்சம் நான்கே"[22]**

அணங்கு என்பது சூரனைக் குறித்த சொல்லாகவும் கண்ணுக்குப் புலனாகாத ஆற்றலலால் அச்சத்தை விளைவிக்கும் சூரன் என்று இச்சொல்லுக்குப் பிற்கால உரையாசிரியர்கள் விளக்கமளித்துள்ளனர்.

கள் என்ற வேர்ச் சொல்லினின்றே சூர் என்ற சொல் நீண்டதாய் பாவாணர் கருதுகின்றார். சூர் என்பது தமிழ்ச்சொல்லே அது சுடுதல் அல்லது துன்புறுத்துதல் என்ற பொருளிலும் அறியப்படும் சூர்-சூரி என்றும் சொல்லப்பட்டது. அது குறுவாள் எனப்படும் துன்பத்தை அல்லது அச்சத்தைக் கொடுப்பவன் சூரன் எனப்பட்டான்.. சேயோன் என்பது செம்மை அல்லது சிவந்த நிறம் என்ற பொருளையே தரும். முருகன் சினத்தின் கடவுளாக அறியப்பட்டதால் சேயோன் எனப்பட்டான்.

சூர் என்னும் புலப்படாத ஆற்றல், மலையில் மேயும் ஆடுகளை அச்சுறுத்தியதாக நற்றிணை கூறுகிறது.[23] சூர் மலை வழிகளிலும் நீரோடைகளிலும்[24] நீர் வீழ்ச்சிகளிலும்[25] நின்று கொண்டு அச்சுறுத்தி வந்தான். இவன் பல இடங்களில் பெண் உருவும் எடுத்து வந்தான் அவனைச் சூர்மகன் என்று அகநானூறு கூறுகிறது.[26] குறிஞ்சி நிலத்தில் அச்சுறுத்தி வந்த சூர் அல்லது சூரனை, முருகன் வெற்றி கொண்டான்.[27] வேலால் அல்லது ஈட்டியால் சூரனைக் கொன்றான்.[28]

1. சூர் விரும்பும் காந்தள் மலரை நுகர்ந்த தும்பி பறக்கும் தன்மையை இழக்கும்.[29]
2. சூர் ஏறிய மயில் நடுங்கும்.[30]
3. சூர் விரும்பி வாழ்கின்ற மலை.[31]
4. சூர் உறையப் பெற்ற கனை.[32]
5. சூர் மலையை அடுத்த தோட்டத்தில் உலா வருதல்.[33]
6. சூர் வாழும் கொல்லிமலை.[34]
7. செவ்வேள் பரங்குன்று சூர் உறையப் பெறுவது.[35]

**முல்லை நிலக்கடவுள்:**

மால் என்றும் மாயோன் என்றும் அழைக்கப்பட்டவன் முல்லை நிலக் கடவுளாவான். எல் என்பது கதிரவன், பகல், ஒளி, தீ, வெளிச்சம் என்றவாறு பொருள் கொள்ளப்பட்டது. எல் என்பதற்கு எதிர் சொல் அல் என்பதாகும்.

அல்=கருமை; மா+அல்=கடுமையான கருமை. மா அல், மால் எனப்பட்டது. 'ஐ' என்ற ஓரெழுத்துச் சொல்லுக்கு அழகு என்பது பொருளாகும். மால்+ஐ=மாலை எனப்பட்டது. மாலை=அழகான; தொல்காப்பிய அகத்திணையியல் கணக்குப்படி, மாலை 6 மணி முதல் 10 மணிவரை குறிப்பிடப்படுவதாகும். மால்=கருமை; கரிநிற முகில், கார்மேகம், மழையைப் பொழியும் நிலையிலுள்ள முகில். ஹிதனை,

**"மழை தலைவைத்து அவர் மணிநெடுங் குன்றம்"[36]**

மழைக் மேகத்தை கொண்டுள்ள நீல மணிபோன்ற நெடுங்குன்றம் எனக் குறிப்பிடக்காணலாம்.

மால் என்ற சொல் நீரோடும் தொடர்புடையதாகையால், நீரின் நிறமான நீலம் (Blue) மால் என்றே சொல்லப்பட்டது. நீலம் என்பது வட சொல்லெனப் பலரும் கூறுவர். உண்மையில் அது தமிழ்ச் சொல்லே ஆகும். நீர்-நீல்-நீல என விரிந்தது. நீல் என்பது தெலுங்கில் நீரைக் குறித்தே சொல்லப்படுகின்றது. நீல் (Nile) என்பதே நைல் என்று பிற்காலத்தவரால் சொல்லப்பட்டது. கருமை, நீலம் ஆகியவை ஒரு பொருள் குறித்தனவே. நீலத்தைக் கருமையின் வெளிப்பாடாகவே தமிழர் கருதியதால் நீலம் என்பதை தனித்தன்மை பெற்ற நிறமாகத் தமிழர்கள் கருத வில்லை. மால் நீலநிற தன்மை பெற்றவன் என்பதை,

**"மண்ணுறு திரு மணி புரையும் மேனி"[37]**

என்றதால் அறியலாம்.

“கரிய நிறமான முகிலையே கடவுளாக முல்லை நில மக்கள் போற்றினர்.”[38] முகில் தன்னிலே உருவானதல்ல என்பதையும், உணர வேண்டும். கடவுள் தன்மையென்று தன்னிலே நிலைத்திருப்பதாகும். அவ்வாறு தன்னிலே நிலைத்திருந்த கடவுளாக மலைக்கடவுள் மட்டுமே சொல்லப்படுகின்றான்.

முல்லைநில மக்கள், குறிஞ்சியினின்றும் வந்தவர்களே என்பதால், தமது முதற்கடவுளோடு மாலையும் சேர்த்து வழிப்பட்டனர். தங்களது கால்நடைகளுக்கு வேண்டிய புல், பூண்டுகள் வளர மழையே காரணியமாய் இருந்ததாலும் அம்மழைக்கு மூலமாய் முகில் இருந்ததாலும், மாலை தமது முதற்கடவுளின் மற்றொரு தோற்றமாகக் கருதினர் என்பதே உண்மை நிலையாகும்.

மால் என்ற சொல், மயோன் என்றும் தமிழில் அறியப்பட்டுள்ளது. மயோன் என்ற சொல்லுக்கான மூலச் சொல் மை என்பதே ஆகும். மை என்றால் கருமை இது மெய் என்ற தமிழ்ச் சொல்லின் விரிவாக்கமே. மயோன் என்பது மை என்ற சொல்லின் நீட்சியே ஆகும்.

**மெய் - மை - மால் - மாயோன்**

முல்லை நில ஆயர்கள் தங்களின் நீர்தேவைக்காக ‘குரவை ஆடியும்’[39], ‘வழிபாடுகள் செய்தும்’[40] இம்மாயோனை வழிபட்டனர்.

## நெய்தல் நிலக்கடவுள்

குறிஞ்சியில் வேட்டையாடுதலும், முல்லையில் கால்நடைகளை வளர்த்தலும், தொழில்களாக அறியப்பட்ட நிலையில், நெய்தலில் மீன் பிடித்தல், உப்பு விளைவித்தல் போன்ற தொழில்களைச் செய்தனர். நான்கு புறமும் நீரால் சூழப் பெற்றிருந்த குமரிக்கண்டத்தில் கடல் சார்ந்த தொழில்கள் சிறப்புற்றிருந்தன. மீன் மக்களின் உணவுத் தேவைகளில் ஒன்றாகக் கருதப்பட்டது. ஆயர்கள் முல்லை நிலத்தில் நாடோடிகளாகத் திரிந்த காலத்தில் நிலையான குடியிருப்பை நெய்தல் நில மக்கள் கொண்டிருந்தனர் எனலாம்.

பரந்த கடலில் தொழில் செய்தவர்கள் பரதவர்கள் என்றே அழைக்கப்பட்டனர். பரதவர் குலம், தொல் தமிழ்க் குலம் என்பதில் ஐயமில்லை. வெள்ளப் பாழினின்றும் தப்பிப் பிழைத்துச் சென்றவர்களில் பெரும்பாலானோர் பரதவர்களே. சிந்துவெளி மக்கள் பரதவர்களே என அறியப்படுகின்றனர். சிந்துவெளிக்குப் பரதவகுல நாடு என்ற பெயர் இருந்ததாகவும் சொல்லப்படுகின்றது. சிந்து வெளியினின்றும் வெளியேறிய மக்களுள், போன்சியர்களும் ஒரு குழுவினர் என்று கருதப்படுகின்றது. இவர்களே மேலை நாடுகளில் கடலாண்மையைச் செலுத்தியவர்களாவர். இவர்களில் சிலர் இங்கிலாந்தில் குடியேறியதாகவும், தங்கள் நாட்டின் பெயரையையே அந்நாட்டிற்கு வைத்து அதனை பரத தேசம் என அழைத்ததாகவும் கூறுகின்றனர்.[10] பரததேசம்-பிரித்தானியம் என்று திரிந்ததாகவும் ஒரு கருத்துண்டு.

கடலையே நம்பி வாழ்ந்திருந்த நெய்தல் நிலத்தில் பரதவர், நீரையே தங்கள் தெய்வமாகக் கொண்டிருந்தனர். முல்லை நிலத்து மக்கள் நீரை வேண்டித் தங்கள் கடவுளை வழிபட்டது போலேன்றி, நீரினின்றும் தங்களைக் காக்க வேண்டி பரதவர்கள் வழிபாடு செய்தனர். கடல் கடவுளுக்கு வாரணன் என்ற பெயர் இருந்ததாக இலக்கியங்கள் கூறுகின்றன. அணன் என்ற சொல்லுக்கு உயர்ந்தவன் என்பது பொருளாகும். வார் என்பது கடலைக் குறித்தது.

வார்+அணன்=வாரணன். இச்சொல் பின்னர் வருணய என்று சமஸ்கிருதத்தில் திரிந்தது.

**கடல் - வாரணம் - வாரணன் - வருணன்**

வருண வழிபாட்டை பரதவர்கள் சினையுடைய சுறாமீனின் கொம்பினைப் பிடுங்கி நட்டு வழிபடுவர். இதனை,

> **“சினைச் சுறவின் கோடு நட்டு**
> **மனைச் சேர்த்திய வல் அணங்கினான்”**[41]

என்றதால் அறியலாம். வருணன் “கடற் தெய்வம்”[42] எனப் போற்றப்பட்டான்.

## மருத நிலக்கடவுள்:

மக்கள் நிலையான வாழ்க்கையைத் தொடங்கிய இடம், ஆற்றங்கரையிலிருந்த நீர்வளம் மிகுந்த பகுதிகளாகும். நகர் என்பது தொல் தமிழரால் ஆற்றுக்குச் சொல்லப்பட்டப் பெயராகும். நகரின் கரைகளில் அமைந்த ஊர்களும் நகர் எனப்பட்டன. நகரில் வளர்ச்சியுற்றதே நாகரிகம் ஆகும். நாகரிகத்தின் நாற்றங்கால்களாக மருதநிலம் கருதப்படுகின்றது. நிலையான குடியிருப்புகளும் வளமான வயல்களும், வேளாண் தொழிலுக்கு பல்வேறு நீர் சார்ந்த பயிர்கள் மருதநிலத்தில் செழித்திருந்தன. மாந்தனின் நாகரிக வாழ்வுக்கும் நீரே அடிப்படையாக அமைந்ததால் நீரையே கடவுளாக வழிபட்டனர். இப்பகுதியில் மருத மரங்கள் பெருமளவில் காணப்பட்டதால் மருத நிலம் எனப்பட்டது. மருது என்ற மரம் சூழ்ந்திருந்த நகரம் மருதை என அழைக்கப்பட்டதாகவும். பிற்காலத்தில் அது மதுரை எனப்பட்டதாகவும் ஒரு கருத்து உண்டு. மதுரை என்ற சொல்லைவிட மருதை என்ற சொல்லில் பொருளுண்டு எனலாம். தமிழ்நாட்டின் நடுவே மருதையாறு என்ற பெயரில் அழைக்கப்படும் ஆறு மருத நிலத்தின் பெருமையைக் கூறும்.

முல்லையிலும் நெய்தலிலும் நீரே தெய்வமாகக் கருதப்பட்டது போல் மருதத்திலும் நீரே தெய்வமாக எண்ணப்பட்டது. இந்திரன் என்ற சொல்லுக்கு நீர்த் தெய்வம் என்பதே பொருளாகும். நீரின்றி அமையாது உலகு எனத் தமிழர்கள் நன்கு அறிந்திருந்ததால், குறிஞ்சி தவிர்த்த அனைத்து நிலங்களுக்கும் நீரையே தெய்வமாக்கினர். இந்நீர் தோன்றும் இடங்கள் குறிஞ்சி நிலப்பகுதியாக இருந்தன. எனவே, குறிஞ்சியில் வாழ்ந்திருந்த கடவுளின் மறு உருவங்களாக மற்ற நிலக்கடவுளர் அறியப்பட்டனர். ‘‘இந்திரன் என்பான் மழைக் கடவுளே என்று இருக்கு வேதமும் கூறுகின்றது.’’[43] தளி என்பது மழை அல்லது நீரைக் குறித்த தமிழ்ச் சொல்லே.

**மழை - வேந்தன் - இந்திரன்**

'பிந்த்' என்ற சமஸ்கிருத வேர்ச் சொல்லே, 'இந்த்' என்ற சொல் விரிந்ததாகவும் கூறுவர். பிந்த் என்ற சமஸ்கிருத மூலச்சொல், விந்து என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே. விந்து என்பது நீர்த்தன்மையைக் குறித்த தமிழ்ச் சொல்லாகும்.

விண் துளியே மழையெனப்படும். விண்துளி விந்துளி-விந்து எனப்பட்டதாகக் கருதலாம்.

சிந்து என்ற தமிழ்ச் சொல்லே விந்து எனப்பட்டதாகவும் சிலர் கருதுகின்றனர்.விந்து, சிந்து ஆகிய இரண்டு சொற்களும் தமிழ்ச் சொற்களே என்பது தெளிவு.

மருத நில மக்கள் ‘‘இந்திரனுக்கு விழா’’[44] எடுத்து வழிபட்டனர். மேலும் சங்க இலக்கியங்களில் பல்வேறு இடங்களில் ‘‘இந்திர வழிபாடு’’[45] குறிப்பிடப்பட்டுள்ளது.

**கொற்றவை**

தமிழர் பெண் தெய்வத்தை வணங்கினர் என்பதற்கு கொற்றவையே சான்றாக இருக்கின்றாள். கொற்றவை என்ற சொல் ‘‘குறிஞ்சி நிலத்தோடு தொடர்புடையதாகும்.’’[46] கொல்லும் பாவையாக அறியப்படும் கொற்றவை, பிற்காலத்தில் சிவனுக்கு மனைவியாகச் சொல்லப்பட்டதும் பொருத்தமானதே. நான்கு நிலத்திற்கும் கடவுட் பெயர்களைக் கொண்டிருந்த தமழர் சமயம் தொடக்கத்தில் கொற்றவையை முதற்கடவுளாகச் சொல்லவில்லை. இருப்பினும் ‘‘கொற்றவை வழிபாடு மிகத்தொன்மையானது’’[47] எனக் கூறுவோறும் உளர்.

**‘‘கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே’’[48]**

கொற்றவை பாலை நிலத்தில் தலைவியாகப் பிற்காலத்தில் அறியப்பட்டாள். பெண் தெய்வ வழிபாடு தமிழர் வாழ்ந்த குடியேற்ற நாடுகளிலும் அறியப்பட்டுள்ளது. நிலைவைத் தலையில் சூடியவாறு காணப்படும் சிந்துவெளிப் பெண் தெய்வம்,

கொற்றவையை நினைவுபடுத்துவதே. இன்று ஆரிய மயமாக்கப்பட்ட இந்து சமயத்தில் சொல்லப்படும் பெண் தெய்வங்கள், கொற்றவையின் பல்வேறு நிலைகளைக் குறித்துச் சொல்லப்பட்டனவே.

**"ஓங்கு புகழ்க்**

**கான்அமர் செல்வி அருளலின்"**[49]

என பாலை நில மக்கள் வெற்றித் தெய்வமான கொற்றவையை வழிபடுதலை அறியலாம்.

## நடுகல் வழிபாடு

பண்டைத் தமிழ் மக்களிடம் வேரூன்றியிருந்த வழிபாடுகளில் மிகவும் குறிப்பிடத்தக்கது இறந்தார்க்கு நடப்பட்ட கற்களை வணங்கும் நெறியாகும். போரில் இறந்துபட்ட வீரர்களின் நினைவினைப் போற்றும் வண்ணம் அவர்களின் பெயரையும், பெற்ற வெற்றியையும் அவர்களின் பெருமைகளையும் பொறித்துக் கல்நட்டு வணங்கும் மரபு தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே இருந்துள்ளது. வெட்சித் திணையின் ஒரு கூறாக இதனை அவர் குறித்துள்ளார்.

சங்கச் செய்யுட்களில் காணப்படும் நடுகல் பற்றிய குறிப்புக்களில் பல வெட்சித் திணையின் தொடர்புடையனவாகவே உள்ளன. ஆநிரை மீட்டு அம்முயற்சியில் உயிர் துறந்த வீரர்களே பாராட்டப்பட்டுள்ளனர். ஆக்கள் நாட்டின் பொருளாதாரத்தில் பெற்றிருந்த சிறப்பிடத்தையே இது குறித்தது எனலாம். நாட்டின் பொருளாரதாரத்திற்கு பகைவரால் ஏற்பட்ட தீங்கிலிருந்து காப்பாற்றுவதற்கு உயிர்விட்ட வீரர்களைப் போற்றியது வியப்புக்குரிய செய்தியன்று.

நடுகற்கள் ஊருக்குப் புறத்தே தொலைவில் இருந்த திடல்களில் நடப்பட்டன. ஓங்கி வளர்ந்த வேங்கையின் மலர்களை வெள்ளிய பனந்தோட்டோடு விரவித் தொடுத்து மாலையாகச் சூட்டிக் கோவலர் ஒரு வீரனுக்குக் கல் நட்டதைப் புறநானூற்றுப் பாடலொன்று கூறுகின்றது.

**“ஊர்நனி யிறந்த பார்முதிர் பறந்தலை**

**ஓங்கு நிலை வேங்கை ஒற்றிணர் நறுவீர்**

**போந்தையந் தோட்டில் புனைந்தனர் தொடுத்துப்**

**பல்லான் கோவலர் படலைசூட்டக்**

**கல்லா யினையே கடுமான் தோன்றல்”**[50]

இக்கற்களில் வீரனுடைய பெயரும் பீடும் எழுதப்பட்டன. அணிமயிற் பீலியும் மலர் மாலைகளும் சூட்டப்பட்டன.

**“நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்**

**பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்**

**பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்”** [51]

நடுகற்கள் அமைந்த இடத்தைச் சுற்றி வேலைநட்டுக் கேடயங்களையும் நிறுத்தி வைத்தனர் என்பதனை,

**“கிடுகு நிரைத்து எஃகூன்றி**

**நடுகல்லின் அரண் போல”**[52]

என்ற குறிப்பாலும்,

**“பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்**

**வேலூன்று பலகை வேற்றுமுளை கடுக்கும்”**[53]

என்ற பகுதியாலும் அறியலாம். இக்கற்களுக்கு வேண்டிய மலரை மட்டுமன்றி செம்மையான கரந்தை மலர்களைச் சூட்டினர்.[54] இத்தகைய கற்கள் வரிசை வரிசையாகவும் மிகப்பலவாவும் சில இடங்களில் காணப்பட்டன.

**விழாக்கள்**

மக்கள் வேளாண் முறையினை கற்றுக் கொண்ட பிறகு கடவுளை வழிபட போதுமான நேரம் அவர்களுக்கு கிடைக்கவில்லை. ஆகையால் வருடத்தின் ஒரு சில குறிப்பிட்ட நாட்களில் தாங்களால் வணங்கப்படும் கடவுளர்க்கு பூசை மேற்கொள்ளத்

தொடங்கினர். அப்பூசை மேற்கொள்ளும் பொழுது தன்னைச் சார்ந்தோர்களையும் அழைத்து அவர்களுக்கு விருந்தளிக்கவும், பரிசுப் பொருட்கள் வழங்கவும் வழக்கமாகக் கொண்டனர். இதன் அடிப்படையில் பிறந்ததே விழாக்கள் ஆகும்.

சங்ககாலத் தமிழர்கள் கொண்டாடிய விழாக்கள் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் கிடைக்கின்றன. அவற்றுள் சில சமயத் தொடர்பானவை. வேறுசில சமூகத் தொடர்பானவை. நகரங்கள் சில 'விழவு மேம்பட்ட பழவிநல் மூதூர்' என்று பாராட்டப்படுள்ளன. விழாக்களில் ஆடலும் பாடலும் இடம் பெற்றன. பாணர் கூத்தர் முதலிய கலைஞர்கள் விழாக்களில் ஆடியும், பாடியும் மக்களை மகிழ்வித்தனர். ''சங்க காலச் சமயம் சகிப்புத்தண்மை மிக்கது. பல சமயத்தைச் சார்ந்தவர்கள் வேறுபாடு இல்லாமல் அன்பையே இறைவனாகக் கருதி வாழ்ந்தனர். எந்நிலத்தில் வாழ்ந்தவராயினும் அவர்கள் அன்பின் உண்மைத் தத்துவத்தை உணர்ந்தவர்களாக இருந்தனர். தாம் வாழும் நிலத்தின் தெய்வத்திற்கு கோயில் கட்டினர். விழா நடத்தினர், மாலைகள் சூட்டி மனதார வாழ்த்தினர்.''[55]

சங்ககாலத் தமிழர்கள் கொண்டாடிய சமய விழாக்களிள்குறிப்பிடத் தகுந்தது கார்த்திகைத் திருவிழாவாகும். கார்த்திகை விண்மீன் 'அனுமீன்' என்று நற்றிணைச் செய்யுள் ஒன்று குறிக்கின்றது. அஃது அறஞ் செய்யத்தக்க சிறப்புடையது. எனவே கார்த்திகை திங்களை 'அறஞ்செய் திங்கள்[56] என்றும் குறிப்பிடுகின்றது. வீடுகளும் தெருக்களும் ஒளிவிலக்குகளால் அழகுறுத்தப் பெற்றமையை அகநானூற்று பாடலொன்று குறிப்பிடுகின்றது.

**'' மலைகால் நீங்கிய மாகவிசும்பின்**
**குறுமுயல் மறுநிறம் கிரை மதிநிறைந்து**
**அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள்**
**பழவிறல் மூதூர்ப்பலருடன் துவன்றிய**
**விழவுடன் அயர''[57]**

இலவ மரத்தில் நெருக்கமாக மலர்ந்துள்ள பூக்கள் பெருவிழாவில் ஏற்றப்பட்ட விளக்குப் போல் தோன்றியதாக இன்னொரு செய்யுள் பேசுகின்றது.

**“அருவி யான்ற உயர்சிமை மருங்கில்**

**பெருவிழா விளக்கம் போலப் பலவுடன்**

**இலையில மலர்ந்த இலவமொடு**

**நிலையுயர் பிறங்கல் மலையிறந் தோரே”** [58]

**திருவோணம்:**

திருமாலோடு தொடர்புடைய விண்மீன் திருவோணமாகும். இந்நாளில் கொண்டாடிய விழா ஓணவிழாவாகும். இதனை,

**“ கணங்கொள் அவுணர்க் கடந்த பொலந்தார்**

**மாயோன் மேய ஓண நன்னாள்”**[59]

என்று மதுரைக்காஞ்சி பாராட்டுகின்றது.

இந்த நாளில் வீரர்கள் நீலக்கச்சையணிந்து விருந்துண்டு களித்தனர். இவ்விழா ஆவணித் திங்களில் கொண்டாப்பட்டது. கி.பி.7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆழ்வார்கள் இது பற்றிக் குறிப்பிடுகின்றனர். கி.பி ஒன்பதாம் நூற்றாண்டில் ஆண்ட தாணுரவியின் கல்வெட்டில் இது பற்றிய குறிப்புகளைக் காணலாம். கி.பி.12 ஆம் நூற்றாண்டில் சைவம் புத்துயிர் பெற்றபோது ஆதிரை நாள் சிறப்பிடம் பெறுவதாயிற்று.

**பொங்கல்:**

இது தைத்திங்களில் கொண்டாடும் விழாவாகும். முதற்கண் அறுவடை விழாவாகத் தொடங்கிப் பின்னர் வானத்தைக் குறித்த விழவாக மாறியது. ஆனால் பொங்கல் விழாவினைப் பற்றிய விவரம் சங்க இலக்கியங்களில் கிடைக்கவில்லை. தைத்திங்களில் நோன்பு நோற்பதுண்டு என்று அறிகின்றோம். தைத்திங்களில் நோன்பு இயற்றுவார் அமர்ந்திருப்பதுபோல் குரங்குகள் மழையில் நனைந்து அமர்ந்திருப்பதாக நற்றிணைச் செய்யுள் குறிப்பிடுகிறது. இதனை,

**“வான் பெயல் நனைந்த புறத்த நோன்பியர்**

**தையூண் இருக்கையில் தோன்றும் நாடன்”**[60]

என்ற வரிகளால் அறியலாம்.

**தைநீராட்டு:**

தைத்திங்களில் மகளிர் ஆறு குளங்களில் நீராடுவது சில செய்யுட்களில் குறிக்கப்படுகின்றது. பின்னாளில் இதனையே மார்கழி நீராட்டு என்றனர்.

> **"தையில் நீராடிய தவந்தலைப் படுவாளோ"[61]**

மகளிர் கூட்டமாக நீராடுவர் என்பதினை

> **"நறுவீ ஐம்பால் மகளிர் ஆடும்**
> **தைஇத் தண்கயம் போலப்**
> **பலர்படிந் துண்ணும் நின் பரத்தை மார்பே"[62]**

என்னும் குறிப்புக்களால் அறியலாம்.

தமக்கு வாய்க்கும் கணவன்மார் நற்பண்புடையவராதல் வேண்டும் என வேண்டிப் பெண்கள் எடுத்த நோன்பு பிற்காலத்தில் சமயத் தொடர்பு பெற்றதை ஆண்டாள், மாணிக்கவாசகர் பாடல்களால் அறிகின்றோம். அம்பாவாடல் என்று பரிபாடல் இதனைக் குறிப்பிடும்.

**இளவேனில் விழா**

இளவேனில் காலம் காமவேளுக்குரியதாகக் கொள்ளப்படும். வில்லவன் விழாவென்பது காமனை வேண்டிச் செய்யும் விழாவாகும். தலைவி ஊரில் காமவேல்விழா நடப்பதைக் கண்டாள் கலங்குவாள். இதனைக் கலித்தொகைத் தோழி குறிப்பிடுகின்றாள்.

> **"காமவேல் விழாவில் கலங்குவள் பெரிதென**
> **ஏமுற கடுத்திண் டேர் கடவி**
> **நாம் அமர் காதலர் துணைதந்தார் விரைந்தே"[63]**

காமவேள் விழாவின் போது காதலர்கள் களித்து விளையாடுவர்.

**“மல்கிய துருத்தியுள் மகிழ்துணைப் புணர்ந்தவர்**

**வில்லவன் விழவினுள் விளையாடும் பொழுதன்றோ”[64]**

காமவேள் விழாவின் போது கணவனைப் பிரிந்த மகளிர் வருந்துவர். சில ஆடவர்கள் பரத்தையருடன் கூடியாடுவர்.

**“உறலியாம் ஒளிவாட உயர்ந்தவன் விழவினுள்**

**விறலிழை யவரோடு விளையாடுவேன் மன்றே”[65]**

காமன் காதற்கடவுளாகப் போற்றப்படுதலை பரிபாடலில்[66] காணலாம்.

## இந்திரவிழா

இந்திரனைப் பற்றிய சில குறிப்புகளே சங்கச் செய்யுட்களில் கிடைக்கின்றன. வச்சிரத்தடக்கை நெடியோன் கோயிலுள் முரசும் முழங்குதலைப் புறநானூறு குறிப்பிடுகின்றது.[67] இந்திராவிற்பூவில் அன்ன என்று உவமையாகப் பயன்படும் அளவுக்கு இந்திரவிழா சிறப்புற்றிருந்தது.[68]

## நீர் விழா:

பரிபாடலின் வழியே வைகையில் வெள்ளம் வந்தபோது மக்கள் நீராடி மகிழ்ந்ததை அறிகின்றோம்.[69] மலர்களும் பொன் மீன்களும் கொண்டு வைகையாற்றுக்கு நீராடச் சென்றனர் மக்கள். முற்காலத்தில் மன்னர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டனர் என்பதற்கு அகநானூறுற்றுப் பாடல்கள் சான்றாக அமைகின்றன.[70] சிலப்பதிகாரத்து ஆற்றுவரிப் பாடல்கள் வெள்ளத்தைக் கண்டு மக்கள் மகிழ்ந்து கொண்டாடியதைத் தெரிவிக்கும்.

## திருப்பரங்குன்றத்து விழா:

முருகப் பெருமான் வள்ளியை மணந்து கொண்டதை மனை விழாவாகக் கொண்டாடினர்.[71] பாண்டிய மன்னன் தன் பரிவாரத்தோடு இவ்விழாவில் கலந்து கொண்டான்.

**திருப்பதியில் விழா:**

நெடியோன் குன்றாகிய திருவேங்கடம் ‘‘விழவுடை விழுச்சீர் வேங்கட’’ மெனப்பாராட்டப்பட்டது.[72] திருமாலின் நின்ற கோலம் இப்பகுதியின் சிறப்பு.

**உள்ளி விழா:**

கொங்கர்கள் உள்ளி விழாக் கொண்டாடினர். இடுப்பைச் சுற்றிலும் மணியைக் கட்டிக் கொண்டு தெருவில் ஆடுவர்.

**‘‘அம்பணை விளைந்த தேக்கப் பேறல்**
**வண்டுபடு கண்ணியர் மகிழும் சீறூர்**
**வென்கொல் வாழிதோழி கொங்கர்**
**மணியரை யாத்மு மறுகின் ஆடும்**
**உள்ளி விழவின் அன்ன**
**அலரா கின்றது பலர் வாய்ப் பட்டே’’**[73]

**பங்குனி விழா:**

உறையூரில் பங்குனி விழா நடந்தது என்பதை அகநானூறுப்பாடல் ஒன்று விளக்குகின்றது.

**‘‘வென்றெறி முரசின் விநற்போர்ச் சோழர்**
**இன்கடும் கள்ளின் உறையூ ராங்கண்**
**வருபுனல் நெரிதரும் இடுகரைப் போரியாற்று**
**உருவ வெண்மணல் முருகுநாறு தண்பொழில்**
**பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள்’’**[74]

**பூற்கொடை விழா:**

இது வீரர்களின் கலைப்பயிற்சித் தொடக்க விழாவாகும். மலைகளால் இடத்தை அழகுறுத்துவர், வீரனையும் அழகுறுத்துவர், வில்லில் நாணேற்றி அம்பினைக் குறிப்பார்த்து செய்யும் விழா இதுவெனகருதலாம்.

**“வார்கழல் பொலிந்த வன்கண் மழவர்**

**பூந்தொடை விழவின் தலைநாள் அன்ன**

**திருமணல் நெமிரிய திருநகர் முற்றம்”[75]**

**கோடியர் விழா:**

ஆடும் கலைஞர்கள் கோடியர் எனப்பட்டனர். விறலியர் மயில் போல அசைந்தாடும் தோறும் கூத்தர்கள் முழவினை முழக்கிக் கொண்டு பின்னே செல்வர். இதனை **“கோடியர் மூதூர் விறலிபின்றை முழவன் போல்”[76]** என்னும் உவமை விளக்குகின்றது.

**வெறியாட்டு விழா:**

பண்டை நாளில் பெருவழக்கமாக இருந்தது வெறியாட்டு விழாவாகும். முருகனுக்காக எடுக்கப்பட்ட இவ்விழாவில் வேலன் கையில் வேலேந்தி ஆடுவான். இன்னிசைக் கருவிகள் முழக்கப்படும், தினையரிசிரியையும் மலர்களையும் தூவுவர், ஆட்டுக்கடாயை அறுத்துக் குருதியைச் சிந்துவர். இவ்விழாவைப் பற்றிய முழுவிவரமும் திருமுருகாற்றுப்படையில் இடம்பெறுகின்றது. ஊர்தோறும் இவ்விழாவினைக் கொண்டாடினர் என்பதை,

**“சிறு தினை மலரொடு விரை மறியறுத்து**

**வாரணக் கொடியொடு வயிற்பட நிறீ இ**

**ஊரூா கொண்ட சீர்கெழு விழவினும்”[77]**

என்னும் திருமுருகாற்றுப்படைப் பகுதியில் அறியலாம்.

காஞ்சிபுரம் சமய விழாக்கள் பெருகிய நகரமாக விளங்கிற்று. சமயப்பிரிவினர் பலரும் தத்தம் சமயக்கடவுளை வணங்க விழாவெடுத்தனர் என்பதனைப்

**“சாறு அயர்ந்தெடுத்த உருவப் பல்பொடி”[78]**

வெறியாட்டின்போதும் பிற விழாக்களின் போதும் இன்னிசைக் கருவிகள் முழங்க ஆடலும், பாடலும் நிகழ்வது வழக்கமாக இருந்தது.

**“வெறியாடு மகளிரொடு செறியத் தா அய்க்**

**குழலகவ யாழ்முரல**

**முழவதிர முரசியம்ப**

**விழவயரு வியலாவணத்து”**[79]

என்பது சான்று.

# தொகுப்புரை

1. மனிதன் தோன்றிய காலந்தொட்டு தன்னையும் மீறிய ஆற்றல் உண்டென நம்பியதன் காரணமே சமயம் தோன்றியது.
2. அவ் ஆற்றலை தன் பக்கம் ஈர்க்க முற்படும் பொழுது வழிபாட்டு முறைகள் தோன்றியது.
3. தங்களுக்குப் பயன்பட்ட விலங்குகள் கடவுளுக்கும் பயன்படும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் விலங்குகளும் கடவுளுக்கு அருகிலேயே வைக்கப்பட்டன.
4. அச்சம் தரும் விலங்குகளும் கடவுளுக்கு கட்டுப்பட்டு தனக்கு ஊறு விளைவிக்காது என்ற எண்ணத்தில் அவைகளும் வழிபாட்டுக்குரியனவயாயின.
5. வேளாண்மைத் தொழிக்கும், கால்நடை வளர்ப்புக்கும் மழைா அவசியமானதால் குறிஞ்சி, பாலை தவிர்த்த நிலங்களில் மழைக் கடவுளரே வழிபாட்டுக்குரிய வராயினர்.
6. இவ்வுலகமானது நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் என்ற ஐந்து அணுக்கால் ஆனவை என்பதே அனைத்து சமயங்களின் நம்பிக்கையாகும்.
7. மனிதன் முதலில் தோன்றிய இடத்தில்தான் முதல் சமயமும் தோற்றம் பெற்றது.
8. அவ்வகையில் குமரிக் கண்டத்தில் முதல் சமயம் உருவெடுத்தது.
9. நால்வகைத் நிலக்கடவுளரை விவரிக்கும் தொல்காப்பியத்தில் ‘தெய்வம்’ என்ற சொல் அநேக இடங்களில் சுட்டப்படுகின்றது.
10. குறிஞ்சி நிலத்தில் முதலில் கதிரவனே வழிபடப்பட்டிருக்கிறான். கதிரவன் வழி வந்தவனே சேயோன் ஆவான்.
11. முருகன் அச்சத்தை நீக்கும் கடவுளாக வழிபடப்பட்டிருக்கிறான்.

12. முல்லை நில மக்கள் குறிஞ்சிலிருந்து பெயர்ந்தவராதலால் தங்களது முதற்கடவுளோடு மாலையும் வழிபட்டனர்.
13. மெய்-மை-மால்-மாலை-மாயோன் என முல்லை நில மக்கள் மழை நீரை வேண்டி மாயோனை வழிபட்டனர்.
14. நீரிலிருந்து தங்களைக் காக்க வேண்டி நெய்தல் நில மக்கள் வருண வழிபாட்டை மேற்கொண்டனர்.
15. இந்திர வழிபாடும், இந்திர விழாக்களும் மருத நிலத்தின்கண் நடைபெற்றது.
16. கொற்றவை பாலை நிலத்தின் தெய்வமாக அறியப்பட்டனாள். இருப்பினும் அவள் குறிஞ்சி நிலத் தொடர்பு கொண்டவளே.
17. கடவுளையன்றி நடுகல் வழிபாடும் சங்ககாலச் சமூகத்தில் தோற்றம் பெற்றிருந்தது.
18. தாங்கள் போற்றும் கடவுளர்க்கு விழாக்கள் எடுக்கும் வழக்கமும் சங்ககாலச் சமூக மக்களிடத்து காணப்பட்டது.

# இயல்-2

## சான்றெண் விளக்கங்கள்

| | |
|---|---|
| 1. | புறம்.192 |
| 2. | தேவிபிரசாத் சட்டோபாத்தியாயா, மதமும் சமூகமும்,ப-41 |
| 3. | மேலது. ப-38 |
| 4. | பா.இறையரசன், தமிழ்நாட்டு வரலாறு, ப-20 |
| 5. | க.அப்பத்துரை, 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம், ப-31 |
| 6. | சி.இலக்குவனார், இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல், ப-62 |
| 7. | தொல்.பொருள்.20 |
| 8. | தொல் பொருள்.268 |
| 9. | தொல் சொல்.57:2 |
| 10. | தொல்,சொல்:57:1 |
| 11. | தொல்,பொருள்.200:1 |
| 12. | தொல், பொருள்.77 |
| 13. | தொல்.பொருள்.50 |
| 14. | தொல்.பொருள்.5 |
| 15. | ஆ.ஜெகதீசன், சங்க இலக்கிய மதிப்பீடுகள், ப.57 |
| 16. | பரி.2:8 |
| 17. | அகம்.228:8-9 |
| 18. | பரி.5:11-2 |
| 19. | மேலது. 9:13-14 |
| 20. | மேலது. 5:60-61 |
| 21. | மேலது. 5:1-3 |

| | |
|---|---|
| 22. | தொல்.பொருள்.252 |
| 23. | நற்.359:7-9 |
| 24. | மேலது. 268:4 |
| 25. | மேலது. 34:4 |
| 26. | அகம். 198:7 |
| 27. | பதிற்.11:5 |
| 28. | அகம்.59:10-11 |
| 29. | பதிற்.67:19-21 |
| 30. | குறிஞ்சி.169 |
| 31. | மலைபடு.239 |
| 32. | அகம்.91:4 |
| 33. | மேலது. 158:7-8 |
| 34. | மேலது.303:5-6 |
| 35. | பரி.19:23 |
| 36. | ஐங்.207:4 |
| 37. | புறம்.56:5 |
| 38. | ந.சி.கந்தையா வரலாற்றுக்காலத்திற்கு முற்பட்ட பழந்தமிழர். ப-57 |
| 39. | கலி.103,104, 105, 106, 107 |
| 40. | அகம்.175, புறம்.56,58, பெரும்பாண். 30, பரி.1 |
| 41. | பட்டிணப்.86-87 |
| 42. | கலி.131:1 |
| 43. | தேவிபிரசாத் சட்டோபாத்தியாயா, மதமும் சமூகமும்,ப-41 |

| | |
|---|---|
| 44. | ஐங்.62:1, பதிற்.30:20 |
| 45. | புறம்.241, 182, ஐங்.62, பதிற்.30, பரி.5:69, 9, 19:50-53 |
| 46. | பதிற்.79:18 |
| 47. | தொல்.பொருள்.62:2 |
| 48. | அகம்.345:3-4 |
| 49. | புறம்.265:1-5 |
| 50. | க.சுப்பிரமணியன், சங்க காலச் சமுதாயம், ப-27 |
| 51. | அகம்.67 |
| 52. | பட்டிணப்.78-79 |
| 53. | அகம்.131 |
| 54. | மேலது 269 |
| 55. | நற்.202 |
| 56. | அகம்.141 |
| 57. | மேலது 185 |
| 58. | எ.சுவாமிநாதன், தமிழ்நாட்டு சமுதாய பண்பாட்டு வரலாறு, ப-55 |
| 59. | மதுரைக்.590-591 |
| 60. | நற்.22 |
| 61. | கலி.13 |
| 62. | ஐங்.84 |
| 63. | கலி.27 |
| 64. | மேலது 35 |
| 65. | கலி.30 |
| 66. | பரி.18-28 |

| | |
|---|---|
| 67. | புறம்.141 |
| 68. | ஐங்.62 |
| 69. | பரி.16:11-15 |
| 70. | அகம்.227. 376 |
| 71. | பரி.19 |
| 72. | அகம்.61 |
| 73. | மேலது. 368 |
| 74. | மேலது. 137 |
| 75. | மேலது. 187 |
| 76. | மேலது.352 |
| 77. | திருமுருகு.218-220 |
| 78. | மதுரை.366 |
| 79. | பட்டினம்.158 |

# இயல்-3

## சமூகப் பண்புகளும் மதிப்புகளும்

மனிதனை விலங்கினத்திலிருந்து பிரித்து அவனைத் தனிமைப் படுத்தியதும், சமூகத் தகுதியைப் பெற்றுத் தந்ததும், கூடிவாழும் கூட்டுறவு ஏற்படுத்தியதும், இன்று மனிதன் உயர்ந்து நிற்பதற்கும், 'மனித சமூகம்' என்ற உயர்ந்த நிலையை அடைவதற்கும் முதன்மை காரணம் அவனிடம் அமைந்துள்ள அல்லது அமைத்துக்கொண்ட பண்பாடே ஆகும்.

சமூகத்தில் மக்களின் பழக்க வழக்கங்களே அவர்களின் பண்புகளாக வெளிப்படுகின்றன. சங்ககாலச் சமூகத்தில் அகத்திலும் புறத்திலும் மக்கள் பல்வேறுபட்ட பண்புகளைக் கொண்டொழுகினர். பொதுவாக பண்பு என்பது ஒருவரின் மனம் சார்ந்து வெளிப்படும் நடத்தையாகிறது. சங்ககாலப் பண்புகளை அகம் சார்ந்தவை. புறம் சார்ந்தவை என்று வகைப்படுத்தலாம் எனினும் மனம் சார்ந்த பண்புகள் அகத்திலும். புறத்திலும் வெளிப்படும் பாங்கினை ஆய்ந்தறிய இவ்வியல் முற்படுகின்றது.

**பண்பாடு**

ஒவ்வொரு மனிதனுடைய செயல்களையும் இரண்டாக நாம் பிரிக்கலாம். ஒன்று பாரம்பரியம் வாயிலாகப் பெற்றது மற்றொன்று சமூகத்தின் வாயிலாகவும், கல்வி வாயிலாகவும் பெற்றது. தனி மனிதனின் மிகச் சிறந்த செயல்களையே பண்பு என்கிறோம். "தன்னுடைய தேவையினை நிறைவு செய்து கொள்ள மனிதன் உருவாக்கிக் கொண்ட கருவிதான் பண்பாடு".[1] அவனிடத்து காணப்பட்ட நற்குணங்களை சமூகம் பின்பற்றி நடத்தலே பண்பாடாக மாற்றம் பெறுகிறது. "இப்பண்பாட்டினை கண்களால் காணக் கூடியதன்று"[2] அது உள்ளத்தால் உணரக் கூடியது. "பண்பாடு என்ற சொல்லுக்கு ஆங்கிலத்தில் Culture என்ற சொல் பயன்படுத்தப் பெறுகின்றது. அதற்குTiliage, Important by training, Inttellectual development, Cultivate என்பன பெருளாகக் காட்டப்பட்டுள்ளன."[3]

“பண்பாடு என்பது ஒரு சந்ததியார் முந்திய சந்ததியாரிடமிருந்து பெற்ற நடத்தையாகும். சமூகம் வாயிலாகக் கற்றுக் கொள்வது விலங்கினத்திடமும் காணப்படும். ஆனால் அவை பேச முடியாதிருப்பதால் அவை கற்றுக் கொள்வதும் மிகச் சிறிய அளவாகும். மனிதனிடந்தான் அத்தகைய பண்பாட்டுப் பேறு பேரளவில் ஏற்படுகிறது”[4] என்று கலைக்களஞ்சியம் கூறுகிறது.

“பெரும்பாலும் சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உள்ளப்பாங்கின் வெளிப்பாட்டையே பண்பாடு என்கிறோம்”[5]

அன்று முதல் இன்று வரை பண்பாடு என்பது இன்ன தன்மைத்து என்று காண இயலாவிடினும் பண்பாடு உள்ளமையால்தான் இந்த உலகம் நிலைத்து நிற்கிறது என்பதை உணரமுடிகிறது. தனிமனிதன் சமூகத்துடன் ஒட்டியிருப்பதும் சமூகம் தனிமனிதனுக்கு உணர்த்துவதும் பண்பாட்டின் அடிப்படையிலேயாகும். இத்தகைய பண்பாடு இல்லையெனில் இவ்வுலகமில்லை.

**பண்புகளும் மதிப்புகளும்**

மனிதச் சமூகத்தின் வளர்ச்சிக்கு அவனிடம் காணப்பட்ட பண்பே முக்கிய காரணமாகத் திகழ்ந்தது. விலங்குகளில் உயர்ந்த விலங்கு மனிதனேயாவான். இயற்கையின் படைப்பில் மிக உன்னதப் படைப்பாக விளங்குபவன் மனிதன். தனக்கே உரிய சிறப்புப் பண்புகளால் மனிதன் பிற விலங்குளிடமிருந்து வேறுபடுகிறான். அவனுடைய மனமே அவ்வேறுபாடு உருவாகக் காரணமாய் அமைகின்றது. “சமுதாய விலங்காகிய மனிதன் பிற மனிதர்களோடு கலந்து வாழும் போது தன்னலத்தை ஓரளவு புறக்கணித்து பொது நலத்தைப் பேண வேண்டியவனாகிறான்”[6] இதற்கு அவனிடம் சில பண்புகள் தேவைப்படுகின்றன, அப்பண்புகளே அன்பு, அருள், ஈகை, நன்றிமறவாமை, புறங்கூறாமை முதலிய பண்புகளாகும். இப்பண்புகள் அனைத்தும் பிறரோடு கொள்ளும் உறவிற்கு அடிப்படையாய் அமைகின்றது. இவ்வுறவு தன்னைச் சார்ந்த சமூக எல்லைகளோடு நில்லாமல், பிற சமூகத்தோடு தொடர்பு ஏற்படுத்தி அது உலக

உறவாக வளர்கின்றது. இதுவே மனித குலத்தின் சிறப்புப் பண்பாகும். மேற்குறித்த பண்புகள் மனித இனத்தோடு மட்டும் நில்லாமல் பிற உயிரினங்கள் அனைத்தையும் தழுவி நிற்கின்றன. இதுவே மிக உயர்ந்த மானிடப் பண்பாகும், இப்பண்பு அனைத்தும் அகத்தே தோன்றக் கூடிய அகப்பண்புகளாகும்.

மனிதனுடைய அறிவும், அனுபவமும் மேற்சொன்ன அகப் பண்புகளால் வளர்ச்சியுற்று சில புறப்பண்புகளாகவும் வெளிப்படுகின்றன. கல்வி, விருந்தோம்பல், வீரம், கற்புநெறி, பொய்யுரையாமை போன்ற புறப்பண்புகளால் அவனுக்கு சமூகத்தில் பிறர் மதிக்கத் தகுந்த மதிப்புகளாகத் தோற்றம் பெறுகின்றன.

**சங்க இலக்கியங்களில் பண்பு- எனும் சொல்**

'பண்பு' எனும் சொல் சங்க இலக்கியங்களில் பல்வேறு இடங்களில் கையாளப்படுறது. தொல்காப்பியமும் இதனை,

**"இசையினும் குறிப்பினும் பண்பினுந் தோன்றி"**[7]

என்று குறிப்பிடுகின்றது. இப் 'பண்பு' என்னும் சொல்லிற்கு சேனாவரையார் "பொறியாற் உணரப்படும் படுங்குணம்" என பொருள் அமைக்கிறார். புறம் சார்ந்த கருத்துக்களை கூறும் புறநானூறும்,

**"பாடறிந்து ஒழுகும் பண்பினாரே"**[8]

எனக் கூறுகின்றது. சிறிய ஊரையுடைய வேந்தனாயினும் எம்மிடம் முறையை அறிந்து நடக்கும் குணத்தினன் என்ற பொருள்பட இப்பாடலடி அமைகின்றது. எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான கலித்தொகை,

**"பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்"**[9]

எனக் கூறுகிறது. பண்பு என்பது முன்னோர்கள் தமக்கும் பிறர்க்கும் நன்மை பயக்கும் வகையில் கொண்டொழுகிய நடத்தைகளேயே நாமும் பின்பற்றி ஒழுகவேண்டும் என்று பொருள்படவே கலித்தொகையின் பாடலின் அடி புலப்படுத்துகிறது.

**இரக்கம்**

தமிழர்களின் உன்னதப் பண்புகளுள் இரக்க குணமும் ஒன்றாகும். உயர்திணைப் பொருள்களிடத்து மட்டுமல்லாமல் அஃறிணைப் பொருள்களின் மீதும் இரக்கம் காட்டியவர்கள் பழந்தமிழர்கள். இரக்கம் என்னும் இவ்வருங்குணத்தை 'அருள்' என சங்கப்பாக்கள் அநேக இடங்களில் சுட்டுகின்றன.

**"அருளும் அன்பும் நீக்கி நீங்கா**
**நிரயம் கொள்பவரொடு ஒன்றாது"[10]**

என புறநானூற்றுப் பாடல் அருள் எனப்படுவது இரக்கம் எனும் குணத்தையே பறை சாற்றுகின்றது.

புறப்பாக்கள் மட்டுமல்லாது அக இலக்கியங்களும்,

**"அருளிலாளர் பொருள் வயின் அகல"[11]**

இரக்கம் இல்லாதவனிடத்து உள்ள பொருள் அகலவேண்டும் என்னும் பொருள்பட உரைக்கின்றது. தலைவன், தலைவியின் மீது இரக்கம் கொள்ளாமல் பிரிந்தவனே இகழும் எனத் தலைவனை பலபாடல்கள் பெருமளவு சங்க இலக்கிய அகத்திணைகளில் காட்டப்படுகின்றன. இதனை,

**"அருளும் அன்பும் நீக்கி துணைதுறந்து**
**பொருள்வயிற் பிரிவோர் உரவோர் ஆயின்"[12]**

என்ற குறுந்தொகைப் பாடலடிகள் மூலம் அறியலாம்.

**சிபி**

உயர்திணைப் பொருள்களிடத்து மட்டுமல்லாமல் அக்காலத்தமிழர் அஃறிணைப் பொருள்களிடத்தும் அருளோடு இருந்தனர் இதனை,

**"புள்உறு புன்கண் தீர்த்த வெள்வேல்"[13]**

என்ற புறநானூற்றுப் பாடலடிகள் உணர்த்துகின்றன. கழுகிடமிருந்து புறா ஒன்று தப்பி சிபி எனும் மன்னனிடம் அடைக்கலம் புகுந்தது. அதனைத் தொடர்ந்த கழுகு அப்புறாவை வேண்ட அதன் எடைக்குத் தக்கத் தசையை அரிந்து தர

முயன்றான்.இறுதியில் புறாவின் எடையுடன் நேர் நில்லாததால் தானே துலைத்தட்டில் ஏறினான். பிற உயிர்களிடத்தும் இத்தகைய அருளுள்ளம் உடையவன் சிபி மன்னன்.

**பேகன்**

பெருஞ்சித்தரனார் எனும் புலவர் பேகனை "மழை கண்ட இடத்துப் பெய்தல் போலப் பேகன் தன்னை நாடி வந்த அனைவருக்கும் இரக்கவுணர்வால் உதவி செய்வான். ஆயின் அவனுக்குக் கொடையில் உள்ள இவ்வறியாமை போரில் இல்லை அவன் போரில் தெளிந்த அறிவுடன் பணிபுரிவான்" என்று கூறி அவனது இரக்கவுணர்வையும், கொடைத்தன்மையையும் பாராட்டுவார்.

மழை வளமுடைய மலையின் பக்கதிலே கான மயிலொன்று கலாபத்தை விரித்து ஆடிக் கொண்டிருந்தது. அதைக் கண்டவுடன் குளிர் தாங்காமல் நடுங்குகின்றது என்று எண்ணினான். உடனே தன்போர்வையை அதன் மீது போர்த்தினான். இவ்வாறு மயிலுக்கு அருள்புரிந்தவன் பேகன் என்பதை,

> **"வானம் வாய்த்த வளமலைக் கவாஅன்**
> **கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய**
> **அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்**
> **பெருங்கல் நாடன் பேகனும்"**[14]

என்று சிறுபாணாற்றுப் பாடலடிகளும்.

> **"மடத்தகை மாமயில் பனிக்கும் என்று அருளி"**[15]

என புறநானூற்றுப் பாடலடிகளும் குறிப்பிடுகின்றன.

**பாரி**

பறம்பு மலையை ஆண்ட குறுநில மன்னன் பாரி. வண்டுகள் உண்ணும்படி நல்ல மலர்களின் மூலம் தேனைச் சிந்திக் கொண்டிருக்கும் சுரப்புன்னை மரங்கள் நிறைந்த நெடுவழியிலே சிறிய மலர்களையுடைய

முல்லைக் கொடியொன்று பற்றிப் படரக் கொம்பின்றித் தவித்துக் கொண்டிருந்தது.அதைக் கண்டவுடன் தான் ஏறிவந்த பெரிய தேரினை அம்முல்லைக் கொடி படரும் படி அதன் அருகிலே நிறுத்தி வைத்தான் என்பதை,

**சுரும்புண நறுவீ உறைக்கும் நாக நெடுவழிச்**

**சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய**

**பிறங்கு வெள்அருவி வீழும் சாரல்**

**மறம்பின் கோமான் பாரியும்''**[16]

என்ற அடிகள் முல்லைக்கொடி மீது பாரி கொண்ட இரக்க உணர்வை வெளிப்படுத்துகின்றன.

**ஈகைப் பண்பு**

பொருளாதார வளர்ச்சியில் பல வேறுபாடுகள் மனிதர்களுள் இருப்பினும் அடிப்படையில் மனித இனம் ஒன்றேயாகும். அனைவர்க்கும் பசியுணர்வும், இன்ப, துன்ப உணர்வுகளும் ஒன்றேயாகும். நாட்டினை ஆளக்கூடிய அரசனாயினும், இரவு பகல் பாராமல் காட்டில் திரியும் வேடனாயினும் உயிர் வாழ்விற்குத் தேவை, ''நாழியுணவும், இரண்டு ஆடைகளுமே தவிர வேறு இல்லை. ஆகவே செல்வம் பெற்றதன் பயனே பிறர்க்கு ஈதலில்தான் உள்ளது.''[17] ஆகையால்தான் வள்ளுவரும்,

**''ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**

**ஊதியம் இல்லை உயிர்க்கு''**[18]

என்று ஈதல்பற்றி குறிப்பிடுகிறார். பொருள் இல்லாதோர்க்கு ஈதலே ஈகை என அவர் கூறுகின்றார். இதனை,

**''வறியவர்க் கொன்று ஈவதே ஈகை''**[19]

எனக் குறிப்பிடுகின்றார். வறுமையால் துன்பம் உடையோர்க்கு பொருள் தந்து உதவும் ஈகைப் பண்பு சிறந்த பண்பாகும். அது போற்றதலுக்குரிய உயர்ந்த பண்பாகும். ஆகையால் தான் ''கொள்ளெக் கொடுத்தல் உயர்ந்தது''[20] என்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்தனர். இத்தகைய ஈகைப் பண்பு சிறுபான்மையாக

அகப்பாடல்களிலும் பெரும்பான்மையாக புறப்பாடல்களிலும் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றிருக்கிறது.

**“வாழி ஆதன் வாழி அவினி**

**நெல் பல பொலிக பொன் பெரிது சிறக்க”[21]**

எனத் தோழி ஒருத்தி, நாட்டில் விருந்தினர்க்கு விருந்தளிக்க நெல்வளம் நன்கு சிறக்க வேண்டும் எனவும், இரவலர்க்கு கொடுக்க பொன் வளம் பெருக வேண்டும் எனவும் வேண்டினாள்.

இத்தகு சிறப்பு வாய்ந்த ஈகை மறுமையிலும் இன்புறச் செய்யும் என்பதை,

**“இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்**

**அசையுடன் இருந்தோர்க்கு அரும் புணர்வுஈம்”[22]**

என்ற பாடலடிகள் இம்மைக்குரிய புகழும், இம்மை மறுமைக்குரிய இன்பமும், மறுமையிலும் இன்புறச் செய்யும் ஈகையும் இம்மூன்றும் அரிதாகவும் கைகூடுவதில்லை என உணர்த்துகின்றன.

அறத்தின் தலையாய செயல் ஈதலேயாகும் இவை வறியவர்களிடத்து காணப்படுவதில்லை. ஆகையால் பொருள் ஈட்டி பிறர்க்கு ஈதல் வேண்டுமென தலைவன் ஒருவன்,

**“ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்எனச்**

**செய்வினை கைம்மிக எண்ணுதி அவ்வினைக்கு”[23]**

எனத் தன் நெஞ்சிற்கு ஈகையின் பயனை உரைக்கின்றான். மேலும் “அரிதாய அறன் எய்தி அருளியோர்க்கு அளித்தலும்”[24] “நாட்டோர் ஆக்கம் வேண்டியும் ஒட்டிய”[25] திறமும் சங்க காலச் சமூகத்தில் கடமையாகப் போற்றப்பட்டது.

ஈகையின்பால் அளிக்கக் கூடிய செல்வமானது பெருகுமே தவிர குறைவில்லாதது என்பதனை,

**“ஈதலில் குறை காட்டாது அறன் அறிந்து ஒழுகிய**

**தீதிலான் செல்வம் போல்” [26]**

என்ற கலித்தொகை பாடலடிகள் உணர்த்துகின்றன.

தன்பால் இரப்பவர்க்கு மட்டும் ஈயாமல் தம்மை நாடி வந்தவர் நிலையறிந்து ஈயும் பண்பும் சங்க மக்களிடையே இருந்துள்ளது. பரிபாடல் இதனை,

**“இல்லது நோக்கி இனிவரவு கூறாமுன்**

**நல்லது வெஃகி வினை செய்வார்”[27]**

என்று குறிப்பிடுகின்றது. நற்குடியைச் சார்ந்த பெண்டிர், தம்மை நாடி வந்தோருடைய வறுமையை உணர்ந்து அவர்களுக்கு நன்மை செய்தனர். அவர்களுக்கு வேண்டுவன கொடுக்கும் கொடைப் பண்பை உடையவர்களாக அவர்கள் விளங்கினர். ஈகை என்னும் இவ்வுயர்ந்த பண்பும் சங்க கால மக்களிடையே காணப்பட்டது.

### அரசர்கள் ஈகையளித்தல்

சங்க காலத்தில் பெருநிலங்களை ஆண்ட வேந்தன் முதல் குறுநிலம் ஆண்ட மன்னர் வரை ஈகையளித்து இன்புற்றிருந்ததை பல்வேறு புறப்பாடல்கள் தெரிவிக்கின்றன.

அதியமான் நெடுமானஞ்சி “தன் படை வீரர்களுக்குத் தரும் பொருள்களைவிட மிகுதியாகத் தன்னை அடையும் இரப்பவர்களுக்கு கொடுப்பான்”[28] “மேலும் மாலைநேரத்தில் தடாரிபண் இசைத்த பொருநனுக்கு புத்தாடையும், மதுவோடு ஊன்துவையலையும் சோற்றையும் உண்பித்ததோடு மட்டுமல்லாமல் அவன் சுற்றத்தின் துயரினைப் போக்க நெற்குவியலையும் கொடுத்தான்”[29] என ஔவையார் பாடுகின்றார்.

தடாரிப் பறையைக் கொட்டிய பொருநர்களின் வறுமை நீங்க பொகுட்டெழினி, “கள்ளைப் பொற்கின்னத்திலும்”[30] “அம்பர்கிழான் அருவந்தை, தூய வெள்ளை ஆடையையும்”[31] அவியன், “பாம்பின் தோல் போன்ற ஆடையினையும்”[32] சோழிய ஏனாதி திருக்குட்டுவன், “பெரிய யானையினையும்”[33] சேரமான் வஞ்சன், மிக “விலையுயர்ந்த மாலையினையும்”[34] அவர்களுக்குக் கொடுத்தனர்.

இரவலன் ஒருவனுக்கு பொருள் ஈந்த கண்டீரக்கோ பெருநள்ளி அவர்களுக்கு தன் பெயரையும் ஊரையும் சொல்லாது அவ்விடம் விட்டுப் பெயர்ந்தான். இதனை,

**“மார்பிற் பூண்ட வயங்குகா ழாரம்**
**மடைசெறி முன்கைத் கடகமோ டீத்தனன்**
**எந்நா டோவென நாடுஞ் சொல்லான்**
**யாரீ ரோவனப் பேருஞ் சொல்லான்**
**பிறர்பிறர் கூற வழிக்கேட் டிசினே”**[35]

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. இரவலன் ஒருவன் தளர்ந்த நடையுடன் பலா மரத்தினடியில் தன் சுற்றாத்தாரோடு தங்கியிருந்த போது அங்கு வந்த வேடன் ஒருவன் விலங்கின் ஊனைச் சுட்டு அவர்களை உண்பித்ததோடு, தான் காட்டு வழியில் இருப்பதால் பிறபொருள்கள் தன்னிடம் இல்லாமையால் தான் அணிந்திருந்த முத்து வடங்களையுடைய ஆரத்தினையும், முன்கையணிந்த கடகத்தையும் அவர்களுக்குக் கொடுத்தான். இரவலனுக்கு தன் பெயரையும், ஊரையும் கூறாமற் சென்றுவிட்டான். இத்தகு சிறப்பு வாய்ந்தவன் கண்டீரக்கோ பெருநள்ளி என வன்பரணர் பாடுகின்றார்.

தன்னுடைய பெயரையும் நாட்டையும் அவர்கள் கேட்டும் சொல்லாது சென்றது, அக்கொடை பெயருக்காவும் புகழுக்காகவும் செய்யாமல் அவர்களின் துயர் நீங்க கொடுத்துதவும் உயர்ந்த பண்பினைச் சுட்டுவதாகும்.

இவ்வரசர்களேயன்றி கடையேழு வள்ளல்களும் இன்னும் பிற வேந்தர்களும் குறுநில மன்னர்களும் ஈகையால் சிறந்து விளங்கினர்.

## நன்றி மறவாமை

ஒருவர் செய்த உதவிக்கு தெரிவிப்பது நன்றி ஆகும். செய்த நன்றி மறவாமை தமிழர்களின் தலையாய பண்பாக இருந்து வந்துள்ளது. ஆற்றுப்படை நூல்களுள் ஒன்றான சிறுபாணாற்றுப்படையும்,

**“செய்ந்நன்றி அறிதலும் சிற்றினம் இன்மையும்**

**இன்முகம் உடைமையும் இனியன் ஆதலும்”** [36]

என்று செய்நன்றி அறிதல் பற்றி எடுத்துரைக்கின்றது.

சங்க காலச் சமூகத்தில் நன்றி மறவாமை உயர்ந்த பண்பாகப் போற்றப்பட்டுள்ளது. செய்ந்நன்றியை மறப்பவர்க்கு உய்வென்பது இல்லை என அக்கால மக்கள் நம்பினர். இதனை

**“ஆண் முலை அறுத்த அறனிலோர்க்கும்**

**மாண் இழை மகளிர் கருச் சிதைத்தோர்க்கும்**

**பார்ப்பார் தப்பிய கொடுமையோர்க்கும்**

**வழுவாய் மருங்கில் கழுவாயும் உள என**

**நிலம் புடை பெயர்வது ஆயினும் ஒருவன்**

**செய்தி கொன்றோர்க்கு உய்திஇல் என”**[37]

என்று புறநானூற்றுப் பாடலடிகள் உணர்த்துகின்றன. பசுவின் பால்மடியினை அறுத்து அதுதரும் பயன் கெடுத்த தீமையாளர்க்கும் மாட்சிமையுடைய அணிபுனைந்த மகளிர்தம் கருவைச் சிதைத்தவர்க்கும், பார்ப்பனருக்குத் தீமைபுரிந்த கொடுமையானவர்க்கும், அவர் பிழை செய்த வழி தீவினையைப் போக்கும் வழிகள் உள்ளன. நிலம் கீழ் மேலாகப் பெயர்ந்தாலும் ஒருவன் செய்த நன்றியைச் சிதைத்தவர்க்குத் தீவினையிலிருந்து உய்வது இல்லை என அப்பாடலடிகள் பொருளுனர்த்துகின்றன.

சங்க கால மக்களிடையே நன்றி மறத்தல் பெரும் பாவச் செயலாக எண்ணப்பட்டது. மேலும் தக்க நேரத்தில் ஒருவர் செய்த நன்றிக்கு, உதவி நன்றியாக அவர்கட்கு தேவைப்படும்போதும் உதவி செய்வோர் பீடுடையவர் எனப் போற்றப்பட்டனர். இதனை,

**“முன்ஒன்று தமக்கு ஆற்றி முயன்றவர் இறுதிக்கண்**

**பின்ஒன்று பெயர்த்து ஆற்றும் பீடுடையார் போல்”**[38]

என்றதால் அறியலாம்.

**புறங் கூறாமை**

சங்க கால மக்கள் புறங் கூறி பொய்த்து உயிர்வாழ்தலை விட சாதல் மிகச் சிறந்தது எனும் பண்பினை பெறும் அறமாக எண்ணி வாழ்ந்தனர்.

வல்லாரையும் மாட்டாரையும் ஏக்க கொண்டு திறமையற்றவர்களையும் அவரவர் தகுதிக்கு தக்க வண்ணம் குறை கூறாது பாராட்டிப் பேசுதல் உலக இயல்பு. தம்மோடு மாறுகொண்ட பகைவரானலும் அவரைக் குறித்துப் புறங்கூறுதல் என்பது வெறுக்கத்தக்கது என்பதை,

> **“நல்லோர் குழீஇய நா நவில் அவையத்து**
> **வல்லார் ஆயினும் புறம் மறைந்து சென்றோனரச்**
> **சொல்லிக் காட்டி சோர்வு இன்றிவிளக்கி**
> **நல்லிதின் இயக்கும் அவன் சுற்றத்து ஒழுக்கமும்”**[39]

என்ற அடிகளால் மக்கள் ஒருவருக்கொருவர் புறங்கூறாமல் சிறந்த பண்போடு வாழ்ந்துள்ளனர் என்பதை அறியலாம்.

**கல்வி**

புறப் பொருட்கள் யாவும் அழிந்துவிடும் தன்மையாதலால் அவற்றின் சிறப்பை எண்ணாத அழியாச் செல்வமாகிய கல்வியே சிறப்பனதாகும். மன்னர்க்கு தன் தேசமல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு என்ற மூதுரை இலக்கியச் சான்று அரசனைக் காட்டிலும் கற்றவர் சிறந்தவர் என்பதை உறுதிப்படுத்தும். இத்தகைய கல்வியே தனிமனிதனுடைய வாழ்வையும் நாட்டின் வளர்ச்சியையும் உயர்த்துவதாகும்.

கல்வியின் இன்றியமையாமையை பழந்தமிழர் நன்கறிந்திருந்தனர். சங்க காலத்தில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட புலவர்கள் இருந்தனரென்பதே இதற்குச் சான்றாகும். இவர்களுள் அரசர்களும்,பெண்களும் பலராவர். குறவர் குடிப்பிறந்த குறயெயினியும், இளவெயினியும். குயவர் குடிப்பிறந்த வெண்ணிக் குயத்தியும் சிறந்த புலவர்களாயிருந்தமை கல்வி கற்றலுள் அவர்களில் எவ்வித வேறுபாடுமில்லை என்பதை அறியவைக்கிறது. கவிபாடும் திறன் பெற்ற

கல்விவல்ல நன்மக்கள்அன்று மிகுதியாக இருந்தனர். மிகப் பழங்காலத்தே வேறெந்த நாடுகளிலும் இவ்வளவு புலவர்கள் இருந்ததில்லை என்பதை உறுதியாகத் தெளியலாம்.

சங்க காலத்தில் கல்வி கற்ற புலவர்க்கும் கற்பிக்கும் ஆசிரியர்க்கும் பெரும் மதிப்பு இருந்தது. புலமை சான்ற ஆசிரியர்களிடம் மாணக்கர் பலகாலம் கல்வி கற்றிருந்தனர். பாடசாலைகள் இருந்ததாகத் தெரியவில்லை. குருகுலக் கல்வியே அக்காலத்தில் சிறப்புற்றிருந்திருக்க வேண்டும். ஆசிரியரைக் குறிக்குமிடத்து,

**“பல் கேள்வித் துறை போகிய**

**தொல் ஆணை நல் ஆசிரியர்”[40]**

பலவாறு கேட்டறிந்தும் பல நூல்களை முறையாகக் கற்றறிந்தும் பெரிய ஆணையை உடைய நல்லாசிரியர் இருந்தாரெனப் பட்டினப்பாலை குறிப்பிடுகின்றது. மதுரைக் காஞ்சியும் “நல்கேள்வித் துறைபோகிய தொல்லாணை நல் ஆசிரியர்”[41] என ஆசிரியரின் சிறப்பைக் குறிப்பிடுகின்றது.

கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுள் இளம் சிறார்க்கு கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியர்களும் இருந்திருக்கின்றனர். மதுரை இளம்பாலாசிரியன் சேந்தன் கூத்தனார்,”[42] மதுரைப் பாலாசிரியன் சேந்தன் கொற்றனர்.”[43] என இவ்விருவரும் இளம் சிறார்களுக்கு கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியராக இருந்திருக்கலாம்.

**கல்வி கற்கும் முறை:**

மாணாக்கர்கள் ஆசிரியரிடத்து கல்வி கற்கு முறைமையை புறநானூற்றுப் பாடலொன்று எடுத்தியம்புகிறது.

**“உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**

**பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே”[44]**

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் என்று அறிவுறுத்திய பின் பிற்றைநிலை முனியாது கற்க வேண்டும் என்று கூறியதன் காரணம், உற்றுழி உறுபொருள் கொடுத்தவழி தன்பால் உயர்வும், இவற்றைப் பெறும் ஆசிரியர்பால்

தாழ்வும் ஏற்படுமாதலால், ஆசிரியன் ஆனைவழி நின்று தாழ்ந்து கேட்பதற்கு அவற்றின் வழி பிறந்த மானம் தடை செய்யும், அதனால் கல்வியறிவு நன்கு பெறப்படாது. ஆதலால் அறநெறிப்படாத மானத்தை பணிவோடு விலக்கிப் ‘‘பிற்றைநிலை முனியாது கற்க’’என்று அறிவுறுத்தப்படுகிறது. அன்பும் வழிபாடுமே ஆசிரியர்பால் உள்ளஅறிவுச் செல்வத்தைப் பெறுதற்கு வாயிலாகும். ‘‘உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்’’ அன்பு செய்க, ‘‘பிற்றைநிலை முனியாது’’ வழிபடுக என்று கல்வி கற்கும் மாணாக்கர்க்கு கற்கும் முறை குறித்து அறிவுறுத்தப்படுகிறது.

**‘‘பிறப்பு ஓர் அன்ன உடன் வயிற்றுள்ளும்**
**சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும்’’[45]**

ஒரு தாய் வயிற்றில் பிறந்த பிள்ளைகளில் கல்வி கற்றவனையே தாய்விரும்புவாள். கல்லாதவனை விரும்பாள் என்பதை உணர்த்த ‘‘தாயும் மனம் திரியும்’’ என்றார். அன்பிலே சிறந்தது, உயர்ந்தது தாய் அன்பு அத்தகைய தாயின் மனமே இங்கு வேறுபடும் என்றதால் கல்வியின் மதிப்பு போற்றுதலுக்குரியதாகிறது.

ஒரு குடியுள் பிறந்த பலருள் மூத்தோர்க்குச் சிறப்புச் செய்யாது இளையோன் கல்வி அறிவுடையானாயின், அவனையே அரசனும் சிறப்புச் செய்வான். உலக மக்களுக்கு இன்ப வாழ்வு நல்கும் அரசன், நெறி காட்டும் அறிவுடையோனையே நோக்கி இயங்குவான் என்பதை ‘‘அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்’’[46] என்றதனால் அரசரும் கல்வி கற்ற ஒருவரின் வழிநடப்பார் என அறியலாம்.

நால்வகை வருணத்துள் கீழ்குலத்தான் ஒருவன் கற்றானாயின் மேல்குலத்தார், அவன்பால் சென்று, அவனை வழிபட்டு அவன் காட்டும் நெறிப்படி ஒழுகுவர் ஆதலால்,

**‘‘கீழ்பால் ஒருவன் கற்பின்**
**மேற்பால் ஒருவனும் அவன் கண் படுமே’’[47]**

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்விச் சிறப்புடையவனையே குடும்பம், அரசு, சமுதாயம் ஆகியன மதிக்கும் ஆகையால் கல்வி கற்றல் சங்ககாலச் சமுதாயத்தில் உயர்ந்த செயலாக போற்றப்பட்டது.

**விருந்தோம்பல்**

தம்மை நாடி வந்தவர்களை உபசரித்து விருந்தோம்பும் பண்பு பண்டைய தமிழரின் தலையாய பண்பாக போற்றப்பட்டது.விருந்து என்றால் புதுமை, புதியவர் என்று பொருள் 'விருந்தே புதுமை' என்பார் தொல்காப்பியர். ''பண்டமாற்றுறை வழக்கிலிருந்த அக்காலத்தில் போக்குவரது வசதிகளும் இல்லாத சூழ்நிலை நிலவியது. எனவே இரவலர்கள் மட்டுமன்றி ஏனையோரும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு கால்நடைகயாகவே நடந்துசெல்ல வேண்டியிருந்தது. உணவு விடுகளும் இல்லாத காரணத்தினால் உண்டிக்கும் உறையுளுக்கும் அனைவரும் செல்லும் ஊர்களையே நம்ப வேண்டியிருந்தது. ஆகவே புதிதாக வருவோர்க்குப் பசிக்கு உணவளிக்க வேண்டிய நிலை இருந்தமையால் விருந்தோம்பும் பண்பாடு தமிழகத்தின் இல்லங்களில் உருவாயிற்று.''[48] பிறருக்கு உணவளிக்கும் செயல் உயிர்காத்தல் செயலாக எண்ணப்பட்டது. ஆகையால்தான் 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' எனக் கூறினர்.''[49] பசி என்னும் நோயைப் போக்குபவன் உயர்ந்தவனாகக் கருதப்பட்டான். 'பசிப்பிணி மருத்துவன் இல்லம்' என்று அவர்களின் இருப்பிடம் சிறப்பிக்கப்பட்டது. சங்க இலக்கியங்களில் அகத்திணை இலக்கியங்களில் தலைவி இல்வாழ்க்கையில் விருந்துபசரித்தலையும், புறத்திணை இலக்கியங்களில் அரசர்கள் புலவர்களுக்கு விருந்துபசரித்தலையும் அறிய முடிகிறது. தொல்காப்பியமும் இப்பண்பினை,

> **''புகா அக் காலைப் புக்கெதிரிப் பட்டுழிப்**
> **பகாஅ விருந்தின் பகுதிக் கண்ணும்''**[50]

என்று களவியலிலும்,

**"விருந்தொடு நல்லவை வேண்டற் கண்ணும்"**[51]

என்று கற்பியலிலும் இடம்பெற்றுள்ள நூற்பாக்களால் அறியலாம்.

### விருந்தினர்

தமக்கு அறிந்தவர்களேயன்றி அறியாதவர்களையும் விருந்தினராய் சங்க கால மக்கள் பேணிக் காத்தனர். இதனை,

**"உரன்கெழு நோன்பகட்டு உழவர் தங்கை**
**படிக்கை அன்ன பின்னுவீழ் சிறுபுறத்து**
**கொடிக்கை மகடூஉ மகமுறை தடுப்ப"**[52]

என சிறுபாணாற்றுப்படை குறிப்பிடுகின்றது. நல்லியக் கோடனை நாடி ஆமூர் செல்லும் பாணனை பாடிணியது கையை ஒத்த பின்னல் கிடக்கும் சிறிய முதுகினையும், தொடியினையணிந்த கையினையுடைய மகள், தன் மக்களால் தடுத்து, அமலை வெண் சோற்றினை, நண்டினது கலவையோடு கலந்து தருவாள். இங்கு அறியாத பாணனுக்கு விருந்துபசரிக்கும் பண்பு போற்றுதலுக்குரியது. புறநானூறும் "வருநர்க்கு வரையா"[53] "வருவிருந்தயரும்"[54] என விருந்தினர் என்பவர் புதியவர் என்ற பொருள்பட உரைக்கின்றது.

### இல்வாழ்வில் விருந்தோம்பல்

தலைவனும் தலைவியும் இணைந்து நடத்தும் குடும்பத்தில் தெய்வச் சிந்தனையும், விருந்தோம்பும் பண்பும் தலைசிறந்து விளங்கின. இதனை,

**"தெய்வ விழவும் திருந்து விருந்தயர்வும்"**[55]

என்றதால் அறியலாம். பிறரை உபசரித்துப் போற்றும் பண்பு நலத்தால் தம் இல்லம் நாடி வரும் விருந்தினரை உபசரித்து போற்றி மகிழ்வர்.

தம்மை நாடி வரும் விருந்தினரை இன்முகத்தோடு வரவேற்று உபசரிப்பது இல்வாழ்வாரின் தலைசிறந்த பண்பாக பழந்தமிழ் இலக்கியங்கள் போற்றுகின்றன.

**“விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்**

**பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்”[56]**

என மனையாளுக்குரிய மாண்புகளுள் ஒன்று விருந்தோம்பல் என்று கூறப்படுகிறது.

இல்வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் தலைவிக்கு விருந்தோம்பி வாழும் வாழ்வே சிறந்த வாழ்வு எனக் கருதப்பட்டது.

**“ ...................................உள்ளது**

**தவச்சிறிது ஆயினும் மிகப்பலர் என்னாள்**

**நீள்நெடும் பந்தர் ஊண்முறை ஊட்டும்**

**இற்பொலி மகடூஉப் போல”[57]**

‘‘தன்னிடம் உள்ள உணவு மிகக் குறைவாக இருந்த போதிலும் விருந்தினர் பலராய் வந்தமை குறித்துக் கவலையுறாமல்,நீண்ட நெடிய பந்தரில் உணவினை முறையாக உண்பிக்கின்ற இல்லறத்தால் பொலிந்து தோன்றும் மனைவியைப் போல’’ என அப்பாடலடிகள் பொருளுணர்த்துகிறது. இல்லறத்தில் விருந்தோம்பாமலிருக்கும் வாழ்க்கை குற்றமாகக் கருதப்பட்டது. வரும் விருந்தினர்க்கு சுவையான உணவளித்து விருந்தோம்புவதே பழியற்ற வாழ்க்கை என்பதை.

**“வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை”[58]**

என்ற அடியால் உணரலாம். தம்மை நாடியவர் அல்லாது மற்றவரையும் அழைத்து விருந்தோம்பும் பண்பு சங்க கால மக்களிடையே காணப்பெற்றது.

**“பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்**

**வருவீர் உளீரோ எனவும்”[59]**

விருந்தினர்க்காக தமது வாயில்களையும் அவர்கள் அடைக்காமல் காத்தனர் என்பதை ‘‘மலரத் திறந்த வாயில்,’’[60] ‘‘உலகு புகத் திறந்த வாயில்’’[61] என்ற அடிகளால் உணரலாம்.

**பிரிவின்கண் விருந்தோம்பல்**

இல் வாழ்வில் தலைவன் உடனிருந்த காலத்தோடு மட்டுமல்லாமல் அவன் பிரிந்த காலத்திலும் விருந்தோம்பும் பண்பை விடாது சங்க மகளிர் ஆற்றினர். ''வேந்தனொடு போர்புரியச் சென்ற ஒரு வீரனின் மனைவி, அவன் பிரிந்த காலத்தும் நான் இல்லிலிருந்து வரும் விருந்தினை உபசரிக்க வேண்டும் என்று நடுகல்லை தொழுது வழிபடுகிறாள்.''[62] மேலும் கணவன் பிரிந்த காலத்திலும் இல்லறத்திலிருந்து ஆற்ற வேண்டிய அறத்தை தவறாது ஆற்றவேண்டும் என எண்ணிய மற்றொரு வீரனின் மனைவி விருந்தாக வந்த பாணனிடம், ''பொழுது மறைந்தது என்னிடம் இருப்பது பழைய முயற்கறியாயினும் அதனை உமக்குத் தருகிறேன் இங்கேயே இருந்து உண்டு செல்க''[63] என உபசரிக்கிறாள்.

கணவன், பெரும்போரில் வெற்றியுற வேந்தனுடன் செல்கிறான். அவன் வேட்டைக்குச் செல்லாததால் அவனது சிறுவர்கள் அருகிலிருக்கும் மடையிலிருந்து பிடித்த உடும்பினுடைய கொழுப்பு பெய்யப்பட்ட தயிருடன் கூட்டிய கூழினையும், புதிதாகச் சமைத்த பிற நல்ல உணவு வகைளையும் பாணர்களோடு உடன் வந்த விருந்தினர் பலர்க்கும் அவன் மனைவி தரக்ககூடிய விருப்பத்தை உடையவள். இதனை,

**''வேட்டச் சிறாஅர் சேன்புலம் படராது**
**படப்பைக் கொண்ட குறுந்தாள் உடும்பின்**
**விழுக்கு நிணம் பெய்த தயிர்க்கண் விதவை**
**யாணர் நல்லவை பாணரொடு ஒராங்கு**
**வருவிருந்து அயரும் விரும்பனாள்''[64]**

என்ற பாடலடிகளால் அறியலாம்.

தலைவன் புறத்தொழுக்கம் மேற்கொண்ட விடத்தும் விருந்தாற்றுவதற் பொருட்டு தலைவி ஒருத்தி,

**"விளைக வயலே வருக இரவலர்"[65]**

என்றும் இல்லறக் கடமையே நினைந்து ஒழுகும் தலைவி, தலைவன் தன்னைப் பிரிந்து துயரினை ஏற்படுத்தும் காலத்திலும் அக் கடமையே கண்ணெனக் காத்தாள்.

இவ்வாறு தலைவன் உடனிருந்து துய்த்த காலத்தில் மட்டுமல்லாமல் புறம் இருந்து துயர் ஏற்படுத்திய காலத்தும் தலைவி இல்லறத்தில் விருந்தோம்பும் பண்பினை செவ்வனே செய்து வந்தாள்.

**வறுமையிலும் விருந்தோம்பும் பண்பு**

தம்மிடம் உணவுப் பொருட்கள் உள்ள காலத்துமட்டுமன்றி இல்லாக் காலத்திலும் பழந்தமிழ் மக்கள் விருந்தினரை உபசரித்த விதம் வியக்கத்தக்கது.

**"வரகும் தினையும் உள்ளவை எல்லாம்**
**இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தென**
**குறித்த மாறு எதிர்ப்பை பெறா அமையின்**
**குரல் உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து"[66]**

வரகு, தினை முதலிய உணவுப் பொருள்கள் யாவும் இரவல்கள் உண்பதற்காக வழங்கப்பட்டுத் தீர்ந்து விட்டமையாலும், குறியெதிர்ப்பாகத் தந்தவற்றைப் பெற இயலாமையாலும், கதிர்களாகக் காயவைத்திருந்த விதைப்பதற்கு எனக் கொண்ட தினையை வீரனின் மனைவி உரலின்கண் பெய்து சிறிதும் புறத்தே செல்லாமல் உணவாக்கி வரும் விருந்தை உபசரிப்பாள். சிறுமையுற்ற காலத்தும் விருந்தோம்பி நிற்கும் பண்பு இளையான்குடி மாறநாயனாருக்கு முன்பாக சங்க இலக்கியங்களிலேயே காணமுடிகின்றது.

விருந்தளிக்க இயலாத வாழ்க்கை பயனற்ற வாழ்க்கையென சங்க கால மக்கள் எண்ணினர். பெருங்குன்றூர்கிழார் என்ற புலவர் சோழ மன்னனிடம் தனது வறுமை நிலையினை எடுத்துரைக்கும்போது "அறிவுமிக்க சான்றோர்கள் இருக்கும் அவையில் புகுந்த ஒருவன் தானுற்ற துயரை எடுத்துரைப்பின் விரைவாக அவர்கள் அத்துயரைத தீர்ப்பர். அதுபோல் என்னை நாடி வந்த

விருந்தினரைக் கண்டு அவர்களுக்கு விருந்தளிக்க இயலாமல் அவர்கள் கண்களில் படாமல் ஒளிந்து கொள்ளும் பயனற்ற இல்வாழ்க்கையை உடையவனாக நான் வறுமையுற்றுள்ளேன் எனது வறுமையை விரைந்து தீர்ப்பாயாக'' என்று வேண்டுகிறார்.

**"விருந்துகண் டொளிக்கும் திருந்தா வாழ்க்கை"[67]**

என்ற அடியால் இதனை அறியலாம்.

இல்வாழ்க்கையை மேற்கொண்டோர் விருந்தினர்க்குச் சுவைமிகுந்த உணவினை அளித்ததோடு மட்டுமல்லாமல் அவர்களுக்குப் பரிசுப் பொருட்களையும் தந்து மகிழ்ச்சியுறச் செய்தனர்.

ஆய் அண்டிரன் என்ற மன்னன் நாட்டில் இல்வாழ்க்கையை மேற்கொண்டோர். தம்பால் வரும் விருந்தினர்க்குச் சுவைமிகுந்த மான் இறைச்சியைத் தருவதோடு மட்டுமல்லாமல் மலைச்சாரலில் நன்கு வளர்ந்து முதிர்ந்த சந்தனக் கட்டையையும் யானைத் தந்தம் முதலியவற்றையும் புலித்தோலில் குவித்துக் கொடுப்பார்கள்.இதனை,

**"சிலையாற் பட்டே முளவுமான் கொழுங்குறை**
**விடர்முகை யடுக்கத்தும் சினைமுதிர் சாந்தும்**
**புகர்முக வேழத்து மருப்பொடு மூன்றும்**
**இங்கேழ் வயப்புலி வரியதம் குவைஇ**
**விருந்திறை நல்கும்"[68]**

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

இச்சான்றுகளால் இல்லறத்தில் இருப்போருக்கு விருந்தோம்பும் பண்பு தலையாய பண்பாக சங்க காலத்தில் போற்றப்பட்டது. வறுமையுற்று துயரமெய்திய காலத்தும் அவர்கள் இப்பண்பினை விடாது கொண்டொழுகினர் என்பதையும் அறியமுடிகின்றது.

## அறம் போற்றல்

திணை இலக்கியங்களாகக் பிரிக்கப்பட்ட சங்க இலக்கியங்களுள் அகத்திணைகளில் களவு வாழக்கையில் அறத்தொடு நிற்றலும், புறத்திணைகளில் போர் அறமும் சிறப்பானதாகப் போற்றப்பட்டது. சங்கத் தமிழர்கள் அறம் எனும் பண்பை புற வாழ்வில் மட்டும் மேற்கொள்ளாது அகவாழ்விலும் அறத்தைக் கடைபிடித்தனர் ஆகையால்தான் அறத்திற்கே அன்பு சார்பு எனப் போற்றினர்.

சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகை நூல்களுள் ஐம்பது பாடல்களும், பத்துப்பாட்டுள் குறிஞ்சிப்பாட்டும் ஆக மொத்தம் ஐம்பத்தோரு பாடல்கள் இவ்அறத்தொடு நிலைப்பாடல்களாக அமைந்துள்ளன. தலைவனும் தலைவியும் மேற்கொண்டொழுகும் களவு வாழ்க்கையை தனது இல்லத்தார்க்கு அறிவிப்பதே அறத்தொடு நிற்றலாகும்.

**"அன்னாய் வாழிவேண் டன்னையென் தோழி**
**நனிநாண் உடையள் நின்னும் அஞ்சும்**
**ஒலிவெள் எருவி ஓங்குமலை நாடன்**
**மலர்ந்த மார்பிற் பாயல்**
**துஞ்சிய வெய்யள் நோகோ யானே"**[69]

என்ற ஐங்குறுநூற்றுப் பாடலில் மலை நாடன் ஒருவனுடன் தலைவி கற்புக்கடம் பூண்டுவிட்டாள் என்பதும், அச்செயல் பாலது ஆணையால் நடைபெற்றது என்பதும், செவிலியே இச்செயலை நற்றாய் முதலியோர்க்கு உணர்த்தி அவரை உடன்படுவித்து, இவளை அவர்க்கு ஈந்து, இவளின் துயரினைப் போக்க வேண்டும் என்பது தோழியின் உட்கருத்தாய் அமைந்துள்ளது. தலைவன் உயர்ந்த செல்வமும் புகழுடையான் ஏசாச்சிறப்பின் இசை விளங்கு பெருங்குடியான். எனவே நின் மகளுக்கு ஏற்றவனே என்ற குறிப்புடைய தோழியின் கூற்று அறத்தொடு நிற்றலின் இன்றிமையாக் கூறாய் அமைந்து செவிலியை, மணத்திற்கு உடன்பட வைக்கிறது.

அறத்தொடு நிற்றல் என்னும் இச்செயல் தலைமகளால் தோழிக்கும் தோழியால் செவிலிக்கும் செவிலியால் நற்றாய்க்கும் நற்றாயால் தந்தை தமர்க்கும் அறிவிக்கப்படும்.

தமிழ்ச் சமுதாயத்தின் புறவாழிவில் அமைந்த அறமே அகவாழ்விலும் அடிப்படையாகிறது. தலைவியின் களவினை அவளால் உணர்த்தப்பட்டும், தானே உணர்ந்தும் அக்களவு கற்பாக மாறுவதற்குத் துணை செய்பவள் தோழி. தோழியின் இச்செயல் அறத்தொடு நிற்றலாகிறது.

களவு கற்பாகி நாடறிந்த நன்மணமாக நடைபெற வேண்டும் என்ற தலைவியின் விருப்பம் தோழியின் மூலமாகத் தலைவியைச் சார்ந்தோர்க்கு அறிவிக்கப்பட்டு, சமுதாயத்திற்கு அனைவராலும் அறியப்பட்ட திருமணத்தை நோக்கியே அமைந்தவை ஆகும்.

**போர் அறம்**

அகம், புறம் பற்றிய சங்க இலக்கியங்களில் உலகியல் முறைகளும் கூறப்பட்டுள்ளன. புறம் பற்றிக் கூறும் இலக்கியங்கள் ஏனைய உலகியல் நிகழ்வுகளோடு போர் பற்றியும் எடுத்துரைக்கின்றது. அக்காலத்தில் வாழ்ந்த தமிழர் இயற்கையாகவே மறப் பண்பு உடையோர்களாக விளங்கினர். புறநானூறும் இதனை,

> **“ஒருவனை ஒருவன் அடுதலுந் தொலைதலும்**
> **புதுவ தன்றி இவ்வுலகத் தியற்கை”**[70]

எனக் கூறுகின்றது.

இவ்வாறு நடைபெறும் போரின் போது பசுவும், பசுவினியல்பை ஒத்த பார்ப்பனரும் பெண்களும் நோயுற்றவரும் இறந்து தென் திசையில் வாழும் முன்னோர்க்குச் சடங்குகளை மதித்துச் செய்யும் புதல்வர்களைப் பெறா தீரும் நமக்குப் பாதுகாப்பான இடத்தை நோக்கிச் செல்லுங்கள் யாம் எம்அம்புகளை விரைப் படச் செலுத்திப் போரிட உள்ளோம் என பகைவீரர்கள் அறிவித்தனர்.

**“ஆவும் ஆணியற் பார்ப்பன மாக்களும்**

**பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்**

**தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்**

**பெண்போல் புதல்வர்ப் பெறாஅதீரும்**

**எம்மம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மின்”**[71]

எனக் கூறுகின்றனர் இப்பாட்டு போரின் கொடுமையிலிருந்து விலக்கப்பட வேண்டியவர்களைத் தொகுத்து கூறுகிறது,

பார்ப்பனரைக் கொலைபுரிதல் கொடும்பாவமென சங்ககால மக்கள் கருதினர்.

**“பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்”**[72]

என்ற தொடர் இதனைக் குறிக்கும்.

பெண்கள் உடல்வலிமை இல்லாதவர்கள் ஆடவரால் பேணத்தக்க தகுதியுடையவர். பெண் கொலை புரிந்த நன்னனைப் புலவர்கள் வெறுத்தொதுக்கினர். நாட்டுக்குத் தேவையான நன்மக்களை ஈன்று புறந்தருதலால் பெண்குலம் அழிவதை அவர்கள் விரும்பிலர்.

பசித்தவர்களும் நோயாளிகளும் பிறருடைய உதவியைப் பெறும் நிலையிலிருக்கும் முதியவர்களும் அழிவுறலாகாது எனக் கருதினர். இறந்துபட்ட முன்னோர்களுக்கு சில சடங்குகள் செய்யும் கடமை ஆண்களுக்குரியது. அத்தகைய ஆண் மக்களைப் பெறாதவரையும் துன்புறுத்தக் கூடாது என்று பண்டைத் தமிழ் மன்னர் கருதினர். இது பண்டைத் தமிழரின் தலைசிறந்த போர்ப்பண்பாக குறிப்பிடப்படுகின்றது.

## கற்பு நெறி

சங்க கால மகளிரிடையே கற்பு நெறி உயர்ந்த பண்பாக போற்றப்பட்டது. கணவன் உடனிருக்கும் காலத்து மகிழ்ச்சியும், அவன் பிரிந்த காலத்து பெரும் துயரையும் உற்றதை பெருவாரியான சங்கப்பாக்கள் எடுத்துரைக்கின்றன.

இதிலிருந்து பரத்தையருடன் சென்று திரும்பும் காலத்தும் அவன் குற்றத்தைப் பொறுத்து சேர்ந்து வாழ்தலையே தலையாயப் பண்பாக கொண்டிருந்தனர் தொல்காப்பியரும் இதனை,

**“காமக் கிழத்தியர் நலம் பாராட்டிய தீமையின்**

**முடிக்கும் பொருளின் கண்ணும்”[73]**

என உணர்த்துகிறது.

இப்பிறவியில் கணவன் தன்னோடு இல்லாமல் போயினும் மறுபிறவியிலும் இவனே தனக்கு கணவனாக வேண்டும் என அக்கால மகளிர் நினைந்தனர்.

**“இம்மை மாறி மறுமை ஆயினும்**

**நீயாகியர் என் கணவனை**

**யானகியர் நின் நெஞ்சு நேர்பவளே”[74]**

நீயாகியர் என் கணவணை என்றதால் நின் மனைவி என்பது நானே ஆகும். மனைவியாக இருப்பினும் நின் நெஞ்சு நேர்பவள் பரத்தையேயாகும். ஆதலால் தலைவி தலைவனிடம் மனைவி என்ற தகுதியோடு நெஞ்சு நேர்பவளாகும் தகுதி தமக்கு வாய்க்கப் பெற வேண்டும் என வேண்டினாள். கற்புடைய மகளிர் பிறர் நெஞ்சு புகார் ஆதலின் மறுபிறவியிலும் தன் நெஞ்சில் நேர்பவனாய் அவன் அமைய வேண்டும் என கூறாமல் கூறுகின்றாள்.

கற்புநெறி பூண்ட மகளிர் தம் “கணவர் இறந்தவுடன் அவனை விட்டுப் பிரிந்து வாழ விரும்பாத நிலையில் உடன் உயிர்விடுதலும்”[75] பண்டைக் கால பண்பாக இருந்தது.

**“பல்சான்றீரே பல்சான்றீரே**

**செல்க எனச் சொல்லாது ஒழிக என விலக்கும்**

**பொல்லாச் சூழ்ச்சிப் பல் சான்றீரே”[76]**

என்ற பாடலடிகள் பூதப் பாண்டியன் இறந்தபொழுது அவன் மனைவி பெருங்கோப்பெண்டு தீயில் விழத்துணிந்தாள். அது கண்ட சான்றோர் அவளைத்

தடுத்தனர். அவள் சினந்து பொல்லாசூழ்ச்சிப் பல்சான்றீரே என் கணவன் மாய்ந்தபின் யான் மடிதலே சிறந்தது. பழைய சோற்றை உண்டு கைம்மை நோன்பு நோற்கும் பெண்களுள் யான் ஒருத்தி அல்லேன். நன்னீர்ப் பொய்கையும் தீயும் எனக்கு ஒன்றே எனக் கூறித் தீப்பாய்ந்தனள் என உணர்த்துகின்றன.

சங்க கால மகளிர் கணவனை உயிராகவும் தம்மை உடலாகவும் கருதி அவர் வாழ வாழ்ந்து, வீழ வீழ்ந்து அவருடனே சாதலையும் மேற்கொண்டு உயர்ந்த கற்பு நெறியை பின்பற்றியொழுகினர்.

## பொய்யுரையாமை

பொய்யுரைத்தல் சங்க கால மக்களிடையே பெரும் தீமையான செயலாக கருதப்பட்டது. பொய்யுரைக்காது வாய்மை கூறுவோரை அக்கால மக்கள் சான்றோன் என மொழிந்தனர் ஆகையால்தான்,

**“அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க்கு இல்லை”**[77]

எனக் கூறினர்.

தலைவனைப் பிரிந்த தலைவி ஒருத்தி நிலவிடம் தன் தலைவன் இருக்கும் இடத்தை காட்டாமல் பொய்யுரைத்ததால் நிலவை நோக்கி ‘நல்ல அழகிழந்த என்தோள் போல நீயும் வாட்டமுற்று நாள்தோறும் சிறுகிச் சிறுகிச் குறைந்து நீ மறைபடுவாய்’ என்று வஞ்சினம் உரைத்தாள். இதனை,

**“எற் கரந்து உறைவோர் உள்வழி காட்டாய்**
**நுற் நவின் இழந்த என்தோள் போல் சாவுய்**
**சிறுகுபு சிறுகுபு செரீஇ**
**அற்கரி பொய்த்தலின் ஆகுமோ அதுவே”**[78]

என்ற பாடடிகள் உணர்த்துகின்றன. மேலும் ஒருவர் பசுமையான மரத்தின் கண் கீழ் நின்று பொய்யுரைத்தால் உரைத்த அளவிலேயே அம்மரம் பட்டுப் போகும் என்பதை,

**“கரி பொய்த்தான் கீழ் இருந்த மரம்போலக் கவின்வாடி”**[79]

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

பொய்யுரைப்பவனை சங்க காலச் சமூகம் கள்வனுக்கு நிகராக எண்ணினர். குறுந்தொகைத் தலைவி ஒருத்தி தம் நலத்தை நுகர்ந்து நின்னிற்பிரியேன் என சூளுறைத்தவன் பின்னர் பொய்யுரைத்துப் பிரிந்தான். அவன் பொய்யுரைத்ததால் கள்வனுக்கு நிகரானவன் ஆவான் எனக் கூறுகின்றாள் இதனை,

**“யாருமில்லை தானே கள்வன்**

**தான் அது பொய்ப்பின் யான் எவன்செய்கோ”[40] (குறுந்:25:1-2)**

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

# தொகுப்புரை

1. உயர்திணைப் பொருட்களிடத்து மட்டுமல்லாது அஃறிணைப் பொருட்களிடமும் சங்க கால மக்கள் அன்போடு இருந்தனர்.
2. விருந்தோம்பலில் சங்க கால மக்கள் சிறப்புற்று விளங்கினர். பிறருக்கு உணவளிக்கும் செயல் உயிர் காக்கும் செயலாக எண்ணப்பட்டது.
3. தமக்கு அறிந்தவர்களேயன்றி அறியாதவர்களையும் சங்க கால மக்கள் விருந்தோம்பி பேணினர். விருந்தோம்பாமலிருக்கும் வாழ்க்கை பயனற்ற வாழ்க்கையாக எண்ணப்பட்டது.
4. பிறர்க்கு ஈவதற்காகவே பொருள் ஈட்டுவதை முக்கிய நோக்கமாக சங்க கால ஆடவர் கொண்டிருந்தனர்.
5. செய்நன்றி மறப்பவர்க்கு வீடுபேறு இல்லை என்பதை அக்கால மக்கள் நம்பினர்.
6. தனிமனிதனுடைய வாழ்வையும், நாட்டின் வளர்ச்சியையும் உயர்த்தும் கல்வியின் இன்றியமையாமையை சங்க கால மக்கள் நன்கறிந்திருந்தனர்.
7. கல்வி கற்றலில் அவர்களுள் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாடு இல்லாமையை அறியமுடிகிறது.
8. இளம் சிறார்க்கு பயிற்றுவிக்கும் ஆசிரியர் இருந்ததை அறிய முடிகிறது.மேலும் அக்காலத்தில் குருகுலக் கல்வி முறையே காணப்பட்டது.
9. கல்வியில் சிறப்புடையவனையே குடும்பம், அரசு, சமுதாயம் ஆகியன மதிக்கும் பாங்கினை அறியமுடிகின்றது.
10. புறங்கூறி பொய்த்து உயிர் வாழ்த்தலைவிட சாதல் மிகச் சிறந்தது என எண்ணினர்.

11. அக வாழ்க்கையில் களவு போன்றவற்றிலும் புற வாழ்க்கையில் போர் முறைமையிலும் அறம் தவறாது செயலாற்றினர்.
12. கணவன் இறந்த பிறகு அவனோடு உடன்கட்டை ஏறி உயிர்விடும் உன்னத கற்புநெறியை சங்க மகளிர் வழக்கமாகக் கொண்டிருந்தனர்.
13. பொய்யுரைப்பவனை சங்க கால மக்கள் கள்வனுக்கு நிகரானவனாகக் கருதினர்.

# இயல்-3

## சான்றெண் விளக்கங்கள்

| | |
|---|---|
| 1. | அ.கிருட்டிணன், தமிழர் பண்பாட்டியல்.ப-3 |
| 2. | ந.வேலுச்சாமி,  பயண நூல்கள் வழிப்பண்பாடு. ப-21 |
| 3. | மு.வைத்தியலிங்கம், தமிழ்ப் பண்பாடு.ப-14 |
| 4. | கலைக்களஞ்சியம் ப-60 |
| 5. | தெ.பொ.மீனாட்சி சுந்தரம், தமிழும் பிற பண்பாடும், ப-9 |
| 6. | த.தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப-1 |
| 7. | தொல்-உரியியல்-1-2 |
| 8. | புறம்.197 |
| 9. | கலி.133 |
| 10. | புறம்.5:5-6 |
| 11. | அகம்.305 |
| 12. | குறுந்.20:1-2 |
| 13. | புறம்.37-5 |
| 14. | சிறுபாண்.84- 87 |
| 15. | புறம்.145:1 |
| 16. | சிறுபாண்.87-91 |
| 17. | புறம்.189 |
| 18. | குறள்.231 |
| 19. | மேலது.221 |
| 20. | புறம்189:7 |
| 21. | ஐங்.1:12 |
| 22. | நற்.214:1-2 |
| 23. | குறுந்.63:1-2 |
| 24. | கலி.11:1 |
| 25. | நற்.286 |
| 26. | கலி.27:1-2 |

| | |
|---|---|
| 27. | பரி.15:35-36 |
| 28. | புறம்.315 |
| 29. | புறம்.390 |
| 30. | புறம்.392 |
| 31. | புறம்.385 |
| 32. | புறம்.383 |
| 33. | புறம்.394 |
| 34. | புறம் .398 |
| 35. | புறம்.20 |
| 36. | சிறுபாண்.207-208 |
| 37. | புறம்.34:1-6 |
| 38. | கலி.34:4-3 |
| 39. | மலைபடு.17-18 |
| 40. | பட்டினம்.169:170) |
| 41. | மதுரை. 760 |
| 42. | நற்.273, அகம்.102, 348 |
| 43. | நற்.322 |
| 44. | புறம்.183:1-2 |
| 45. | மேலது.3-4 |
| 46. | மேலது.7 |
| 47. | மேலது.9-10 |
| 48. | வே.முத்துலக்குமி, பண்பாட்டுச் சிந்தனைகள், ப-83 |
| 49. | புறம்.18:19 |
| 50. | தொல்.பொருள்.105 |
| 51. | தொல்.பொருள்.144 |
| 52. | சிறுபாண்.190:192 |
| 53. | புறம்.10:8 |
| 54. | புறம்.42:17 |
| 55. | பரிபாடல்.17:42 |
| 56. | தொல்.பொருள்.150:3-4 |

| | |
|---|---|
| 57. | புறம்.331:1-9 |
| 58. | புறம்.10:8 |
| 59. | குறுந்.118:3-4 |
| 60. | குறிஞ்சி. 202 |
| 61. | புறம்.234 |
| 62. | புறம்.306 |
| 63. | புறம்.319 |
| 64. | புறம்.326:8-12 |
| 65. | ஐங்.2:2 |
| 66 | புறம்.333:9-12 |
| 67. | புறம்.266 |
| 68. | புறம்.374:11-15 |
| 69. | ஐங்.205 |
| 70. | புறம்.76:1-2 |
| 71. | புறம்.9:1-5 |
| 72. | புறம்.34-3 |
| 73. | தொல்.களவியல்.6 |
| 74. | குறு.49:3-5 |
| 75. | இரா.இராகவையங்கார், தமிழ் வரலாறு, ப-276 |
| 76 | புறம்.246:1-3 |
| 77. | குறுந்.184:1 |
| 78. | நற்.196:6-9 |
| 79. | கலி.34:10 |
| 80. | குறுந்.25:1-2 |

# இயல்-4

## உழவுத் தொழிலும் அதைச் சார்ந்த தொழிலும்

மனிதனின் அடிப்படை தேவைகளுள் முதன்மையானது உணவு. ஆகையால்தான் ''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே''[1] எனக் கூறினர். உணவை பெறுவதற்கு உழவே அடிப்படை. கற்கால நாகரிகம் தொடங்கி மனிதனின் ஒவ்வொரு போராட்டமும் உணவு சார்ந்தே அமைந்துள்ளது. நாகரிக முன்னேற்றத்தில் மனிதன் தன் பல்லாண்டு கால அனுபவத்தின் வாயிலாக உழவுத் தொழிலை முறையாக மேற்கொண்டு உணவு உண்டாக்கிய நிலையினை வரலாறு நமக்கு அறியத் தருகிறது. சங்க இலக்கியத்தில் உழவுத் தொழில் மற்றும் உழவுக்கு உறுதுணையாய் விளங்கிய பிற தொழில்கள் குறித்த செய்திகள் எங்ஙனம் இடம்பெற்றுள்ளன என்பதை இவ்வியல் ஆராய முற்படுகிறது.

### உழவுத் தொழில்

பயிர்த் தொழில் என்பது பன்னெடுங்காலமாக தமிழரின் தொழிலாக விளங்கிது. கால அடிப்படையில் பிரிக்கப்பட்ட பெரும்பாலான தமிழ் இலக்கியங்கள் பயிர்த் தொழிலின் வளர்ச்சியை எடுத்துரைக்கின்றன. பயிர்த் தொழிலை மேற்கண்ட உழவர்களை வேளாண் மாந்தர் என்றழைத்தனர். அவர்களின் முழு வினைகளும் பயிர்களை விளைவித்தல் அவற்றைத் காத்தல், விளைச்சலைப் பெருக்குதல் என பயிர்த் தொழில் செய்வதிலேயே இருத்தல் வேண்டும். இக்கருத்தினை பழந்தமிழ் நூலான தொல்காப்பியம்.

**''வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது**

**இல்லென மொழிப பிற வகை நிகழ்ச்சி''[2]**

எனக் குறிப்பிடுகின்றது.

**வேளாண்மை**

வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்தே தமிழகத்தில் பொருளாதாரம் பெருமளவு வேளாண்மையைச் சார்ந்திருந்தது. வேளாண்மை ஒரு தூய்மையான தொழிலாகவும் கருதப்பட்டது. பெரும்பான்மையான தமிழர் வேளாண் தொழிலைத் தம்முடைய தொழிலாகக் கொண்டிருந்தனர்.

தமிழகத்தில் ஒருசில பகுதி நிலங்கள் மிகவும் வளமானதாகவும், மற்ற பகுதி நிலங்கள் வறண்டும், வளமற்றதாகவும் தொடர்ந்து இருந்திருக்கின்றன. நிலங்கள் வளமாகத் திகழ்ந்திருக்கின்றன, என்பதை

**“நுரைத்தலைக் குரைபுனல் வரைப்பு அகம்புகுதொறும்**

**புனல் ஆடு மகளிர் கதுமெனக் குடைய**

**கூனிக் குயத்தின் வாய்நெல் அரிந்து**

**-----------------------------------------**

**சாலி நெல்லின் சிளைகாள் வேலி**

**ஆயிரம் விளையுட்டு ஆக”** [3]

இப்பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன.

சங்க இலக்கியங்களில் வேளாண் என்ற சொல் இரு இடங்களிலும் வேளாண்மை என்ற சொல் ஓரிடத்தும் இடம் பெற்றுள்ளது. வேளாளர் என்ற சொல்,

**“ தொடர்ந்தேம் எருது தொழில் செய்யா தோட**

**விருங்கடன் வேளாளர்க் கின்று”**[4]

எனவரும் பரிபாடல் அடிகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. பொதுவாகத் தொல்காப்பியர் காலந்தொடங்கி சங்ககாலம், சங்கம் மருவிய காலம் முடிய வேளாண்மை என்னுஞ்சொல் பெரும்பான்மை **உதவி** என்ற பொருளிலும் சிறுபான்மை **உழவுத்தொழில்** என்ற பொருளிலும் வழங்கப்பட்டுள்ளது.

இலக்கண நூலார் வேளாண் என்னுஞ் சொல்லை வேள்+ஆள் எனப்பிரிப்பர். வேள் என்னும் வேர்ச்சொல்லுக்கு மண் என்ற ஒரு பொருள் உண்டு. வேளாண்– மண்ணை ஆளுதல் என்ற பொருளைத் தரும். மண்ணைப் பண்படுத்தி ஆள்பவன் வேளாளன் எனப்பட்டான்.

அறிவியல் நோக்கில் வேளாண்மை என்ற சொல்லுக்குப் பொருள்காண்கையில் அச்சொல் பயிர் செய்தல், கால்நடைகளை வளர்த்தல், மரம் வளர்த்தல், மனித சமுதாயத்திற்குப் பயன்படும் ஒவ்வொரு பயிரையும் மற்றும் உயிர்களையும் வளர்த்தல் கோழிப்பண்ணை, பால் பண்ணை எனப் பொருள்படும் அறிவியல் பெருஞ்சொல்லாக விளங்குகிறது.

**நிலவளம்**

பண்டையத் தமிழர் நிலத்தினை ஐந்து வகைகளாக பிரித்தனர். அவை முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகும். இவற்றில் பாலை நிலம் தனி ஒரு நிலமாக இல்லாது குறிஞ்சி, முல்லை நிலத்தின் முறைமையில் திரிந்த ஒன்றாகக் கருதப்பட்டது.

சங்க காலத்தில் உழவுத் தொழில் உயிர்காக்கும் தொழிலாகப் போற்றப்பட்டது. அத்தொழிலுக்குத் தேவையான அனைத்தையும் பெற்றுத் தமிழகம் சிறந்து விளங்கியது.

வேளாண்மைக்கு அடித்தளமாய் அமைவது நீரும், நிலமும் ஆகும். இவற்றின் இயைபே உணவுப் பொருள்களின் ஆக்கமாகும். உணவு எனப்படுவது நிலத்துடன் சேர்ந்த நீரும் ஆகும் என்பதை,

**“உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே”[5]**

என்ற புறநானூறு பாடல்வரிகள் விளக்குகின்றன.

## குறிஞ்சி வேளாண் நிலம்

மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி எனப்பட்டது. குறிஞ்சி நிலத்து மண் சிறுசிறு குன்றுகளும் மண்ணும் கலந்த பகுதியாக இருக்கும். இந்நிலத்தில் பயிர்த் தொழிலுக்காகப் பயன்படுத்தப்பட்ட நிலப்பகுதிகளுள் வெவ்வேறு இயல்பு கருதி வெவ்வேறு பெயர்கள் வழங்கப்பட்டதைச் சங்கப் பாடல்களின் வழி அறிய முடிகிறது. குறிஞ்சி நிலத்துப் புன்செய் நிலத்தைத் '**துடவை**' என்றனர், இதனை

**"புனவன் துடவைப் பொன்போல் சிறுதினைக்"**[6]

என்ற குறுந்தொகை பாடல்வழி அறியலாம்.

இதேபோன்று காடுகளை அழித்து விளை நிலமாக்கப்படும் புதிய நிலத்தை 'இதை'[7] என்றும் பழமையான விளைநிலத்தை "முதைபுனம்"[8] என்றும் குறித்தனர்.

## முல்லை வேளாண் நிலம்

காடும் காடு சார்ந்த இடமும் முல்லை நிலம் எனப்பட்டது. முல்லை நிலம் செம்மண் பரப்பை உடையது. இம்முல்லை நிலத்தில் பயிரின்றித் தரிசாய்க் கிடந்த இடத்தைக் 'கொல்லை' என்ற சொல்லால் குறிப்பிட்டனர்.

இதனை,

**"கொல்லை இரும் புனம் நெடிய என்னாது"**[9]

என்ற அகநானூற்று பாடல்வழி அறியமுடிகிறது.

மரங்கள் நிறைந்த முல்லைப் பகுதியை 'புறவு' 'கானம்' என்ற சொல்லால் குறிப்பிட்டனர்.

**"முல்லைஅம் புறவில் குவிமுகை அவிழ்ந்த"**[10]

**"கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய"**[11]

என்ற பாடல்வழி அறியமுடிகிறது.

## மருத வேளாண் நிலம்

வயலும் வயல் சார்ந்த இடமும் மருதநிலமாகும். நீர்வளம் நிறைந்த பகுதியாகும். வான் பொய்ப்பினும் தான் பொய்யாக்காவிரி பாயும் நிலவளஞ்சான்ற கழனிகள் மருதநிலத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

மருத நிலப்பகுதிகள் கழனி, பழனம், வயல், செறு என்ற சொற்களால் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுள் 'கழனி' என்பது சேற்று வயலையும்[12] பழனம் என்பது நெல்வயலையும்[13] குறிக்கும். மருதநில விளைநிலங்களை வயல் என்ற சொல்லால் குறித்தனர்.

## நெய்தல் வேளாண் நிலம்

நெய்தல் நிலம் என்பது கடலும் கடல் சார்ந்த இடமுமாகும். நெய்தல் நிலத்தில் மழை பொழிந்தால் நெல் விளையும், மழை பொய்ப்பின் உப்பு விளையும் என்பதை,

> **"பெயினே விடுமான் உழையினம் வெளுப்புத் தோன்றி**
> **இருங்கதிர் நெல்லின் யாணர் அஃதோ**
> **வறப்பின் மாநீர் முண்பகம் தாஅய்ச்சேறு புலர்ந்து**
> **இருகழிச் செறுவின் வெள்ளுப்பு விளையும்"[14]**

என்ற இப்பாடல் வரிகள் விளக்குகின்றன.

இந்நான்கு நிலங்களுக்கும் மண்வளமும், நீர் வளமும் குறைந்த பகுதியை வன்புலம் என்பர். முல்லையும், குறிஞ்சியும் வன்புலம் என்ற பிரிவில் அடங்கும். இதற்கு மாறாக மண்வளமும் நீர்வளமும், நிறைந்த இடத்தை மென்புலம் என்பர். மருதமும் நெய்தல் நிலமும்இப்பிரிவில் அடங்குவன ஆகும்.

> **"வன்புலக் கேளிர்க்கு வருவிருந்து அயரும்**
> **மென்புல வைப்பின் நன்நாட்டுப் பொருந"[15]**

தினை, வரகு முதலிய பயிர் விளையும் நிலங்களையும் வான்நோக்கும் வறட்சியான நிலங்களையும் புன்புலம் என்பர். இதனை,

**"வித்தி வான்நோக்கும் புன்புலம்"**[16]

என்ற புறநானூற்று வரிகள் மூலம் அறியலாம்.

இவ்வாறாகப் பயிர்த்தொழிலுக்கு ஏற்ற நிலப்பகுதிகள் நீங்க, விளைவின்றி விடப்பட்ட நிலப்பகுதியைக் கால் நடைகளின் மேய்ச்சலுக்கென விடுவர். இவ்வாறு விடப்பட்ட நிலம் விடுநிலம் எனப்பட்டது. வேளாண்மைக்குப் பயன்பட்ட இடங்களுக்கு ஏற்றவாறு பெயரிட்டழைத்தது போலவே பயன்படாத நிலத்தையும் பிரித்தறிந்து பெயரிட்டிருந்தனர். சங்க கால இலக்கியங்கள் இத்தகைய பயன்படா நிலங்களைக் கரம்பை, முரம்பு என்ற பெயர்களால் குறிப்பிடப்பட்டுள்ளன. பயிர்த் தொழிலுக்குப் பயன்படாது புல்வகை வளர்ந்து கால்நடை மேயுமாறு விடப்பட்ட கரம்பு நிலம் '**விடுநிலக்கரம்பு**' எனப்பட்டது. இதனை,

**"விடுநிலக் கரம்பை விடர்அளை நிறைய"**[17]

என்ற பதிற்றுப்பத்து பாடல்வழி அறியலாம்.

அதாவது விளைவின்றி விடப்பட்ட நிலத்தினை உடைய தரிசுகளில் வெடிப்புகளில் நீர் நிறையும் என்பது இதன் பொருள்.

**நீர்வளம்**

பயிர்த் தொழிலுக்கு நிலத்தை அடுத்து நீர்வளம் இன்றியமையாததாகின்றது. ஒரு நாட்டின் வளமும், நலமும் நீர்வளத்தைக் கொண்டே அமைகின்றன. அதனால் பண்டைக் காலந்தொட்டே மக்கள் பயிர்த்தொழிலுக்குக் குறைவில்லா நீர்வளம் தேவை என்பதை உணர்ந்திருந்தனர். இத்தகைய நீர்நிலைகளை அமைத்துக் கொடுப்பது அரசனின் கடமையாகவும் கருதப்பட்டது. அதனால் அவனே உடம்பையும் உயிரையும் படைத்தவனாகவும் கருதப்பட்டான். இதனை,

**"நீரும் நிலமும் புணரியோர் ஈண்டு**
**உடம்பும் உயிரும் படைத்திசி னோரே**
**-----------------------------------------**

**நிலனெளி மருங்கின் நீர்நிலை பெருகத்**

**தட்டோர் அம்ம இவண்தட் டோரே**

**தள்ளா தோர்இவண் தள்ளா தோரே"**[18]

என்றது புறப்பாடல், கரிகால் சோழன் காடுளை அழித்து நாடாக்கிக் குளந்தொட்டு வளம் பெருக்கினான் என்பதை,

**"காடுகொன்று நாடு ஆக்கி**

**குளம் தொட்டு வளம் பெருக்கி"**[19]

என்று பட்டினப்பாலை கூறுகிறது.

பருவத்தே பயிர்செய்வதே பயிர்த்தொழிலுக்கு ஏற்றது. மழை பெய்யும் காலத்தில் பயிர் செய்தனர். பயிர்த்தொழிலுக்கு உதவும் வகையில் பெய்யும் மழையைத் **"தொழில் மழை"** என்ற தொடரால் குறிப்பிடப்படுகின்றது.

**"தொழில்மழை பொழிந்த பானாட் கங்குல்"**[20]

பண்டைத் தமிழர் நீர்நிலைகளை அமைக்கும் இடங்களைத் தேர்ந்தெடுப்பதிலும் சிறந்திருந்தனர். பள்ளமான பகுதிகளே அன்றி அறைகளையும் பொறைகளையும் இடையிடையே கரையாக அமையுமாறு பிறைவடிவில் குளம் அமைத்தனர்.

**"அறையும் பொறையும் மணந்த தலைய**

**எண்ணாள் திங்கள் அனைய கொடுங்கரைத்**

**தெண்ணீர் சிறுகுளம் .................."**[21]

குளங்களுள் சிறு குளம், பெருங் குளம் என இரண்டுவகை கூறப்படுகிறது. இவற்றுள் சிறுகுளத்து நீர் குடிப்பதற்கும், பெருங்குளத்துநீர் பயிர்த்தொழிலுக்கும் பயன்படுத்தப்பட்டது. நீர்நிறைந்த குளத்தைப் பாதுகாக்க காவலர் இருந்தனர். பெய்த மழை பயிர்த்தொழிலுக்கு ஏற்றமழை எனின் அதனைப் பயன்படுத்திக் கொண்டதோடு. எஞ்சிய நீரைக் குளத்தில் தேக்கி வைத்து மழைபெய்யாக் காலத்து அதனைப் பயன்படுத்திக் கொண்டனர் என்பதையும் அறியமுடிகின்றது.

பருவம் தொடங்குமுன் மழைபெய்யும் வாய்ப்பினை மேகத்தின் இயக்கத்தைக் கொண்டு அறிந்தனர். அதற்கேற்பத் தம் பயிர்த்தொழில்களை அமைத்துக் கொள்வர்.

**“பல்மர உயர்சினை மின்மினி விளக்கத்துச்**

**செல்மழை இயக்கங் காணும்”[22]**

குறிஞ்சி நிலமக்கள் உரியபருவத்தில் மழை பெய்யாவிடின் ஒன்றுகூடி மழைவேண்டிக் கடவுளரைப் பாடுவர். இதனை,

**“குன்றக் குறவன் ஆர்ப்பின் எழிலி**

**நுண்பலஅ ழிதுளி பொழியும்”[23]**

என்ற ஐங்குறுநூற்றுப் பாடல்வழி அறியமுடிகிறது.

மிகுந்தமழை பெய்தால் அதனைத் தடுத்து நிறுத்துவதற்கும் கடவுளைத் தொழுவர் என்பதனை,

**“ மலைவான் கொள்கென உயர்பலி தூஉய்**

**மாரியான்று மழைமேக்கு உயர்கெனக்**

**கடவுட் பேணிய குறவர் மாக்கள்**

**பெயல்கண் மாறிய உவகையர்”[24]**

என இப்பாடல் உணர்த்துகிறது.

குறிஞ்சி நிலத்தில் மலையினின்றும் வீழும் அருவியும், மலையில் அமைந்த சுனையும் குறிஞ்சியின் இயற்கை நீர்நிலையாகும். அருவி நீரும், சுனைநீரும் பயிர்த்தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்டன என்பதை,

**“மைபடு சிலம்பின் ஐவனம் வித்தி**

**அருவியின் விளைக்கும்”[25]**

**“அகல்வாய்ப் பைஞ்சுனைப் பயிர்கால் யாப்ப”[26]**

என்ற பாடலடிகளினின்றும் அறியலாம்.

**நிலத்தை உழுதல்**

உழவுத் தொழிலை மேற்கொள்பவர்கள் உழவர் எனப்பட்டனர். உழத்தல் என்பது இடைவிடாது முயலும் உடல் உழைப்பினைக் குறிக்கும் சொல்லாகும். இடைவிடாது உழைக்கும் மெய்ம்முயற்சி பயிர்த்தொழிலுக்கு வேண்டப்படுதலின் இத்தொழிலை உழவு என்ற சொல்லால் பண்டையோர் வழங்கினர் போலும். பழந்தமிழ் இலக்கியங்கள் உழவுத் தொழிலின் மேன்மையையும் உழவரின் சிறப்பையும் எடுத்தியம்புவது போல உழவு செய்முறைகளையும் அதற்குப் பயன்பட்ட கருவிகளையும் இவை தொடர்பான பிற செய்திகளையும் விரிவாகக் கூறுகின்றன.

உழுதொழில் என்பது உழுதல், உரமிடுதல், நீர்ப்பாய்ச்சுதல், விதைத்தல், களை கட்டல், காத்தல், அறுவடை, பதப்படுத்தல் எனப் பல கூறுகளாய் அமைந்தது ஆகும். இம்முறைகளைச் சங்கப் பாடல்கள் பல்வேறு நிலைகளில் பண்டைத் தமிழரின் உழுதொழில் திறனை வெளிப்படுத்துகின்றது.

நிலத்தைப் பண்படுத்தலாகும் பயிர்த்தொழிலுக்குப் பருவம் பார்த்துப் பயிர்செய்தல் இன்றிமையாதது எனினும் நன்செய்ப் பயிர்கள் நீர்வளம் மிக்கிருக்கும் பகுதியிலேயே விளைவிக்கப்பட்டது. வயல்களில் நாற்று நடுவதற்கு முன் நிலத்தைப் பலமுறை உழுவர். பெரும்பாணாற்றுப்படை எனும் நூலில் ஆசிரியர் உருத்திரங்கண்ணனார் சிறுசிறு அடைமொழிகள் மூலம் உழும் வகையைக் குறிப்பிடுவது நோக்குதற்குரியது.

**“குழிநிறை வலிவிச் செஞ்சால் உழவர்**
**நடைநவில் பெரும்பகடு புதலிற் பூட்டிப்**
**பிடிவாயன்ன மடிவாய் நாஞ்சில்**
**உடுப்புமுக முகக்கொழு மூழ்க ஊன்றித்**
**தொடுப்பறிந்து உழுத துளப்படு துடவை”**[27]

இவ்வுழவர்கள் ஏற்கனவே நிரம்ப வளம் உள்ளவர்கள் என்பதைக் குறிக்க 'குடிநிறை வல்சி' என்ற தொடரால் குறிப்பிட்டு அப்படி இருப்பினும் அவர்கள் செய்யும் உழவுத் தொழிலைச் சிறப்பாகச் செய்வர் என்பதைக் குறிப்பிட **'செஞ்சால் உழவர்'** என்றனர்.

உழவர்கள் நிலத்தை ஒருமுறை உழுதலை ஒருசாலுழவு என்றும் இருமுறை உழுதலை இருசாலுழவு என்றும் குறிப்பிடுவர். இங்கு செஞ்சால் என்றதால் பலமுறை நிலத்தை உழுது இருக்க வேண்டும்.

உழுவதில் நான்கு படிகள் இருந்தன. முதலில் உழுவது இரண்டாவது மற்றும் மூன்றாவதாகக் 'மறித்துழவு' 'தரிசுஉழவு' நைந்து சேறாக வேண்டுமென்றால் நான்காவது உழவு. உழவர்கள் நன்செய் நிலங்களில் சேற்று உழவும். புன்செய் நிலங்களில் புழுதி உழவும் செய்தனர்.

புழுதி விதை, சேற்றுவிதை என்ற இருவகை விதைப்பு முறைகளைக் கையாண்டனர். நிலத்தை நன்கு உழுது, உலரவிட்டு அதன்பிறகு நீர்பாய்ச்சி விதைகளைத் தெளிப்பர். இது புழுதி விதை எனப்படும். இதனை,

**" ----------- கான் உழுகுறவர்**

**சிலவித்து அகல இட்டென பல விளைந்து"**[28]

மலைக்காட்டில் குறவர் புழுதி விதை விதைத்ததை இப்பாடல் வரிகள் விளக்குகின்றன.

பண்டைய தமிழர்கள் நிலத்தை உழுவதற்கு எருதுகளையன்றி எருமைகளையும் பயன்படுத்தினர். இதனை பின்வரும் பாடலடி மூலம் அறியலாம்.

**"பெரு நெற்பல் கூட்டு எருமை உழவ"**[29]

நன்செய்யில் களையாக முளைத்திருந்த கோரை, நெய்தல் போன்றவற்றைக் களைந்தெறிவர் இவ்வாறு பல முறை உழுதபின்னர் தளம்பு என்ற கருவிகொண்டு வயலிலுள்ள மேடுபள்ளங்களைச் சமன்படுத்துவர்.

**“மலங்குமிளிர் செறுவின் தளம்பு தடிந்திட்ட”[30]**

எனவரும் பாடலடி இக்கருத்தினை விளக்கும்.

மழை பெய்தவுடன் பலமுறை நன்றாக உழப்பட்ட வயலினது செம்மண் நன்கு நெகிழ்ந்து கொடுக்கும் இக்கருத்தை,

**“------ உறுபெயல்**

**தண்துளிக்கு ஏற்ற பலவுழு செஞ்செய்**

**மண்போல் நெகிழ்ந்து ...................”[31]**

என்ற அடிகள் உணர்த்தும்.

**எருவிடுதல்**

விளைநிலங்களில் நல்ல உரமிட்டால் நல்ல விளைவைப் பெறலாம் என்பதை உழவர்கள் அறிந்திருந்தினர். அக்காலத்தில் எருவாகப் பயன்படுத்தப்பட்டவை. கால் நடைகளின் சாணமும், உலர்ந்து விழுந்த இலைதழைகளும் ஆகும். “கால்நடைகளின் சாணத்தைத் தாதெரு என்றனர். எருக்களைக் கொட்டி வைப்பதற்கென்றே விடப்பட்ட மன்றங்களில் அவற்றைச் சேர்த்து வைப்பர்.”[32]

பயிர்நெய்தலில் எருவிடுதல் மிகமுக்கியமானது. ஆகையால் ஏரினும் நன்றால் எருவிடுதல் என்கிறது.[33] ‘தொழு உரமும்’ தழை உரமும்கூட நிலங்களுக்கு இடப்பட்டன.

**“தொறுத்த வயல் ஆரல் பிறழ்நவும்”[34]**

**நீர் பாய்ச்சுதல்**

நன்செய் நெல்வயல்களில் பரவலாக நீர்நிறைந்து இருக்கும்படி நீர் பாய்ச்சுவர். என்பதை,

**“ஏர் பரந்த வயல், நீர் பரந்த செறுறன்**

**நெல் மலிந்த மனை, பொன்மலிந்த மறுகின்”[35]**

இப்பாடலடி மூலம் காணலாம்.

இவ்வயல்களுக்குக் குளத்திலிருந்தும் கிணற்றிலிருந்தும் நீரிறைத்துப் பாய்ச்சப் பெற்றது. நீரிறைப்போர் பாடிக்கொண்டே இறைப்பர். நீரினை முகந்திறைக்கிறவர் வரிசையாக நின்று இறைக்கின்றனர் இதனை மதுரைக்காஞ்சி எடுத்துரைக்கிறது.

**“நீர்ந்தெவ்வு நிரைத்தொழுவர்**

**பாடுசிலம்பு மிசையேற்றத்**

**தோடுவழங்கும் அகலாம்பியிற்**

**கயன்அகைய வயல்நிறைக்கும்”**[36]

இவ்வாறு உழவர்கள் தங்கள் நிலங்களுக்கு நீரினைப் பாய்ச்சுவர். உழைப்பின் களைப்பு தெரியாமலிருக்க அவர்கள் பாடிக் கொண்டே நீரினைப் பாய்ச்சுதலையும் இதன் மூலம் அறிய முடிகிறது.

## நாற்று நடுதல்

பலமுறை நன்றாக உழப்பட்டு களைநீக்கி உரமிட்டு நீர் பாய்ச்சப்பெற்ற வயல்களில் நாற்றுக்களை நன்றாக அழுந்த நடுவர் என்பதை

**“முடிநா றழுத்திய நெடுநீர்ச் செறுவில்”**[37]

**“நீருறு செறுவில் நாறுமுடி யழுத்த”**[38]

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. மலைபடுகடாம் என்ற நூலில் நெற்பயிர் நன்கு பருத்து முதிர்வதற்கு நல்ல காற்று இன்றியமையாததாகலின் நான்கு திசைக் காற்றும் ஊடறுத்து வீசப் பெற்றமையால் நன்கு விளைந்தன எனக் காற்றின் இயக்கத்தைக் காரணமாக்கியதை

**“பால்வார்பு கெழீஇப் பல்கவர் வளிபோழ்வு**

**வாலிதின் விளைந்தன ஐவனம் வெண்ணெல்”**[39]

என்றதால் அறியலாம். நாற்று நடும்போதே நான்கு பக்கமும் காற்று ஊடறுத்துச் செல்லுமாறு இடைவெளி விட்டு நட்டனர். அவ்விடவெளியினால் பயிர்கள் கிளைத்துச்

செழித்துப் பால்கட்டி வளர்ந்தன. நெல்லின் அரிசி முதிர்வதற்கு முன்னர்ப் பால் உருவத்தே இருத்தல் இயல்பு. இப்பால் மிகுதியாக இருந்தால் நெல் பருத்திருக்கும்.

இக்காலத்திலும் உழவுத் தொழிலாளர்களுக்கு அறிவுரை கூறும்போது பயிர்களின் ஊடே காற்று நன்கு புகுந்து இயங்கும்படி நடுகை செய்யுமாறு அறிவுறுத்தலைக் காணலாம்.

**பயிர் பாதுகாப்பு**

நெல் வயல்களில் தொழில் செய்யும் உழவர்கள் இடையிலேயே தோன்றும் களைகளைக் களைந்தெறிவர். களைகளேயன்றிப் பிற உயிர்களாலும் பயிர்கட்கு இடையூறுகள் உண்டாகும். நாற்று நடும்போதே அவற்றை நண்டுகள் அழித்து விடுவதுண்டு. விளைந்தபின் எலிகள் கதிர்களை கடித்துச் சென்று விடுவதுண்டு.[40] மயில்கள் கதிர்களில் உள்ள நெல் மணிகளைக் கொத்தி விடுதலும் உண்டு.[41]

புன்செய் நிலத்து விளைந்த தினைப்பயிரைக் காவல் காத்த செய்தியைக் குறிப்பிடும் பாடல்கள் பல சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. நிலம் முழுமையும் பார்வையில்படும்படி பரண்களை உயரமான இடத்தில் அமைப்பர்.

**“களிற்றுத் துப்பு அஞ்சா புலியதள் இதணத்து**
**சிறுதினை வியன்புலம் காப்பின்”**[42]

பரணில் நின்றுகொண்டு இளமகளிர் கவண், குளிர், தட்டை ஆகிய கருவிகளின் துணையால் பயிர்களைக் கவர வரும் பறவைகளை ஓட்டுவர்.

இவையன்றி விலங்குளிடமிருந்து பயிர்களை பாதுகாக்க வேலி அடைத்தலும் உண்டு. அந்ததந்த நிலத்தில் வளரும் மரஞ்செடி கொடிகளைக் கொண்டே வேலியை அமைப்பர் இதனை வாழ்முள்வேலி என்றனர்.

**“வாழ்முள் வேலிச் சூழ்மிளைப் படப்பை”**[43]

இதுமட்டுமன்றி முள்ளை வெட்டிக் கொணர்ந்து கட்டும்வேலியும் அமைக்கப்பட்டது. இதனை இடுமுள்வேலி என்று குறித்தனர்.

**“இடுமுள் வேலி எருப்படு வரைப்பு”**[44]

இவ்வாறாக பல்வேறு வேலிகளை அமைத்து பயிர்களுக்கு பலவகையாலும் வரும் அழிவைத் தடுத்து பயிர்களைக் கண்ணெனக் காத்தனர் உழவர்கள்.

**அறுவடை**

அறுவடை நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகள் தமிழ்இலக்கியப் பாடல்களில் காணப்படுகின்றன. நெல் அறுவடை பற்றிப் பெரும்பாணாற்றுப் படையில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. நெற்கதிர்கள் நன்றாக விளைந்து பின்னிப் பிணைந்து வரப்பை உரசிக் கொண்டு கிடக்கின்ற காட்சி சங்கப் புலவர்களால் பல்வேறு அழகிய உவமைகளில் வருணிக்கப்பட்டுள்ளது. நெல் வயல்களில் அறுவடை செய்யத் தொடங்குமுன் வயல்களில் கூடமைத்து வாழும் பறவைகளை ஓட்டும் வகையில் தண்ணுமை எனப்பட்ட ஒருவகை இசைக்கருவிகளை முழக்குவர். நெல் அரிவாளைக் குயம் என்பர்.

**“கூனிக்குயத்தின் வாய்நெல் அரிந்து”**[45]

அதன் கூர்மை குறையுமாயின் அந்நெல் வயல்களில் புதையுண்டு கிடக்கும் ஆமை ஓட்டில் அதனைத் தீட்டிக் கொள்வர்.

அறுவடை செய்தவற்றை மருதமரங்களின் நிழலில் அகன்ற இடங்கள் நிரையும்படி போராகக் குவித்து வைப்பர். பின்னர் அந்நெல் போர்களினுடைய அடியை எடுத்து விரித்து கடாவிடுவர். கடாவிடுதல் விடியற்காலையில் நடைபெறும்.

பின்னர் நெல்லினின்றும் குற்றமறும்படி வைக்கோலையும் கூளத்தையும் நீக்கி உலரவைப்பர். அவை உலர்ந்த பின்னர் மேல்காற்றிலே தூற்றி நெல்லைக் குவிப்பர். தூய்மை, செய்யப்பட்ட நெல்லை நெற்கூடுகளில் இட்டு வைப்பர். அந்நெற்கூடுகள் ஏணிக்கும் எட்டாத அளவு மிகநெடிய வடிவுடன் மேல்பகுதி திறந்து நெல்லைக் கொட்டுவதற்கு ஏற்றாற்போல இருக்கும். அக்கூடுகள் புரிசுற்றியும் சுற்றாமலும் மலைபோல் அமைக்கப்படும். கூடுகள் உள்ள நெல்லின் அளவைக் குறிக்கப் புள்ளிகள் இடுவர். இதனை

**“ஏணி எய்தா நீள்நெடு மார்பின்**

**முகடுதுமித்து அடுக்கிய பழும்பல் உணவின்**

**குமரி மூத்த கூடோங்கு நல்லில்”[46]**

**“செவ்வி சேர்ந்த புள்ளி வெள்ளரை**

**விண்டுப் புரையும் புணர்நிலை நெடுங்கூட்டுப்**

**பிண்ட நெல்”[47]**

என்ற பாடல்கள் மூலம் அறியலாம்.

கார்காலத்தில் விதைக்கப்பட்ட புன்செய் பயிர்கள் வேங்கை மரங்கள் மலரும் பருவத்தில் அறுவடை செய்யப்பட்டன. அகன்ற பெரிய தினைப் புனங்களில் இரவு நேரங்களிலும் அறுவடை செய்தனர். அப்பொழுது விலங்குகள் ஊறு செய்யாதிருக்க வில்லும். தொண்டகப்பறையும் அறைந்து அறுவடை செய்வர்.

கதிர்களுடன் கூடிய தினை, வரகு ஆகியவற்றைத் தாளுடன் அரிவர். அவ்வாறு அறிந்தவற்றைப் பாறைகளின் மேல் குவித்து வைப்பர். பின்னர் வரகு, தினை ஆகியவற்றை தாம்படிக்க எருது அல்லது யானையைப் பயன்படுத்துவர். இதனை,

**“மென்தினை நெடும்போர் புரிமார்**

**துஞ்சுகளிறு எழுப்பும் தம்பெருங்கல் நாடு”[48]**

எனும் அடிகள் உணர்த்துகின்றன.

மிகக் குறைந்த அளவு விளைச்சல் எனின் இளைஞர்கள் காலால் மிதித்துத் தானிய மணிகளைப் பிரித்தெடுப்பர். என்பதை,

**“எருதுகால் உறாஅது இளைஞர் கொன்ற**

**சில்லினை வரகின் புல்லென் குப்பை”[49]**

எனும் அடிகள் உணர்த்துகின்றன.

இவ்வாறு தாங்கள் விளைவித்த பயிர்களை அறுவடை செய்தனர்.

### மறு பயிர்

நன்செய்யில் விளைந்த நெல்லை அறுவடை செய்தபின்னர் அதனுடைய அடிப்பகுதி எஞ்சி நிற்கும்,இதனை அரிகால் என்பர். நிலத்தை நன்றாக ஆழ உழும்பொழுது அரிகால் வேரோடு பெயர்ந்து நீங்கிவிடும். அவ்வாறு உழப்பட்ட வயல் அரிகால் மாறிய வயல் எனப்படும். நெல்லறுத்த வயலில் மறுபடியும் உழுத ஈரமுடைய சேற்றில் மீண்டும் பயிர்செய்வர் இதனை நற்றிணை,

**"அரிகால் மாறிய ஆங்கின் அகல்வயல்**
**மறுகால் உழுத ஈரச் செறுவின்"**[50]

என்றது. இவ்வாறு மீண்டும் பயிரிடும்பொழுது பயறுகள் விதைத்தல் மரபு. இதனை,

**"அரிகால் பெரும்பயிறு நிறைக்கும்"**[51]

எனவரும் ஐங்குறு நூற்றுப் பாடலடியால் உணரலாம்.

இவ்வாறு மாற்றுப் பயிர்விளைவிக்கும் முறையில் பண்டைத் தமிழர் பயிரிட்டு ஆண்டு முழுவதும் உணவுப் பொருள்களை விளைவித்து வந்தனர்.

### பிறபயிர் வகைகள்

தினைப் புனங்களில் தினையொடு கலந்து பருத்தியையும் விதைப்பர். அத்தினை முதிர்ந்து கொய்யப்பட்டபின்னர் பருத்தி விளைய அதனைக் கொள்ளுதல் இயல்பு.

**"பரீஇ வித்திய ஏனல்"**[52]

தினைக்கதிர் அரிந்த பிறகு அதன் அடியில் மீண்டும் கிளைத்துக் கதிர் உண்டாகும். இதனை மறுகால் என்பர்.[53]

தினைக் கதிர்களை அரிந்தவுடன் அவரையை விதைப்பர் இந்த அவரை வளர்ந்து சிறுதினை மறுகாலில் படர்ந்து காய்க்கும்.

**“பெரும் புனக் குறவின் சிறுதினை மறுகால்**

**கொழுங்கொடி அவரை பூக்கும்”[54]**

புன்செய் விளைச்சலில் ஒருநிலப் பகுதியில் ஒருவகை பயிரை மட்டும் விளைவிக்காமல் பல்வேறு பயிர்களையும் விளைவிப்பர். ஒரு பகுதியில் தினை, மற்றொரு பகுதியில் எள், பிறிதொரு பகுதியில் வரகு எனவும் விளைவித்துள்ளனர் என்பதை,

**“சிறுதினை கொண்ணைக் கவ்வை கறுப்பக்**

**கருங்கால் வரகின் இருங்குரல் புலர”[55]**

என்ற பாடலடிகளால் உணரலாம். இவ்வாறு பயிர்களை மறுசுழற்சி முறையில் பயிர் செய்தனர். இதனால் மண்ணின் வளமும் குறையாமல் இருந்தது.

**உழவுக்கு பயன்பட்ட கருவிகள்**

சங்க காலத்தில் பயிர்த்தொழில் செழிப்புடன் வளம்பெற உழவர் சமுதாயத்தின் தளர்விலா உழைப்பே மூலதனமாக அமைந்தது. மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டதேவைகளுக்கு கால்நடைகள் பயன்படுத்தப்பட்டன. வேளாண்மையோடு இயைபுடைய தொழிலாக உழவர்களே கால்நடைகளை வளர்த்துக் காத்தனர். உழவு வேலைகள் யாவற்றுக்கும் கால்நடைகள் இன்றிமையாதன ஆகும். உழுதல் களத்தில் போர் அடித்தல், விளைந்த தானியங்களை ஏற்றிச் செல்லல் முதலான வேலைகட்கு இவை பயன்பட்டன. ஆடு. மாடு இவற்றின் சாணம் எருவாகப் பயன்பட்டது.

கால்நடைகளோடு இரும்புக் கருவிகளும் சேர்த்து உழுதொழிலில் பயன்படுத்தப்பட்டது. கல்லும், மரமும் வேளாண் கருவிகளக இருந்த நிலை மாறி இரும்புகளின் பயன்பாடு அதிகரிக்க தொடங்கியது. “வேளாண்மையில் இரும்புக் கருவிகளின் பயன்பாடு அதிகரிக்க அதிகரிக்க உற்பத்தி பெருகிக் கொண்டு போயிற்று இன்னும் திருத்தமான கருவிகளுடன் மனிதனின் உற்பத்திக் திறனும், புதிதான

நிலங்களும் சேர்ந்து கொண்டு உற்பத்தியில் ஒரு பாய்ச்சலையே ஏற்படுத்தியது.''[56] பயிர்த்தொழிலுக்குப் பயன்பட்ட கருவிகளான கலப்பை உருளை முதலியவற்றை வைக்கத் தனிக்கொட்டில்கள் இருந்தன. இதனை,

**``குறுஞ்சாட் டுருளையொடு கலப்பை சார்த்தி**

**நெடுஞ்சுவர் பறைந்த புகைசூழ் கொட்டில்''[57]**

என்றதால் அறியலாம்.

## கலப்பை கருவி

பயிர்த்தொழிலின் முதல் செயலான நிலத்தைப் பண்படுத்தும் உழுதற்றொழிற்குப் பயன்பட்ட இன்றிமையாகக் கருவி 'கலப்பை' என்பதாகும். இக்கருவி நாஞ்சில் என்ற சொல்லாலும் குறிக்கப்பட்டுள்ளது. இந்நாஞ்சிலின் அமைப்பு பெண் யானையின் வாயை ஒத்து வளைந்தும், அதில் பொருத்தப்பட்டுள்ள பெருங்கொழு உடும்பின் முகம் போன்றும் தோற்றமுடையது. இக்கலப்பையைக் கொண்டு வறண்ட நிலத்தையும் உழுதனர்.

**``பிடிவாய் அன்ன மடிவாய் நாஞ்சில்**

**உடும்புமுக முழுக்கொழு மூழ்க ஊன்றி''[58]**

என கலப்பை கருவி கொண்டு நிலத்தினை உழுதலைக் காணலாம்

## தளம்பு கருவி

நிலத்தை நன்றாக உழுத பின்னர் சமமாக இருத்தற்பொருட்டுத் தளம்பு என்னுங் கருவிகொண்டு சேற்று வயலைச் சமப்படுத்துவர்

**``மலங்குமிளிர் செறுவில் தளம்பு தடிந்திட்ட''[59]**

என்றும் புறநானூற்றின் பாடலடிகள் தளம்பு எனும் கருவி பற்றி கூறுகின்றது.

**களைஎடுக்கும் கருவி**

வயலில் வளரும் களைகளைக் கையால் பிடுங்கி எறிவர் ஈரமின்றிக் காய்ந்து விட்ட களைகளைத் 'துளர்' என்ற கருவியால் களைவர்.

**"கோடுடைக் கையர் துளர்எறி வினைஞர்"**[60]

**நீர் இறைப்பு கருவிகள்**

வயல்களுக்கு நீரைப் பாய்ச்சுவதற்குச் சில இறைப்புக் கருவிகள் பயன்படுத்தப்பட்டன. குளத்திலும். கிணற்றிலும் உள்ள நீரை ஏற்றம் வைத்து இறைத்தனர். அவ்வேற்றத்தில் அகன்ற வாயையுடைய ஆம்பி என்ற கருவி பொருத்தப்பட்டிருக்கும். இதனை பன்றிப்பத்தர் என்ற சொல்லாலும் குறிப்பிடுவர்.

**"ஏற்றமொக வழங்கும் அகலாம்பி"**[61]

நீரிறைக்கப் பயன்பட்ட மற்றொரு கருவி கிழார் எனப்படும்.

**"மென்தொடை வன்கிழார்"**[62]

மெத்தென்ற கட்டுக்களையுடைய பூட்டைப் பொறி என்று கூறுவர்

**ஓசை எழுப்பும் கருவிகள்**

புன்செய் பயிர்களாகிய தினை, வரகு ஆகியவை நன்றாகச் செழித்து வளர்ந்ததும் அவற்றிலுள்ள மணிகளை உண்ணவரும் பறவைகளை விரட்டக் குளிர், தட்டை ஆகிய கருவிகளைப் பயன்படுத்துவர். குளிர் என்பது கிளிகளை ஓட்டுவதற்கு மூங்கிலை வீணைபோல் கட்டிப் பயன்படுத்துவது ஆகும்.

தட்டை என்பது தட்டப்படுவதனால் அப்பெயர் பெற்றது. மூங்கிலைக் கண்ணுக்குக் கண் உள்ளாக நறுக்கிப் பலவாகப் பிளந்து ஓசை உண்டாக ஒன்றிலே தட்டப்படுவது. இதனை

**“தழலும் தட்டையும் குளிரும், பிறவும்**

**கிளிகடி மரபின”[63]**

என்ற சான்றுகளின்றும் அறியலாம்.

**கணை, நெகிழி, அடார்**

தினைப்புனங்களில் கிளிபோன்ற பறவைகளே அன்றி விலங்குகளும் பயிரைக் கவர்ந்துண்பன. விலங்குகள் புகுந்துவிட்டால் அவற்றைக் கணை எய்து விரட்டுவர். யானை போன்ற விலங்குகளைக் கொள்ளிக்கட்டையினால் விரட்டுவர். இக்கொள்ளிக்கட்டை நெகிழி என்ற சொல்லால் சங்க இலக்கியத்தில் குறிக்கப்பட்டுள்ளது. பன்றியைப் பிடிக்கப் பெரிய கல்லான ஒரு பொறியை வைத்திருப்பர். அப்பொறி அடார் என்ற சொல்லால் வழங்கப்பட்டது.

**“ஒளிதிகழ் நெகிழியர் கவணையர் வில்லர்**

**களிறென ஆர்ப்பவர் ஏனல் காவலரே”[64]**

**“சிறுபொறி மாட்டிய பெருங்கல் அடார்”[65]**

**கிணை, தண்ணுமை**

விளைந்த நெல்லை அறுவடை செய்யப் புகுமுன் வயலில் கூடுகட்டி வாழும் பறவைகளை விலக்கிச்செல்ல தண்ணுமை என்னும் பறையை முழக்குவர். இதனை,

**“வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇப்**

**பழனப் பல்புள் இரிய”[66]**

என்ற பாடலடி மூலம் அறியலாம்.

**தானியங்களை சேமித்து வைக்கும் கருவிகள்**

நன்செய் விளைவாகிய நெல்லைச் சேமித்து வைக்கும் இடம் கூடு, நெடுங்கூடு என்றும், புன்செய்ப் பயிராகிய தினை, வரகு ஆகியவற்றைச் சேமித்து வைக்கும் இடம்

குதிர் என்றும் தொடுகூடு என்றும் வழங்கப்பட்டுள்ளதைச் சங்கப் பாடல்களின்றும் அறியமுடிகிறது.

## நெல்லின் சிறப்பு

சங்க கால மக்களிடம் காணப்பட்ட பண்ட மாற்று முறையில் நெல்லே பிற பொருட்கள்களுக்கு அதிகம் பண்டமாற்று செய்யப்பட்டது. ‘‘செந்நெல் உணவினை உண்ணுதல் வளமான வாழ்வின் அறிகுறியாய்க் காட்டப்படுகின்றது.’’[67] முல்லை நில ஆயர்மகளிர் தயிரையும், மோரையும் கொடுத்து நெல்லைப் பெற்றனர். [68] குறிஞ்சி நில வேடன் மான் இறைச்சியைக் கொடுத்து நெல்லைப் பெற்றான்.[69] நெய்தல் நிலப் பரதவர் குலப் பெண் உப்புக்கு நெல்லைப் பெற்றாள்.[70] அனைத்து நில மக்களின் அதிகம் விரும்படும் உணவுப் பொருளாக நெல்லே சிறந்து விளங்கியது.

## நெல் வகைகள்

சங்க இலக்கியங்களில் சிலவகை நெல்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள் ஐவனநெல், தோரைநெல், மூங்கில்நெல் போன்றவை குறிஞ்சி, முல்லை நிலங்களிலும், வெண்நெல், செந்நெல் என்பன மருதநிலங்களிலும் விளைவனவாகும்.

## ஐவனநெல்

ஐவனநெல் மலைவாழ் மக்களால் பயிரிடப்பட்ட முக்கியமான நெல் வகையாகும். இதனை,

**‘‘ஐவனம் காவலர் பெய்தீ நந்தின்**
**ஒளிதிகழ் திருந்துமணி நளியிரு ளகற்று**
**வன்புல நாடன் வயமான்பிட்டன்’’** [71]

குறிஞ்சி நிலத்தில் விளையும் நெல் இதனை மலைநெல் என்பர். மலைச்சாரலிலுள்ள காடுகளைத் தீயிட்டுக் கொளுத்திச் செய்த புன்செய்க்

கொல்லையில் ஐவன நெல்லை விதைப்பர். மலையருவியினையுடைய பரந்த நிலத்திலும் இந்நெல்லைப் பயிரிடுவர் இக்கருத்துக்களை,

**"துறுகல் அடுக்கத்து வில்லோர் மாற்றி ஐவனம்"**[72]

**"அருவிப் பரப்பில் ஐவனம் வித்தி"**[73]

எனவரும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

## மூங்கில் நெல்

புல்லிய இலையையுடைய மூங்கிலில் நெல் விளையும். இது வெண்மையான நிறமுடையதாய் இருக்கும். இதனை வெதிர்நெல் என்றும் வழங்குவர்.

**"புல்லிலை வெதிர நெல்லினை காடே"**[74]

**பைதறு நெடுங்கழை பாய்தலின் ஒய்யென**

**வெதிர்படு வெண்ணெல் வெவ்வறைத் தாஅய்**

**உகிர்நெரி ஓசையில் பொங்குவன பொரியும்"**[75]

மூங்கில் நெல் வெப்பமான பாறைமீது உதிர்ந்து பொரியும். அவ்வாறு ஓசைக்கு நகத்தை நெரிக்கின்ற ஓசை உவமையாகக் கூறப்பட்டது.

## தோப்பி நெல்

களர் நிலத்தில் விளையும் நெல்வகையாகும் ஈந்தினது சிவந்த விதையைப் போன்று மேட்டு நிலத்தில் விளையும் தோப்பி என்ற நெல்கொண்டு கள் தயார் செய்வர். இது வீட்டிலேயே சமைக்கப்படும் கள்ளாகும்.

**"இல்லடு கள்ளின் தோப்பி பருகி"** [76]

என்று பெரும்பாணாற்றுப்படை தோப்பிநெல்வகைப் பற்றி குறிப்பிடுகின்றது.

**தோரை நெல்**

இந்நெல் வகையும் மேட்டு நிலப்பகுதியில் விளைவதாகும். இது குறுகிய கதிர்களை உடையது. பருவ மழையில் விதைத்த நெல் அம்மழை நீரைக் கொண்டே அழகிய குலைகளோடு முற்றி விளையும். இக்கருத்துகளை,

> **"நறுங்காழ் கொன்று கோட்டின் வித்திய**
>
> **குறுங்கதித் தோலை"[77]**
>
> **"புயல் புனிறு போகிய பூமலி புறவின்**
>
> **அவல்பதம் கொண்டன அம்பொதித் தோரை"[78]**

என்ற மலைபடுகடாம் பாடலடிகள் விளக்குகின்றன.

**சாலி நெல்:**

பொருநராற்றுப் படையில் ஆற்றுநீர் வளத்தால் மிகுந்த விளைவைத் தரும் ஒருவகை, நெல்லாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. காவிரி பாயும் சோழ நாட்டில் ஒரு வேலி நிலத்தில் ஆயிரங்கலம் நெல் விளையக் கூடிய சாலி நெல்லைப் பயிர் செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். இதனை,

> **"சாலிநெல்லின் சிறைகொள் வேலி**
>
> **ஆயிரம் விளையுட் டாகக்**
>
> **காவிரி புரக்கு நாடு"[79]**

என்ற பாடலடிகள் குறிப்பிடுகின்றன.

**முடந்தை நெல்**

நீர் நிரம்பிய வயலில் விளையக்கூடியது நெல்மணியின் கனத்தைத் தாங்கமாட்டாது தாள் சாய்ந்து வளைந்து கிடக்கும் நெல்லை முடந்தை நெல் என்றனர்.

> **"முடந்தை நெல்லின் கழையமல் கழனி"[80]**

என்ற பதிற்றுப்பத்தின் பாடலடிகள் முடந்தை நெல்பற்றி எடுத்துரைக்கின்றது.

**வெண்ணெல்**

வெண்ணெல் பயிரிடக் குளத்து நீர் பயன்படுத்தப்பட்டது.

**"குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்"**[81]

வெண்ணெல் விளைந்த ஊர் பெறற்கரிய ஒன்றாகக் கருதப்பட்டு வந்துள்ளது.

**"வெண்ணெல் வைப்பின் நல்நாடு"**[82]

என்றும் வெண்ணெல் பயிரிட்ட முறையை நம்மால் அறியமுடிகின்றது.

**செந்நெல்**

செந்நெல்லை மருதநிலக் கழனியில் விளைவிப்பர். நெல் வகைகளில் சிவந்தநெல் சிறந்தது. அதிலும் இந்நெல் பழையதாயின் உயர்தரமான நெல்லாகக் கருதப்படும்.

**"செந்நெலஞ் செறுவிற் கதில்கொண்டு"**[83]

**"பழுந்செந்நெல்லின் முகவை கொள்ளாள்"**[84]

எனவரும் பாடலடிகள் இதனை தெளிவுபடுத்துகின்றன.

**தினைப்பயிர்**

சங்க இலக்கியப் பாடல்களில் புன்செய் வேளாண்மை பற்றிய குறிப்புகளே பெருமளவு காணப்படுகிறன்றன. அதிலும் தினை பற்றிய பல்வேறு செய்திகள் பலபாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. தினை என்னும் பயிர்வகை குறிஞ்சி நிலத்தின் சிறந்த விளைபொருளாகும். தினையின் வகைகளாகச் சிறுதினை, செந்தினை ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன.

செந்தினையின் தாள் கரும்பைப் போன்றிருக்கும் என்பதைக் குறுந்தொகை,

**"கரும்புமருண் முதல பைந்தாள் செந்தினை"**[85]

என்கிறது.

பருவ மழையை எதிர்நோக்கி விளைவிக்கப்பட்ட தினையை விட நீர்பாய்ச்சி விளையும் தினை முன்னர் விளையும், என்பதை அகநானூறு

**''கொய்யா முன்னுங் குரல்வார்பு தினையே**

**அருவி யான்ற பைங்கால் தோறும்**

**இருவி தோன்றின பலவே''**[86]

என்று சுட்டுகின்றது.

**வரகு**

தமிழகத்தில் மட்டுமல்லாமல் இந்தியாவின் பல வறண்ட பகுதிகளில் இருந்த மக்களுக்கு முக்கியமான உணவாக திகழ்ந்தது வரகு ஆகும்.

வரகு என்னும் புன்செய் பயிர் செம்மண் முல்லை நிலத்தின் பயிராகும். கார்காலத்தில் செழித்து வளரும். இதனை,

**''செவ்வி கொள்வரகின் நெஞ்சுவற் கலித்த**

**கல்வை நாற்றின் கார்இருள் ஓர்இலை**

**----------------------------------------**

**கார் எதிர் தண்புனம் காணின், கைவளை''**[87]

என்ற பாடல்வழி உணரமுடிகிறது.

சிவந்த மேட்டு நிலத்தில் கார்கால மழையின் ஈரத்தில் பலமுறை புழுதி மயங்க உழுது வரகு விதைப்பர். வரகு தன் இலை தழைத்துப் பெருகி மெல்லிய மயிலினது ஈன்றணிய பேடையைப் போன்று ஓங்கி கரிய தண்டு நீண்டு எல்லாம் ஒரே நேரத்தில் சூல் விரிந்து ஒரே சீராய் கதிரினது அடியும் தலையும் ஒழியாமல் செழுமையாக மிகக் காய்க்கும்.

இக்கவின்மிகு காட்சியைப் புறநானூற்றுப் பாடலொன்று.

**''வாலிதின் விளைந்த புதுவர கரிய''**[88]

எனக் கூறுகிறது.

வரகினைக் கதிரோடு கூடிய தட்டைகளினிறும் பிரித்தெடுக்க எருதுகளை மிதிக்க விடுவர். கதிர்களினின்றும் உதிர்ந்த வரகினை அகன்ற பாறையிற் குவித்து மகளிர் தூற்றி எடுப்பர்.

**“கவைக்கதிர் வரகின் கால்தொகு பொங்கழி**

**கவட்டிடப் பொருத பல்சினை உதிர்வை”**[89]

வரகானது புறாவின் முட்டை போன்று இருக்கும் என்பதை,

**‘‘புறவுக் கருவன்ன புன்புல வரகு”**[90]

என்றும் நெடுங்கொத்தை உடைய பூளைப்பூப் போன்று இருக்கும் என்பதை,

**“நெடுங்குரல் பூளைப் பூவி னன்ன**

**குறுந்தாள் வரகுன் குரள் அவிழ்ச் சொன்றி”**[91]

என்றும் வருணிக்கப்பட்டுள்ளது.

**தென்னை**

சங்கப் பாடல்களில் வரும் தாழை, தெங்கு என்ற சொற்கள் தென்னை மரத்தைக் குறிப்பன. நீர்வளஞ் சான்ற மருத நிலப்பகுதியில் தென்னை நன்கு வளர்ந்ததற்கான குறிப்பு காணப்படுகிறது.

**“ஒலி தெங்கின் இமிழ் மருதின்”**[92]

**“தாழ் தழைத் தண் தண்டலை”**[93]

சங்கத் தமிழர் தென்னை மரங்களுக்கிடையே பாக்கு மரங்களை வைத்து வளர்த்தனர் என்ற குறிப்பு பெரும்பாணாற்றுப்படையில்,

**“மழைவீழ்ந்தன்ன மாத்தாட் கமுகின்**

**புடைசூழ் தெங்கின் முப்புடைத் திரள்காய்”**[94]

என்று கூறப்பட்டுள்ளது.

**உளுந்து**

நன்கு மழை பெய்த கார்ப்பருவத்தின் இறுதியில் விதைத்து வளர்ந்த உளுந்து முன்பனிப் பருவத்தில் காய்பிடிக்கும். உளுந்தின் காய் மயிர்க்கால் உடையதாகவும், இலைகள் அகன்றதாகவும் இருக்கும்.

**“இரும்பனிப் பருவத்தில் மயிர்க்காய் உளுந்தின்**

**அகலிலை அகல வீசி”**[95]

உழுந்தின் தோலைப் பிரிக்க நன்றாகத் துவைப்பர் என்பது,

**“உளுந்தினுந் துவ்வாக் குறுவட்டா நின்னில்”**[96]

என்ற மருதக்கலிபாடலடியாலும் பண்டை நாளில் உளுந்தை உடைப்பதற்கென்றே கழுந்துள்ள தடியைப் பயன்படுத்துயுள்ளனர் என்பதை

**“உழுந்துடைக் கழுந்தின் கரும்புடைப் பணைத்தோள்”**[97]

என்ற குறுந்தெகைப் பாடலடியாலும் அறியலாம்.

பண்டைய இலக்கியத்தில் இப்பயிர் உழுந்து என்று அழைக்கப்பட்டது. இது தமிழகத்தில் பரவலாகப் பயிரிடப்பட்ட ஒரு பயிராகும். என்பதை,

**“-----------உழுந்தின்**

**ஆகல இலை அகல வீசீ”**[98]

நற்றிணை மூலம் அறியமுடிகிறது.

**கொள்ளு**

கரம்பை நிலத்தில் கொள்ளு விளையும், நிலத்தை நன்கு உழுது கொள் விதைப்பர்.

**“கொள் உழுவியன் புலத்துழை கால்ஆக”**[99]

இடமகன்ற பெரிய நிலங்கள் தோறும் கழுதையேர் பூட்டி நன்றாக உழுது வெள்வரகும் கொள்ளும் விதைத்தல் பண்டையோர் முறையாகும்.

**பயறு**

இதுதமிழ் நாட்டில் பன்னெடுங் காலமாகவே பயிரிடப்பட்டு வருகிறது.

**“பைம்பயிறு உதிர்த்த கோதின்”**[100]

சங்க இலக்கியத்தில் பயின்றுவரும் பயறு என்ற சொல் பயற்றம் பயிரைக் குறிக்கும்[101] பயறு பின்பனிக் காலத்தில் முதிர்வது. பழங்கொல்லைகளில் முளைத்துக்கிடக்கும் செடிகொடிகள் மண்ணில் புதையும்படி நன்கு உழுவர். உழுத அம்மண்ணில் மேலும் எருவிட்டுப் பயிற்றை விதைப்பர். அப்பயிர் நன்கு தழைத்து வளரும்.

**“முதைபடு பசுங்காட்டு அரிற்பவர் மயக்கிப்**
**பகடுபல பூண்ட உழவுறு செஞ்செய்**
**இடுமுறை நிலப்பி ஆகுவினைக் கலித்துப்**
**பாசுஇலை அமன்ற பயறு”**[102]

பயறு காய்க்குங்கால், கைவிரல்கள் ஒன்று சேர்ந்து இருப்பது போல் குவிந்து இருக்கும். பின்னர் விரிந்து காய்க்கும்.

**“அரிகாற் பெரும்பயறு நிறைக்கும்”**[103]
**....................................கூம்பிப்**
**பற்றுவிடு விரலிற் பயறுகாய் ஊழ்ப்ப”**[104]

பூவோடு கூடிய பயற்றங் கொத்தினைக் காஞ்சிமரப் பூங்கொத்துகளுக்கு உவமை கூறுவது உண்டு.

**“பயறுபோல் இணர பைந்தாது படீஇயர்**
**உழவர் வாங்கிய கமழ்பூ மென்சினைக்**
**காஞ்சி.............................................”**[105]

என்று பயறுபற்றி சங்கப்பாடல்கள் கூறுகின்றன.

**எள்ளு**

இதுவும் தினை, வரகு போன்றே கார்காலத்தில் பயிரிடப்படும். கார்ப்பருவ மழை தொடங்கியதும் விதைத்துக் கூதிர்காலத் தொடக்கத்தில் அறுவடை செய்வர். போதிய அளவு பருவமழை பெய்து விளையும். எள் ஒரு கைப்பிடிக்குள் ஏழுகாய் மட்டுமே கொள்ளும் அளவிற்குப் பருத்து நெய்மிக்கனவாய் நன்கு விளையும்.

> **“நீலத் தன்ன விதைப்புனம் மருங்கின்**
>
> **மகுளி பாயாது மலிதுளி தழாலின்**
>
> **அகளத் தன்ன நிறைசுளைப் புறவில்**
>
> **கௌவை போகிய கருங்காய் பிடியேழ்**
>
> **நெய்கொள ஒழுகின பல்கவர் ஈர் எள்”[106]**

எள்ளின் தோடுகள் நீலமணி போன்ற நிறமுடையவை. இளங்காயாக இருக்கும்போது போதியமழை பெய்யாவிடின் மகுளி என்ற நோய் தாக்கும் இதனை அரக்கு என்றுங் கூறுவர். மகுளி நோய் விழுந்த எள்ளின் நெய் கசப்புச்சுவை உடையதாக இருக்கும்.

கார்காலக் கடைநாளில் எள் முற்றும் நிலையில் இருக்கும். அப்பொழுது அளவுக்கு அதிகமாக மழை பெய்யுமானால் எள்ளின் உள்ளீடு உருகிவிடும். காய் மட்டும் உருவம் கெடாமல் இருக்கும் உள்ளீடு இல்லாத இத்தகைய காயைச் சிதட்டுக்காய் என்பர்.

> **“பழமழை பொழிந்தெனப் பதனழிந் துருகிய**
>
> **சிதட்டுக்கா யெண்ணின் சில்பெயற் கடைநாள்”[107]**

என்ற பாடலடி மூலம் அறியலாம்.

**அவரை**

அவரை குறிஞ்சி நிலப்பகுதியில் விளைவது. பெரும்பாலும் அவரை, தினைப்புனத்தில் பயிரிடப்பெறும். தினையரிந்த தாளின் மேல் அவரைக்கொடி படரும். அவரையின் மலர் வெண்ணிறமுடையது. அதன் மலர்கள் உதிர்ந்து கிடத்தல் தயிர்

சிதறிக்கிடத்தலைப்போன்று காட்சி அளிக்கும். தினையரிதாள்தோறும் அரிவாளை ஒக்கும் வளைந்த காயையுடையனவாய் அவரை காய்க்கும்.

**“கொய்பதம் உற்றென குலவுக்குரல் ஏனல்**

**விளைதயிர்ப் பிதிர்வின் வீயுக் கிருவிதொறும்**

**குளிர்புரை கொடுங்காய் கொண்டான அவரை”[108]**

**“பெரும்புனக் குறவன் சிறுதினை மறுகாற்**

**கொழுங்கொடி அவரை பூக்கும்”[109]**

**சிறுதினை கொய்த இருவி வெண்காற்**

**......................காய்த்த அவரை” [110]**

என்ற பாடலடிகள் தினையரிந்த தாளின் மேல் அவரை படர்ந்து காய்த்தலுண்டு என்ற கருத்தினை விளக்குகின்றன.

**பருத்தி**

நீர்வளம் குறைந்த வறட்சி மிகுந்த இடங்களில் பருத்தி விளையும், தினைப்புனத்தில் தினையின் இடையிடையே பருத்தியை விதைத்தலும்உண்டு.

**“பரீஇ வித்திய ஏனல்”[111]**

தாழியில் விதையிட்டும் பருத்திச் செடியினை வளர்ப்பர். இதனை

**“தாழிமுதற் கலித்த கோழிலைப் பருத்தி”[112]**

என்ற அகநானூற்றுப் பாடலடியால் அறியலாம்.

கோடைக் காலத்தில் பருத்தி நல்ல விளைச்சல் தரும். அக்காலத்தில் பறிக்கப்பட்ட பருத்தியினின்றும் கொட்டையை நீக்கிப் பஞ்சாக்குவர்.

**“காடைப் பருத்தி வீடு நிறை பெய்த**

**“மூடைப் பண்ட மிடைநிறைந் தன்ன”[113]**

என்ற பாடலால் அறியலாம்

பண்டைத் தமிழர் நெசவுத் தொழில் சிறப்புற அடிப்படை மூலதனமாகப் பருத்தி விளங்கியது. தமிழகத்தில் பருத்தி விளைவும் மிகுதியாக இருக்கும் என்பதை,

**“பருத்தி வேலிச் சீறூர்”**[114]

**“பன்னல் வேலியிப் பணைநல்லூர்”**[115]

என்ற புறநானூற்றுச் சான்றுகளால் அறியலாம்.

**கரும்பு**

நீர்வளமும் நிலவளமும் நிறைந்த மருதநிலப்பரப்பில் கரும்பு விளைவிக்கப்பட்டது. இடமகன்ற வயல்களைப் பாத்தி பாத்தியாகப் பிரித்துக் கரும்பை நட்டனர். ஒவ்வொரு பாத்தியின் பரப்பளவு ஒரு பெரிய யானையின் காலடியின் அளவாக இருந்தது என்பதை,

**“கரும்பு நடு பாத்தியன்ன பெருங்களிற்றடி”**[116]

என்ற குறுந்தொகைப் பாடலடி உணர்த்தும்.

இவ்வாறு நடப்படும் கரும்பு சில வேளைகளில் வளர்ச்சி குன்றிப் போதல் உண்டு. அழிந்து போதலும் உண்டு. இக்குறைகள் வராமல் பயிரிட்டனர்.

**“குறை அறை வாரா................தீங்கழைக் கரும்பு”**[117]

கரும்பு முற்றி வளர்ந்துஅறுவடைக்கு உரிய சமயம் என்பதை அறிவிப்பன அதன் மலர்களே. அதன் பூக்கள் மலர்ந்துள்ள காலத்தில் கரும்பில் சாறு மிகுந்திருக்கும் என்பது பண்டைத் தமிழர் கொள்கையாகும்.

கரும்பின் மலர்கள் சங்க இலக்கியத்தில் வெண்பூ என்றும் வான்பூ என்றும் பெரிதும் புகழப்பட்டுள்ளன. கரும்புகள் பருத்தும் கணுக்கள் திரண்டும், மிக உயர்ந்தும் வளர்ந்தன. கரும்பு இன்ன காலத்தில் விளையக்கூடியது என்று குறிப்பிடப்படவில்லை. நீர்வளம் மிக்கிருந்தால் ஆண்டு முழுவதும் தொடர்ந்து

பின்னும் அதன் கட்டையே மீண்டும் பயிராக வளரும். இவ்வாறு ஓரிருமுறை பயிர் செய்த பிறகு அடியோடு அக்கட்டைகளை அகழ்ந்தெடுத்து மீண்டும் கரும்பு பயிரிடுவதுமுண்டு.

**"காலமன்றியும் கரும்பறுத்து ஒழியாது**

**அரிகால் அவித்து"**[118]

இவ்வாறு அறுவடை செய்யப்பட்ட கரும்புகள் உறுதியாகவும் பருத்தும் இருந்தன. நெல்லை விளைவிக்கும் உழவர்கள் கள்ளைக் கொண்டு செல்லும் வண்டிகள் சேற்றில் ஆழ்ந்து விடுமாயின் கரும்புகளை வரிசையாக அடுக்கி அக்கரும்புகளின் மீது வண்டியை விடுவார்கள். வண்டியின் சுமையைத் தாங்கும் அளவிற்குக் கரும்புகள் உறுதிவாய்ந்தவையாக இருந்தன.

கரும்பு ஆண்டு முழுமையும் பயன்தரும் பயிராக இருந்தமையின் நாடெங்கிலும் கரும்பாலைகள் இருந்தன. கரும்பாலையின் ஒலி ஊர்தொறும் ஒலித்துக் கொண்டே இருக்கும். அவ்வோசையை,

**"கரும்பின் எந்திரம் சிலைப்பின்"**[119]

**கரும்பின் எந்திரம் களிற்றெதிர் பிளிற்றும்"**[120]

எனச் சங்கப்பாடல்கள் கூறுகின்றன. கரும்பு, கழைக் கரும்பு, கழனிக் கரும்பு, கார்க் கரும்பு என்ற பெயர்களால் குறிப்பிடப்பட்டுள்ளன.

கரும்பிலிருந்து வெல்லமும், சர்க்கரையும் பண்டைய தமிழகத்தில் எடுக்கப்பட்டன. கருப்பஞ்சாறு அருந்துவதற்கு இனிமையாக இருப்பதால் " தீங்கரும்பினும் தித்திக்கும் இன்சொலார்" என்று குறிப்பிட்டனர். பெறற்கரிய பயிர்களில் கரும்பும் ஒன்று என்பதை சங்கப்பாடலகள் பலவற்றின் மூலம் அறிய முடிகிறது.

## மிளகு

சங்க காலத்தில் பொருளாதாரப் பெருக்கத்திற்கு ஆக்கம் தரும் வகையில் மிளகு, குறிஞ்சி நில மலைப்பகுதியில் விளைந்தது. மிளகு கரிய கொடிகளையும், கொத்தாகக் காய்க்கும் பசிய காய்களையுமுடையது,

**''மைபடு சிலம்பிற் கறி''**[121]

**''கருங்கொடி மிளகின் காய்த்துணர்ப் பசுங்கறி''**[122]

பலா மரத்தின் மேல் படர்ந்து விளையுமாறு மிளகுக் கொடியை வளர்ப்பர்.

## மஞ்சள்

பலா மரத்தின் நிழலில் மெல்லிய இலையையுடைய மஞ்சளைப் பயிரிடுபவர்

**''பைங்கறி நிவந்த பலவின் நீழல்**
**மஞ்சள்.....................................''**[123]

சேம்பையும் மஞ்சளையும் விதைத்துவிட்டு, வளர்ந்த பின்பு பன்றிகள் கிழங்ககழாமல் காப்பதன் பொருட்டுப் பறை கொட்டுவர்.

**''சேம்பு மஞ்சளும் ஓம்பினர் காப்போர்''**[124]

மதுரைக் காஞ்சி எனும் பத்துப்பாட்டு நூலில் மலைநிலத்தின் விளைபொருள்கள் கூறப்பட்டுள்ளது. மணமுள்ள அகில், சந்தன மரங்களை அழித்துத் திருத்திய மேட்டு நிலத்தில் விதைத்த சிறிய கதிர்களையுடைய தோரை நெல்லும் நீண்ட தாளினையுடைய வெண் சிறு கடுகும், ஐவனம் என்னும் வெண்ணெல்லோடு பிணக்கங் கொண்டு வளருமாறு செய்து இஞ்சி, மஞ்சள் பசிய மிளகுக்கொடி ஆகியவற்றையும் விளைவிப்பர். இதனை,

**''நறுங்காழ் கொன்று கோட்டின் வித்திய**
**குறுங்கதிர்த் தோரை நெடுங்கால் ஐயவி**
**ஐவன வெண் ணெலொடு அரில்கொள்பு**
**இஞ்சி மஞ்சள் பைங்கறி பிறவும்-நீடி''**[125]

இவ்வாறு மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது.

இவ்வாறு ஒரே இடத்தில் அந்நில வளத்திற்கேற்ற பல்வேறு பயிர்களைப் பயிரிட்டுப் பலனடைய அக்கால மக்கள் அறிந்திருந்தனர் என்பதை உணரலாம். விவசாயத் துறையில் மாற்றுப் பயிர் வேளாண்மை முறையைக் கையாண்டு அதன் மூலம் நிலத்தின் செழுமையைக் காக்கின்ற முறையை உலகுக்கு வழங்கிய பெருமை பண்டைய தமிழர்களையே சாரும்.

## நெசவுத் தொழில்

மக்கள் சமுதாயத்திற்கு உணவினை அடுத்து இன்றியமையாது வேண்டப்படுவது ஆடையாகும். விலங்குகளைப் போலன்றி உடலை மறைத்தற்குரிய உடையினை அணிந்து, மானத்துடன் வாழும் முறை மக்கள் வாழ்க்கையின் சிறப்பியல்பாகும். நாகரிகம் வளராத மிகப் பழங்காலத்தே மக்கள் தழை, இலை ஆடைகளையும், மரப்பட்டைகளையும், மான், புலி முதலியவற்றின் தோலினையும் உடுத்து வாழ்ந்தனர். நாளடைவில் அந்நிலை மாறியதும் மக்கள் தங்கள் நுண்ணறிவின் திறத்தால் பருத்தியின் பஞ்சினை நூலாக நூற்று ஆடையாக நெய்து, அணியத் தொடங்கிய காலமே மனிதனின் வரலாற்றில் ஒரு புதிய திருப்பமாகும். அப்புதிய முயற்சியின் விளைவால் தொடங்கிய தொழிலினையே நாம் நெசவுத் தொழில் என்று பெருமையுடன் கூறுகின்றோம்.

இது வீட்டுத் தொழில்களில் முக்கியமானது. பண்டையத் தொழில்களுள் ஒன்று. விவசாயத்துக்கு அடுத்தது மக்கள் நாகரிகம் அடையத் தொடங்கியதும் கையாண்ட முதல் கைத் தொழில் என்று கலைக்களஞ்சியம் குறிப்பிடுகின்றது.

தொல் பொருள் வரலாற்று அறிஞர்கள் இந்நெசவுத் தொழில் புதிய கற்காலத்தில் ஆரம்பமாயிற்று என்பர். ஆடையைப் பற்றிய குறிப்புகளின் தொன்மையை நாம் நன்கு அறிய முடிகின்றது. இதனை,

**"கூழை விரித்தல் காதொன்று களைதல்**

**ஊழணி தைவரல் உடைபெயர்த் துடுத்தலோ**

**டூழி நான்கே இரண்டென மொழிய"[126]**

என்ற பாடலடி மூலம் அறியலாம்.

சங்க கால இலக்கியங்கள் மிகத் தெளிவாக நெசவுத் தொழிலின் வளர்ந்த நிலையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. நெசவுத் தொழிலுக்குப் பருத்தி மிகவும் இன்றியமையாத ஒரு மூலப் பொருளாக விளங்கியது. தமிழகத்தில் பருத்தி விளைவும் மிகுதியாக இருந்திருக்கும் என்பதை,

**"பருத்தி வேலிச் சீறூர் மன்னன்"[127]**

என்ற புறநானூறு பாடல் மூலம் அறியலாம்.

இப்பருத்தியே அன்றி இலவமரம், கோங்குமரம் முதலிய மரங்களிலிருந்து வேண்டிய பஞ்சு சேகரித்து நெசவுத் தொழிலுக்குப் பயன்டுத்தினர்.[128] சங்க இலக்கியப் பாடல்களில் பல இடங்களில் நெய்தல் தொழில் பற்றிப் பேசப்படுகின்றது. பருத்தி, பட்டு ஆகிய பொருள்களைக் கொண்டு துணிகள் நெய்யப்பட்டன.

பருத்தி பஞ்சை அதனுடைய கொட்டையிலிருந்து பிரித்தெடுக்க வில்லினைப் பயன்படுத்தினர் என்பதை அகநானூற்றுப் பாடலடியாலும், நற்றிணைப் பாடலடியாலும் அறியலாம்.

**"வில்லெறிய பஞ்சின் வெண்மழை தவழும்"[129]**

**வழிதுளி பொழிந்த இன்குரல் எழிலி**

**எஃகுறு பஞ்சிற் றாகி"[130]**

பின்னர் பருத்திக் கொட்டையை நீக்கித் தூய்மை செய்யும்போது பஞ்சின் புறத்தோலினையும் எஞ்சி நிற்கும் கொட்டையையும் தூசியையும் நீக்குவதற்காக நன்றாகப் புடைத்தெடுப்பர்.

**‘‘சிறையும் செற்றையும் புடையுநள் எழுந்த**

**பருத்திப் பெண்டின் சிறுதீ விளக்கத்து’’**[131]

இங்கு சிறை-பஞ்சியின் புறத்தோலையும், செற்றை-தூசியையும் குறிப்பிடுகின்றன.

மகளிர் பருத்தி பஞ்சினைச் செப்பஞ் செய்து நுண்ணிய நூலாக நூற்பதில் கைத்திறம் பெற்று விளங்கினர். இப்பெண்கள் பருத்திப் பெண்டிர் என அழைக்கப்பட்டனர். மேலும் கணவரை இழந்த மகளிர் இத்தொழிலில் பெரிதும் ஈடுபட்டிருந்தனர் என்பது.

**‘‘ஆளிர் பெண்டிர் தாளில் செய்த**

**நுணங்கு நுண் பனுவல்’’**[132]

என்னும் பாடலடிகளால் தெரிகின்றது. இப்பெண்டிர் இரவு நேரத்திலும் நூல் நூற்றனர் என்பது பருத்திப் பெண்டின் சிறுதீ விளக்கத்து என்ற அடியால் புலப்படும். இவ்வாறு பெண்கள் நூற்று இழைத்துத் தந்த நூலைப் பாவாக விரித்துத் தறியில் நெய்து ஆடையாகக் கொடுக்கும் கடமை ஆடவர் தொழிலாய் அமைந்து.

நுண்மையான நூலைக் கொண்டு நெய்யப்பட்ட ஆடையினுடைய இழைகளின் வரிசைகளைக் காண்பதற்கு இயலாத வகையில் நுட்பமாக நெய்யப்பட்டிருந்தது.

**‘‘பாம்புரி யன்ன வடிவினை காம்பின்**

**கழைபடு சொலியி னிழையணி வாரா’’**[133]

**‘‘நோக்கு நுழை கல்லா நுண்மைய’’**[134]

என்ற பாடற் குறிப்புகள் மேற்கூறிய கருத்தை வலியுறுத்துகின்றன.

**‘‘புகை விரிந்தன்ன பொங்கு துகில்’’**[135]

தறி நெய்து அறுக்கப்பட்டமையால் அறுவை என்றும் நெய்த உடையினைச் சுருக்கமின்றி மடித்து மடித்து விற்று வந்தமையால் மடி என்ற பெயரும் வழங்குவதாயிற்று.

இங்ஙனம் நெய்யப்பட்ட துணிகளுக்கு நிறம் ஊட்டினதற்குச் சான்றாக தமிழகத்தில் அரிக்கமேடு என்ற இடத்தில் நடந்த அகழ்வாய்வின் மூலம் மஸ்லின் துணிகளுக்குச் சாயம் தோய்க்கப்பயன்பட்ட செங்கற்களால் ஆன இரண்டு தொட்டிகள் கண்டு பிடிக்கப்பட்டன. அவற்றின் காலம் கி.பி.முதல் நூற்றாண்டு எனக் கணக்கிடப்பட்டுள்ளது. சங்க இலக்கியப் பாடல்கள் சிலவற்றில் பல்வேறு வண்ண ஆடைகளைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

**“இணைபட நிவந்த நீலமென் சேக்கையுள்”**[136]

**“துவர்செய் ஆடைச் செந் தொடை மறவர்”**[137]

**“கோபத்து அன்ன தோயாப் பூந்துகில்”**[138]

என்ற பாடல்வரிகளில் நீலநிறத்துணிகள்-நீலமென் சேக்கை என்றும், செந்நிறத் துணிகள்- துவர்செய் ஆடை என்றும் கோபத்தன்ன தோயா பூதுகில் என்றும், வருமிடங்களைக் கூறலாம். நீலநிறத் துணிகளும், செந்நிறத் துணிகளும் இருந்தனவென்று இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம். இத்துணிகளுக்கு நிறம் எவ்வாறு ஊட்டப்பெற்றதென்று அறிய வேண்டும் பண்டைக் காலத்தில் வண்ணம் தயாரிக்கக் காடுகளில் முளைத்திருக்கும் செடிகளின் தழைகளும், மரப்பட்டைகளும், அவுரிச் செடிகளும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். அவுரிச் செடிகள் நம் நாட்டிலிருந்து மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. வண்ணம் தயாரிக்கப்பயன்படுவதால் தான் இச்செடிகள் மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன எனக்கருத இடமுண்டு.

இவ்வாறு திறமையுடன் நெய்யப்பட்ட ஆடைகளின் சிறப்பினைச் சங்க இலக்கியப் பாடல்கள் பின்வருமாறு புகழ்ந்து பாடுகின்றன. “சங்கத் தமிழர்கள் பல நிறமுடைய மெல்லிய இலைகளைக் கொண்டு நுண்ணிய வேலைபாடுகள் மிக்க ஆடைகள் தயாரித்தனர்.”[139]

அரும்பி மலர்ந்த பகன்றையின் புதுப்பூப்போன்ற அகல மடிக்கப்பட்ட ஆடை என்ற கருத்தமைய.

**“போதுவிரி பகன்றைப் புதுமல ரன்ன**

**அகன்றுமடி கலிங்கம்”**[140]

என்றும் மூங்கிலின் உட்புறத்தே உள்ள தோல் போன்றது என்பதை,

**“கழைபடு சொலியி னிழையணி வாரா**

**ஒண்பூங் கலிங்கம்”**[141]

என்றும் புறநானூற்றுப் பாடலடிகள் ஆடைகள் பற்றி குறிப்பிடுகின்றன.

**“ஆவியன்ன அவிர்நூற் கலிங்கம்”**[142]

பாம்பு உரித்த தோல் போன்றது என்ற பொருளமைய,

**“பாம்புரி யன்ன வடிவின”**[143]

என்றும் ஆடைகள் எவற்றைப் போன்று இருந்தது என்பதை சங்கப் பாடலடிகள் உணர்த்துகின்றன.

இங்ஙனம் மென்மையாக நேர்த்தியுடன் நெய்யப்பட்ட ஆடைகளுக்கு மேலும் அழகூட்டும் வகையில் நேரிய கரைகள் அமைத்து அதில் அழகிய பூவேலைப்பாடுகளும் செய்தனர். இக்கருத்தினை,

**“..................................நேர்கரை**

**நுண்ணூல் கலிங்கம் உடீஇ”**[144]

**“கொட்டைக் கரைய பட்டுடை”**[145]

பட்டுடையின் கரைகளில் திரளமுடிந்த முடிகள் அழகுபெற அமைக்கப்பட்டிருந்ததை இவ்வடிகள் உணர்த்தும்.

**“வான்பூங் கலிங்கம்”**[146]

**“நீலக் கச்சை பூவார் ஆடை”**[147]

**“புன்பூங் கலிங்கம்”**[148]

என்ற பாடற்குறிப்புகள் உணர்த்தவல்லன.

பண்டைத் தமிழர் பஞ்சைப் பயன்படுத்தி நெய்த ஆடைகளே அல்லாமல் பட்டுநூலைப் பயன்படுத்திப் பட்டாடை நெய்தனர். மேலும் மரப்பட்டையில் உள்ள நாரினை எடுத்து பின்னி மலைவாழ் குறவர் ஆடையாகப் பயன்படுத்தினர் என்பதை,

**“மரனாருடுக்கை மலையுறை குறவர்”**[149]

என்ற பாடலடியால் அறியலாம்.

பொன் இழைகளாலும் ஆடைகள் நெய்யப்பட்டுள்ளன என்பதைப் ‘பொன்புனை உடக்கையோன்’[150] என்ற பரிபாடல் மூலமறியலாம்.

**கொல்லர் தொழில்**

இத்தொழில்கள் பற்றி சங்க இலக்கியங்கள் பல்வேறு நிலைகளில் எடுத்துக்கின்றது. இரும்பைப் பயன்படுத்திப் உழவுக்கருவிகளையும். போர்க்கருவிகளையும். இதுபோன்ற பலகருவிகளை வடித்துக் கொடுக்கும் கொல்லன் உலைக்களத்தில், காய்ச்சிய இரும்பை விசைத்து அடிக்கும் சம்மட்டியின் அடிகளைத் தாங்கி உருக்குவைத்து போகாது நிற்கும் பட்டைக் கல்லைப், பகைவரால் அழிவுற்றுப் போகாத ஒரு வீரனுக்கு உவமையாக கூறப்பட்டுள்ளது. இதனை,

**“இரும்பு பயன்படுக்கும் கருங்கைக் கொல்லன்**
**விசைத்துஎறி கூடமொடு பொரூஉம்**
**உலைக்கல்ல அன்ன வல்லா என்னே”**[151]

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

மருத நிலத்தின் குளத்தில் அடைகரையில் வளர்ந்திருக்கும் அரம்போலும் முட்களை உடைய பிரம்புக்கொடி போலும் கொடியை உடைய ஆம்பலின் நீர்குறைய, நீர் மட்டத்துக்கு மேல் உயர்ந்து சுருண்டிருககும் இவை அசைந்து அசைந்து வரும் வாடைக் காற்று வீசுந்தொறும் விரிந்து அடங்கும் காட்சிக்குக் கொல்லன் உலைக்களத்தில் காற்று அடிக்க விசைத்து இழுத்துவிடும் துருத்தியை உவமையாக காட்டப்பட்டுள்ளது.இதனை

**“பழனப் பொய்கை அடைகறைப் பிரம்பின்**

**ஆரவாய் அன்ன அம்முள் நெடுங்கொடி**

**அருவி ஆம்பல் அகலடை துடக்கி**

**அசைவரல் வாடை தூக்கலின் ஊதுலை**

**விசைவாங்கு தோலின் வீங்குபு நெகிழு-ம்”[152]**

என்றப் பாடலடிகள் விளக்குகின்றன.

**“-----------------------கொல்லன்**

**எறிபொன் பிதிரின் சிறுபல தாஅய்”[153]**

கொல்லன் உலைக்களத்தில் அடிக்கும் இரும்பின் பொறிபோல வேங்கை மரத்தின் பூக்கள் சிதறியதாக இந்நற்றிணைப் பாடல் உணர்த்துகின்றன. இவ்வாறு இரும்பினைப் பயன்படுத்தி பல்வேறு உழவுக்கருவிகளை உருவாக்கி உழவுக்குப் பயன்படுத்தினர்.”[154] என்பதை சங்க இலக்கியங்கள் மூலம் அறியலாம்.

இவ்வாறு காட்டப்பட்டுள்ள கொல்லுத் தொழில் விவசாய கருவிகளை உற்பத்தி செய்யவும், போர்க்கருவிகளை உற்பத்தி செய்யவும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

## சலவைத் தொழில்

உடைகளை வெளுத்துக் கஞ்சியூட்டல், சலவைத் தொழிலாளியின் தொழிலாகும். “கூத்து முதலாம் களியாட்டங்கள் ஒருபால் நிகழ ஓயாது விழாக் கொண்டாடிக் கொண்டிருக்கும் மூதூர்களில் ஆடைகளைப் பருத்தி ஆடை, பட்டாடை என இனம் பிரித்து அழுக்குப் போகத் துவைத்தளிக்கும் தொழிலைக் கையோய்வதில்லாமல் செய்வதால் வறுமை அறியாது வாழும் சலவைத் தொழில் மகள் ஒருத்தி சின்னம்சிறு பூத்தொழில்கள் கொண்ட சிறந்த ஆடைக்கு இரவில் சோற்றுக்கஞ்சி ஊட்டும் சிறப்பு ஒரு பாட்டில் கூறப்பட்டுள்ளது.

**“ஆடியில் விழவின் அழுங்கல் மூதூர்**

**உடை ஓர் பான்மையில் பெருங்கை தூவா**

**வறன்இல் புலத்தி எல்லித் தோய்த்த**

**புகாப்புகார் கொண்ட புன்பூங் கலிங்கம்''[155]**

இவ்வாறு சலவைத் தொழில் பற்றிய குறிப்புகளை சங்கப் பனுவல்கள் மூலம் அறியமுடிகின்றது.

**தச்சுத் தொழில்**

சங்க காலத்தில் தச்சுத் தொழில் ஒரு தனிப்பெருங் கலைத் தொழிலாக வளர்ந்து சிறந்து விளங்கியுள்ளது. இத்தொழிலின் வளத்தைப் பற்றி நெடுநல்வாடை சிறப்பாகக் குறிப்பிடுகிறது. இத்தொழிலின் மேன்மையைச் சிறுபாணாற்றுப்படையிலும் பெரும்பாணாற்றுப்படையிலும் காணலாம்.

அக்காலத் தச்சர்கள் செய்த தேர் ஒன்றைச் சிறுபாணாற்றுப்படை கூறுகின்றது. ''தேர் எவ்வகை குற்றமும் இன்றி உருண்டோடும் தன்மையது. உபயோகத்திற்கு ஏற்றது கூரிய வாளினால் செதுக்கப்பட்ட குறட்டினையுடையது. சில்லிகளில் பொருத்தப்பட்ட ஆர்கள் கூதிர்காலத்தே வானில் தோன்றும் மதியின் கிரணங்கள் போல் தோன்றும் பலவகைகள் செல்வாக்குப் பூசப் பெற்றுப் பல்வகைச் சித்திரங்களை உடையனவாக இருந்தன.''[156]

சிறுபிள்ளைகள் இழுத்து விளையாடுவதற்காக அக்காலத் தச்சர்கள் சிறுதேர் செய்தனர் என்பதையும். தச்சர் குடியிற் பிறந்த சிறுவரும் சிறுதேர் செய்தனர் என்பதையும் கீழ்வரும் பெரும்பாணாற்று அடியின் மூலம் அறியலாம்.

**''தச்சர் சிறாஅர் நச்சப் புனைந்த**

**ஊரா நற்றே குருட்டிய புதல்வர்''[157]**

சிறுபாணாற்றுப்படையில் உமணர்கள் வளர்த்த குரங்குக் குட்டிக்கு உளியால் குடைந்து செய்த மரத்தாலான மணிமாலையை அணிவித்தனர் என்ற குறிப்புக் காணப்படுகின்றது. இதனை.

**''நறவுவா யுறைக்கு நாகுமுதில் நுணவத்து**

**அறவாய்க் குறுந்துணி அயில்உளி பொருந்த**

**கைபுனை செப்பங்கடைந்த மாா்பின்**

**செய்ப்பூங் கண்ணி செவிமுதல் திருத்தி**

**நோன்பகட்டு உமணா் ஒழுகையொடு வந்த**

**மகாஅா் அன்ன மந்தி"**[158]

என்ற அடிகள் மூலம் அறியலாம்.

தேர், பாண்டில் உளி, உலக்கை, நுகம், அச்சு, பாா், உருளை என்னும் பொருள்களின் பெயர்கள் அக்காலத் தச்சுத் தொழிலை நினைவூட்டுகின்றன. தச்சர் 'கருந்தொழில் வினைஞா், என்று குறிக்கப்பட்டுள்ளனா். என்பதை,

**"கருந்தொழில் வினைஞா் கைவினைமுற்றி"**[159]

என்ற வரிகளால் அறியலாம்.

**"-------------------------வைகல்**

**எண்தோ செய்யும் தச்சன்**

**திங்கள் வலித்த கால் அன்னோனே"**[160]

நாள் ஒன்றுக்கு எட்டுத்தோ் செய்கின்ற திறமைபடைத்த தச்சனால், ஒருமாத அளவில் ஒரு தோ்ச்சக்கரம் மட்டுமே செய்வதற்கு முடிந்தது. அதாவது அவன் செய்த தோ்க்கால் அந்த அளவிற்கு மிகுதியான வன்மை உடையதாக இருந்ததை இப்பாடல் வரிகள் உணா்த்துகின்றன. இதன் மூலம் ஆற்றல் பொருந்திய தச்சா்கள் சங்க காலத்தில் இருந்தனா் என்பதை உணரமுடிகின்றது.

நெடிய தோ்கள் இருந்தன என்பதையும் அவற்றை இலக்கண முறைப்படி அமைந்துள்ளனா் என்பதையும் கீழ்வரும் அகநானூற்றுப் பாடல் மூலம் நாம் அறியலாம்.

**"நுண்அயிா் பரந்த தண்அய மருங்கின்**

**நிரைபறை அன்னத்து அன்ன, விரைபரிப்**

**-----------------------------------------**

**கண்நோக்கு ஒழிக்கும் பண்அமை நொடுந்தோ்"**[161]

இவ்வாறு சங்க கால மக்கள் தச்சுச்தொழிலில் சிறப்புற்று விளங்கியுள்ளார்கள். உழவர்கள் இத்தச்சர்களால் உருவாக்கப்பட்ட வாகனம் மூலம் உணவுப் பொருட்களை பிற நிலங்களுக்கு எடுத்து சென்று பண்டமாற்று முறையை மேற்கொண்டனர்.

**மட்பாண்டத் தொழில்**

புதிய கற்காலத்தில் பயிர்த்தொழில் செய்யவும். விலங்குகளைப் பழக்கவும், நெசவு முதலிய தொழில்களைக் கற்கவும் நேர்ந்தது. மக்கள் உணவுப் பொருட்களைச் சேமித்து வைக்க மண்பாண்டங்களைச் செய்து கொண்டனர். இவர்களுக்கு முன்வாழ்ந்த மக்கள் விலங்குகளின் தோலினாலாகிய பைகள், தாவரக் கனிகளின் ஓடுகள் போன்றவற்றைப் பயன்படுத்தினர். அதிக அளவில் மண் பாத்திரங்கள் செய்யச் சக்கரங்கள் பயன்படுத்தப்பட்டன என்பதை,

**"வனைகலம் திகிரியின் குமிழி சுழலும்**
**துணை செலில் தலைவாய் ஓவிறந்து விரிக்கும்"**[162]

என்ற அடிகளால் அறியலாம். குயவன் செய்கின்ற மட்கலத்தில் சக்கரம் போலக் குமிழி சுழன்று தோன்றும் விரைந்த வேகமுடைய ஓடும் ஆறு உவமையாகக் கூறப்படுகிறது.

மேலும் புளியங்காய், நெல்லிக்காய் முதலிய ஊறுகாய்கள் வைக்கப்பட்ட மிடா, காடி வைத்த கலன் எனப்பட்டது. உணவுப் பண்டமான அப்பம் சுடுவதற்கும் மண்ணாலாகிய அகன்ற சட்டி பயன்படுத்தப்பட்டது என்பதை,

**"காரகற் கூவியல் பாககொடு பிடித்த"**[163]

என்ற பெரும்பாணாற்று வரிகளால் அறியலாம். புறத்தே கரிபடிந்து இருக்கும் கரிய சட்டியாக காணப்பட்டதை காரக்கல் கூவியர் பாககொடு பிடித்த என்று கூறுகின்றனர்.

இடமகன்ற பெரிய இடத்தில் வானினை முட்டும் அளவிற் புகைகள் எழுமாறு குயவர்களால் செய்யப்பட்ட மட்கலங்கள் சூளையில் அடுக்கப்பட்டிருந்தன என்பதை,

**“கலம் செய்கோவே கலம்செய் கோவே**

**இருள் திணிந்தன்ன குரூஉத் திரள் பரூவப் புகை**

**அகல் இருவிசும்பின் ஊன்றும் சூளை**

**நனந் தனல மூதூர்க் கலம் செய் கோவே”[164]**

எனற பாடல்வரிகள் உணர்த்துகின்றன.

இவ்வாறு குயவர்களால் செய்யப்பட்ட மட்பாண்டங்கள் உழவுத்தொழிலில் விளைந்த தானியங்களைச் சேகரித்துவைக்கப் பயன்பட்டன.

## கயிறு திரிக்கும் தொழில்

உழவுத் தொழிலுக்குக் கயிற்றின் தேவை இன்றியமையததாகின்றது. விளைவித்த பயிர்களைக் கட்டுவதற்கும் இன்னும் பிற தேவைகளுக்கும் கயிறு பயன்பட்டது. கயிறு திரிக்கும் தொழிலாளனை ‘இழிசினன்’ என்று சங்கப் பாடலொன்று தெரிவிக்கின்றது.

‘‘ஊரில் விழாத் தொடங்கிவிட்டது. அப்போது பறைகொட்டுதல் போலும் பணி ஆற்ற வேண்டுவது அவன் கடமை ஆகவே ஆங்கும் செல்ல வேண்டும். பிள்ளைப் பேற்றிற்கு உரிய காலம் மனைவிக்கு வந்து விட்டது. அப்போது உடனிருந்து அவளுக்கு உதவ வேண்டுவதும் இன்றியமையாதது. ஆகவே வீட்டிற்கும் செல்ல வேண்டும். இதற்கிடையில் ஞாயிறும் மறையத் தொடங்கிவிட்டான். மழை பெய்யவும் தொடங்கிவிட்டது. இந்நிலையில் கட்டிலுக்குக் கயிறு பின்னும் தொழிற்கடமை மேற்கொண்டு விட்ட அத்தொழிலாளி, அப்பணியை விரைந்து முடித்து விட்டு மேற்கூறிய இருபணிகள் குறித்து விரையத் துடிக்கும் நிலையில் பின்னும் வார்கோத்த அவன் கைஊசி விரையும் விரைவினைச் சொல்ல இயலாது. அவ்விரைவினைத் தன்னை வெல்லவார் யாதேனும் உளரேல் வருக என வஞ்சினம் கூறி வந்திருக்கும் வேற்றூர் வீரனோடு போரிட்டு வெல்லத் துடிக்கும் ஆத்திமாலை அணிந்த அவ்வூர் வீரனின் உள்ள விரைவிற்கு உவமை காட்டப்பட்டுள்ளது.

**“சாறுதலைக் கொண்டெனப் பெண்ஈற்று உற்றெனப்**

**பட்ட மாரி நான்ற ஞாயிற்றுக்**

**கட்டில் நிணக்கும் இழிசினன் கையது**

**போழ்தூண்டு ஊசியின் விரைந்தன்று மாதோ!**

**ஊர்கொள வந்த பொருநனொடு**

**ஆர்புனை தெரியல் நெடுந்தனை போரே”[165]**

என்ற புறநானூற்றுப் பாடலடிகள் கயிறுதிரிக்கும் இழிசினன் பற்றி எடுத்துரைக்கின்றது.

**கூடைமுறம் கட்டுவோர்**

**“மாதர்ப் புலைத்தி விலையாகச் செய்தது ஓர்**

**போழின் புனைந்த வரிப்புட்டில்”[166]**

பனை ஓலையால் கூடைசெய்யப்பட்டது என்பதை, இப்பாடல் மூலம் நாம் அறியலாம்.

கூடை, முறங்களை பனை ஓலையினால் செய்தனர் சங்கத் தமிழர். அவ்வாறு செய்யப்பட்ட கூடையில் உணவுதானியங்களை சேகரித்துவைத்தனர். விளைநிலங்களில் விளைந்து, தாள் அறுக்கப்பட்ட நெல்மணிகள் முறத்தினால் புடைத்து தூசி நீக்கப்பெற்றன. ஓலையினால் செய்த கூடைகளையும், முறங்களையும் மாட்டின் சாணங்கொண்டு மெழுகிப் பாதுகாத்து வைத்தனர்.

# தொகுப்புரை

1. தனிமனிதத் தேவைதான் அவன் வாழும் சமுதாயத் தேவையாகின்றது. இந்த அடிப்படையில் அரும்பி மலர்ந்து பயன் தருவதே ஒவ்வொரு தொழிலுமாகும். சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் என்றார் வள்ளுவர். உணவினை நிறைய விளைவிக்கும் ஆற்றல் பெற்றவர் உழவர்கள்.
2. சங்க இலக்கியப் பாடல்களின்றும் தமிழர் எங்ஙனம் தமது பயிர்த் தொழிலை திட்டமிட்டுச் செயற்படுத்தினர் என்பதை அறிய முடிகின்றது.
3. உழவு, உழவர் என்ற சொற்கள் பயிர்த்தொழிலையும் அதைச் செய்வோரையும் உணர்த்தப் பயன்படுத்தப்பட்டன.
4. பண்டைக் காலத்தில் வழக்கிலிருந்த பயிர் வகைகள், அவற்றை பயிர் செய்யும் முறை, காலம், இடம் போன்றவற்றையும் அவற்றின் தோற்றம், தன்மை பயன் ஆகியவை குறித்தும் பல குறிப்புகள் காணப்படுகின்றன.
5. இவற்றைத் தொகுத்துப் பார்க்கையில் தமிழர் அக்காலத்திலேயே உழவுத் தொழிலில் எத்தகு மேன்மையுற்றிருந்தனர் என்பது புலப்படும்.
6. நிலங்களை நன்செய் நிலம். புன்செய் நிலம், விடுநிலம் எனப் பாகுபடுத்தியிருந்தனர். குறிஞ்சியும், முல்லையும் நன்செய் நிலமாகவும், மருதமும் நெய்தலும் புன்செய் நிலமாகவும் இருந்தன.
7. பண்பட்ட நன்செய் விளைநிலங்களை பருவமழை தொடங்குவதற்கு முன்னரே நன்கு உழுது வைக்கும் பழக்கத்தினை மேற்கொண்டிருந்தனர்.
8. நீர்வளம் உள்ள மருத நிலப் பரப்பில் ஆண்டு முழுவதும் நிலத்தைத் திருத்தி விரிவுபடுத்தினர்.
9. ஒரே பருவத்தில் ஒரே நிலத்தில் இரண்டு அல்லது மூன்று பயிர்களைப் பயிரிட்டுப் பயனடைய அறிந்திருந்தமை பயிர்த்தொழில் அவர்கட்கிருந்த அனுவத்தை நன்கு புலப்படுத்துகிறது.
10. நன்செய் பயிர்தொழில் பற்றிய செய்திகளைவிட புன்செய் பயிர்த் தொழில் பற்றி செய்திகளே சங்க இலக்கியங்களில் அதிகம் குறிப்பிடப்படுகின்றன.

11. உழுதொழில் முறைப்படி செய்வதற்கான பயிரிடு முறைகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. உழுதொழிலுடன் சார்புடைய கால்நடை வளங்குறித்தும் கூறப்பட்டுள்ளது.
12. உழவுத் தொழில் கருவிகளின் பயன்பாடு தேவைக்கு அதிகமான விளைச்சலுக்கு வழிவகுத்தது.
13. வேளாண்மையில் அதிக விளைச்சலே கைவினைஞர்களை தோற்றுவிக்க காரணமாக அமைந்தது. குயவர், தச்சர், கொல்லர் போன்ற தொழில் வர்க்கங்களும் ஏற்படக் காரணமாயிருந்தது.

# இயல்-4

## சான்றெண் விளக்கங்கள்

| | |
|---|---|
| 1. | புறம்.18:19 |
| 2. | தொல்.பொருள்.625 |
| 3. | பொருநர்.240-248 |
| 4. | பரிபாடல்.20:63-64 |
| 5. | புறம்.18121 |
| 6. | குறுந்.105:1 |
| 7. | அகம்-3 |
| 8. | குறுந்.105:1 |
| 9. | அகம்.89:17 |
| 10. | சிறுபாண்.109 |
| 11. | சிறுபாண்.29:85 |
| 12. | தமிழ்பேரகராதி தொகுதி (இரண்டு) |
| 13. | தமிழ்பேரகராதி தொகுதி (நான்கு) |
| 14. | நற்.311:1-4 |
| 15. | புறம்.42:17-18 |
| 16 | மேலது.18 |
| 17. | பதிற்.28:7 |
| 18. | புறம்.18:22-30 |
| 19. | பட்டினம்.283-8 |
| 20. | அகம்.252-11 |
| 21. | புறம்.118:1-3 |
| 22. | நற்.44:10-11 |
| 23. | ஐங்.25:1-2 |

| | |
|---|---|
| 24. | புறம்.143:1-4 |
| 25. | குறுந்.371:1-2 |
| 26. | நற்.5:2 |
| 27. | பெரும்பாண்.196-200 |
| 28. | நற்.209 |
| 29. | மேலது.60:2 |
| 30. | புறம்.61:3 |
| 31. | அகம்.26:23-25 |
| 32. | கலி.108:2 |
| 33. | குறள்.1038 |
| 34. | பதிற்.13:1 |
| 35. | புறம்.338:1-2 |
| 36. | மதிரை.89:2 |
| 37. | பெரும்பாண்.212 |
| 38. | நற்.60:7 |
| 39. | மலைபடு.114:15 |
| 40. | புறம்.190 |
| 41. | மேலது. 344 |
| 42. | நற்.351:8-9 |
| 43. | பெரும்பாண்.126 |
| 44. | பெரும்பாண்.154 |
| 45. | பெரும்பாண்.242 |
| 46. | மேலது.245:47 |
| 47. | நற்.26:2-4 |
| 48. | நற்.125:11-12 |

| | |
|---|---|
| 49. | புறம்.327:12 |
| 50. | நற்.210:1-2 |
| 51. | ஐங்.47:3 |
| 52. | குறுந்.72-4) |
| 53. | குறுந்.82 உ.வே.ச.உரை:172 |
| 54. | குறுந்.82:4-5 |
| 55. | மதுரைக்.271-2 |
| 56. | கோ.கேசவன், மண்ணும் மனித உறவுகளும், ப.16 |
| 57. | பெரும்பாண்.188:9 |
| 58. | பெரும்பாண.199:200 |
| 59. | புறம்.61:3 |
| 60. | அகம்.184:13 |
| 61. | மதுரை.90 |
| 62. | மதுரை.92 |
| 63. | குறிஞ்சி.43 |
| 64. | நற்.393:4-5 |
| 65. | மேலது.319:3 |
| 66 | மேலது.350 |
| 67. | பெ.மாதையன், சங்க கால இனக்குழு சமுதாயமும், அரசு உருவாக்கமும் ப.72 |
| 68. | பெரும்பாண்.155-163 |
| 69. | புறம்.33 |
| 70. | குறுந்.269, அகம். 140 |
| 71. | புறம்.18 |
| 72. | குறுந்.267 |

| | |
|---|---|
| 73. | குறுந்.100:1 |
| 74. | அகம்.397:15 |
| 75. | அகம்.10:12 |
| 76 | பெரும்பாண்.142 |
| 77. | மதுரை286:7 |
| 78. | மலைபடுக.120-121) |
| 79. | பெரும்பாண்.246:48 |
| 80. | பதிற்.132 |
| 81. | புறம்.335 |
| 82. | அகம்.201-13 |
| 83. | ஐங்.27:1 |
| 84. | அகம்:126-11) |
| 85. | குறுந்:198:2) |
| 86. | அகம்.38:3-5 |
| 87. | குறுந்.282:1 |
| 88. | புறம்.34:9 |
| 89. | அகம்.393:5-6 |
| 90. | புறம்.34:9 |
| 91. | பெரும்பாண்.193-4 |
| 92. | பதிற்.13:7 |
| 93. | பொரும்பாண்:181 |
| 94. | பெரும்பாண்.393-4 |
| 95. | நற்.89:4-5 |
| 96. | கலி, மருதக்கலி.29-27 |
| 97. | குறுந்.384:1 |

| | |
|---|---|
| 98. | நற்.89:5-6 |
| 99. | புறம்.105:5 |
| 100. | புறம்.297:3 |
| 101. | ஐங்.47:3 |
| 102. | அகம்.26:1-4) |
| 103. | அகம்.397:6-7 |
| 104. | அகம்.339:3-4 |
| 105. | குறு.10:2-4 |
| 106. | மலைபடு.102:6 |
| 107. | குறுந்:261:1-2 |
| 108. | மலைபடு.108:10 |
| 109. | குறுந்.82:4-5 |
| 110. | ஐங்.286:1-2) |
| 111. | ஐங்.72:4 |
| 112. | ஐங்கு.129:7 |
| 113. | புறம்.393:12-13 |
| 114. | புறம்.299:1 |
| 115. | புறம்.345:20 |
| 116. | ஐங்.262:7 |
| 117. | ஐங்.72:4 |
| 118. | பதிற்.30:14 |
| 119. | புறம்.322:7 |
| 120. | ஐங்.55 |
| 121. | பரி.16:2 |
| 122. | மலைபடு.521 |

| | |
|---|---|
| 123. | சிறுபாண்.43:44 |
| 124. | மலைபடு.343 |
| 125. | மதுரை.288:289 |
| 126. | தொல்.249 |
| 127. | புறம்.299:1 |
| 128. | அ,அம்துல் மஜீத்.ஆய்வுக் கொத்து ப-40 |
| 129. | அகம்.133:5 |
| 130. | நற்.247:3-4 |
| 131. | புறம்.326:4-5 |
| 132. | நற்.353:1-2 |
| 133. | புறம்.383:10-11 |
| 134. | பொரு.82 |
| 135. | புறம்.398:20 |
| 136. | கலி.72:1 |
| 137. | நற்.33 |
| 138. | திருமுறு.15 |
| 139. | க.இராசமாணிக்கம், பண்டைத் தமிழர் வாழ்வியல், ப-146 |
| 140. | புறம்.393:17-18 |
| 141 | புறம்.383:10-11 |
| 142. | பெரும்பாண்.469 |
| 143. | புறம்:383:0) |
| 144. | புறம்.392:14-15 |
| 145. | பெரும்பாண்.155 |
| 146. | புறம்397:15 |
| 147. | மேலது.274 |

| | |
|---|---|
| 148. | நற்.90 |
| 149. | மேலது:64:4 |
| 150. | பரிபாடல்.4:18 |
| 151. | புறம்.170:15-17 |
| 152. | அகம்.93:3-7 |
| 153. | நற்.13:5-6 |
| 154. | நற்.133, நற்:13, அகம்.202, அகம்.224 |
| 155. | நற்.90:4 |
| 156. | பண்டைத் தமிழர் தொழில்கள்.ப-99 |
| 157. | பெரும்பாண்.248:249 |
| 158. | சிறுபாண்.51:56 |
| 159. | மேலது.257 |
| 160. | புறம்.87:3-4 |
| 161. | அகம்:234:2-8 |
| 162. | மலைபடு.474:475 |
| 163. | பெரும்பாண்.377 |
| 164. | புறம்.228:1-4 |
| 165 | புறம்.82 |
| 166 | கலி.முல்லைக்.117:5-7 |

# இயல்-5

## அரசும் தொழிலும்

உலகம் உயிர்வாழ உணவும், நீருமே அடிப்படை. உணவை உற்பத்தி செய்ய நீர் நிலைகள் முக்கிய காரணிகளாகின்றன. தமிழர்கள் ‘‘நீரின்றி அமையாது உலகு’’ என்பதை நன்கு அறிந்தவர்களாயிருந்தனர். இந்நிலத்தில் வாழும் உயிர்கள் நிலை பெற்றிருக்க நீரே அவசியமாகின்றது. இதனை,

**‘‘மணி உயில் ஏமுற மலர்ஞாலம் புரவுஈன்று**
**பல்நீரால் பாய்புனல் பரந்து ஊட்டி’’**[1]

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

பொதுவாக நெல்லும் உயிரன்றே அந்நெல் பெருக உதவும் நீரும் உயிரன்றே. இந்நீர் நிலைகளை உருவாக்கி மக்களை வாழ்விக்கும் மன்னனே உயிர்களைக் காப்பவன் ஆவான். இதனை,

**‘‘நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே**
**மன்னன் உயிர்தே மலர்தலை உலகம்’’**[2]

என்று புறநானூற்றில் பாடலடிகள் உணர்த்தும்.

இத்தகு சிறப்பு வாய்ந்த ஆட்சித் தலைவனின் கடமைகளையும் மக்களுக்கு அவன் ஆற்ற வேண்டிய தொழில்களையும் அவனைச் சார்ந்து இருப்போரின் வினைகளையும் ஆராய்வதே இவ்வியலின் நோக்கமாகும்.

**‘அரசு’ சொல்லாட்சி**

மனிதன் உணவிற்காக நாடோடியாய் திரிந்த காலம் முதல் நாகரிகம் வளர்ந்த காலம் வரை ஒரு தலைமையின் கீழ் வாழும் கட்டுபாட்டுக்குள்ளானான். அத்தலைமை அவனுக்குச் சமூகப் பாதுகாப்பையும், அவனுக்கு வாழ்வாதாரத்தையும் பெற்றுத் தருவதாய் விளங்கியது. அத்தலைமையே ‘அரசு’ என்ற சொல்லினால் குறிக்கப்பட்டது. ‘‘ஓர் இறையின் கீழ் வரையறுக்கப்பெற்ற

புவியியல் பகுதியிலுள்ள மக்கள் சமூகத்தின் மேலாண்மையே அரசு எனப்பட்டது. அரசு, மக்கள் சமூகம் முழுவதுக்குமோ அல்லது கட்டுப்பாட்டுக்குட்பட்ட ஒரு பகுதிக்கோ உரியதாகும்.''[3]

சமூகத்தின் வளர்ச்சிக்கு அரசே பெரும் பங்காற்றியது ஆகையால்தான், ''அரசு என்பது ஒரு குறிப்பிட்ட வளர்ச்சிக் கட்டத்தை எட்டிய சமுதாயத்தின் விளைபொருள்.''[4] எனக் கூறினர். மேலும் ''சமுதாயத்திலிருந்து தோன்றிய சமுதாயத்திற்கு மேலாக தன்னை வேறாகப் பிரித்துக் கொண்டு செல்லும் சக்தியே அரசு என்பது''[5] குறிப்பிடத்தக்கது.

அரசு என்பது மக்களுக்காக பல்வேறு பணிகளைச் செய்வதாகும். இதனையே அரசாங்கம் என்ற சொல்லால் குறிக்கிறோம். ''அரசாங்கம் என்பது அரசன் வேலைகளைச் செவ்வனே செய்யப் பொறுப்புள்ளதாவும், அதிகாரமுள்ளதாகவும் உள்ள ஒரு மக்கள் குழுவைக் குறிக்கும்''[6] இனி அரசு என்ற சொல் சங்க இலக்கியங்களில் 22 இடங்களில் அரசன் என்ற பொருளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**''முரசுகெழு தானை அரசு துயிலீயாது''**[7]

**''அரசு இழந்திருந்த அல்லற் காலை''**[8]

என வேந்தர்களையும்

**''அறநெறி முதற்றே அரசின் கொற்றம்''** [9]

**''அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்''**[10]

**''துஞ்சாக் கண்ண வடபுலத்து அரசே''**[11]

எனப் பிறரும் இச்சொல்லால் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

குறுநிலமன்னர், முதுகுடி மன்னர், சீறூர் மன்னர், வேந்தர் என அனைவரும் மேற்கொண்டதே அரசாட்சி ஆகும்.

## அரசன், அரசர்

சங்க இலக்கியங்களில் ஆட்சித் தலைவனை மன்னன், அரசன், வேந்தன்,இறை, காவலன்,கோ எனப் பல்வேறு பெயர்களால் சுட்டப்படுகின்றன. சங்க இலக்கியந்தொட்டு இக்கால இலக்கியம்வரை ஆட்சித் தலைவனை அரசன் எனக்கூறும் மரபு வழக்கில் உள்ளது. ''ராஜா'' என்னும் வடசொல்லினின்று ''அரசன்'' தோன்றினான் என்பார் ரா.பி.சேதுப்பிள்ளை.[12] அரசன் தமிழ்ச்சொல்லே என்பர் ஞா.தேவநேயனார்.[13] தொல்காப்பியர் காலத்தே அரசர் என்னும் சொல் ஆட்சித் தலைவனை குறிக்குமிடத்து வழங்கி வந்துள்ளது.

**''படையும் கொடியும் குடையும் முரசும்**
**நடைநவில் புரவியும் களிறிற் றேரும்**
**தாரும் முடியும் நேர்வன மறவும்**
**தெரிவுகொள் செங்கோல் அரசர்க் குரிய''[14]**

என்று தொல்காப்பியம் அரசனைக் குறிக்கும். அரசர் என்னும் சொல் தொல்காப்பியத்தில் மூன்று இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புறநானூற்றிலும் பல்வேறு இடங்களில் ஆட்சித் தலைவனை 'அரசர்' என்னும் சொல்லால் குறிப்பிடுகின்றனர். அரசன் எனும் சொல் பதிற்றுப்பத்தில் ''தென்குமரி ஆயிடை அரசர்''[15] எனவும், குறுந்தொகையில் ''முறையுடை அரசன் செங்கோல் அவையத்து''[16] எனவும் கலித்தொகையில் நான்கு இடங்களிலும்[17] பொது நிலையில் கையாளப்பட்டுள்ளது. ''அரசர் காட்சிக்கு எளியவராகவே''[18] சங்க இலக்கியங்களில் காட்டப்பட்டுள்ளது.

## வேந்தன்

நிலத்தை ஆட்சி செய்யக்கூடிய தலைவனை வேந்தன் என்னும் சொல்லாலும் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. தொல்காப்பியர்,

**''வேந்தன் மேய தீம்புனல் உலகம்''[19]**

என நால்வகைத் தெய்வங்களைச் சுட்டுமிடத்து கூறுகிறார். நீர்வளம் நிறைந்த மருதநிலத்தின் கண் அரசன் தன் மக்களைக் காத்து அவர்கள் சமுதாய வாழ்வில்

முன்னேற்ற துணை செய்தவன். ‘‘அரசு என்பது வேந்தரை குறிப்பிட்டு ஆளப்பட்டதாகவே கொள்வோரும் உளர்’’[20] மக்களும் தங்களுக்குத் துணை செய்த மன்னவனைத் தெய்வமாக மதித்து வணங்கினர். ஆதலால் வேந்தனையே மருத நிலத்தின் தெய்வமாக வைத்தார் தொல்காப்பியர்.

புறநானூறு பல்வேறு இடங்களின் வேந்தன் என்ற சொல்லால் சேர, சோழ பாண்டியர்களை கூறுகின்றனது. பாரி மகளிர் தன் தந்தை இறந்தபோது பாடிய கையறு நிலைப்பாடலில்

**‘‘வென்றெறி முரசின் வேந்தர்’’**[21]

என்று குறிப்பிடுகின்றன. ‘‘குறுநிலமன்னர்களும், வேளிர்களும் மூவேந்தர்க்கு கட்டுப்பட்டவர்களே’’[22] எனக் கூறுவர்.

## இறை

இறை என்னும் சொல் பொதுவாக கடவுளைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. சங்க இலங்கியங்களில் தலைவன் கடவுள், வேந்தன் என்னும் பொருள்களில் இச்சொல் வழுங்கப்பட்டுள்ளது. மக்கள் தங்களைக் காத்துக் கொள்ளவும், தங்களது விண்ணப்பங்கள் நிறைவேறவும் கடவுளை வேண்டினர். ஏனெனில் கடவுளே அவற்றையெல்லாம் வழங்கும் ஆற்றல் படைத்தவன் என நம்பினர். ஆகையால் தான் தங்களுக்கு தேவையானதை வழங்கும் ஆட்சித் தலைவர்களை இறை அல்லது இறைவன் என வழங்கினர்.

அக இலக்கியமான கலித்தொகையில் தன் புறத்தோற்றத்தால் தலைவியை நாட்டினுள் உலவ விட்டு மக்களுக்கு துன்பத்தை ஏற்படுத்திய இறையே தவறுடையவன் என்றும் ஆட்சித் தலவனை சுட்டுகிறான் ஒரு தலைவன் இதனை,

**‘‘பறை அறைந் தல்லது செல்லற்க என்னா**

**இறையே தவறுடையான்’’** [23]

என்னும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் தன்னை பழித்த பகையரசர்களை தான் வெல்லும் பொருட்டு வஞ்சினம் கூறுகின்றான். அவ்வாறு செல்ல முடியாது போனால்.

**“கொடியன்எம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்**

**குடிபழி வெல்ல கொல்லன் ஆகுக”[24]**

என்று கூறி தம் மக்கள் கண்ணீர் சிந்திஎம் அரசன் கொடியவன் என என்னைத் தூற்றட்டும் என்று கூறுகின்றான்.இங்கு பாண்டியன் தன்னை இறையெனக் குறிப்பிடுவது அக்கால அரசர்களை ‘இறை’ என வழங்குவது மரபாகும்.

**மன்னன்**

‘மன்’ என்னும் சொல்லிற்கு தமிழ் மொழி அகராதி ‘நிலைபேறு’ என்று பொருள் தருகிறது. மன்னன் என்பவென் நிலைபேறு உடையவர் சிறிய நிலப்பகுதியை ஆண்டவன்.

**“சீறூர்மன்னன்”[25]**

என்னும் பாடலடிகள் குறிப்பிடுகின்றது.

குறுநிலப்பகுதியை ஆண்டவனும் ‘மன்னன்’ என்னும் சொல்லால் குறிக்கப்படுகிறான். இதனை,

**“குறுநில மன்னர்”[26]**

என்று மதுரைக் காஞ்சி குறிப்பிடுகின்றது.

ஒரே அரணுக்குறிய மன்னம் “ஓரெயிள் மன்னன்”[27] எனவும், தொன்மையான குடியிலே பிறந்த மன்னன் “தொல் மன்னன்”[28] எனவும், மருத நிலம் சூழ்ந்துள்ள மன்னன் “தண்ணடை மன்னர்”[29] எனவும், பருத்தி வேலி சூழ்ந்த சிறிய ஊர்களுக்குறிய மன்னன் “பருத்தி வேலிச் சீறூர் மன்னன்”[30]எனவும் சங்க இலக்கியங்கள் “மன்னனை” குறிப்பிடுகின்றன.

பொதுவாக மன்னன் என்பவன் பல குறுநில பகுதியை ஆள்பவனாகவோ அல்லது, சிறிய ஊர்களின் தலைவனாகவோ காணப்படுகிறான்.

**அரச உரிமை**

அரச உரிமை வழி வழியாக வந்தது தந்தைக்குப் பின்னர் மகன் பட்டத்துக்கு வருவதே முறைமை என்பதை,

> **"மூத்தோர் மூத்தோர்க் கூற்ற முய்ததெனப்**
> **பாறா வந்த பழவிறற் றாயம்"**[31]

என்ற அடிகளால் உணர முடிகிறது. அரசருக்கு ஆண் குழந்தை இல்லாத போது இவ்வழக்கம் மாறியது.

சேர, பாண்டிய அரசர்கள் பரம்பரையில் அரசுரிமையைப் பற்றித் தகராறு ஏதேனும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. ஆனால் சோழ நாட்டில் பல உள்நாட்டுக் கலகங்களும், பட்டத்துக்கு உரிமை பெற பல தகராறுகளும் நடந்தன என்றும் இரண்டாம் கரிகாலன் அரசு கட்டிலேறிய வரலாறு இதற்கு ஏற்ற எடுத்துக்காட்டாகும் என்றும் அறிஞர் கூறுவர்.[32]

**அரசர்க்குரிய தொழில்**

மக்களின் மனநிலை அறிந்தே ஆட்சி செய்பவன் சிறந்த அரசனாகிறான். நாகரிகம் வளரத் தொடங்கிய காலத்தில் மக்கள் ஓரிடத்தில் தங்கி வேளாண் தொழிலை மேற்கொண்டபொழுது விலங்குகளிடமிருந்து பயிர்களை பாதுகாக்க வலிமையுள்ளவரின் பாதுகாப்பு தேவைப்பட்டது. இப்பாதுகாப்பை ஏற்படுத்தித் தந்தவர்களே அவர்களுக்கு தலைவனாகி பின்னர் அரசனாகியிருக்க வேண்டும். பாதுகாப்பினை ஏற்படுத்தித் தந்த தலைவர்க்கு விளைச்சலில் பெரும் பங்கினை மக்கள் அளித்திருக்க வேண்டும். அதுவே பிற்காலங்களில் வரி செலுத்தும் முறையினை ஏற்படுத்தியிருக்கலாம்.

பயிர்களைப் பாதுகாத்தவன் பின்னாளில் மக்களை பகையரசர்களிடமிருந்து பாதுகாத்தான். இவ்வாறு அரசர்கள் தங்கள் நாட்டிலுள்ள குடிகளை தாய் குழந்தையைப் பாதுகாப்பதுபோல் காவல் புரிந்தனர். இதனை,

**"காவல்**

**குழவி கொள்பவரின் ஓம்புதி"**[33]

என்ற பாடலடிகளால் உணரலாம். அரசன் காவல் புரிந்து மக்களை காப்பதோடு மட்டுமல்லால் இயற்கை சீற்றங்கள் ஏற்படும்போதும், இன்னும் பிற இன்னல்கள் நேரும் போதும் மக்களுக்கு உணவளித்து காப்பனாவன். இதனை,

**"காவல் மன்னர் கடைமுகத்து உகுக்கும்**

**போகுபலி வெண்சோறு போலத்"** [34]

இவ்வாறு அரசர்கள் மக்களைக் காவல் புரிந்தும் வேண்டியன கொடுத்தும் பாதுகாத்தனர்.

**நீர்நிலைகள் அமைத்தல்**

சங்க காலச் சமூகத்தில் வேளாண் தொழிலே மிக முக்கியத் தொழிலாக சிறப்புறிறுருந்தது. வேளாண் தொழிலுக்கு அவசியமானது நீர். இத்தகு நீரைப் பெற அரசன் ஆங்காங்கு நீர்நிலைகளை ஏற்படுத்தித் தருவது அவனது கடமையாகப் போற்றப்பட்டது.

உழவுத் தொழிலை போற்ற நினைக்கும் வேந்தன் முதலில் நீர்நிலைகளைப் பெருக்க வேண்டும். பசியும், பிணியும், பகையும் இன்றி மக்கள் வாழும் நாடே சிறந்த நாடாகப் போற்றப்படும். அவ்வாறு போற்றப்பட வேண்டுமானால் உணவு அவசியத் தேவையாகின்றது. அவ் உணவிற்கு நன்னிலமும் நிறை நீரும் அவசியம். நீர் இல்லாத நிலமும் பயனற்றுப் போகும். ஆகவே நீர் நிறையக் கிடைக்கஅங்காங்கு பல்வேறு நீர்நிலைகளை ஏற்படுத்தித் தருதல் அரசனது தலையாய கடமையாகும். இதனை,

**"நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்**

**உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே**

**உண்டி முதற்றே உணவின் பிண்டம்**

**உணவெனப் படுவது நிலத்தோடு நீரே**

**நீரு நிலனும் புனரி யோரீன்**

**உடம்பும் உயிரும் படைத்திசி னோரே"** [35]

என்ற பாடலடிகளில் குட புலவியனர் என்னும் புலவர் பாண்டியன் நெடுஞ்செழியனிடத்து அறிவுறுத்துகிறார்.

நீர் நிலைகளை ஏற்படுத்திய பிறகு மழை. புயல், வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களால் அவை பாழாகும் வாய்ப்புமுண்டு. அவ்வாறு அவ பாழாகா வண்ணம் தாம் ஏற்படுத்திய நீர்நிலைகளுக்கு காவலன் ஒருவனை நியமித்து அவைகளை அரசர்கள் பாதுகாத்தும் வந்திருக்கின்றனர்.

**“அன்னாய் வாழி வேண்டுஅன்னை உவக்காண்**

**மாரிக் குளத்துக் காப்பா என்னன்**

**தூவலில் நனைந்த தொடலை ஒள்வாள்**

**பாசி சூழ்ந்த பெருங்கழல்**

**தண்பனி வைகிய வரிகச் சினனே”**[36]

என்ற ஐங்குறுநுற்றுப் பாடல் மாரிக் காலத்தில் குளத்தினைக் காப்பவன் நிற்கும் சூழல் பற்றி எடுத்துரைக்கின்து.

அரசனது தொழிலே உலகுக்கு தொண்டு செய்தலாகும். அதற்கு மயக்கந் தீர்ந்த அறிவும், நடுநிலைமையும் முறை வேண்டுவார்க்கும், குறை வேண்டுவார்க்கும் எளிதாகவும் இனிதாகவும் இடந்தரும் பண்பும், உதவும் உள்ளமும், நல்லமைச்சர் முதலிய ஆட்சிக் குழுவினரும் அரசனுக்கு வேண்டும். உலகத்தார்க்கு இங்ஙனம் நலஞ்செய்யும் உள்ளொளி நிகழ்ச்சியே அரசோச்சுதலாகும். அரசன் அத்தாணி மண்டபத்தில் அமைச்சர் முதலிய அரசியல் சுற்றங்களின் நடுவே ஒளியோடு இருந்து ஆட்சி புரியும் இயல்பு பெரும்பாணாற்றுப்படையில் பின்வருமாறு சித்தரிக்கப்பட்டுள்ளது.

**“குணகடல் வரைப்பின் முந்நீர் நாப்பன்**

**பகல்செய் மண்மலம் பாரித் தாங்கு**

**முறைவேண்டு நர்க்கும் குறைவேண்டு ர்க்கும்**

**வேண்டுப வேண்டுப வேண்டினர்க் கருளி**

**இடைத்தெரிந் துணரும் இருள் நீர் காட்சிக்**

**கொடைக்கடன் இறுத்த கூம்பா உள்ளத்து**

**உரும்பில் சுற்றமோடு இருந்ததோன்,"[37]**

குடிமக்களின் நலன் ஒன்றே அரசனின் உயரிய தொழிலாகப் போற்றப்பட்டது.

## சிறந்த ஆட்சி முறை

நாட்டில் மக்கள் கவலையின்றித் தத்தமது கடமைகளைச் செய்து நலம்பெறல் வேண்டும். அதற்கு நாட்டில் அமைதி நிலவ வேண்டும். அதற்கு பகையரசரால் நாட்டுக்கு நலிவு இல்லாத மன்னன் வீரத்தோடும் அருளோடும் ஆட்சி செய்தல் வேண்டும். தன்னை மதிக்கும் நட்பரசரை மேன்மேலும் தனது அணியினால் தழுவிச் செல்லுதல் வேண்டும். இங்ஙனம் அரசன் வீரமும், அருளும் உடையவனாய் ஆட்சி செய்தால் நாட்டில் எப்பொழுதும் அமைதி நிலை பெற்றிருக்கும், புறநானூற்றில் குறுங்கோழியூர் கிழார் என்னும் புலவர் சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்னும் மன்னன் ஆட்சியையும் நாட்டையும் புகழ்ந்து பாடியுள்ள பாடலில்

**"சோறுபடுக்குந் தீயோடு**

**செஞ்ஞாயிற்றுத் தெறவல்லது**

**பிறிதுதெறல் அறியார்நின் நிழல்வாழ் வோரே**

**திருவில் அல்லது படையும் அறியார்**

**நாஞ்சி லல்லது படையு மறியார்**

**திறன்அறி வயவரொடு தெல்வர் தேயஅப்**

**பிறர்மண் உண்ணும் செம்மல்நின் நாட்டு**

**வயவுறு மகளிர் வேட்டுணி னல்லது.**

**பகைவர் உண்ணா அருமண் ணினையே"[38]**

எனப் போற்றியுள்ளார். அங்ஙனம் பகைவர் உண்ணாத அரிய மண்ணினையுடையவன் எனினும் தன்னைச் சினப்பித்தால் சேரமன்னன் சும்மா இரான் போரின் கூறுபாடுகளை அறியும் தம் வீரரோடு பகைமன்னர் அழியும் படி

அவர் நாட்டினை உடனே கவர்ந்து கொள்வன் அத்தகைய தலைமைப்பாடுடையவன் அவன் என்று கூறியுள்ளார்.

மன்னனது வெற்றிக்குக் காரணம் அவனது படை வலிமையன்று அவனது அறமுறைமையே ஆகும். அறம் என்பது நடுநிலைமை அதாவது நம்மவரென்று அவரது தீமைக்கு ஆக்கமும், அயலவரென்று அவரது நேர்மையான முயற்சிக்கு அழிவும் வீரமும், மென்மையும் கொடையும் உரிய இடங்களிற் புலப்படுத்தித் தனது கடமையைக் காத்தலாகும். இதனால் நாடு வளம் பெறும் நாட்டு மக்களும் வளம் பெறுவர் என்கிறார் புலவர் மருதனிளநாகனார்.

**அறநெறி முதற்றே அரசின் கொற்றம்: அதனால்,**

**நதரெனக் கோல்கோடாது**

**பிறரெனக் குணங்கொல்லாது**

**ஞாயிற்றுன்ன வெந்திறப் ஆண்மையும்**

**திங்க என்ன தண்பெருந்த சாயலும்**

**வானத் தன்ன வண்மையும் மூன்றும்**

**உடையை யாகி இல்லார் கையற''**[39]

என அரசோச்சுதல் வேண்டும்.

குடிமக்களுக்கு மேன்மேலும் வளம் உண்டாக்கிக் கொடுத்து அரசன் அவர்களிடம் அன்புடன் திறைபெறுதல் வேண்டும். மக்கள் தமது திறைப்பொருளைத் தாமே அன்புடன் செலுத்தும்படி அரசன் நடந்துகொள்ள வேண்டும். மேலும் அவர்கள் பகுதி பகுதியாக எளிதிற் செலுத்தவும் இடங்கொடுக்க வேண்டும். தன் நாட்டு மக்கள் மேன்மேலும் வளமாகவும், நலமாகவும் வாழ்வதற்கு தான் இன்னும் என்னென்ன செய்யலாம் என்று ஆராய்ந்து நல்ல வசதிகளை அவர்களுக்கு உண்டாக்கிக் கொண்டிருக்க வேண்டும். இத்தகு அறிவுள்ள அரசனது ஆட்சியில் குடிமக்கள் மேன்மேலும் வளமுறுவதனால், அரசனுக்கு அவன் உண்டாக்கிக் கொடுக்கும் புதிய வழிகளில் பல புது வரிகள் கிடைக்கவும் இடமிருக்கின்றது. குடிமக்களும் அவ்வழிகளைக் கடைப்பிடித்து முயற்சியோடு தழைக்கவும் இடமிருக்கின்றது.

**“அறிவுடைய வேந்தன் நெறிஅறிந்து கொளினே**

**கோடியாத்து நாடுபெரிது நந்தும்”**[40]

அதனால் அறிவுடைய வேந்தன் மேற்காட்டியபடி முறையறிந்து ஆட்சி செய்தால் குடிமக்களும் மகிழ்ச்சியடைவர். ஆட்சிமுறையில் இடர்ப்பாடுகள் பல நேரினும் மக்கள் மீது அதைத் திணிக்காமல் அரசன் தானே அதை ஏற்றுக் கொள்ளக் கூடியவனகாகக் காணப்பட்டான்.

கடற்கரையிடத்து உள்ள உப்பங்கழி நீரால் விளைந்த உப்பை முகந்துகொண்டு வண்டிகள் மலை நாட்டை நோக்கிச் செல்கின்றன. அப்பொழுது வண்டிகளில் சக்கரங்கள் மண்ணுள் புதைந்து இழுத்துச் செல்லும் எருதுகளின் வேகத்தைத் தடை செய்கின்றன. இதனால் அவ்வெருதுகள் தம்மால் இழுத்துச் செல்ல இயலாது என்று நின்று விடாது தம் உடல் வலிமை முழுவதையும் பயன்படுத்தி முன் செல்கின்றன. இவ்வாறு செல்லுகின்ற எருதுகளை ஒத்தவன் சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன் என்று உறையூர் மருத்துவன் தாமோதரனார் இச்சோழ மன்னனின் திறத்தினைச் சிறப்பித்துரைக்கின்றார்.

**“கழியுப்பு முகந்து கன்னாடு மடுக்கும்**

**ஆரைச் சாகாட் டாழ்ச்சி போக்கும்**

**உரனுடை நோன்பகட் டன்ன வெங்கோன்”**[41]

**“அச்சொடு தாக்கிப் பாருற் றியங்கிய**

**பண்டைச் சாகாட் டாழ்ச்சி சொல்லிய**

**வரிமணன் ஞெமரக் கற்பக நடக்கும்**

**பெருமிதப் பகட்டுக்குத் துறையு முண்டோ”**[42]

இதனால் அரசியலாகிய வண்டி மேல்நோக்கிச் செல்லும் போது தன்னை அழுத்தி முன்னேற விடாது நசுக்கினாலும் அஞ்சாது தன் முழு வலிமையுடன் அரசன் முன்னேறுவான் என்பது பெறப்படுகின்றது.

அரசியல் இனிதாக நடைபெற அரசன் அறிஞர்களோடு தொடர்புடையவனாய் இருத்தல் வேண்டும். அரசியலுக்கு ஆக்கமெல்லாம் அறிஞர்களாலேதான் உண்டாகின்றன. ஆதலால் அறிவியல் அரசோடு மிக்க தொடர்புடையது அந்நிலையறிந்து அரசன் அறிஞர்களைப் பொருள் செய்து ஒழுக வேண்டும். அரசியலுக்கு உதவக்கூடிய அறிஞர்களாகச் சங்ககாலப் புலவர்கள் விளங்கினார்கள். இக்கருத்து புறநானூற்றுப் பாடலொன்றில் பெருந்தலைச் சாத்தனார் மூவன் என்னும் சிற்றரசனிடம் பெரும் புலவரும் அரசருமாகிய நமக்குள் உள்ள நெருங்கிய அணுக்கத்தே நின் திருவோலக்க இருக்கை விரைவில் காண்பதாக எனும் பொருள்பட,

**-----பெரும! நும்முட்**

**குறநணி காண்குவ தாக நாளும்**

**-------------**

**செருவஞ் சேஎய்! நின் மகிழிருக் கையே''[43]**

எனக் கூறியுள்ளதனின்றும் உணரலாம். மேற்கூறப்பட்டவற்றினின்றும் சிறந்த முறையில் ஆட்சி செய்த அரசர்கள் அக்காலத்தில் அரசாண்டனர் என்பதை உணரமுடிகிறது. அரசர்க்கு உறுதுணையாய் ஆன்றோர் பலர் உடனிருந்து வழி நடத்தினர். குடிமக்கள் அவர்கள் அரசு நிழலில் பேரமைதியுடன் விளங்கினர் என்பதும் பெறப்படுகிறது.

**அரசர்கள் மக்களின் துன்பம் போக்கியமை**

அரசர்கள் தம் நாட்டில் நீர்வளத்தைப் பெருக்குதலைத் தம் கடமையாகக் கொண்டிருந்தனர். உணவுக் குறைவின்றி மக்கள் வாழ்தல் வேண்டும். இதனால் பசி ஒழிதல் வேண்டும். இயற்கைப் பகையாகிய பசியை ஒழிக்கவும் உணவைப் பெருக்கவதற்கும் நிலத்தை வளப்படுத்துதல் வேண்டும். இதற்கு ஏரிகுளங்களைச் செப்பனிட்டு அவற்றில் நீரைத் தேக்க வேண்டும்.

காவிரி பல கால்வாய்களாய் ஓடி நிலத்தில் பாய்ந்து பலருக்கு உயிரைக் கொடுக்கிறது. இவ்வண்ணம் நீர்நிலையை அரசர்கள் பெருக்கினர். ஈன்றணிமை தீர்ந்ததும் குழந்தைக்குச் சுரக்கும் முலைபோல நீர் மிக்க காவிரியானது கரையிலுள்ள மரத்தைச் சாய்க்கும் வண்ணம் வெள்ளம் மிகுந்து உலகத்து உயிர்களைப் பாதுகாக்கிறது.[44]இத்தகைய காவிரியையுடைய சோழ நாட்டின் வேந்தன் நலங்கிள்ளி என்று கோவூர்கிழார் பாராட்டுகின்றார்.

நலங்கிள்ளியின் செங்கோன்மையால் சோழ நாடு நீர்வளம் மிக்கு நிலவளம் நிரம்பியதாகும் என்பதை இது குறிக்கிறது.

உடலுக்கு நீர் இன்றிமையாதது இவ்வுடம்பிற்கெல்லாம் உணவு கொடுத்தவர்கள் உயிரைக் கொடுத்தவராவர். உணவை முதலாக உடையது உடம்பு உணவு நீர்வளத்தாலும் நிலவளத்தாலும் உண்டாவதாகும். நீர் வளத்தையும் நில வளத்தையும் ஒரு சேர உண்டாக்குபவர் உடம்பையும் உயிரையும் படைத்தவராவர். இவ்வாறு குடபுலவியனார் பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு அறிவுத்தி[45] இவ்விரு வளத்தையும் பெருக்கிப் புகழெய்துமாறு கூறுகிறார்.

நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் போதிய உணவு பெறும் வகையில் ஒரு மன்னர் ஆட்சி அமையவேண்டும் என்பது இதனின்றும் புலனாகிறது.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனின் நாடு காவிரி பாய்ந்து வளம் கொழிக்கும் நாடாகையால் இவ்வுலகத்தை ஆளும் மூவேந்தர்களுள் அவனுடைய அரசே சிறப்புடையது என்று வெள்ளைக்குடிநாகனார் போற்றுகிறார்[46]

இக்கிள்ளிவளவனுடைய நாட்டில் ஒரு யானை படுத்துத் தூங்கும் சிறிய இடத்தில் விளைந்த விளை பொருள்கள் ஏழு யானைகளுக்கு வேண்டும் உணவாயின என்று ஆவூர் மூலங்கிழார் சிறப்பித்துரைக்கிறார்.

> **“ ஒருபிடி படியுஞ் சீறிடம்**
> **எழுகளிறு புரக்கு நாடுகிழ வோயே”**[47]

அரசர்கள் நாட்டின் வளத்தைப் பெருக்கி மக்களின் துன்பத்தை நீக்கி அவர்கள் இனிது வாழ ஆட்சி செய்ய வேண்டும் என்பதும் சங்ககால மன்னர்கள் பலர் இங்ஙனம் நல்லாட்சி செய்தனர் என்பதும் மேற்கூறிவற்றிலிருந்து அறியலாம்.

**இரவலர்களைப் புரத்தல்**

அரசர்கள் தம்மை நாடிவந்த புலவர்களையும் இரவலர்களையும் தம் அவைகளத்திற்கு வரவேற்று வேண்டிய சிறப்புக்களைச் செய்தனர். தம்முடன் இருக்கும் பொழுது இரவலருக்கு உணவும் உடையும் கொடுத்துச் சிறப்பித்தனர். பிரியும் பொழுது அவர்களுக்குப் பல பரிசில்களை வழங்கினர்.

புலவர்கள் எந்நேரமும் அவைக்களத்தில் புகும் உரிமையுடைவர்களாயிருந்தனர். அவைக்களம் தங்களுக்குறிய இடம் போல அங்கு செம்மாந்து நடந்தனர்.[48] புலவர்கள் தன்னைப்பாடாது விடுதல் இகழ்ச்சி என அக்கால மன்னன் கருதினான்.

**"அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொ**

**டொருங்ககப் படோ ணயிற் பொருந்திய**

**.........................................................**

**.......................................................**

**ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி**

**மாங்குடி மருதன் றலைவனாக**

**உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்**

**புலவர் பாடாது வரைக வென் னிலவரை"[49]**

மேலும் அவர்கள் புலவர்களை நண்பராகக் கருதி அவர்களோடு நெருங்கிப் பழகினர். இவ்வாறு மன்னர்கள் புலவர்களைப் பெரிதும் போற்றி ஆதரித்து நாட்டின் கல்வியையும் கலைகளையும் வளர்த்தனர்.

**அரசர்களும் அறமும்**

இன்றுள்ளதைப் போன்று சட்டங்கள் பழங்காலத்தில் இல்லை. தொன்று தொட்டு முன்னோர்களால் பின்பற்றப்பட்டு வந்த மரபுகளே சட்டங்களாக இருந்து வந்தன. நீதி நூல்கள் ஒவ்வொருவரும் ஒழுக வேண்டிய முறைகளை வலியுறுத்தின. இந்நூற் கருத்துக்களின் முறைப்படி நெறி பிறழாது காக்கும் கடமையுடையவனாக மன்னன் கருதப்பட்டான்.

கொடுந்தொழிலைச் செய்தோர்க்கும் அவர் செய்த பாவத்தினைப் போக்கும் வழியுள்ளது. ஆனால் ஒருவர் செய்த நன்றியினைச் சிதைத்தோர்க்கு நரகத்திலிருந்து தப்ப முடியாது.[50] போன்ற அறநூலில் கூறப்பட்டுள்ள பல கருத்துக்களைப் புலவர்கள் அரசர்களுக்கு எடுத்துரைத்தனர். அரசர்களும் அவற்றின்வழி ஒழுகினர் எனலாம்.

அரசர்கள் அறத்தின் ஆற்றலை நன்கு உணர்ந்திருந்தனர். அறநெறி முதற்றே அரசின் கொற்றம்,[50] என்பதைதே அக்காலக் கொள்கை. நரிவெரூஉத்தலையார்.

**“ அருளு மன்பு நீக்கி நீங்கா**
**நிரயங் கொள்பவரொ டொன்றாது காவல்**
**குழவி கொள்வரி னோம்புமதி”[51]**

என்று சேரமான் கருவூரேறிய ஒவ்வாட்கோப்பெருஞ்சேரலிரும் பொறைக்கு அறிவுறுத்துகின்றார்.

**அமைச்சர்**

ஒரு நாடும் மன்னனும் புகழுற வேண்டுமெனில் நல்லமைச்சர் தேவை என்பது தமிழ்ச் சான்றோரின் முடிவு. நாட்டையாளும் மன்னனின் அருகிலேயே எப்பொதும் இருப்போராக உள்ளவர்கள் அமைச்சரும் படைத்தலைவருமே ஆவர். அமைச்சரை அரசனின் ‘‘சுற்றம்’’[52] என்றும் கூறுவர். இவர்களுள்ளும் அமைச்சரே அரசனுக்கு முதன்மைத் துணையாக உள்ளவர். அமைச்சரே படைக்குத் தலைமை தாங்கி போர்புரியப் போதலும் உண்டு. அமைச்சரே தூது போதலும் உண்டு. அமைச்சரே காலக் கணிதர் தாழிலையும் புரிதலுண்டு.

அமைச்சர் தொழில் மேற்கொள்ளவார்க்கு ஆன்ற குடியிருப்பு இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் இயற்றை நுண்ணறிவும், ஆன்ற நல்லொழுக்கமும், நூற்பயிற்சி முறையும், உலகியல் உணர்வும் நன்கு அமையக்கூடும் இயற்கையாகப் பெற்ற நுண்ணறிவோடு, நூலறிவும் அமையப் பெற்று நல்ல அறவொழுக்கம் உடையவராகவும் அமைச்சர் இருத்தல் வேண்டும். அரசருக்குளீய அறங்களை அறிந்தவராகவும், தாம் கற்றகல்வித் திறத்தால் நிறைந்தமைந்த சொற்களை உடையவராகவும். எக்காலத்திலும் செயல்படக்கூடிய திறம் வாய்ந்தவராகவும் அமைச்சர் இருத்தல் வேண்டும். மன்னன் நாட்டைவிட்டு வெளியிடங்களுக்குச் செல்ல வேண்டிய காலங்களில் மன்னனுடைய ஆணைப்படி நாட்டை ஆளும் திறமையும், அறமுறையும், போர்த்திறனும் உடையவராய் இருத்தலோடு மனத்திண்மையும் உடல்வலிமையும் உள்ளவராயும் அமைச்சர் இருத்தல் வேண்டும்.

**அமைச்சர் கடமை**

நாட்டின் நிலைகளையும் மன்னனின் நிலைமையையும் அறிந்து இன்னது செய்தால் நலம் பயக்கும், இன்னகாலத்தில் இன்ன வகையில் செய்தால் நலம் பயக்கும் என்று ஆராய்ந்து அரசனிடம் சொல்லிச் செய்வதே அமைச்சரின் தலையாய கடமையாக அமையும்.

சங்ககால இலக்கியங்களுள் ஒன்றான மதுரைக் காஞ்சி எனும் நூலில் மாங்குடி மருதனார் காவிதிமாக்களாகிய அமைச்சர் பற்றி அரசன்பால் உள்ள அமைச்சர் என்பார். அரசனிடம் உள்ள நல்லனவற்றையும் தீயனவற்றையும் ஆராய்ந்து அவனை நன்னெறியில் நடக்கச் செய்வர். நல்லன அல்லாதவற்றைக் கைவிடச் செய்வர். அன்பையும் அறத்தையும் குன்றாமல் காவல் செய்வர். ஆரசனைக் குடிமக்களிடம் அன்புடன் ஒழுகச் செய்வர். நீதியின் பழிப்பிற்கு இடமானவற்றைச் செய்யார். போற்றத்தக்க நல்ல செய்லகளையே செய்வர். சிறந்த புகழையும் பெறுவர் இத்துணைச் சிறப்புடைய அமைச்சர்களே காவிதி என்னும் பட்டத்தையும் பெற்றவர் என்று பாராட்டியுள்ளார்.

**“நன்றும் தீதும் கண்டாய்ந் தடக்கி**

**அன்பும் அறனும் ஒழியாது காத்துப்**

**பழிஒரீஇ உயர்ந்து பாய்புகழ் நிறைந்த**

**செம்மை சான்ற காவிதி மாக்களும் “[53]**

காவிதிப்பட்டம் பெற்றமைக்கு அறிகுறியாகக் காவிதிப்பூ என்னும் பொற்பூ வழங்குதல் மரபு. இங்குக் கூறப்படும் காவிதிமாக்கள் பாண்டி நாட்டு மன்னரால் சிறப்பு குறித்து வழங்கப்படும் காவிதிப் பட்டம் பெற்றவரும் முடியுடை வேந்தர்க்கு மகட்கொடை உரிய வரும் பெருநிதிக்கிழாரும் ஆகிய வேளாளர் என்க என்று நச்சினார்க்கினியர் உரை கூறியுள்ளார்.

கலித்தொகை பாடலொன்றில் நாடு புரக்கும் தொழில் செய்பவன் அரசன். அவன் தன் தொழிலைச் செவ்வனே செய்து முடித்தற்குத் துணைபுரிபவர்களுள் அமைச்சரும் ஒருவராவர். பிறர்க்கும் இம்மண்ணுலகம் பொது என்னும் மொழி இன்றாக அறிவாகிய சொல்லுதலை இயல்பாகவுடைய அமைச்சர் என்ற பொருளமைய

**“பொதுமொழி பிறர்க்கின்றி முழுதாளுஞ் செல்வர்க்கு**

**மதிமொழி யிடன்மாலை வினைவர் போல்வல்லவர்”[54]**

எனக் கூறுகிறது.

அமைச்சர் தொழில் மெய்மை நெறியினின்றும் வழுவாது போற்றப்பட்டது. இளஞ்சேரல் இரும்பொறை என்னும் அசரனிடம் ஐமயூர்கிழான் என்னும் வேளிர்குலத் தலைவன் அமைச்சராக இருந்தான். அவனது சிறப்பினைச் கூறுகையில் ஆசிரியர் பெருங்குன்றூர்கிழார் மெய்மை பொருந்திய அமைச்சியல் மரபுகளில் வழுவாதவனாகிய மையூர்கிழானை,

**“மந்திர மரபின் தெய்வம் பேணி**

**மெய்யூர் அமைச்சியல் மையூர் கிழானை” [55]**

என்று போற்றினார்.

இவ்வாறு அரசர்கள் திறம்பட ஆட்சியைச் செலுத்த அமைச்சர்கள் தங்கள் தொழிலை மறவாது அவர்கட்கு உதவியாய் இருந்தனர்.

## தூது

தூது என்னும் தொழில் மிகவும் நல்லியல்பையுடைய ஒரு தொழிலாகும். பண்டைய குடிமன்னர்களின் அரசவை வளர்த்த செய்தொழில்களுள் ஒன்று தூது இருநாடுகட்கிடையில் பகை உண்டாகிவிடுமானால் இருநாடுகளும் போர்தொடுத்து உயிர்கட்கும் பொருள்களுக்கும் பெருத்த அழிவு உண்டாதல் இயல்பு அந்த அழிவை நீக்க வேண்டிச் சான்றோர்கள் இருநாட்டு மன்னர்பாலும் சென்று அறநெறியில் அறிவுரை பொழிந்து இரு மன்னர்களையும் சமாதானப்படுத்தி அமைதியான முறையில் நாடுகளைக் காவல் புரியச் செய்வது வழக்கமாயிற்று, ஈண்டு தொண்டைமானிடம் தூது சென்ற ஔவையாரின் அரும்பணி குறிப்பிடத்தக்கது.

இத்தொழில் செய்யத் தொடங்கப்பெற்ற காலத்தில் இதனைச் செய்தோர் சான்றோர்களாகவே இருந்துள்ளனர். நாளடைவில் தான் அரசியலில் இத்தொழிலுக்கென்று சிலரை நியமிக்கும் வழக்கம் உண்டாயிற்று. தூதுக்கென்று தனித் தொழிலரை அரசில் நியமிக்கப் பெற்றிருந்தாலும் சிலசமயம் அமைச்சரே அத்தொழிலைச் செய்யும் வழக்கமும் இருந்தது.

தூதனாக இருப்பவன் அரசனிடமும் மற்றவரிடமும் அன்பு கொண்டு அரசனுக்கு நன்மையானவற்றை ஆராய்ந்து அறியும் அறிவினையும் வேற்று அரசரிடம் சென்று தூது உரைக்கும் காலத்தில் ஆராய்ந்து முறைப்படி சொல்லும் சொல்வன்மையினையும் பெற்றிருத்தல் வேண்டும்.

## தூதுவர்

ஔவையார் தொண்டைமானிடம் அதியமானின் தூதுவராகச் சென்றபோது தொண்டைமான் தன்படை வலிமையை உணர்த்த அவருக்குத் தன் படைக்கலக் கொட்டிலைக் காட்டினார். அதைக்கண்டு ஔவையார், இப்படைக் கலங்கள் மயிற்பீலி

அணிந்து மாலைகள் சூட்டப்பட்டுள்ளன. அவற்றின் காம்புகள் வலிமையுடையனவாய்த் திரண்டுள்ளன. முடைக்கலங்கள் நெய்யிடம் பெற்று மிக்க காவலோடு பெரிய அரண்மனைக்கண் அழகாக வைக்கப்பட்டுள்ளன. ஆனால் தன் செல்வத்தைப் பலர்க்கும் பகிர்ந்தளித்து உண்ணும் வறிஞர்கட்க்குத் தலைவனாகிய அதியமானின் வேற்படைகளோ பகைவர்களைக் குத்தியதால் கங்கும் நுனியும் முறிந்து கொல்லனது உலை களத்திலுள்ளன என்றுரைக்கிறார்.

தொண்டைமானின் படைக்கலங்கள் நெய்யிடப்பட்டு அழகாக அரண்மனையில் காவலுடன் உள்ளன என்பதால் அப்படைக்கலங்கள் இதுவரை போரில் பயன்படவில்லை என்பது அவை போர்க்களம் அறியாதவை என்பதும் குறிப்பாக உணர்த்தப்படுகின்றது. அதியமானின் வேற்படைகள் பகைவர்களோடு போர் செய்தமையால் அவற்றின் நுனிகள் முறிந்து கொல்லன் உலைகளத்தில் இருக்கின்றன என்பதால் அதியமான் இடையறாது போர் செய்யும் பேராற்றலுடையவன் என்ற உண்மையைக் குறிக்கின்றது. இவ்வாறு ஔவையார் அதியமானின் போர் வலிமையைப் பழிப்பது போலப் புகழ்ந்து கூறும் திறம் அவர்தம் மதி நுட்பத்தைப் புலப்படுத்துகிறது.**[56]** மேலும்,

**“ நன்றி பயப்பதாந் தூது”** [57]

என்று தூதுவனின் தகுதியைத் திருவள்ளுவர்குறிப்பிடுகிறார்.

வேற்றரசருக்குப் பலவற்றைக் கூறும்போது காரணங்களோடு தொகுத்துச் சொல்லியும் இன்னாதவற்றைச் சொல்லுங்கால் இனிய சொற்களால் மனமகிழச் சொல்லியும் தன் அரசனுக்கு நன்மை பயப்பவனே தூதுவனாவன் என்பது இக்குறட்பாவின் பொருள்.

இக்குறட்பாவிற்கேற்ப ஔவையாரின் தூதுரை அமைந்திருப்பது போற்றற்குரியது.

பார்ப்பனன் ஒருவன் வேற்றரசனிடம் இரவில் சென்று காவலாளர் வாயிலாகச் சொல்லிவிடாது தானே நேரில் போய்ச்சில சொற்களால் கூறிய தூதுரைகேட்டு

அவ்வரசன் படையெடுப்புக்கு ஆயத்தமாக இருந்த படைகளைக் களைந்தான் என மதுரை வேளாசான் என்ற புலவர் பாடுகிறார்.

**"வயலைக் கொடியின் வாடிய மருங்குல்**
**உயவ லூர்திப் பயலைப் பார்ப்பான்**
**எல்லிவந்து நில்லாது புக்குச்**
**சொல்லிய சொல்லோ சிலயே யதற்கே**
**ஏணியுஞ் சீப்பு மாற்றி**
**மாண்வினை யானையு மணி களைந் தனவே"**[58]

இதனின்றும் புலவர்களே யன்றிப் பார்ப்பனரும் போரின் தொடர்பாகத் தூது போவதுண்டு என்பது தெரிகிறது.

## போர் தவிர்க்க அறிவுரை

புலவர்கள், பல போருக்கும் காரணமாயிருப்பினும் தேவையில்லாது போரை தவிர்க்கவும் செய்தனர். போரினால் மக்கள் அடையக் கூடிய துன்பத்தை உள்ளி புலவர்கள் போரைத் தடுக்கும் ஆற்றல் வாய்ந்தவர்களாக அக்காலச் சமூகத்தில் காணப்பட்டனர்.

தன் மக்களையே எதிர்த்துச் சென்ற கோப்பெருஞ்சோழனுக்கு புல்லாற்றூர் எயிற்றியனார்அறிவுறுத்திய திறம் மதி நுட்பம் வாய்ந்தது.

போருக்கு வந்தவர் நின் பகைவரும் அல்லர். நீயும் அவர்க்குப் பகைவன் அல்லன். நின்னை எதிர்த்து வரும் நின் மக்கள் தோற்றால் நின் பகைவர் மகிழ நீ பழி கொள்வாய். ஆதலின் நின் மறம் ஒழிக எனப் புலவர் அறிவுரை கூறிக் கோப்பெருஞ்சோழன் தன் மக்களை எதிர்க்காதவாறு தடுத்தது போற்றற்குரியது.[59]

நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் சோழ மன்னர்கள் நலங்கிள்ளி நெடுங்கிள்ளியிடம் பகைமை கொண்டு நெடுங்கிள்ளியின் உறையூரை முற்றுகையிட்டான். நெடுங்கிள்ளி அரணுக்குள் கதவடைத்து இருந்தான். இந்நிலையைக் கண்ட கோவூர்கிழார் அவர்களிருவரையும் ஒன்றுபடுத்தக் கருதினார்.

அவர்கள் இருவரையும்நோக்கிப் போர் செய்பவர்களாகிய அவர்கள் பனம் பூமாலை சூடிய சேரனோ அல்லது வேப்பம் பூமாலை அணிந்த பாண்டியனோ மாலையே என்றும் அவர்களில் ஒருவர் தோற்பினும் தோற்பது சோழர்குடியே என்றும் அவர்களுடைய செயல் குடிக்குப் பெருமை தேடித் தருவதொன்றன்று என்றும் அறிவுறுத்தி அவர்கள் இருவரையும் போரைத் தவிர்க்குமாறு செய்தார்.[60]

**காவல்**

நாட்டினுடைய மக்களின் உடைமைகளை பாதுகாப்பதில் அரசன் முக்கியப் பங்காற்றினான். தனி ஒருவனால் தானே அப்பணியை மேற்கொள்ள இயலாத காரணத்தினால் காவலர்களை நியமித்து அப்பணியினை திறம்பட மேம்படுத்தினான்.

காக்கும் தொழில் செய்பவர் காவலர் எனப்பட்டனர். இரவு பொழுதில் வீடுகளைக் காக்கும் காவலர் இருந்தனர். இச்செய்தியை அகநானூறு.

**"அருங்கமக் காவலர் சோர்பதன் ஒற்றிக்**
**கங்குல் வருதலும் அரியை"**[61]

எனக்குறிப்பிடுகின்றது.

இக்காவலர்கள் தம்தொழிலில் சிறிதும் சோர்வில்லாதவராவர் இடையாமத்து ஊர்க்காவலர் கையில் விளக்குடன் செல்வர் இரவுப் பொழுதில் சிறிதும் உறங்காமல் காவல் காப்பர்.

**"யாமங் காவலர் வியா மாறே"**[62]
**"யாமங் கொள்பவர் சுடர்நிழற் கதூஉம்"**[63]
**"கடிடை வியன்நகர்க் காவலர் துஞ்சார்"** [64]
**"நன்மனை நெடுநகர்க் காவலர்"**[65]

பண்டை நாளில் இரவுப் பொழுதில் காவலர் சுற்றிச் சுற்றிக் காவல்புரியும் வழக்கமுண்டு. யாமத்தே காவலர்கள் ஊரைக் காத்து எச்சரிக்கும் முறையும் இருந்துவந்துள்ளது. இரவு ஒவ்வொரு யாமத்தும் அக்காவலர் ஒலிமிக்க பெருமணி அடித்து ஓசையெழுப்பி கதவுகளை நன்கு தாழிட்டுக் காத்துக் கொள்வீராக என

மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துக் காவல் புரிந்தனர் என்ற செய்தியை நற்றிணைப் பாடல் மூலம் அறியலாம்.

**“............... அதன் தலை**

**காப்புடை வாயில் போற்று, ஓ என்னும்**

**யாமம் கொள்பவர் நெடுநா ஒண்மணி**

**ஒன்றுஎறி பாணியின் இரட்டும்”[66]**

எனக் குறிப்பிடுகிறது.

ஊர்க்காவல் எந்த அளவு சிறப்புறக் கண்ணுங்கருத்துமாகக் காக்கப்பட்டது என்பது

**“ஆர்வலர் குறுகின் அல்லது; காவலர்**

**கனவினும் குறுகாகக் கடியுடை வியன் நகர்”[67]**

என்ற பாடல் மூலம் அறியலாம்.

இவ்வாறு காவலர்கள் அரசனின் பிரதிநிதியாக இருந்து நகர்ப்புறங்களையும், ஊர்ப் பகுதிகளையும் காவல் காத்தனர்.

## காவலரின் பண்பு

மதுரைக்காஞ்சி எனும் நூலில் மதுரை மாநகரின் நள்ளிரவு நிகழ்ச்சிகளைச் கூறுகையில், ஆசிரியர் ஊர்க்காவல் செய்வோரின் தோற்றத்தையும் அவர்களது ஊக்கத்தையும் திறமையையும் அழகாகச் சித்தரித்துள்ளார். கரிய பெண் யானையின் மேல்தோலை ஒத்த கரிய இருள் சூழ்ந்த நேரம் அவ்வேளையில் கல்லையும், மரத்தையும் வெட்டும் வன்மையுடைய கூர்மை பொருந்திய வாளையுடையவராய் காலிற் செருப்பணிந்தவராய் தொகையிடத்தே தெரியாமற் கிடக்கும்படி அழுத்தின கூரிய முனையையுடைய குறுகிய பிடியமைந்த உடைவாளையும், நீல நிறக் கச்சினையும் உடையராய் மெல்லிய நூலால் செய்த ஏதியை அரையிலே பலவாய்

மாட்சிமைப்படச் சுற்றிய சுற்றினையுடையவராய் நிலத்தினை அகழும் உய்யினை உடையவராய் ஊர்க்காவலர் தோற்றமளிப்பர்.

இக்காவலர்கள் இரவுப் பொழுதில் களவு செய்வதற்கு இடம் பார்த்துச் சுழன்று திரியும் விழித்தகண் இமைக்கும் அளவிலே மறைகின்ற கள்வர் பதுங்கியிருக்கும் இடத்தை அவர் தனிமையறியாதவாறு சென்றறிவர்.

இவர்கள் வலிய களிற்றை இரையாக்கப் பார்க்கும் வலிய புலியைப் போலத் துயில் கொள்ளாத கண்ணிணையுடையராய், தம் உயிர்க்குத் தீங்கு விளையும் என்று அஞ்சுதலில்லாத கோட்பாட்டை உடையராய், களவியற்றொழிலை அறிந்தவர்களாலே கள்வரைக் காண்டவில் இவர் வல்லுநர் எனப் புகழப்பட்ட ஆண்மையை உடையவராய், பொருட் செறிவினையுடைய நூலின் வழியைத் தப்பாத மிக நுண்ணிதாக நுணுகிய ஆராய்ச்சியின் தெளிவினையுடைவராய் ஊர்காத்தல் தொழிலைச் செய்வர்.

இவர்கள் தங்களிடம் தப்பக் கருதி முயல்வார்க்கும் தப்புவதற்கு அரிய அம்பினையுடையராய், தேர் ஓடும் தெருவில் இருபுறமும் நீர் திரண்டு ஓட மழை பெய்த மிகப்பெரிய இரவின் நடுநாளாகிய பொழுதினும், சோர்வு இல்லாதவராய் விருப்பத்தோடே எழுந்து உலாவுதலால் மக்கள் அச்சமின்றிச் செல்வர்.

**“வயக்களிறு பார்க்கும் வயப்புலி போலத்**
**துஞ்சாக் கண்ணா அஞ்சாக் கொள்கையர்**
**அறிந்தோர் புகழ்ந்த ஆண்மையர் செறிந்த**
**நூல்வழிப் பிழையா நுணங்குநுண் தேர்ச்சி**
**ஊர்காப் பாளர் ஊக்கருங் கணையினர்**
**தேர்வழங்கு தெருவின் நீர் திரன் பொழுக**
**மழையமைந் துற்ற அரைநா ளமயமும்**
**அசைவிலா எழுந்து நயம்வந்து வழங்கலிற்**

**கடவுள் வழங்குங் கையறு கங்குதலும்**

**அச்ச மறியா தேம மாகிய**

**மற்றை யாமம் பகலுறக் கழிப்பி''[68]**

துஞ்சாக் கண்ணும் அஞ்சாக் கொள்கையும் ஊர்காக்கும் தொழிற்கு இன்றிமையாதன. அஞ்சாமை ஈண்டு மறைந்திருக்கும் கள்வரல்லாது பேய் அணங்கு முதலியவற்றானும் தமக்குத் தீங்கு நேருமோ என்று அஞ்சாதிருத்தலாகும். நூலறிவு என்றது களவு செய்தற்குரிய நூலும். கள்வரைக் கண்டு பிடித்தற்குரிய காவல் நூலும் என இருவகை நூலையும் கற்ற அளவினைக் குறிக்கும் இக்காவலர் எத்தகைய இடையூறு நேரினும் தம்கடமையில் தவறாதவர் இத்தகைய சிறந்த காவலரை உடைமையின் மதுரை மாநகர் அச்சமறியாது என்றனர்.

**மெய்க்காப்பாளர்**

நாடுகாக்கும் மன்னனுக்கு எந்த நேரத்திலும் எந்தவிதமான தீங்கும் நேரிடாதவாறு உறுதுணையாய் உடனிருந்து காக்கும் மெய்க்காப்பாளரும் இருந்தனர் என்பதற்கான சான்று முல்லைப் பாட்டில் காணப்படுகின்றது.

**''நெடுநா வெண்மணி நிகழ்த்திய நடுநாள்**

**அதிரல் பூத்த வாடுகொடிப் படா அர்**

**சிதர்வர லசைவளிக் கசைவந் தாக்குந்**

**துனிக் குடித்துக் போர்த்த தூங்க வோங்குநடைப்**

**பெருமூ தாள ரேமந் சூழ''[69]**

இவ்வாறாகக் காண்கையில் பழந்தமிழர் சமுதாயத்திலும் மக்களையும் மன்னனையும் பாதுகாக்க வேண்டிய ஒருநிலை இருந்துள்ளது என்பதையும் இவர்கள் அச்சமின்றி வாழக்கூடிய வகையில் சிறந்த முறையில் தம் காவற்பணியை நிறைவேற்றிய காவலர்களும் இருந்துள்ளனர் என்பதையும் அறியமுடிகின்றது.

**ஆசிரியர்**

ஆராசிரியனின் தொழில் நூல் முதலியன கற்பித்தலாகும். வினையின் நீங்கிய விளங்கிய அறிவினையுடையராகிய சான்றோரே இவ்வுலகிற்கு அறம் முதலிய நாற்பொருளையும் உணர்த்த வல்லாராவர் அவர் ஆணையாகிய நூல்வழியே உலகம் இயங்கும் அத்தகைய சான்றோர் மதுரைக்காஞ்சி எனும் பாட்டில் **தொல்லாணை நல்லாசிரியர்** எனப்பட்டனர். அச்சான்றோர் தாம் பெற்ற இன்பத்தைப் பிறரும் மகிழ எடுத்துரைப்பர்.

**"தொல்லாணை நல்லாசிரியர்**
**புணர்க்கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின்"**[70]

அகத்தியனார் உள்ளிட்ட பழைய ஆணையை உடைய மெய்யுணர்ந்த சான்றோர்கள் தம்முள்ளே புணர்ந்து நுகரும் மெய்ப்பொருள் இன்பத்தை அவர் அருளாலே தாமும் உணர்ந்து நுகர்தலாகும். எல்லா நிலங்களையும் தன்னிடத்தே காட்டின் பெருஞ்செல்வத்தையுடைய மாயோனைப் போலக் தொல்லாணையை உடையவர் நல்லாசிரியர் என்பர்.

பட்டினப்பாலை என்ற மற்றொரு பாடலில் பட்டினத்தில் உயர்த்திய பல்வேறு கொடிகளின் சிறப்பினைக் கூறுகையில், இந்நூல் ஆசிரியர் பல்வேறு கேள்விகளையும் விரும்பிக் கேட்டலோடு, நூற்றுறை முற்றக் கற்றமைந்த பழைய ஆணையினையுடைய நல்ல ஆசிரியர்கள், வாதுசெய்தலைக் கருதி உயர்த்திய அச்சந்தரும் கல்விக் கொடியைக் குறிப்பிட்டுள்ளார்.

**"பல்கேள்வித் துறைபோகிய**
**தொல்லாணை நல்லாசிரியர்**
**உறழ் குறித் தொடுத்த உருகெழு கொடியும்"**[71]

இது கல்வி குறித்து நல்லாசிரியர் பட்டி மண்டபத்தே உயர்த்திய கொடியைக் குறிக்கும். கல்வி கேள்விகளில் வல்லுநர் அல்லாதார்க்கு இக்கொடி அச்சம் விளைவித்தலின் **'உருகெழு கொடி'** என்றார். ஆணை என்றது அவ்வச்சமய முதல்வரின் கட்டளை வடிவமான மெய்ந்நூல் விதி ஆகும்.

மேற்கூறிய பாடலடிகள் மூலம் பூம்புகாரில் பட்டிமண்டபம் இருந்ததையும், அங்கு வாதிட்டோர் பல்கேள்வித் துறைபோகிய தொல்லாணை நல்லாசிரியர் ஆதலையும்உணரலாம். கலித்தொகை பாடலொன்றில்,

**“கற்பித்தான் நெஞ்சுழுங்கப் பகர்ந்துண்ணும் விச்சைக்கண்”** [72]

என வந்துள்ளது. நூல் முதலியன கற்பித்தல் ஆசிரியர் தொழில் தன்கைப் பொருளை அக்கல்வி பொருட்டுக் கைமாறாகக் கொடுத்தல் உண்டு.

**மருத்துவர்**

இக்காலத்தைப் போலவே பழந்தமிழ்ச் சமுதாயத்தில் நோய் தீர்க்கும் மருத்துவர் இருந்தனர். அவர்களைப் பற்றி அறியச் சங்க இலக்கியக் குறிப்புகள் சில பயன்படுகின்றன. அக்காலத்தில் மருத்துவர்களை அறவோன்[73] என்றும் மருத்தன், மருத்துவன்”[74] என்றும் அழைத்தனர் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பரிபாடலில் தேவமருத்துவராகிய தாமா இருவரைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

**“தாமா இருவர்”**[75]

**“மருந்துரை இருவர்”**[76]

நற்றிணைப் பாடலொன்று மருத்துவரின் இயல்பைக் குறிக்குமிடத்து. ஒரு மருத்துவன் என்பான் நீக்குதற்கறிய நோயைப் பெற்றவர்களுக்கு அவர்கள் கேட்ட உணவைக் கொடுக்காமல் அவர்பிணி தணிவதற்குரிய மருந்தை ஆராய்ந்து கொடுத்தல் வேண்டும். அத்தகு அறநெறி உடையவன் என நற்றிணை மருத்துவனைப் புகழ்ந்து கூறும். இம்மருத்துவனை அறவோன் என்று அழைப்பது குறிப்பிடத்தக்கது.

**“மருந்தாய்ந்து கொடுத்த அறவோன்”**[77]

சங்க இலக்கியங்களுள் ஒன்றான கலித்தொகையில்

**“திருந்திய யாக்கையுள் மருத்துவன் ஊட்டிய**
**மருந்துபோல மருந்தாகி மனனுவப்ப”**[78]

**"இன்னுயிர் போத்தரு மருத்து ராயின்**

**யாங்காவாது கொல்"[79]**

எனவரும் பாடலடிகளில் மருத்துவன் பற்றிய குறிப்பு அமைகிறது. இத்தகைய சங்க இலக்கிய பாட பகுதிகளின்றும் அக்காலத்திய மருத்துவர் நோயுற்றவர்க்கு என்ன நோய் உள்ளது என்பதை ஆராய்ந்து அறிந்து அந்நோய் குறைவதற்குப் பொருத்தமான மருந்தைக் கொடுத்தனர் என்பதும், நோயால் பீடிக்கப்பட்டவர்க்கு உணவு விஷயத்தில் கட்டுப்பாடுகளை விதித்தனர் என்பதும் புலப்படும். மேலும் நோயுற்றாரைப் பிழைக்க வைக்கும் ஆற்றல் உள்ளவராயும் இருந்தனர்.

மருத்துவத் தொழிலையுடைய மருத்துவர் தாமோதரனார், மருத்துவர் நல்லந்துவனார் போன்ற புலவர்களும் அக்காலத்தில் இருந்துள்ளனர்.

போரில் ஈடுபடும்போது கூர்மையான வாள்பட்டு உடலில் குருதி வழிய இரணம் ஏற்படும்போது குருதி வருவதைத்தடுக்கவும். புண்பட்ட இடத்தில் வேறு தூசி முதலியன படாமல் இருக்கவும். இக்கால மருத்துவர்கள் செய்வது போலவே அக்காலத்திலும் குருதி வழியும் புண்களில் பஞ்சு வைத்துத் துதியால் கட்டும் பழக்கம் இருந்திருத்தல் வேண்டும் இக்கருத்தைப் புறநானூற்றுப் பாடல்,

**"கதுவாய் போகிய துதிவா யெ ஃகமொடு**

**பஞ்சியுங் களையாப் புண்ணர்"[80]**

என்றது.

இவ்வாறு சங்க காலத்தில் மருத்துவர் அரசர்களுக்கும், மக்களுக்கும் பல்வேறு சூழ்நிலையில் தங்களது தொழிலைத் திறம்படச் செய்துள்ளனர்.

## அறுவை மருத்துவம்

அறுவை மருத்துவமுறை சங்கத் தமிழருக்குப் புதிதன்று. அறுவை மருத்துவம் செய்வார் சல்லியக்கிரியை செய்வர் எனப்பட்டனர். இத்தகைய சல்லியக் கிரியையில் வல்ல ஒரு மருத்துவரின் மகன் சல்லியக் குமரனார் எனப்பெயர் பெற்றார். அறுவை

மருத்துவம் செய்தவுடன் அறுவை செய்யப்பட்ட உடற்பாகத்தை ஊசியின் துணைகொண்டு தைக்கப் பெற்றதைப் பதிற்றுப்பத்துப் பாடல் ஒன்று படம் பிடித்துக் காட்டுகின்றது. போரில் ஏற்பட்ட பிளவுபட்ட காயத்தைத் தையலிடும்போது நெடிய வெண்மையான ஊசியானது தசையில் புகுந்து குருதியில் தோய்ந்து பின் வெளிவரும் காட்சியானது மீன்கொத்திப் பறவை நீரில் வாழும் மீனைக் கொத்தி எழும்போது அதன் அலகு எவ்வாறு நீரில் சென்று மீளுமோ இவ்வாறு காட்சியளிப்பதாக இப்பாடல் அமைகிறது.

**"மீன்றேர் கொட்பிற் பனிக்கய முழ்கிச்**
**சிரல்பெயர்ந் தன்ன நெடுவென் ளூசி**
**நெடுவசி பரந்த வடு"** [81]

தமிழ்நாட்டு மருத்துவர்கள் மூலிகைகள், பூக்கள், மரப்பட்டைகள், இலைகள், வேர்கள், கிழங்குகள் போன்றவற்றின் துணைகொண்டு இயற்கை வழியே மருத்துவத்தைத் தொடங்கினர் என்பதை இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

**"மருந்து கொள் மரத்தின் வாள்வடு மயங்கி"**[82]

**"மரஞ்சா மருந்து கொள்ளார் மாந்தர்"**[83]

அவர்கள் சித்த வைத்திய முறையையும் அறிந்திருந்தனர் என்பதை இப்பாடல்களால் அறிய முடிகிறது.

**கணியன்**

ஜோதிடம் என்பது நாள், கோள் நிலைகளை அடிப்படையாக கொண்டது அவற்றால் ஏற்படக்கூடிய இன்ப துன்பங்களை முற்படக் கணித்துக் கூறுவதாகும். இது ஒரு கலைத் தொழிலாகப் பழங்காலந்தொட்டு வளர்ந்து வந்திருக்கிறது. சோதிடத்தைப் பண்டைத் தமிழர் கணியம் என்றும், சோதிடத் தொழில் புரிந்தாரைக் கணியர் என்றும் அழைத்தனர். கணியன் என்றால் நாள்கோள் நிலையைக் கொண்டு வருங்கால நன்மை தீமைகளைக் கணிப்பவன் என்பது பொருள்.

சங்க காலத்து வாழ்ந்த கணியப் புலவர்களால் கணித்துக் கூறப்பட்ட பலன்கள் மிகப் பலவாகும். சங்க கால இலக்கியங்கள் வாயிலாக அவற்றுள் சிலவற்றை நாம்அறிய முடிகின்றது. நன்மை விளையும் காலத்தைக் கணித்தறிந்து அந்த நல்ல வேளையில் வினைகளைச் செய்யத் தொடங்குவது அக்காலத்தில் பொதுவழக்கமாக இருந்தது. நல்ல நாளையும் வேளையும் பார்த்துச் செய்வதில் அவர்கள் பெருநம்பிக்கை உடையவர்களாகவும் இருந்தனர். நாளேரடித்தல் குடைநாட்கோள் வாள்நாட்கோள் என்பவை இவற்றைத் தெரிவிக்கின்றன.

பண்டைத் தமிழருடைய விழாக்காலங்கள் சூரியனால் ஏற்படும் பருவ காலங்களையும் சந்திரனால் உண்டாகும் பருவ காலங்களையும் பொறுத்து அமைவனவாக இருந்தன.

கூடலூர் கிழார் என்னும் சங்கப் புலவர் ஒரு விண்வீழ் கொள்ளியைக் கண்டு கோச்சேரமான் யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை இன்னநாளில் இறப்பான் என்று கணித்தறிந்து கூறியபடி மன்னன் இறந்துள்ளான். இக்கருத்தமைந்த பாடல் பின்வருமாறு:

**"ஆடியில் அழற்குட்டத்து**

**ஆரிருள் அரையிரவில்**

**முடப்பனையத்து வேர்முதலாக்**

**கடைக்குளத்துக் கயங்காயப்**

**பங்குனி உயர் உழுவத்து**

**தலைநாள்மீன் அதன் எதிர்ஏர்தரத்**

**நிலை நாள்மீன் அதன் எதிர் ஏர்த**

**தென்னாள் மீன் துறைபடியப்**

**பரசிசி செல்லா தூசி முன்னாது**

**அனக்காத்தினை விளக்காகக்**

**கனைஎரி பரப்பக் காலெதிர்ப்பு பொங்கி**

**ஒருமீன் விழுந்தென்றால் விசும்பி னானே**

**அதுகண்டு யாமும் பிறரும் பல்வேறு இரவலர்**

**பறைஇசை அருவி நன்னாட்டுப பொருநன்**

**நோயிலன் ஆயினன்று மற்றில்லென**

**அழிந்த நெஞ்ச மடியுளம் பரப்ப**

**அஞ்சனம் எழுநாள் வந்தன்று இன்றே**

**மைந்துடை யானை கைனவத்து உறங்கவும்**

**திண்பிணி முரசம் கண்கிழிந்து உருளவும்**

**காவல் வெண்குடை கால்பிரிந்து உறைவும்**

**காலியற் கலிமாக் கதிஇன்றி வைகவும்**

**மேலோர் உலகம் எய்தினன்**"[84]

மேடராசி பொருந்திய கார்த்திகை நாளின் முதற்காலின்கண் நிறைந்த இருளையுடைய பாதி இரவில் முடப்பனை போன்ற வடிவுடைய அனுப நாளின் அடியின் வெள்ளி ( முதல் நட்சத்திரம்) முதலாகிய கூளம் போன்ற வடிவுடைய புனர்பூசத்துக் கடையின் வெள்ளி எல்லையாக விளங்க பங்குனி மாதத்து முதற் பதினைந்தில் உச்சமாகிய உத்திரம் அவ்வுச்சியினின்று சாய, அதற்கு எட்டாம் மீனாகிய மூலம் அதற்கு எதிரே எழ அந்த உத்திரத்துக்குமுன் சொல்லப்பட்ட எட்டாம் மீனாகிய மிருகசீரிடம் தாழ, கீழ்த்திசையில் செல்லாமலும் வடதிசையில் செல்லாமலும் கடலால் சூழப்பட்ட பூமிக்கு விளக்காக முழங்காநின்ற தீப்பரக்கக் காற்றால் பிதிர்ந்து வானத்தினின்றும் ஒரு மீன் வீழ்ந்தது. அது கண்டு யாமும் பிறருமாகிய பல்வேறு வகைப்பட்ட இரவலர். பறையொலி போன்ற ஒலி பொருந்திய அருவியையுடைய மலை நாட்டுக்கு வேந்தனாகியவன் நோயையுடையன் அல்லனாகப் பெறின் அழகிது என இரங்கிய நெஞ்சத்துடன் மடிழ்ந்த உள்ளம் பரப்பயாம் அஞ்சினோம்.

அஞ்சியபடியே ஏழாம் நாள் வந்ததாகலின் இன்று யானை கையை வைத்துத் துஞ்சவும், திண்ணிய வாரால் பிணிக்கப்பட்ட முரசும் கண்கிழிந்து உருளவும். வெண்கொற்றக்குடை கால் துணிந்து உலறவும், காற்றுப் போன்ற இயல்பையுடைய

மனம் நெருக்கிய குதிரைகள் கதி இன்றிக் கிடக்கவும். தேவருலகம் அடைந்தான் எனக் கூடலூர் கிழார் கூறுகின்றார்.

பங்குனி மாதத்தில் கார்த்திகை நட்சத்திரம் நிகழும் நாளில் சட்டி அல்லது சப்தமி திதியாக இருக்குமாதலால் பாதி இரவில் இருள் நிறைந்திருக்கும் எனக் கூறியது பொருத்தமுடையதாகும். அந்த மீன் கிழக்கும் செல்லாது வடக்கும் செல்லாது வீழ்ந்ததாகிலிற்கேடு பயக்கும் என்பதை நன்கு அறிந்திருந்தமையால் "**பாசிச் செல்லாது ஊசிமுன்னாது**" எனக்கூறி வருந்தினர். பங்குனித் திங்களில் நட்சத்திரம் வீழ்தல் மன்னர்க்கு அழிவு காட்டும் என்பதனை அறிந்து **பங்குனி உயர் அழுவத்து ஒரு மீன் விழுந்ததே** எனக்கூறி இரங்கினார். ஆடகயல் தேன்தனுச் சிங்கத் தெழுமீன் விழுமேல் அரசழிவாம் என்பது கோள்நூல் வாக்கு. இதனை நன்கு தெளிந்து கூடலூர் கிழார் கூறினார்.

**வெள்ளி மீன்**

வெள்ளை நிறமுடைய கோள் வெள்ளி மீன் எனப்படும். மாலை அல்லது காலையில் தான் இது காணப்படும். காலையில் தோன்றும் வெள்ளிதான் விடிவெள்ளியாகும். இது இரவுக் காலம் விடிவதற்குக் காரணமாக அமைகிறது என பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது.[85]

இரவுப் பொழுது புலரும் விடியற் காலத்தில் வெள்ளியாகிய மீன் வானத்தே தோன்றும். புள்ளினங்கள் எழுந்து தம்முடைய ஓசையைச் செய்யும்.[86] திங்களின் நிலாவொளி மறைய வெள்ளியாகிய விண்மீன் எழுந்து விளங்கும் என்பர் திருத்தாமனார்.[87]

விளைவயல்களும் நீர் நிலைகளும் வற்றிய வற்கடத்தின் போது வெள்ளிமீன் தான் நிற்றற்குரிய வடதிசையில் நில்லாமல் தென்திசையின் கண்போகும்[88] எனப் புறநானூறு குறிப்பிடுகிறது. இக்கருத்துப் பட்டினப்பாலையிலும்[89] பேசப்பட்டுளளமை இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. இம் மீன் வடக்குப் பகுதியில் எழுந்தால்மழை பெய்யும் எனவும். தெற்கெழுந்தால் மழை பெய்யாது எனவும் பதிற்றுப்பத்து குறிக்கிறது.[90]

**“தென்றிசை மருங்கில் வெள்ளி யோடினும்**

**.......................... ............................. ....**

**கோஓ செம்மையிற் சான்றோர் பல்கிய**

**பெயல் பிழைப் பறியாப் புண்புலத்ததுவே”**[91]

எனக் கபிலர் பாரியின் செங்கோன்மைச் சிறப்பைப் பாடுகிறார். தென்திசையில் வெள்ளி மீன் சென்றால் நாட்டில் மழையின்றி வறட்சி ஏற்படும். ஆனால் பாரியின் செங்கோன்மை தவறாத சீறிய ஆட்சித்திறத்தால் வெள்ளி மீன் தென் திசை செல்லினும் மழை தவறாமல் பெய்து அவன் நாட்டில் வளம் சிறக்கும் என்று புலவர் பாரியைப் புகழ்கிறார்.

இதனால் வெள்ளி மீன் தெற்கில் எழுவது வறட்சி ஏற்படும் என்பதைக் குறிக்கும் என்பது புலனாகிறது.

பட்டினப்பாலை பாடிய கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்பார். காவிரியாற்றின் தனிச்சிறப்பினைக் கூறமுற்பட்டு உலக நிலை வானின்று வழங்கிவரும் தன்மையினை விளக்குகின்றார். அதன் மூலமாக விண்மீன்கள் நிலையினையும் அவற்றால் உலகம் நிலைபெறுதலையும் உலகம் நிலை பெறுவதற்குக் காரணம் மழை என்பதையும், அம்மழை வரவினை அறிவிக்கின்ற வெள்ளி மீனாகிய சுக்கிரன் தென்திசை நோக்கிச் செல்லுமானால் மழை வளம் குறையும் என்பதையும் கூறித் தெளிவுப்படுத்துகிறார்.

**“வசையில் புகழ் வயங்கு வெண்மீன்**

**ணிசை திரிந்து தெற்கு ஏகினும்”**[92]

வெள்ளி எனும் கோளினை வானியல் ஆய்வாளர் **மழைக்கோள்** எனக் கண்டனர் அதன் இயல்புகள் **வெண்மீன்** என்றனர்.

## பிறவகைக் கணியம்

பழங்காலத்தில் நிமித்தம் பார்த்தல் விரிச்சி, கட்டுப்பார்த்தல் கிழக்கு பார்த்தல் என்று வேறுவகைச் சோதிடங்களும் பழக்கத்தில் இருந்துள்ளன. சங்க காலத்து மக்கள்

இவற்றைக் கொண்டு நன்மை தீமைகளை அறிந்து வாழ்ந்தமையைச் சங்க நூல்கள் உணர்த்துகின்றன.

மன்னர் போர்புரியச் செல்லும்போது நற்சொ, காக்கை கரைதல் முதலியவற்றால் நிமித்தம் பார்ப்பது வழக்கம் விரிச்சி என்பது நற்சொல், வினை கருதிச் சொல்வார் நற்சொல் நிமித்தம் சொல்வது வழக்கம்.

கட்டுவிச்சி என்னும் வெறியாடுபவளால் முறத்தில் நெல்லை வைத்து எண்ணிப் பார்த்து நன்மை தீமையை அறியும் பழக்கம் இருந்தது. இது கட்டுப் பார்த்தல் எனப்பட்டது.

வெறியாடுவனாகிய வேலனால் கழங்கு பார்த்த நிமித்தங்களையும் சங்ககால அகத்திணை இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

கணியன் பூங்குன்றனார் என்பவர் சங்க காலத்து வாழ்ந்த ஒரு சிறந்த புலவர். இவர் தமது வானநூற் புலமையினைக் கொண்டு செய்துவந்த தொழில் கணியத்தொழிலாகும். கணியக் கலைத்தொழிலை இவர் மேற் கொண்டு வாழ்ந்தாலும் அவ்வப்போது கலிபுனைந்து இருவகைக் கலைகளையும் இனிது பேணினார்.

இவற்றினின்று சங்ககால அரசவையில் இன்றிமையாத அலுவலர்களில் சோதிடரும் ஒருவராம் என்பதை அறியலாம். நல்லோரைகளிலும் நற்சகுனங்களிலும் ஆழ்ந்த நம்பிக்கை இருந்தமையால் அரசர்கள் சோதிடர்களைத் தமது அவையில் நிரந்தரமாக வைத்திருந்தனர். சோதிடரைக் கணி என்னும் தலைமைச் சோதிடரைப் பெருங்கணி என்றும் கூறினர். அரச காரியங்களைச் செய்வதற்குப் பொருத்தமான காலத்தைக் கணித்துக் கூறுதல் இவர்களது பணியாகும்.அவர்கள் குறித்த நாளும் நல்லோரையும் அரசர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அதற்கேற்ப அரசர்கள் செயலாற்றினர்.

**புலவர்**

> **"நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்**
>
> **அல்லது செய்தல் ஓம்புமின்; அதுதான்**
>
> **எல்லோரும் உவப்பது; அன்றியும்**
>
> **நல்லாற்றுப் படூஉம் நெறியுமா ரதுவே"**[93]

எனப் புலவர்கள் அரசர்க்கு அறிவுறுத்தினர்.

கல்வி, கேள்வி, ஒழுக்கம் ஆகியவற்றில் சிறந்து விளங்கியவர் புலவர் பெருமக்கள் மக்களையும் மன்னனையும் நல்வழிப் படுத்தலே புலவர்களது தொழிலாகும். கொடை வள்ளல்களும் அரசர்களும் புலவர்கள் கூறும் அறிவுரை கேட்டு அதன்வழி ஒழுகினர்.

புலவர்கள் வறுமையால் வாடினும் தம்மதிப்பை இழக்கமாட்டார்கள். மன்னன் தவறு செய்த காலங்களில் அவர்கள் உளம்திருந்தப் புலவர்கள் அறநெறி கூறினர். சோழன் நலங்கிள்ளியும் போர்புரிய முற்பட்டபோது அப்போரை நிறுத்தக் கோவூர்கிழார் கூறிய அறிவுரைகள் படிக்கப் படிக்க இன்பம் பயப்பன.[94] மலைமான் மக்களைச் சோழவேந்தன் யானைக் காலிட்டுகிட்டுக் கொல்ல நினைத்த பொழுதும் இளந்தத்தன் என்ற புலவனை ஒற்றன் என்று தவறாகக் கருதி சோழமன்னன் கொல்லக் கருதியபோதும் கோவூர்கிழார் குறுக்கிட்டுப் பேசிய நல்லுரைகள் புலவர் பெருந்தன்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். சோழன் குராப்பள்ளித்துஞ்சிய பெருத்திருமாவளவனும் வெள்ளி அம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் ஒருங்கிருந்த காட்சியைக் கண்ட புலவர் காரிக்கண்ணார் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தார். "**நீங்கள் இருவரும் இன்று போலவே என்றும் உள்ளம் கலந்து வாழ்வீர்களாக**"[95] என்று வாழ்த்தினார். இப்பாடலில் புலவர்களின் ஒற்றுமையை வற்புறுத்திக் கூறியிருக்கும் முறை மிகவும் பயன்தருவதாகும்.

இப்புலவர்கள் மன்னரும், வள்ளல்களும் கொடுக்கும் பரிசிலை அன்பின்றிக் கொடுத்தாலும் காலந்தாழ்த்திக் கொடுத்தாலும், நேரிற்காணாது பிறர்வாயிலாகக் கொடுத்தாலும், குறையக் கொடுத்தாலும் பெறுவதில்லை. அதே சமயம் பாரிவள்ளல்

இறந்த போது கபிலரும்; ஆய்வேள் இறந்தபோது ஏணிச்சேரி முடமோசியாரும்; அதியமான் இறந்த போது ஔவையாரும் வருந்திப் பாடிய பாக்கள் மன்னர்களிடமும் வள்ளல்களிடமும் புலவர்கள் கொண்டிருந்த நட்பையும், மதிப்பையும் செய் நன்றியையும் நன்கு உணர்த்துவனவாகும்.

# தொகுப்புரை

1. சமூக வளர்ச்சிக்கு அரசனே மாபெரும் சக்தியாக இருந்து வழிநடத்தினான்.
2. மக்களின் மனநிலை அறிந்து ஆட்சி செய்பவனும் குடிகளைக் குழந்தைபோல் பேணிக் காப்பவனும் இயற்கை இன்னல்கள் நேரும் போது உணவளித்துக் காப்பவனே சிறந்த அரசனாகிறான்.
3. நாட்டினுடைய வளத்தைப் பெருக்க நீர்நிலைகளை அமைத்து அதனைக் காப்பது அரசின் தலையாய கடமையாக இருந்தது.
4. புலவர்கள் தன்னைப் பாடாது விடுதல் இகழ்ச்சியென அக்கால அரசர்கள் கருதினர்.
5. அரசர்களுக்கு அறமுறைமையை எடுத்துக் கூறும் சான்றோர்களாக புலவர்கள் விளங்கினர். பல நேரங்களில் போரைத் தடுக்கும் தூதுவராகவும் புலவர்கள் செயல்பட்டுள்ளனர்.
6. அரசர்கள் திறம்பட ஆட்சியைச் செலுத்த அமைச்சர்கள் அவர்களுக்கு உதவியாய் இருந்தனர். சிறந்த அமைச்சர் ‘காவிதி’ என்னும் பட்டத்தைப் பெற்றனர்.
7. அரசன் காவல்களை நியமித்து நகர்புறங்களையும் ஊர்ப்புறங்களையும் பாதுகாத்தான்.
8. ஆசிரியர்கள் அரசனுக்கு கலைகளை பயிற்றுவிப்பவராக விளங்கினர்.
9. மருத்துவர் அரசவையிலும் பாசறையிலும் விழுப்புண் பட்டவர்களுக்கு சிகிச்சையளித்தனர்.
10. நாள், கோள் போன்றவற்றில் அரசன் நம்பிக்கை கொண்டிருந்ததால் அதனைக் கணித்துக் கூறும் கணியர்களும் அரசனால் நியமிக்கப்பட்டவர்களாக இருந்தனர்.

## இயல்-5
## சான்றெண் விளக்கங்கள்

| | |
|---|---|
| 1. | கலி.34:1-2 |
| 2. | புறம்.299:1-3 |
| 3. | அ.ஆறுமுகம், சமூக அறிவியல் கலைக் களஞ்சியம், ப-160 |
| 4. | ஃப்ரடெரிக் எஸ்கெல்ஸ், குடும்பம், தனிச்சொத்து-தோற்றம் ப-263 |
| 5. | மேலது.ப-263 |
| 6. | பாஸ்கல் கில்பர்ட், சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள், ப-134 |
| 7. | பதிற்.12:7 |
| 8. | மேலது.174:6 |
| 9. | மேலது.55:10 |
| 10. | மேலது.183:7 |
| 11. | மேலது.31:17 |
| 12. | R. P.SethuPillai, word and their significance õ Tamil Literary and collwQuial, P.74 |
| 13. | ஞா.தேவநேயனார், புறநானூறும் மொழியும், (புறநானூறுற்றுச் சொற்பொழிவுகள் (சென்னை:1996) ப-348 |
| 14. | தொல்.பொருள்.மர.67 |
| 15. | பதிற்.43:8 |
| 16. | குறுந்.276:5 |
| 17. | கலி.25:3, 27:7, 129:4, 139:35 |
| 18. | கோ.தங்கவேல் தமிழகச் சமூகப் பண்பாட்டு வரலாறு, ப-13 |
| 19. | தொல்,பொருள்.5:3 |
| 20. | பெ.மாதையன் தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள் காலமும் கருத்தும், ப-33 |
| 21. | புறம்.112:4 |
| 22. | K.N.SivarajaPillai, Chronology of the Early Tamils. P-135 |
| 23. | கலி.56:33:34 |
| 24. | புறம்.72:11-12 |

| | |
|---|---|
| 25. | மேலது.299 :1 |
| 26. | மதுரை.776 |
| 27. | புறம்.338:12 |
| 28. | புறம்.36:11 |
| 29. | புறம்.299:5 |
| 30. | புறம்:299:1 |
| 31. | புறம்:75:1- 2 |
| 32. | க.ப.அறவாணன், அற்றை நாட் காதலும் வீரமும் ப.226 |
| 33. | புறம்.5:6-7 |
| 34. | புறம்.331:11-12 |
| 35. | புறம்.18:18-23 |
| 36. | ஐங்.20 |
| 37. | பெரும்பாண்.441-47 |
| 38. | புறம்.20:7-15 |
| 39. | புறம்.55:10-16 |
| 40. | புறம்.184:5-6 |
| 41. | புறம்.60:79 |
| 42. | புறம்.80:6-9 |
| 43. | புறம்.209:14-19 |
| 44. | புறம்.68 |
| 45. | புறம்.18 |
| 46. | புறம்.40:10-11 |
| 47. | புறம்.54 |
| 48. | புறம்.72:8-16 |
| 49. | புறம்.34 |
| 50. | புறம்.55-10 |
| 51. | புறம்.5:5-7 |
| 52. | சு.வித்யானந்தன், தமிழர் சால்பு, ப-41 |
| 53. | மதுரை.496-99 |
| 54. | கலி.68:1-2 |
| 55. | பதி.9:10-11 |
| 56. | புறம்.95 |
| 57. | குறள்.685 |

| | |
|---|---|
| 58. | புறம்.05:1-6 |
| 59. | புறம்.213 |
| 60. | புறம்.45 |
| 61. | அகம்.2:14-15 |
| 62. | குறுந்.375:6 |
| 63. | புறம்.37:9 |
| 64. | நற்.255:3 |
| 65. | அகம்.22:16,102:12 |
| 66 | நற்.132:7-10 |
| 67. | புறம்.390:5-6 |
| 68. | மதுரை.643-53 |
| 69. | முல்லை.50-54 |
| 70. | மதுரை.761:62 |
| 71. | பட்டினம்.169-71 |
| 72. | கலி.149:4 |
| 73. | நற்.136, புறம்.353:15-16 |
| 74. | கலி.17:20-21, 137:24-25, புறம்:173:11, பதிற்.42:2-4 |
| 75. | பரி.3:8 |
| 76 | பரி.8:5 |
| 77. | நற்.136:3 |
| 78. | கலி.17:19-20 |
| 79. | கலி.137:25-26 |
| 80. | புறம்.353:15-16 |
| 81. | பதிற்.42:2-4 |
| 82. | புறம்.18:5 |
| 83. | நற்.226:1 |
| 84. | புறம்.229:1-22 |
| 85. | பெரும்பாண்.318 |
| 86. | புறம்.397:1-2 |
| 87. | புறம்.398:1 |
| 88. | புறம்.229 |
| 89. | பட்டினம்,1-2 |

| | |
|---|---|
| 90. | பதிற்.24:24-25 |
| 91. | புறம்.117:2-7 |
| 92. | பட்டினம்.1-2 |
| 93. | புறம்.195:6-9 |
| 94. | புறம்.145 |
| 95. | புறம்.58 |

# முடிவுரை

தமிழ்ச் சமூகம் தொன்மைக் காலம் முதலே பல வரலாற்று மூலங்களைக் கொண்டுள்ளது. கல்வெட்டுகள், செப்பேடுகள், காசுகள் முதுமக்கட் தாழிகள் என அவை விரிந்தாலும் இவற்றிற்கெல்லாம் முதன்மை மூலமாகத் திகழ்வது சங்க இலக்கியங்களே. தமிழ்ச் சமூகம் நாடோடியாய்த் திரிந்தது முதல் முழுமையான நாகரிக வளர்ச்சி பெற்ற சமூகமாக மாற்றமடைந்தது வரை அனைத்து நிலைகளையும் எடுத்தியம்பும் வரலாற்றுப் பெட்டகமாகத் திகழ்கின்றது.

தமிழ்ச் சமூகத்தில் முதல் மனிதத் தோற்றம் குறிஞ்சி நிலத்திலேயே தோற்றம் பெற்றது. அதற்கான இயற்கைச் சூழலை குறிஞ்சி நிலமே பெற்றுத் திகழ்ந்தது. உணவிற்காக நாடோடியாய் திரிதலும், அதுபோதாமற்போகவே விலங்குகளை வேட்டையாடும் நிலையும் குறிஞ்சி நிலத்தின்கண் காணப்பட்ட முதல் செய்கைகளாகும். பின்னர் சிறு சிறு வேளாண் முறைகளும் குறிஞ்சியில் தோன்றத் தொடங்கின. குறிஞ்சியில் ஏற்பட்ட மக்கள் தொகைப் பெருக்கத்தால் உணவுப் பற்றாக்குறை ஏற்படவே அவர்கள் முல்லை நிலத்தில் வாழத் தொடங்கினர். குறிஞ்சியில் வாழ்க்கையை தொடங்கியபோது கால்நடைகளையும் முன் தமக்கு வேட்டைக்கு உதவியாயிருந்த நாயையும் தம் வீடுகளில் முல்லை நில மக்கள் வளர்த்து வந்தனர். முல்லை நிலம் சிறிய வகை புற்களைக் கொண்டு புன்செய் நிலமாகக் காணப்பட்டது. கால்நடைகள் விரைவில் பெருகுவதற்குரிய வாய்ப்பாக அமைந்ததால் முல்லை நிலத்தில் எல்லோரும் சொத்துடையவராயினர். மிகப்பல கால்நடைகளை வைத்திருந்த பல குடும்பங்களுக்கு ஒருவன் தலைவன் ஆகிறான். பின்னாளின் சீறூர் மன்னர்களும் குறுநில மன்னர்களும் தோன்றுவதற்கு இம்முறையே காரணமாக இருந்தன.

ஆடு, மாடுகளை வைத்துக் கொண்டு புன்செய் நிலத்தில் தோன்றிய பயிர்த்தொழில் உணவுத் தேவையை முற்றிலும் நிறைவேற்றாமல் போகவே மக்கள் நீர்சூழ்ந்த மருத நிலத்திற்கு இடம் பெயர்ந்தனர். இதுவரை மழை நீரையே நம்பிச் செய்யப்பட்ட பயிர்த்தொழில் இங்கு மாற்றமடைந்தது. மருத நில

வேளாண்மைப் பெருக்கம் உணவில் தன்னிறைவு பெற்ற சமூகமாக மருத நில மக்களை உயர்வடையச் செய்தது. இதுவரை சீறூர் தலைவர்களாகவும், குறுநில மன்னர்களாகவும் இருந்த ஆட்சித் தலைவர்கள் இங்கு வேந்தர்களாக மாற்றம் பெற்றனர். வேந்தர்களும் நீரைத் தேக்கிவைக்க குளங்களை வெட்டியும், அணைகளைக் கட்டியும் வேளாண் தொழிலுக்கு உதவிபுரிந்தனர். இத்தோடு கருவிகளின் பயன்பாடும் சேர்ந்து தேவைக்கு அதிகமாக வேளாண் விளைச்சலை ஏற்படுத்தியது. இதன் காரணமாக மருத நில மக்கள் செல்வந்தர்களாகவும், உயர்ந்த மாளிகைகள் கொண்டு வாழ்க்கை நடத்தும் மேல் குடி மக்களாகவும் காணப்பட்டனர். உணவுப் பஞ்சம் இல்லாத இவர்களிடத்தே நாகரிகமும் பண்பாடும் வளர்ச்சியடைந்தது. நாகரிகத்தில் வளர்ச்சியடைந்த மருத நில மக்களிடத்தே அரசியல், சமுதாய வாழ்வு சிறப்பாகக் காணப்பட்டது. இவர்களுள்ளே தொழில் காரணமாக நால்வகை வருணப் பிரிவுகளும், வர்க்கப்பிரிவுகளும் தோன்றின.

வேளாண்மைத் தொழிலில் ஏற்பட்ட அதிகப்படியான உற்பத்தி பெருக்கத்தின் காரணமாக அவை பண்டமாற்று செய்யப்பட்டன. மருத நிலத்தில் விளைந்த நெல்லே அதிகப்படியாக பிறம்பொருட்களுக்கு பண்டமாற்று செய்த பொருளாக காணப்படுகிறது. மேலும் உள்நாடுகளுக்கும், வெளிநாடுகளுக்கும் இப்பொருட்களை எடுத்துச் செல்ல நெய்தல்நிலமே வாணிபத்தின் களஞ்சியமாகத் திகழ்ந்ததால், வணிகப் பிரிவினர் தோன்ற நெய்தல் நிலமே வாய்ப்பாக அமைந்தது.

இதுவரை பண்டமாற்று முறையில் நடந்த வாணிபம், பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் தொடங்கியதால், காசுக்காக நடைபெற்றது. வேளாண் விளை பொருட்களை வாங்கி வாணிபம் செய்த வணிகர்கள் செல்வ செழிப்பில் உயர்ந்தவர்களாகக் காணப்பட்டனர். இதனால் அவர்களும் அக்காலச் சமூகத்தில் உயர்ந்தவர்களாகவே இருந்தனர்.

உணவினை விளைவிக்கும் ஆற்றல் பெற்ற வேளாளர், வேளாண் பொருட்களை விற்பனை செய்த வணிகர், வேளாண்மைக்கும், வணிகத்திற்கு தேவையான உள்கட்டமைப்புகளை ஏற்படுத்திக் கொடுத்த அரசர், அரசர்க்கு உரிய ஆலோசனைகள் கூறும் அந்தணர் ஆகியோர் அடுத்தடுத்த உயர்ந்த நிலைகளில் சமூகத்தில் காணப்பட்டனர். மருதம் மற்றும் நெய்தல் நிலங்களில் காணப்பட்ட இவ்வகைச் சமூக அமைப்பு படிப்படியாக மற்ற நிலங்குளுக்கும் விரவத் தொடங்கிற்று. உணவிற்காக மேற்கண்ட நால்வரையும் சார்ந்து இருந்த பாணர், பறையர், துடியர், கடம்பர், பொருநர், விறலியர் போன்றோர் கீழோர்களாகவும் அக்காலச் சமூகத்தில் தாழ்ச்சி பெற்றவர்களாகவும் கருதப்பட்டனர்.

சமூகத்தில் நிலவியல் அடிப்படையில் மக்கள் பிரிக்கப்பட்டதைப் போன்று தெய்வங்களையும் வழிப்படப்பட்டனர். மனிதன் தோன்றிய காலந்தொட்டு தன்னையும் மீறிய ஆற்றல் உண்டென நம்பியதன் விளைவே வழிபாடு தோன்றக் காரணமாயிருந்தது. அவ் ஆற்றலை தன் பக்கம் ஈர்க்க முற்படும் பொழுது வழிபாட்டு முறை தோன்றியது. தங்களுக்குப் பயன்பட்ட விலங்குகள் கடவுளுக்கும் பயன்படும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் விலங்குகளும் கடவுளுக்கு அருகிலேயே வைக்கப்பட்டன.

அச்சம் தரும் விலங்குகளும் கடவுளுக்குக் கட்டுப்பட்டு தனக்கு ஊறு விளைவிக்காது என்ற எண்ணத்தில் அவைகளும் வழிபாட்டுக்குரியவையாயின. வேளாண்மைத் தொழிலுக்கும் கால்நடை வளர்ப்பிற்கும் மழை அவசியமானதால் குறிஞ்சி, பாலை தவிர்த்த பிற நிலங்களில் மழைக் கடவுளரே வழிபாட்டுக் குரியவராயினர். நால்வகை நிலக்கடவுளரை விவரிக்கும் தொல்காப்பியத்தில் ‘தெய்வம்’ என்ற சொல் பல இடங்களில் சுட்டப்படுகின்றது.

குறிஞ்சி நிலத்தில் முதலில் கதிரவனே வழிபடப்பட்டிருக்கிறான். கதிரவனின் செம்மை பொருந்திய ஒளியின் பிறப்பே சேயோன் ஆவான். முருகன் அச்சத்தை நீக்கும் கடவுளாக குறிஞ்சி நிலங்களில் வழிபடப்பட்டான். முல்லை நில மக்கள் மழை நீரை வேண்டி மாயோனை வழிபட்டனர். நீரிலிருந்து தங்களைக்

காக்கவேண்டி நெய்தல் நில மக்கள் வருண வழிபாட்டை மேற்கொண்டனர். செல்வச் செழிப்பு மிக்க மருத நிலத்தின் கடவுள் வேந்தனாகத் திகழும் இந்திரன் ஆவான். கொற்றவை பாலை நிலத் தெய்வமாக அறியப்பட்டாள். இருப்பினும் அவள் குறிஞ்சி நிலத்தில் காணப்பட்ட தாய் வழிச் சமூகத்தின் எச்சமாகவே காணப்படுகிறாள். கடவுளையன்றி இறந்தவர்க்கு நடப்படும் நடுகல்லும் வழிபடப்பட்டது. தாங்கள் போற்றும் கடவுளர்க்கு விழாக்கள் எடுக்கும் வழக்கமும் சங்ககாலச் சமூக மக்களிடத்து காணப்பட்டது.

செல்வச் செழிப்பும், கடவுள் வழிபாடும் சமூக மக்களை பண்பாட்டில் மேன்மையுற்று நாகரிகம் மேம்பட்ட சமூகமாக மாற்றியது. தனிமனிதனிடம் காணப்பட்ட சிறந்த பண்புகளே சமூகத்தில் அவனுக்கு உயர்ந்த மதிப்பினை வழங்கியது.

நாகரிக வளர்ச்சியில் உழவுத் தொழிலில் புதுமைகள் புகுத்தப்பட்டு அதிகப்படியான வளர்ச்சிக்கு வழி வகுத்தது. நிலங்களை நன்செய் மற்றும் புன்செய் என மக்கள் இரண்டாகப் பாகுபடுத்தினர். பண்பட்ட நன்செய் விளை நிலங்களை மழை வருவதற்கு முன்பே நன்கு உழுது வைக்கும் பழக்கத்தினை வோளண்மக்கள் மேற் கொண்டிருந்தனர். உழவுத் தொழில் கருவிகளின் பயன்பாடு, அதிகப்படியான வேளாண் விளைச்சலுக்கு வழி வகுத்தது. அதிகப்படியான விளைச்சல் காரணமாக பல்வேறு தொழில்களும் தொழில் பிரிவினரும் தோன்றக் காரணமாயிருந்து.

சமூக வளர்ச்சிக்கு அரசனே மாபெரும் சக்தியாக இருந்து வழிநடத்தினான். மக்களின் மனநிலையை பேணிக் காப்பவனும் இயற்கை இன்னல்கள் நேரும்போது உணவளித்துக் காப்பவனே சிறந்த அரசனாகத் திகழ்ந்தான். நாட்டினுடைய வளத்தைப் பெருக்க நீர்நிலைகளை அமைத்து அதனைக் காப்பது அரசின் தலையாய கடமையாக இருந்தது. புலவர்கள் தன்னைப்பாடாது விடுதல் இகழ்ச்சியென அக்கால அரசர்கள் கருதினர் அவர்களுக்கு அறமுறைமையை எடுத்துக் கூறும் சான்றோர்களாகப் புலவர்கள் விளங்கினர். போரைத் தடுக்கும்

தூதுவர்களாகவும் புலவர்கள் செயல்பட்டுள்ளனர். காவலரும், மருத்துவரும், கணியர்களும் அவனுக்கு உறுதுணையாய் சங்க காலச் சமூகத்தில் காணப்பட்டனர்.

சங்க காலச் சமூக அமைப்பை நிலவியல் அடிப்படையில் ஆய்ந்தறிந்த இவ்வாய்வேடு.

1. திணை அடிப்படையில் பண்பாட்டையும்.

2.திணை அடிப்படையில் சமூகத்தின் ஏற்ற தாழ்வுகளையும்

எதிர்கால ஆய்வுக்களங்களாகச் சுட்டுகின்றது.

# முதன்மை ஆதாரங்கள்


| | | |
|---|---|---|
| 1. | சோமசுந்தரனார்.பொ.வே. | குறுந்தொகை,<br>கழக வெளியீடு,<br>சென்னை-18, 2007(மறுபதிப்பு) |
| 2. | சோமசுந்தரனார்.பொ.வே. | ஐங்குறுநூறு,<br>கழக வெளியீடு,<br>சென்னை-18, 1961 (முதல் பதிப்பு) |
| 3 | சோமசுந்தரனார்.பொ.வே. | பரிபாடல்,<br>கழக வெளியீடு,<br>சென்னை-18, 2007(மறுபதிப்பு) |
| 4. | சோமசுந்தரனார்.பொ.வே. | பத்துபாட்டு மூலமும் உரையும் தொகுதி-I,<br>கழக வெளியீடு,<br>சென்னை-18, 2007(மறுபதிப்பு) |
| 5. | சோமசுந்தரனார்.பொ.வே. | பத்துபாட்டு மூலமும் உரையும் தொகுதி-II,<br>கழக வெளியீடு,<br>சென்னை-18, 2008(மறுபதிப்பு) |
| 6. | துரைசாமிபிள்ளை.சு.ஔவை. | புறநானூறு,<br>கழக வெளியீடு.<br>சென்னை-18, 1951(முதல் பதிப்பு) |
| 7. | துரைசாமிபிள்ளை.சு.ஔவை. | பதிற்றுப்பத்து,<br>கழக வெளியீடு,<br>சென்னை-18, 1950(முதல் பதிப்பு) |
| 8. | நச்சினார்கினியார் உரை. | கலித்தொகை,<br>கழக வெளியீடு,<br>சென்னை-18, 1943 (முதல் பதிப்பு) |
| 9. | நாராயணசாமி<br>ஐயர். பின்னத்தூர். | நற்றிணை,<br>கழக வெளியீடு,<br>சென்னை-18, 1952 (முதல் பதிப்பு) |
| 10. | வேங்கடசாமி நாடார்.ந.மு.<br>வேங்கடாசலம்பிள்ளை.ரா. | அகநானூறு,<br>கழக வெளியீடு,<br>சென்னை-18, 1944 (முதல் பதிப்பு) |

# துணைமை ஆதாரங்கள்


1. அக்னிபுத்ரன்.அறிஞர். செம்மொழி இலக்கியமும் சமூகவியல் கோட்பாடும்,
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை,2009.

2. அப்பாத்துரை.கா. ஆயிரத்தொண்ணூறு ஆண்டுகட்டு முற்பட்ட தமிழகம்,
பூம்புகார் பதிப்பகம்,
சென்னை, 2003.

3. அப்பாத்துரை.கா. இலெமூரிய அல்லது குமரிக்கண்டம்,
(கழக வெளியீடு)
திருநெல்வேலி தென்னிந்திய சைவசிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
சென்னை-18, 2000.

4. அறவாணன்.க.ப. அற்றை நாட் காதலும் வீரமும்,
பாரிநிலையம்,
பிராட்வே சென்னை,1978

5. ஆறுமுகம்.அ. சங்க இலக்கியத்தில் குடும்பம், உடைமை, அரசு
பாவேந்தர் பதிப்பகம்,
திருமழபாடி, அரியலூர்,1994.

6. இராகவையங்கார்.இரா. தமிழ் வரலாறு, (முதல் தொகுதி),
மாணவர்ப்பதிப்பகம்,
சென்னை,மறுபதிப்பு.2009.

7. இராசமாணிக்கனார்.மா. தமிழர் நாகரிக்கமும் பண்பாடும்,
பாரிநிலையம்,
சென்னை-1959.

8. இராசமாணிக்கம்.க. பண்டைத் தமிழர் வாழ்வியல், தமிழ்க்குடில் பதிப்பகம்,
சேலம், 2006

9. இராமகிருட்டினன்.ஆ. தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும்,
சர்வோதய இலக்கியப் பண்ணை,
மதுரை-1996.

10. இலக்குவனார். . இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல்,
வள்ளுவர் பதிப்பகம்,
புதுக்கோட்டை,1972

11. இறையரசன்.பா. தமிழ்நாட்டு வரலாறு,
பூம்புகார் பதிப்பகம்,
சென்னை-108, 1983

12. ஃபிரடெரிக் எங்கெல்ஸ். குடும்பம் தனிச்சொத்து அரசு,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
சென்னை,2008

13. கந்தையா.ந.சி. தமிழர் சரித்திரம்,
அமிழ்தம் பதிப்பகம்,
சென்னை, மறுபதிப்பு-2002.

14. கந்தையா.ந.சி. வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பழந்தமிழர்,
அமிழ்தம் பதிப்பகம்,
சென்னை, மறுபதிப்பு-2002.

15. கிருட்டிணன்.அ. தமிழர் பண்பாட்டியல், தொகுதி 1,
மணிவாசகர் பதிப்பகம்.
சென்னை,1992.

16. குழந்தைசாமி.டாக்டர்.வா.செ. தமிழ் வளர்ச்சி
மேம்பாடு+பயன்பாடு = வளர்ச்சி,

ஒரு வளர்ச்சிப் பனுவல்,
பாரதி பதிப்பகம், சென்னை-17, 2006.

17. கேசவன்.கோ. மண்ணும் மனித உறவுகளும்,
சென்னை புக் ஹவுஸ்,
சென்னை-1979.

18. கைலாசபதி.க. பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
சென்னை-2006.

19. கோவிந்தன்.கா. ஆறியர்க்கு முற்பட்ட தமிழ்ப்பண்பாடு,
கழக வெளியீடு,
சென்னை-1999

20. சசிவல்லிவி.சி. பண்டைத் தமிழர் தொழில்கள்,
உழவுத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை,1997

21. சிதம்பரனார்.சாமி. பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும்,
மணிவாகசர் பதிப்பகம்,
சென்னை-2000.

22. சிதம்பரனார்.சாமி. தொல்காப்பியத் தமிழர்,
எம்.வெற்றியரசி,
சென்னை,2008

23. சுப்பிரமணியன்.கா. சங்க காலச் சமுதாயம்,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
சென்னை -1982.

24. சுப்பிரமணியன்.ந. சங்க கால வாழ்வியல்,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
சென்னை -1996.

25. சுவாமிநாதன்.எ. தமிழ்நாட்டு சமுதாய பண்பாட்டு வரலாறு, விஜயா சபரி பதிப்பகம், சென்னை, 1995

26. ஞானமூர்த்தி.தா.ஏ. சங்ககாலச் சமுதாயம், முத்துக்கோவை,திருச்சி-,1981

27. தங்கவேலு.கோ. தமிழகச் சமூகப் பண்பாட்டு வரலாறு, (இரண்டாம் பாகம்) அமிழ்தம் பதிப்பகம், சென்னை-14, 2002.

28. தட்சிணாமூர்த்தி.ஆ. சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உறவுகள், மங்கையர்க்கரசி பதிப்பகம், தஞ்சை-2001.

29. தட்சிணாமூர்த்தி.ஆ. தமிழ் நாகரிகமும் பண்பாடும், யாழ் வெளியீடு, சென்னை-1994.

30. தனஞ்செயன்.ஆ. சங்க இலக்கியமும், பண்பாட்டுச் சூழலியலும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை -2010.

31. திலகவதி.க. சங்க காலமகளிர் வாழ்வியல், இறையருள் பதிப்பகம், திருச்சி-2001.

32. திருநாவுக்கரசு.க.த. தமிழ்ப் பண்பாடு, உலகத் தமிராய்ச்சி நிறுவனம், சென்னை-2001.

33. தேவநேயப்பாவணர்.ஞா. பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும், நேசமணி பதிப்பகம், வடஆற்காடு, 1966

34. தேவிபிரசாத் சட்டோபாத்தயாயா (தமிழாக்கம், இரா.சிசுபாலன்) மதமும் சமூகமும், நியூ செஞ்சுரிக் ஹவுஸ் லிட், சென்னை,98, 2009

35. நமசிவாயம்.சே. தமிழர் உணவு, உலகத் தமிராய்ச்சி நிறுவனம், சென்னை-2003.

36. பாஸ்கல் கிஸ்ப்ர்ட்.எஸ்.ஜெ. சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள், தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை,1994

37. மறைமலையடிகள்.சி.இ. இலக்கியத் திறனாய்வு ஓர் அறிமுகம், வ.உ.சி.நூலகம், சென்னை-14. 1996

38. மறைமலையடிகள். வேளாளர் நாகரிகம், வ.உ.சி.நூலகம், சென்னை-14. 2005

39. மாதையன்.பெ. சங்க இலக்கியத்தில் வேளாண் சமூதாயம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை-98, 2004

40. மாதையன்.பெ. சங்க கால இனக்குழு தாயமும் அரசு உருவாக்கமும், பாவை பப்ளிஷர்ஸ், சென்னை-2004.

41. மாதையன்.பெ. தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள் காலமும் கருத்தும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை-98, 2011

42. மாதையன்.பெ. பெண்டிர்-காதல்-கற்பு, அனன்யா பதிப்பகம், தஞ்சாவூர்-05, 2006

43. மீனாட்சி சுந்தரனார்.தெ.பொ. தமிழும் பிறபண்பாடும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை-98, 1980.

44. முத்துகண்ணப்பன்.தி. சங்க இலக்கியத்தில் நெய்தல், அதிபத்தர் பதிப்பகம், சென்னை, 1978

45. முத்துலக்குமி.வே. பண்பாட்டுச் சிந்தனைகள், அனிதா பதிப்பகம், திருச்சி,2001.

46. ராமஸ்வாமி.ப. மனித சமூகத்தின் வளர்ச்சி, கற்பக வித்யா பதிப்பகம், சென்னை-14, 2004.

47. வானமாமலை.நா. தமிழர் வரலாறும் பண்பாடும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை-98, 2009

48. வித்யானந்தன்.சு தமிழர் சால்பு, பாரிபுத்தகப் பண்ணை, சென்னை-5, 1971

49. வேலுசாமி.ந. பயண நூல்கள் வழிப்பண்பாடு, (ஆசிய நாடுகள் அளவில்) நெ.து.சு.இல்லம், ஈரோடு,1995

50. வேங்கடசாமி.சீனி. பழங்காலத் தமிழர்க வாணிகம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை-1991

51. வைத்தியலிங்கம்.மு. தமிழ்ப் பண்பாடு, தேன்தமிழ் பதிப்பகம், சேலம்,1985.

52. ஜெகதீசன்.ஆ. சங்க இலக்கிய மதிப்பீடுகள், ராமையா பதிப்பகம், சென்னை-14, 2008

## ஆங்கில நூல்கள்

1. Sethu Pillai R.P WORDS AND THEIR SIGNIFICANCE TAMIL LIYERARY ƑND COLLO|UIAL, University at Madras, Madras, Second Edition,1994.

2. SivarajaPillai.K.N. CHRONOHOHY OF THE EARLY TAMILS, The India Printing works, Madras, 1932.

## களஞ்சியங்கள், அகராதிகள்

1. கலைக்களஞ்சியம் (தொகுதி ஒன்று) தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை,1954

2. கலைக்களஞ்சியம் (தொகுதி இரண்டு) தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை,1954

3. கலைக்களஞ்சியம் (தொகுதி நான்கு) தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை,1956

4. எஸ்.கௌமாரீஸ்வரி நா.கதிரைவேற்பிள்ளையின் தமிழ் மொழி அகராதி சாரதா பதிப்பகம், சென்னை- 14, 2008 (மு.ப)

## ஆங்கில அகராதி

1. WINSLOW.M. Winslow's Comprehensive Tamil English Dictionary, Asian Educational Services, Delhi-19, 2004.

## ஆய்வேடு

1. அ.அப்துல் மஜீத். ஆய்வுக் கொத்து, ஆராய்ச்சிப் பேரவை, சென்னை,29, 1973.